# ஸ்ரீ திரிபுர ரகசியம்

## (ஞான காண்டம்)



ப்ரக்ஞன்

# ஸ்ரீ திரிபுர ரகசியம்

## (ஞான காண்டம்)

ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| **நூலின் பெயர்** | : | ஸ்ரீ திரிபுர ரகசியம் |
| **விளக்க உரை** | : | ப்ரக்ஞன் |
| **மூலம்** | : | சமஸ்க்ருதம் |
| **மொழி மாற்றம்** | : | தமிழ் |
| **வகை** | : | உபதேசம் |
| **முதற்பதிப்பு** | : | 2024 |
| **பக்கங்கள்** | : | 425 |
| **தாள்** | : | **A5** (5.5" X 8.5") |
| **எழுத்து அளவு** | : | 12 புள்ளிகள் |
| **வெளியீடு** | : | பராபரம் |
| **விலை** | : | 100/- |

| எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | பரசுராமனின் கேள்வி | 15 |
| 2 | விசாரத்தின் சிறப்பு | 26 |
| 3 | சத்சங்கத்தின் சிறப்பு | 34 |
| 4 | சத்சங்கத்தின் பலன் | 41 |
| 5 | ஹேமசூடனின் மனக்குழப்பம் | 55 |
| 6 | நம்பிக்கையின் முக்கியத்துவம் | 70 |
| 7 | ஈஸ்வர சொரூப நிரூபணம் | 79 |
| 8 | சம்சார பந்தம் | 95 |
| 9 | ஆத்மாவின் நிலை | 101 |
| 10 | சாதுக்களின் அவசியம் | 120 |
| 11 | ஜகத் தத்துவ நிரூபணம் | 129 |
| 12 | கண்ட மலையைக் கண்டு வியத்தல் | 150 |
| 13 | கண்ட மலை தரிசனம் | 166 |
| 14 | பாவனையின் பலன் | 181 |
| 15 | ஆத்மாவை அறிதல் | 199 |
| 16 | உள்முக விசாரம் | 218 |
| 17 | கேள்வி ஞானமும், அனுபவ ஞானமும் | 261 |
| 18 | உள்ளது அது மட்டுமே | 289 |
| 19 | வாசனைகள் | 326 |
| 20 | வித்யா கீதை | 362 |
| 21 | ராக்ஷஸோ பாக்கியானம் | 384 |
| 22 | ஞானமே எல்லை | 411 |

ஓம் ஸ்ரீ குரு தத்த நமோ நம:

# ஸ்ரீ திரிபுர ரகசியம்

## (ஞான காண்டம்)

### முன்னுரை

இந்த அரிய நூலானது, சம்ஸார சமுத்திரத்தில் மூழ்கி இருக்கின்ற மனிதர்களை அவர்களது பிறப்பு, இறப்பு என்கின்ற துக்கத்திலிருந்து மீட்டெடுக்கும் பொருட்டு, **ஹரிதாயனர்** என்ற முனிவரால், ஸ்ரீ நாரத மஹரிஷிக்கு உபதேசிக்கப்பட்டு, ஞான உபதேசமாக வெளிவந்த, திரிபுரையின் மாகாத்மியத்தை திருச்செந்தூரை சேர்ந்த திரு. **வி. ஆர். சுப்பிரமண்ய அய்யர்** அவர்களின் அரிய முயற்சியானால், அன்றைய சமஸ்க்ருதம் கலந்த மணிப்பிரவாள தமிழில், அனைவரும் படித்து அறிந்துக் கொள்ள முடிந்தது.

இந்த நூலில், மனிதனாக பிறந்தவன் **பரம புருஷார்த்தம்** அடையும் பொருட்டு, அதற்குச் சாதனமாக விளங்கும், முதற் சாதனமான பராபக்தியை எப்படிச் செய்வது? என்பது பற்றியும், அவ்வாறு, உண்மை பக்தியான **பராபக்தி** செய்பவனையும்,

அவனது இரண்டற்ற, ஒன்றேயான அனன்ய பக்தியினால், அவனுக்கு வேறாக உள்ள இறைவனையும், இவனையும் ஒன்றாக்கும் ஒரு உயரிய சங்கமமே **சரணாகதி** என்பதையும், அவ்வாறு சரணடைய விரும்பும் ஒரு சாதகனின் விருப்பம் என்பதும்கூட, அது அந்த பேரறிவின் அருளால் மட்டுமே அவனுக்கு கிடைத்த **அனுக்கிரஹம்** என்று எடுத்துக்கூற, எல்லோரையும் போல, சாதாரண மனித சரீரத்தில் வந்திருக்கும் சாதுக்களின் சங்கமத்தை (தொடர்பை) உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

அப்படிப்பட்ட சத்துக்களின் சங்கமமே **சத்சங்கம்** என்பதை அறிந்து, அவர்களின் திருவாய் வழியாக விசாரம் மேற்கொண்டு, அவர்கள் கூறுவதை கேட்டு (**சிரவணம்**), சிந்தனை செய்து (**மனனம்**), நல்ல பக்குவிகளாக மாறிய ஜிஞ்ஞாஸுகளை (முமுக்ஷுக்களை), அவர்கள் அடைந்த அந்த அறிவில் நிலைப்பெற்று நிற்கின்ற (**நிதித்யாசனம்**) எனும், ஆனந்த அனுபவத்திற்கு அழைத்துச் செல்வதே, இந்த உயரிய "**ஸ்ரீ திரிபுர ரகசியம்**" எனும் நூலின் உன்னதமான வழியாகும்.

இந்த நூலில் பத்து அத்தியாயங்களில் சத்சங்க மகாத் மியத்தை விளக்கும் பொருட்டு, **ஹேமசூடோ பாக்கியானம்** எனும் ஒரு அத்தியாயமும், ஜகத்தின் உண்மையை விளக்கக் கூடிய **சைலலோகாக்கியானம்** (கண்ட மலை தரிசனம்) எனும் மற்றொரு அத்தியாயமும், அத்துடன் ரிஷிகளுக்கு சாக்ஷாத் அந்த வித்யா தேவியே பிரத்யக்ஷமாகி அருளிய "**வித்யாகீதை**" என்ற அத்தியாயமும், மேலும் ஞானிகளது பெருமைகளை விவரிக்கும் "**ராக்ஷஸோ பாக்கியானம்**" என்ற அத்தியாயமும், என இதுப்

போன்று, இன்னும் சில அத்தியாயங்களும் சேர்ந்து, மொத்தம் **இருபத்தி இரண்டு அத்தியாயங்கள்** அடங்கியுள்ளன.

இந்த **ஸ்ரீ திரிபுர ரகசியம்** எனும் அருமையான நூல் 12000 சுலோகங்களைக் கொண்டதாக அமைந்திருக்கி றது. இந்த நூலிற்கு வடமொழியில் '**தாத்பர்ய தீபிகா**' என்ற வியாக்கியானமும், அத்துடன், **ஸ்ரீநிவாஸ பண்டிதர்** அவர்கள் வடமொழியில் இயற்றியுள்ள வியாக்கியானத்திலிருந்து சில குறிப்புகளும், மேலும் மூல நூலான சமஸ்கிருதத்திலிருந்து, திரு. **வி. ஆர். சுப்பிரமண்ய அய்யர்** அவர்களின் தமிழ் மொழிப் பெயர்ப்பாக வெளிவந்த நூலிலிருந்து பலப் பகுதிகளையும், இதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இந்த நூலை இன்னும் எளிதாகப் புரிந்துக் கொள்ளும் வகையில் உரை நடை தமிழில், தற்போதைய இளைய தலைமுறைகளுக்குக் கொண்டு சேர்க்கும், நல்ல நோக்கத்தில், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த **ப்ரக்ஞன்** (சுவாமி பிரபஞ்சநாதன்) அவர்களால், தன்னை அறிய ஆர்வம் காட்டும், **முமுக்ஷு** (மோக்ஷித்தின் மீது ஆசையுள்ளவர்கள்) அனைவரும் பயனடையும் பொருட்டு, இந்த நூல் எளிய தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த **ஸ்ரீ திரிபுர ரகசியம்** என்ற ஞான நூலை எல்லோருக்கும் எளிதாகக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில், இதனை மின் புத்தகமாக PDF – வடிவில்

இலவசமாகப் படிக்கும் வகையில் https://paraparam.in/ என்ற இணையதளத்திலும் கொடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், இந்த நூல் அதிக பக்கங்கள் கொண்டது என்பதினால், இந்த நூலைத் தொடர்ந்து இணையத்தில் ஆன்லைன் மூலம், மின் புத்தகமாக PDF – வடிவில், மொபைல் போன் அல்லது லேப்டாப், மற்றும் கம்ப்யூட்டரில் நீண்ட நேரம் படிக்கும்போது, படிக்கின்றவர்களின் கண்கள் பாதிக்கப்படும் என்பதினால், அவர்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு, எமது மாணவர்களில் ஒருவரான **திரு. K. ராஜகோபால்** அவர்கள், இந்நூலை அச்சுப் பிரதிகளாக வெளிக்கொண்டு வந்ததின் விளைவாக, இந்த அரிய நூல் இப்போது, மின் புத்தக வடிவத்திலிருந்து, வன் புத்தக வடிவத்திற்கு மாறி, இப்போது உங்கள் கைகளிலும் உள்ளது.

இதற்கு முன்பு எழுதப்பட்ட **திரிபுர ரகசியம்** நூல்கள் பல மஹான்களின் பல்வேறு முயற்சியினால், தமிழில் கொடுக்கப் பட்டிருந்தாலும், அவைகள் பெரும்பாலும் தமிழ் மொழியோடு, வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்டு இருந்தது.

ஆதலால், பழமையான தமிழும், சமஸ்க்ருதமும் கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதப்பட்ட இந்த தமிழ் நூலைக் கற்பது, இன்றைய இளைய தலைமுறைகளுக்கு சற்று சிரமமாக இருப்பதினால், அதை இன்றைய நடைமுறையில் உள்ள எளிய

தமிழில், எல்லோருக்கும் கொண்டு சேர்க்க விரும்பி, அந்த **ஈஸ்வர சங்கல்பம்** இவ்வாறு வெளிப்பட்டுள்ளது.

இந்த **ஸ்ரீ திரிபுர ரகசியம்** என்ற நூலின் விசயங்கள் பெரும்பாலும் ஆகம சாஸ்திரத்தை அனுசரித்து கொடுக்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் முக்கியமானவை **விவர்த்த வாதம்** என்பதாகும்.

பிரம்மம்தான் தன்னுடைய மாயா சக்தியால், இத்தனை படைப்புக்களை படைத்ததுப் போன்று வேஷம் போட்டுக் கொண்டிருக்கிறது. பரமாத்மா ஜகத்தாகப் பரிணமித்தது, அதாவது, பிரம்மம் இந்த உலகமாக மாறியது என்பதை – பால் தயிராக மாறியது போன்று, என்று கூறினால், அது தவறு.

காரணம், அப்படிக்கூறினால், பால் தயிராக மாறிய பின்பு, தயிர் மட்டும்தான் இருக்குமே தவிர பால் அங்கு இருக்காது.

இதுப்போன்று, பரமாத்மா உலகமாக பரிணமித்தபின்பு, அவர் அங்கு இல்லாமல் போய் விட்டார் என்றால், அதுவும் மிகப்பெரிய தவறாகப் போய்விடும்.

அதனால், உயிரிணப் பரிணாமம் என்பது ஏற்பதற்கு இல்லை. அதே சமயம் அறிவுப் பரிமாணம் என்பதாக, பரமாத்மா தன்னில் தானாக, சுத்த ஞான ஸ்வரூபமாக ஒரு பக்கம் இருந்துக்கொண்டே, மற்றொரு பக்கம் மாயையால் ஜீவ – ஜகத்துக்களாகத் தோன்றுகின்றார்.

*"இதெல்லாம் ஒரே சத்வஸ்துவின் தோற்றம் மட்டுமே ஆகும். அதாவது, அந்த சத் வஸ்து, சித்தில் பிரகாசித்துப் போடும் வேஷம்தான். உதாரணமாக, ஒருவன் ஒரு வேஷத்தை போட்டுக் கொள்கின்றான் என்றால், அவன் அவனாக இல்லாமல் போய் விடுகின்றானா என்ன? அதுப்போன்றுதான், இந்த பிரபஞ்சத் தோற்றமே பிரம்மத்தின் வேஷம், கண்கட்டு வித்தை. அது எத்தனை விதமான வேஷங்களைப் போட்டாலும், அதனால் பாதிக்கப்படாமல் அது அதுவாகவே (சத்வஸ்து ஏகமாகவே) அப்படியே இருந்துக்கொண்டேயிருக்கிறது"* இதற்கு "**விவர்த்த வாதம்**" என்று பெயர்.

ஜீவத்துவம் பூரணத்தன்மை இல்லாமல் இருப்பதால், மோக்ஷம் என்ற பூரணத்தன்மையை அடையவேண்டும் என்பதுவும், வேறுபாட்டுடன் கூடிய ஞானமே அஞ்ஞானம் என்றும், அது மாயையின் காரியம் என்றும், மாயை பிரம்மத்தினுடைய பூரணமான சுதந்திரமென்றும் கூறப்பட்டி ருக்கின்றது.

மேலும், இதனில், கண்ணாடியில் தெரிகின்ற உருவமும், அதன் பிரதிபிம்பமும் பார்பதற்கு, இருவர் இருப்பதுப் போன்று தோன்றினாலும், உண்மையில் ஒருவனே அங்கு பிம்பமாக காணப்படுகின்றான் என்ற பிரதிபிம்ப திருஷ்டாந்தத்தை அங்கீகரித்து, **ஜீவ, ஈஸ்வர ஒற்றுமை** விளக்கப்பட்டுள்ளது.

இந்த நூலைக் கற்கின்றவன் ஒரு காலத்திலும் துக்கத்தில் வீழமாட்டான். பிறப்பு, இறப்பு என்ற நோயிலிருந்து விடுபடுவான்.

தக்க சத்குருவானவர் சிஷ்யனுக்கு உபதேசம் செய்ததும், யுக்தி அனுபவங்கள் பொருந்தியதும், மிகவும் அரிதான உயர் ஞானத்திற்கு ஈடாக வேறு எதுவும் இல்லை என்பதுவும், இந்த நூலைக் கற்று எவனுக்கு ஞானம் உண்டாக வில்லையோ? அவனை **பாக்கியம் இல்லாதவன்** என்றும் கருத வேண்டும்.

மேலும், அப்படிப்பட்டவனுக்கு சாக்ஷாத் பரமசிவனே பிரத்யக்ஷமாக தோன்றி உபதேசம் செய்தாலும், அவனுக்கு ஞானம் உண்டாகாது. காரணம், அவ்வளவு மகிமை பொருந்திய இந்த ஞான காண்டத்தை **ஹரிதாயனர்** என்ற மகரிஷி அதி அற்புதமாக நாரதருக்கு உபதேசம் செய்கின்றார்.

அத்தகைய இந்த **ஸ்ரீ திரிபுரா ரகசியம்** என்ற நூலை **"ஹரிதாயன ஸம்ஹிதா"** என்றும் கூறப்படுவதுண்டு.

## திரிபுர ரகசியம் தோன்றிய வரலாறு:

இந்த ஸ்ரீ திரிபுர ரகசியம் ஆதியில் பரமேஸ்வரனால் மகாவிஷ்ணுவிற்கும், விஷ்ணுவால் பிரம்மாவிற்கும் உபதேசிக் கப்பட்டது. பின்னர் மகாவிஷ்ணு ஸ்ரீ தத்தாத்ரேயராக அவதரித்து இந்த ரகசியத்தை பரசுராமருக்கு அருளினார்.

சத்குருவாகிய **பகவான் ஸ்ரீ தத்தாத்ரேயர்** தன் சிஷ்யரான பரசுராமருடைய தேகாத்ம புத்தியை நீக்கி, சகஜ ஞான நிலையை அவர் அடையும் பொருட்டு, அதற்கான வழிகளைப் படிப்படியாகக் கதைகள் மற்றும் பல்வேறு

உவமானங்கள், உருவகங்கள் மூலம் விளக்குவதே இந்நூலின் சாராம்சமாகும்.

அதன்பிறகு, பரசுராமர் ஹரிதாயனருக்கு உபதேசித்து, மகரிஷி ஹரிதாயனரால் மக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் இந்த **ஸ்ரீ திரிபுர ரகசியம்** உருவாக வேண்டும் என்பது ஈஸ்வர சங்கல்பமாக அமைந்தது.

இதை அறிந்த நாரதர் ஹரிதாயனர் முன் தோன்றிதான் *"பிரம்ம லோகத்தில் மார்க்கண்டேய ரிஷி பிரம்மாவிடம் பரம ரகசியத்தை விளக்குமாறு கேட்டுக் கொண்டதற்கு, பிரம்மாவும் அந்த ரகசியம் பூ உலகில் ஹரிதாயனரால் ஒரு இதிகாசமாக உருவாக்கப்படும் என்று கூறினார். இதை அறிந்த நான் அந்த ரகசியத்தை தங்கள் வாயிலாக அறிய ஆவலுடன் உங்களிட மிருந்து கேட்க வந்தேன்"* என்றார்.

பரசுராமரிடம் இருந்து தான் பெற்ற உபதேசத்தை எழுதக்கூடிய திறமை தனக்கு இல்லை என்று தனது இயலாமையை ஹரிதாயனர் நாரதருக்குத் தெரிவித்தார்.

உடனே நாரதர் பிரம்மாவைத் தியானிக்க, பிரம்மா அவ்விருவர்முன் தோன்றி தன்னை அழைத்த காரணத்தை வினவினார். நாரதர் விஷயத்தைக் கூற, மகான் ஹரிதாயனர் இந்த **ஸ்ரீ திரிபுர ரகசியம்** என்ற நூலை இயற்றுவதற்கு வேண்டிய சக்தியை பிரம்மா அருள் செய்தார். இவ்வாறு மகரிஷி ஹரிதாயனர் இந்த நூலை இயற்றினார்.

ஆகவே, ஒருவன் பலகோடி ஜென்மங்களில் செய்த புண்ணியத்தினால் மட்டுமே இந்த நூலைப் படிக்க முடியும் என்பதுவும், அப்படிப் படித்து ஞானத்தை அடைந்தவன் இக, பர ஐஸ்வர்யங்களை விட, மேலான ஐஸ்வர்யத்தை அடைவான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஓம் தத் ஸத்

நன்றி!

என்றும் அன்புடன்,

**ப்ரக்ஞன்.**

# ஸ்ரீ திரிபுர ரகசியம்

## (ஞான காண்டம்)



**ஸ்ரீ தத்தாத்ரேய ஸ்வாமிகள்**

# அத்தியாயம் – 1

## பரசுராமனின் கேள்வி

கருணானந்த ரூபிணியாயும், ஜகத்தாகிய அற்புத சித்திரத்திற்குக் கண்ணாடிப் போன்று விளங்கும், அகண்ட சின்மயி தேவியான பரமேஸ்வரி திரிபுர நாயகிக்கு நமஸ்காரம்.

ஹரிதாயனர் என்ற மஹரிஷி கூறுகின்றார்:–

விசாரத்தின் வாயிலாக பரத்தை அறியக்கூடிய சாதனம் ஒன்று உண்டென்றால், அது திரிபுரையின் மகாத்மியத்தை கேட்பதேயாகும்.

நாரதரே! தாங்கள் ஏற்கனவே திரிபுரையின் பெருமைகளை அறிந்திருந்தாலும், தற்பொழுது, உங்களுக்கு மகா அற்புதமான ஞான காண்டத்தைக் கூறுகின்றேன் கேளுங்கள்.

இதனை ஒருவன் மிகுந்த ஆர்வத்துடன் கேட்பானே யானால், (சிரவணம்) அவன் ஒரு காலத்திலும் துக்கத்தை அடையவே மாட்டான்.

வைதீகம், வைஷ்ணவம், சைவம், சாக்தம் என்ற சமயங்களில் கூறப்படுகின்ற விசயங்களை திருத்தமாக ஆலோசனை செய்து, இந்தக் கிரந்தமானது கூறப்படுகின்றது, கேளுங்கள்.

என்னே ஆச்சரியம்! சத்துக்களான சாதுக்களுடைய நடத்தை மிக அற்புதமாகவும், சகல நற்குணங்கள் பொருந்திய தாகவும் இருக்கின்றது. ஏனெனில், தேவரிஷியான நாரதரும் என்னிடத்தில் இருந்தே கேட்டுக்கொள்கின்றார்.

கஸ்தூரிமான் எவ்வாறு வாசனையை தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, நல்ல நறுமணத்தை பரப்புகின்றதோ? அதுப்போன்று, சாதுக்களும் மகத்தான கருணையைத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, தங்களது அனுக்கிரஹத்தை அனைவருக்கும் கொடுப்பதென்பது, எப்போதும் அவர்களுக்கே உண்டான சகஜ சுபாவமாகவே இருக்கின்றது.

நல்ல உள்ளத்தை கொண்ட ஜமதக்னி ரிஷியின் புத்திரனான பரசுராமன் தனது தூய பக்தியினால் சித்த சுத்தி உண்டாகி, ஆனந்தக் கண்ணீருடன், அவனது உள்ளத்தில் ஆனந்தம் பொங்க, தன் சத்குருவான **ஸ்ரீ தத்தாத்ரேயர்** மகரிஷியின் பாதார சரணங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து

நமஸ்கரித்து, பிறகு எழுந்து, "ஹே ஸ்ரீ குருவே! தங்களுடைய பிரசாதத்தினால் நான் தன்யனானேன்.

எந்த காரணத்தினால் சிவரூபியானவரும், கருணைக் கடலானவருமாகிய சத்குருநாதன் என்னிடம் சந்தோசத்தைக் காட்டினார் என்பது எனது மிகப்பெரும் பாக்கியம் ஆகும். அவர் கிருபையின் மூலம், எவரிடத்தில் சந்தோசம் காட்டுகின்றாரோ? அப்படிப்பட்டவனுக்கு பிரம்ம பதவியே வந்தாலும், அது அவனுக்கு அவசியமற்றதாகவும், எமனே அவனை நெருங்கவும் முடியாமல் ஆகிவிடுகின்றதோ? அப்படிப்பட்ட ஆனந்தம் என்னிடத்தில் அந்த சத்குருவுக்கு உண்டாகி, அவரது கிருபையின் மூலம், சகலமும் நான் அடைந்து விட்டேன் என்று எண்ணுகின்றேன்".

"ஹே குருநாதா! தங்களுடைய கிருபையினால் திரிபுரையின் மகாத்மியத்தை முழுமையாக கேட்டாகி விட்டது. பரமேஸ்வரியான திரிபுரையை உபாசனை செய்ய விரும்பு கின்றேன். அந்த உபாசனா முறையை கிரமமாக (படிப்படியாக) அடியேனுக்கு, தங்களின் கிருபையினால் விளக்க வேண்டு மென்று விண்ணப்பம் செய்கின்றேன்" என்றான்.

அவனது குருவான பகவான் ஸ்ரீ தத்தாத்ரேயரும் திரிபுரையின் உபாசனைக்கு தகுந்த நல்ல பக்தி சிரத்தையும், அதற்கான யோக்யதையும், பரசுராமனிடம் இருப்பதைக்கண்டு மனம் மகிழ்ந்து, திரிபுரையின் உபாசனையை முறையாக **தீக்ஷை** செய்து வைத்தார்.

எல்லாத் தீக்ஷைகளிலும் மேன்மையானதும், பூரண தத்துவ போதத்தை உண்டாக்கக்கூடியதும், மந்திரங்கள், யந்திரங்கள் முதலான அனேக மார்க்கங்கள் அடங்கியதுமான வழிமுறையை **ஸ்ரீதத்தாத்ரேயர்** பரசுராமனுக்கு உபதேசித்தார்.

தாமரை பூக்களிலிருந்து வண்டுகள் தேன் என்ற இரசத்தை ஆனந்தமாக உறிஞ்சுவதைப் போன்று, பரசுராமன் குருவின் உபதேசத்தைக் கிரகித்துக் கொண்டான். அதன்பிறகு, திரிபுரையின் உபாசனையை சாதிப்பதன் பொருட்டு, பகவான் ஸ்ரீ தத்த குருவினை பிரதக்ஷிணமாக நமஸ்காரம் செய்து, அவரிடம் அனுமதி பெற்று மகேந்திர பர்வதத்திற்குச் சென்றான்.

அவ்விடத்தில் ஒரு ஓலைக் குடிலை ஆசிரமம் போன்று அமைத்து கொண்டு, பனிரெண்டு ஆண்டுகள் நித்திய, நைமித்திக பூஜைகள், ஜபங்கள் என செய்துக் கொண்டும், சதா அந்த ஸ்ரீ திரிபுரையின் உருவத்தை மானசீகமாக தியானம் செய்துக்கொண்டு, உபாசனைப் பிரியனாகவே இருந்தான்.

இவ்வாறு, அவனுக்கு பனிரெண்டு ஆண்டுகாலமும், பனிரெண்டு நிமிடங்கள் போல, மிகவும் வேகமாகக் கழிந்தன. காலங்கள் இவ்வாறு வேகமாக ஓடுவதை எண்ணியவாறு, ஒருநாள் அமைதியாக தன் ஆசிரமத்தில் அமர்ந்துக் கொண்டு, ஆழ்ந்து யோசனைகள் செய்தவாறு இருந்தபொழுது, தான் ஒருமுறை வழியில் சந்தித்து, ஆசிபெற்ற **சம்வர்த்த முனீந்திரர்** என்ற ஞானியின் ஞாபகம் வரவே, அவர் எனக்கு அளித்த உபதேசம் பற்றி அப்போது புரியாமலும், அவரிடத்தில் என்ன சந்தேகத்தைக் கேட்டேன் என்பதையும் மறந்துவிட்டேன்.

ஸ்ரீகுருவின் வாக்கிலிருந்து திரிபுரசக்தியின் மஹாத் மியத்தை கேட்டிருக்கின்றேன். ஆனால், அந்த சம்வர்த்த மகரிஷியிடம், இந்த ஜகத் சிருஷ்டி விசயமாக நான் கேட்ட கேள்விக்கு, அன்று அவர் கூறிய சமாதானத்தை என்னால், அப்பொழுது சரியாகக் கிரகிக்க முடியவில்லை. மேலும், அப்போது நான் பக்குவமற்ற மனநிலையில் இருந்ததை அறிந்துக்கொண்ட, அந்த மகாமுனி அவரது உபதேசத்தை முழுவதுமாகக் கூறாமல் விட்டு விட்டார்.

இந்த உலகத்தின் போக்கு எப்படிப்பட்டது என்பதை என்னால் அறிய முடியவில்லையே? மகத்தான இந்த ஜகத்தின் ஆரம்பம் எதிலிருந்து உண்டாயிற்று? இது எந்த இடத்தில் முடிவடைகின்றது? எதனிடத்தில் நிலை பெற்றிருக்கின்றது? ஆனால், நான் இவைகள் அனைத்தையும் நிலையற்ற தன்மையாகவே காண்கின்றேன்.

பார்ப்பதற்கு இந்த உலக விவகாரங்களோ அழியாத தன்மை போன்று காணப்படுகின்றன. இந்த விசித்திரமானதும், முன் ஆலோசனைகள் இன்றியும், நடைபெறுகின்ற இந்த உலக விவகாரங்கள் மிகவும் ஆச்சரியமாக உள்ளது.

ஒரு குருடன் மற்றொரு குருடனை பின் தொடர்ந்து செல்வதுப்போல, உலகத்தில் எல்லோருடைய விவகாரங்களும் நடக்கின்றன. உதாரணமாக, என்னுடைய விவகாரத்தையே எடுத்துக் கொண்டாலும், எனது இளம் வயதில் என்னென்ன நடந்தது? என்பதை, இப்பொழுதும்கூட என்னால், ஞாபகத்திற்கு கொண்டுவர முடிவதில்லை.

நான் இளைஞனாக இருந்த பொழுது, இன்னும் சில அற்ப காரியங்களைச் செய்துக்கொண்டு வேறு விதமாக இருந்தேன். முதிர்ந்தபோது ஒருவிதமாகவும், இப்போது, இந்த சமயத்தில் ஒரு விதமாகவும், என்னுடைய செயல்கள் நாளுக்கு நாள் மாறுபாட்டை அடைந்து கொண்டுள்ளன. இன்றுவரை எனக்கு என்ன செய்தால், உண்மையான நற்பலன் கிடைக்கும் என்பதை அறிந்தவனாக இல்லை.



செய்யும் கர்மத்தில், அதன் பலனை அடைய வேண்டும் என்று உத்தேசித்து, மனிதர்கள் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்துக் கொண்டிருக்கின்றார்கள். அதையே நலமென்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள்.

உதாரணமாக, இறைவழிபாடு, பூஜைகள் செய்பவன் பல ஆண்டுகளாக அதைத் தொடர்ந்து செய்தவாறு இருக்கின்றான். அவ்வாறே, யாக, யக்ஞங்கள் செய்பவனும் தொடர்ந்து அவைகளை விடாமல் செய்துக் கொண்டு வருகின்றான்.

இதுப்போன்று, பூஜை, புனஸ்காரங்கள், மந்திர ஜபங்கள், உபாசனைகள் என்று எதைச் செய்தாலும், அதைக் காலங்கள் செல்லச் செல்ல ஏதோ ஒரு கடமைப் போன்று எண்ணி, இயந்திரத்தனமாக அவைகளைச் செய்கின்றானேயொழிய, **ஆத்மார்த்தம்** அல்லது **ஈஸ்வர காரியம்** என்பதாக அதைச் செய்ய முடிவதில்லை. அதன்பிறகு, அவ்வாறு செய்த செயலின் நற்பலன்களை விரும்புவதோடு, அதற்கேற்ற பலன்கள் இவனுக்கு சுகத்தைக் கொடுக்கும் என்றும் நம்புகின்றான்.

இதுப்போன்றே, சராசரி உலக வாழ்க்கை வாழ்பவனும் அறியாமையின் காரணமாக, இறைவ(தன்)னை அறியாமல், அற்ப பொருட்களுக்கு ஆசைப்பட்டு கொண்டு, அவைகளை சம்பாதிக்க அல்லும், பகலும் அயராது பாடுகின்றான். அதற்காக ஒரு தொழிலை அமைத்துக் கொண்டு, அதில் பல விதமான காரியங்களைச் செய்துக்கொண்டு, பல காலங்களாக கடினமாக உழைக்கின்றான்.

ஆனால், அவ்வாறு அவன் உழைத்தும், அதில் சுகம் கிடைப்பதற்கு பதிலாக, துக்கத்தை அடைந்தாலும், மீண்டும், மீண்டும் அந்த பொருளாதாரத்தை உயர்த்த விரும்பி, அதன் வாயிலாக இன்னும் சுகம் உண்டாகும் என்று நம்பிக் கொண்டிருக்கிறான்.

இதனால், இவர்கள் இதுவரை என்ன சுகப் பலன்களை அடைந்தார்கள்? அதனால், அந்த ஆத்மாவிற்கு என்ன சுகம் உண்டாயிற்று? இதை இவர்கள் யாருமே அறியத் தயாராக இல்லை. ஒரு காரியத்தைச் செய்வதினால், அதனால்

உண்டாகும் பலன் இதுதான் எனக்கருதி, அதைப்பற்றிய அறியாமையின் காரணமாக, இந்த உலகத்தார் எத்தனையோ காரியங்களைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும், அதன்பலனாக எதையோ மிகவும் பெரிதாக எதிர்ப்பார்த்து, ஓடிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், உண்மையில் இவர்கள் அடைந்த பலன் என்ன? அந்தப் பலன் அவர்களுக்கு சுகத்தையல்லாவா கொடுத்திருக்க வேண்டும். அப்படி அதனால், அவர்கள் அடைந்த சுகம் உண்மையாக இருந்திருந்தால், பிறகு ஏன்? வேறு ஒரு சுகத்தை மீண்டும், மீண்டும் நாடுகிறார்கள்?.

ஆனால், உண்மையில் அவர்கள் துயரத்தில் அல்லவா இன்றுவரை இருக்கிறார்கள்? இவர்கள் எதைச் செய்தாலும், எதிலும் திருப்தி அடைவதில்லை. இவர்கள் செய்த காரியத்தின் வாயிலாக எத்தகைய பலனை அடைந்தார்கள் என்பதை இவர்கள் தெரிந்திருந்தும், திரும்பத் திரும்ப, மீண்டும் அதையே செய்ய விரும்புகின்றார்கள் என்பதினால், இவர்கள் அடைந்த பலனை உண்மையான பலன் என்று ஒப்புக்கொள்ள முடியாது.

காரணம், ஒரு பலன் கிடைக்கப் பெற்றும், அதில் இவர்களுக்கு முழுமையான திருப்தி உண்டாகாமல், மற்றொரு பலனைக்கருதி, மீண்டும் மற்றொரு செயலைச்செய்ய முற்படும் பொழுது, இவர்கள அடைய விரும்பும் ஆனந்தம்தான் என்ன? அதாவது, ஒரு பலனை அடைந்து, அதன் மூலம் இவர்களுக்கு சந்தோசம் உண்டாகியிருந்தால், இவர்கள் மீண்டும் பலவாறான செயல்களைச் செய்ய ஆசைக் கொள்ள மாட்டார்கள்.

அதாவது, ஒருவன் எந்த ஒருப் பலனை உத்தேசித்து காரியங்களைச் செய்தாலும், அதன் வாயிலாக கிடைக்கின்ற பலன் அவனைத் துயரிலிருந்து வெளியேற்றி, உண்மையான சுகத்தில் வைத்திருக்க வேண்டும். இது ஒன்று மட்டும்தான் உண்மையான பலன் ஆகும்.

அதாவது, துக்க நாசம் அடைந்து, நிலையான சுகம் எதில் உண்டாகின்றதோ? அப்படிப்பட்ட ஒருசெயலைச் செய்வதினால் மட்டுமே கிடைக்கின்ற உண்மையானப் பலன், அவனை மீண்டும், மீண்டும் செயல்கள் செய்யத் தூண்டாது. அதுதான் உண்மையான பலன், அதன் மூலமாக அவன் நிம்மதியாகவும், சந்தோசமாகவும், நிலையாகவும் வாழ முடியும்.

எவன் ஒருவனுக்கு எப்போதும் செயலின் மீது நாட்டம் உண்டாகின்றதோ? அவனுக்கு துக்க நாசம் உண்டாவது இல்லை. அதாவது, உடல் முழுவதும் தீக்காயங்களினால் பாதிக்கப்பட்டவனுக்கு, பாதத்தில் மட்டும் சந்தனம் தடவினால், என்ன பயன் அவனுக்கு உண்டாகுமோ? அதுப்போன்று, அவன் செய்த செயலினால் கிடைத்த சிறு பலனை பெரிதாக எண்ணி, மீண்டும், மீண்டும் அதே செயலைச் செய்கின்றான்.

அதாவது, அம்பு பாய்ந்து காயமடைந்த மார்பை உடைய ஒருவனுக்கு, அழகான பெண் வந்து அவனை மார்போடு கட்டி அணைத்து கொண்டால், அவனுக்கு எப்படிப்பட்ட சுகம் உண்டாகுமோ? அதுப்போன்றுதான், பலனற்ற செயல்களைச் செய்துக் கொண்டிருப்பவன் அடைகின்ற சுகமும் ஆகும்.

உலக மக்கள் பெரும்பாலானவர்கள் பலவிதமான செயல்களில் ஈடுபட்டு, அவற்றில் சுகம் இருப்பதாகக் கருதிக் கொண்டு உழைத்து வருகின்றார்கள். பிச்சை எடுப்பவன் நாள் தோறும் அதற்காக உழைத்து, அதன்மூலம் கிடைத்த உணவை உண்டு சுகம் அடைவதுப் போன்று, நாடாளும் சக்ரவர்த்தியும் சுகத்தின் பொருட்டு உழைக்கவே செய்கின்றான்.

இவர்கள் இருவரும் தாங்கள் விரும்பிய சுகத்தை அடைந்ததாக எண்ணுகிறார்கள். இப்படி இவர்கள் விசாரமின்றி எதை சுகம் என்றுக் கருதி, அவர்களின் செயல்கள் இருந்ததோ? அதுப்போன்றே, நானும் இந்நாள் வரையிலும், என்னுடைய செயல்களாக இதைச் செய்துக் கொண்டிருந்தேன். இதனுடைய முடிவான பலன் இன்னதென்று அறியாமல், ஒரு குருடன் பின் மற்றொரு குருடன், பின் தொடர்ந்து செல்வதுப் போன்று, நானும் சென்றுக் கொண்டிருந்தேனே! போதும், இதுவரை நான் செய்த செயல்கள். இதற்கு ஒரு முடிவு தெரிய வேண்டும்.

ஆகவே, நான் மறுபடியும் தயாநிதியான குருவிடம் சென்று, அவரது **குருவாக்கியம்** எனும் ஓடத்தில் ஏறி, அறிய வேண்டியதை அறிந்து, சந்தேகம் என்ற சமுத்திரத்தை எளிதில் தாண்டி விடுகின்றேன். இவ்வாறு, ஒரு முடிவுடன், பரசுராமன் அந்த மகேந்திர மலையிலிருந்து கீழே இறங்கி, பத்மாசனத்தில் இருப்பவரும், ஜகத்ஜோதியாய் விளங்குகின்றவருமான கருணைக்கடலாகிய பகவான் ஸ்ரீ தத்தாத்ரேய குருவை அடைந்து, அவர் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான்.

"ஐயனே! தயாநிதியே, தங்கள் கருணையினால், சந்தோசமாகவே இருக்கின்றேன். ஆனாலும், சில சந்தேகங்கள் எனக்கு உண்டாகியிருக்கின்றன.

தாங்கள் சம்மதித்தால் அடியேன் அவைகளை வெளியிடுகின்றேன்" என்று அவர் பாதங்களை தன் தலையினால் அழுந்தப் பிடித்துக்கொண்டான்.

இவ்விதம் பணிந்து வணங்கிய பரசுராமனுக்கு பகவான் ஸ்ரீ தத்தாத்ரேய குருவும், "மகனே! எழுந்திரு, உன்னைப் பார்த்து அனேக ஆண்டுகளாகி விட்டன. உன்னை சந்தித்ததில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். நீ கேட்க விரும்பியவைகளைத் தாராளமாகக் கேள்!. உன்னுடைய சந்தேகங்களுக்கு பதில் அளிக்கிறேன்" என்றார்.

குருவின் சொற்படி பரசுராமன் எழுந்து, அவர் காட்டிய ஆசனத்தில் அமர்ந்துக் கொண்டு, அவரை வணங்கிய கைகளுடன், *"ஸ்ரீ குருவே! கருணைக் கடலே, தங்களின் விருப்பத்தின் படியே என்னுடைய சந்தேகங்களை வெளியிடுகின்றேன்"* என்றான்.

# அத்தியாயம் – 2

## விசாரத்தின் சிறப்பு

‘‘குருதேவா, தயாநிதியே!, எனது இளம்பருவத்தில், எனக்கு சத்திரியர்களிடத்தில் கோபம் உண்டாகி, அவர்களை அழித்து, என்னைச் சார்ந்தவர்களுக்கு சந்தோசத்தையும், திருப்தியையும் உண்டாக்கினேன். மேலும், அந்தக் காலத்தில் நான் அயோத்தியின் அரசன் ஸ்ரீ ராமனைச் சந்தித்து, அவரிடமும் கோபத்தினால் சண்டைக்குச் சென்றேன்.

மேலும், நான் அந்தணன் என்ற கர்வம் கொண்டு, ஆணவத்துடன் ஸ்ரீ ராமனிடம் சண்டையிட்டு அவரிடம் தோற்றதினால், அவமானம் அடைந்து மனம் வருந்தினேன். அவரும் என்னை பிராமணன் என்று என்மீது கிருபைக்கூர்ந்து கொல்லாமல், உயிருடன் விட்டு விட்டார்.

அதன்பிறகு, நான் அவமானமடைந்ததை நினைத்து கவலையுடன் நீறு பூத்த நெருப்புப் போல இருந்துக்கொண்டே அங்குமிங் மாக அலைந்து திரிந்து கொண்டிருந்த பொழுது,

வழியில் ஒரு மகத்தான அவதூதரை சந்தித்தேன். அவர் தமது பெயர் **சம்வர்த்தர்** என்று கூறினார்.

சர்வ சாந்தமுடைய, குளிர்ச்சி பொருந்தியவரான அந்த மகா பெரியவரைச் சந்தித்ததினால், அவரது கருணையினால் என் உள்ளமும் குளிர்ச்சியடைந்தது. அவரது நிலையைப்பற்றி அவரிடம் கேட்ட பொழுது, தத்துவப் பிழம்பாக, இந்த சிருஷ்டி முதல் படைப்பின் எல்லாவற்றையும் வெகு தீர்மானத்துடன் எனக்கு எடுத்துக் கூறினார்.

அன்று, அவர் கூறிய அற்புத தத்துவங்கள் மனப்பக்குவம் இல்லாத எனக்கு பலன் அளிக்காமல் போயிற்று. அதன்பிறகு, என்னுடைய நிலையை உணர்ந்துக் கொண்ட அவரே என்னை தங்களிடம் செல்லுமாறு கூறிவிட்டு, அங்கிருந்து சென்று விட்டார். அதன்விளைவாகவே, அடியேன் தங்களை சரணடைந்துள்ளேன்.

**சம்வர்த்த** ரிஷி அன்று என்ன கூறினாரோ? அது என் அறிவுக்கு எட்டவில்லை. இருப்பினும், அனேகவிதமான, பூஜை, யாக, யக்ஞங்கள், ஜப, தபங்கள் செய்தும் என் மனம் சாந்தியடையவில்லை. திரிபுரையின் உபாசனை பொருட்டு, நான் என்னென்ன செய்தேனோ? அவைகள் அத்தனையும் என்னுடைய மன வியாபாரங்களே! உபாசனைக்கும் மூர்த்தி பேதங்கள் இருப்பதினால், அவரவர்கள் விரும்பிய மூர்த்தியை உபாசனை செய்கின்றனர்.

நானும் அதுப்போலவே, உபாசனை, ஜபம், யாகம் போன்ற கர்மங்களினாலும் துக்கம் மட்டுமே உண்டாவதாக எண்ணுகின்றேன். இவைகள் அத்தனையும் வீணான பலனைக் கொடுப்பதாகவே உள்ளது. சத்தியமானபலன் ஒன்று உண்டு என்றால், அந்த பலனைக் கருதியே முயற்சிக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்.

நான் சந்தித்த **சம்வர்த்த ரிஷி** எப்பொழுதும், சாந்தமான மன நிலையில், புன்முறுவலுடன், பயமற்ற தன்மையுடன், அனைத்து செயல்களையும் ஒழித்து, செயலற்ற நிலையில் சதா ஆனந்த அனுபவத்தில் எங்கும், எப்பொழுதும் குளிர் நிலவாக இருப்பதைக் கண்டேன்.

காட்டுத் தீயின் மத்தியில் பனி நிறைந்த குளத்தில் குளித்துக் கொண்டிருக்கின்ற ஒருவன் எப்படி சுகப்படுவானோ? அதுபோன்று, அவர் அடைந்த அந்த ஆனந்தத்தை நானும் அடைய விரும்புகின்றேன். அதற்குச் சரியான வழியைக் கருணைக் கூர்ந்து எனக்கு தாங்கள் உபதேசிக்க வேண்டும்" என்று பரசுராமன் ஸ்ரீ தத்தகுருவின் பாதம் பணிந்து நின்றான்.

பரசுராமன் முக்திக்கு தகுதி உடையவனாக இருப்பதைக் கண்ட பகவான் தத்தகுரு அவன் மீது மிகுந்த தயை உடையவராகிக் கூறத் தொடங்கினார்:

"குழந்தாய் பரசுராமா! உன் புத்தியின் போக்கு இவ்வாறு திரும்பியதை காணும் பொழுது, நீயே பாக்கியவான். மேலும், இதுவரை, நீ செய்து வந்த உபாசனைகளும், புண்ணிய

கருமங்களுமே உன்னை மிகவும் பரிசுத்தமான, உயர்ந்த பதத்திற்கு தூக்கி விட்டிருக்கின்றன.

சர்வ இருதய ஆகாச ரூபிணியாக இருக்கும் அந்த திரிபுரை தேவியானவள் சரணாகதி அடைந்த பக்தர்களின் இருதயத்தில் விசேஷ விசாரணை ரூபமாக இருந்துக்கொண்டு மரணபயத்திலிருந்து அவர்களை தப்பிக்க வைக்கிறாள்.

கர்த்ருத்துவம் என்று அழைக்கப்படுகின்ற செயல்களைச் செய்யும் விசயத்தில், இந்த மனிதர்கள் அலாதியான பிரியம் கொண்டுள்ளனர். ஏதாவது ஒருச் செயலைச் செய்துக்கொண்டே இருக்க வேண்டும். சும்மா மட்டும் இருப்பது இவர்களால் முடியாதது.

எப்பொழுதும், இந்த மனிதர்கள் **மனம், வாக்கு, உடல்** என்ற இந்த மூன்றினையும் வைத்துக் கொண்டு ஓயாமல், ஏதாவது ஒரு செயலைச் செய்துக் கொண்டே இருப்பதினால், ஒரு பாம்பினால், தீண்டப்பட்டவன் எவ்வாறு அதன் விஷத்தினால் மூர்ச்சை ஆகி விழுகின்றானோ? அதுப்போல, இவர்களும் மூர்ச்சை ஆகி விழுகின்ற நிலைக்கு தள்ளப் படுகின்றார்கள்.

அந்தோ பரிதாபம்! எதற்காக இதைச் செய்கின்றோம்?, ஏன் செய்ய வேண்டும்?, இதனால் அடைந்த இலாபம் என்ன? என்ற அடிப்படை அறிவுக்கூட இன்றி, இவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், சுகம் இன்னதென்று அறியாமல், அதற்கான முயற்சிகளையும், சாதனங்களையும் விட்டு, விட்டு இதற்கு மாறாக முயற்சித்து மோகத்தில் அடிக்கடி மூழ்குகின்றார்கள்.

ஒரு நாய் சாலையில் கிடந்த எலும்புத்துண்டை கடித்து சுவைக்கும் பொழுது, அதன்காரணமாக தன் வாயில் ஏற்பட்ட காயத்திலிருந்து இரத்தம் வருவதைக்கூட அறியாமல், அந்த இரத்தம் எலும்பி இருந்துதான் வருகின்றது என்று நினைத்து, மேலும், மேலும் அதை சுவைத்து, ருசிக்க முயற்சிப்பதைப் போன்று, இந்த அற்ப மானிடர்களும், செயலினால் சுகம் உண்டாகின்றது என்று கருதி, செயல்களைச் செய்து, அதன் வாயிலாக உண்டாகின்ற துக்கத்தையே சுகம் என நினைத்து மீண்டும், மீண்டும் செயல் புரிகின்றார்கள்.

ஆனால், ராமா! நீ மோகத்தைக் கடந்து விட்டாய், தன்யனாக இருக்கின்றாய். உயர்ந்த உப்பரிகையின் மீது ஏறுவதற்கான ஏணியின் முதல் படி மனதின் விசாரம் என்பதை அறிவாயாக.

ஒருவன் மனதை விசாரிக்காமல் எதைச் செய்தாலும், அதன் பலன் நிச்சயமாக நன்மையை தராது. மன விசாரத்தில் ஈடுபடாதவனுக்கு, அனைத்தும் விரோதமாகவே தோன்றும். மனதை விசாரித்து அறியாத மனிதர்கள் அசுர வாழ்கையையும், அந்த மனதை விசாரித்து அறிந்த மனிதர்கள் மகத்தான தேவ வாழ்கையையும் வாழ்கிறார்கள்.

இந்த மன விசாரத்தின் வாயிலாக அவர்கள் அடைந்த ஆயுதமான ஆத்ம அறிவினால், அசுரர்களை வெல்கிறார்கள். அதாவது, **காமம், குரோதம், லோபம், மதம் மாச்சரியம்** என்ற அசுரர்களை அழிக்கிறார்கள். ஆகவே, '**சுகம் என்ற மரத்திற்கு, விசாரம் என்ற விதை**' மிகவும் அவசியம்.

தன் மனதை விசாரம் மேற்கொள்ளும் மனிதனே மகத்தான மனிதனாக மாறுகின்றான். அத்தகைய மன விசாரத்தைக் கைவிடாத மனிதனே, மனிதர்களுள் மாணிக்கம் ஆகிறான். அவனே பாக்கியசாலி.

கோடைக்காலத்தில் கடுமையான வெயிலில், காய்ந்துக் கொண்டிருக்கின்ற பூமியில், குளிர்ச்சியான நீர் நிலைத்து நிற்குமா? அது ஆவியாகிவிடும் அல்லவா?

அதுப்போல, தாகத்தை தணிக்க விரும்பும் ஒருவன் நீர் நிலைகள் இருக்கும் இடத்தை விசாரத்து அறிய விரும்பாமல், வெயிலில் வீணாக அலைவதினால் அவன் தாகம்தான் தணியுமா?

ஆகவே, சுகத்தை மட்டுமே விரும்புகிறவனுக்கு, அதற்கான மிக உயர்ந்த சாதனம் ஒன்று உண்டென்றால், அது எல்லோருடைய ஹிருதயக் கமலங்களில் இருந்துக் கொண்டு, ஆனந்தநடனம் புரிகின்ற அந்த ஆதிசக்தியான ஸ்ரீ திரிபுரையின் கிருபையே ஆகும்.

இவ்வாறு, அந்த சக்தியின் இருப்பிடம் அறிந்து, அதன்மீது அனன்ய பக்தியுடன் ஆராதனை செய்வது ஒன்று மட்டுமே, ஒவ்வொருவருக்கும் உருப்படியான செயல் ஆகும். மற்ற அனைத்து செயல்களுமே, அந்த செயல்களை செய்பவனுக்கு சற்றும் சந்தோசத்தைக் கொடுக்காது.

இதுப்போன்று, பரம ஆத்மாவான ஸ்ரீ திரிபுரை தாயானவள் ஒவ்வொருவரின் இருதய ஆகாசத்தில், புத்தியாக இருந்துக் கொண்டு, தன்னில் தானாய் தன் பிரதிபிம்ப மனதில் விசார சூரியனாக உதயம் செய்கிறாள்.

அத்தகைய, பரமேசுவரியுமான திரிபுரையை ஆத்ம சொருபிணியாக, சர்வ இருதய வாசினியாக, சித் ரூபியாக, எப்பொழுதும், சத்தை அறிந்த சத்குரு மார்க்கமாக உள்ளத்தில் ஆராதனை செய்ய வேண்டும். இப்படிப்பட்ட ஆராதனைக்கு நிர்மலமான பக்தியும், சிரத்தையும் மட்டுமே தேவை. அதற்கு ஸ்ரீ திரிபுரையின் மகாத்மியத்தை கேட்பது ஒன்றே மிகச் சிறந்த வழி. இதன் காரணமாகத்தான் ராமா! உனக்கு ஸ்ரீ திரிபுரையின் மகாத்மியம் ஏற்கனவே கூறப்பட்டது.

அதைக் கேட்டதினால்தான் நீ இப்பொழுது உயரிய மங்களத்தைச் அடைந்து இருக்கின்றாய். ஏனெனில், மனதில் உயர்ந்த விசாரத்தை நோக்கி தற்பொழுது நீ முன்னேறி இருக்கிறாய். மேலும், அந்த பரத்தை அறியும் அக விசாரமானது உதயமானால்தான், உன் வாழ்வில் உண்மையான பிறவியின் மகத்துவம் அறியப்படுகிறது.

அதுவே, விவேகமற்ற, விசாரமற்ற மனிதர்கள் கிணற்றுத் தவளைகளுக்கு நிகரானவர்கள். அதாவது, கிணற்றுத் தவளைகள் அந்த கிணற்றினைத் தவிர, வேறு ஏதையும் விசாரித்து அறியாமல், அந்த கிணற்றிலேயே உற்பத்தியாகி, அந்த கிணற்றிலேயே மடிகின்றது.

அதைப்போன்று, இவர்களும் இன்னது சுகம், இன்னது துக்கம் என்று விசாரித்து அறியாமல், இந்த உலக வாழ்க்கையே உண்மையான சுகம் எனக்கருதி, பிறவிச் சக்கரத்தில் சிக்கி சீரழிகின்றார்கள்.

எப்படி ஒரு பெண் கழுதையானது தன்னை பின் தொடந்து வருகின்ற ஆண் கழுதையை தன் அருகே வர விடாமல், தன் கால்களினால், அடிக்கடி எட்டி உதைத்துக் கொண்டிருந்தாலும், அந்த ஆண் கழுதை, அந்த பெண் கழுதையை பின் தொடந்து செல்வதை நிறுத்துவதில்லை.

அதுப்போல, இந்த அறியாமை மனிதர்கள் எத்தனை துக்கத்தை அனுபவித்தாலும், அந்த துக்கத்தையே சுகமெனக் கருதி, மீண்டும், மீண்டும் இந்த பிறப்பு – இறப்பு என்ற சம்சாரத்தில் உழன்று வருகின்றார்கள்.

"ஹே ராமா! நீயோ விசாரத்துடன் கூடியவனாக, உண்மையை அறிய விரும்பி என்னை நாடி வந்ததினால், இந்த துக்கம் என்கின்ற மகா சமுத்திரத்தை எளிதாகத் தாண்டிவிட்டாய்" என்றார்.

# அத்தியாயம் – 3

## சத்சங்கத்தின் சிறப்பு

ஸ்ரீ தத்தாத்ரேயரின் உபதேசங்களைக் கேட்ட ஜமதக்கினி முனிவரின் புதல்வனான பரசுராமன் மிகுந்த பணிவுடன், "பகவானே தாங்கள் கூறியது அனைத்தும் சத்தியமே, ஜனங்கள் எல்லோரும் அறியாமையினால் நாசமடை கின்றனர். மனதின் விசாரத்தின் மூலம் மட்டுமே ஒருவனின் மேன்மை உண்டாகின்றது என்றும், மேலும், ஸ்ரீ திரிபுரையின் மகாத்மியத்தை கேட்பதினாலும் மேன்மை உண்டாகின்றது என்றும் கூறினீர்களே, அதிலிருந்து எனக்கு ஒரு சந்தேகம் உண்டாகின்றது.

இந்த மகாத்மியத்தை ஒருவன் எப்படி கேட்பது? அதற்கு சாதனம் என்ன? எளிதாக கேட்கக்கூடிய இந்த மகாத்மியத்தை ஏன் எல்லோராலும் கேட்க முடிவதில்லை? அனேக சந்தர்பங்களில் நான் தங்களை பலமுறை சந்தித்தும் ஏன் என்னால், திரிபுரையின் மகாத்மியத்தை தங்கள் வாயிலாக கேட்டுப் பெற முடியவில்லை? இதன் காரணத்தை தாங்கள் அடியேனுக்கு கூற வேண்டும்" என்றான்.

பகவான் ஸ்ரீ தத்தர் மிகுந்த சந்தோசத்துடன் "ஹே ராமா! பரமாயிருக்கின்ற மேன்மையை அறிய வேண்டுமானால், சகல துக்கங்களையும் துவம்சம் செய்யக்கூடிய அந்த சாதனம் சாது சங்கமே ஆகும். பரமாத்மாவைப் பற்றி அறியக்கூடிய பலனை அது தந்து விடுகின்றபடியால், சாதுக்களுடைய தொடர்பு மட்டும்தான் அதற்கான **விதை** என்று அறிவாயாக.

உனக்கு உண்டான உயரிய மகான் சம்வர்த்தருடைய சந்திப்பின் காரணமாக, அவர் என்னிடம் உன்னை அனுப்பி வைத்துள்ளதிலிருந்தே உயரிய சாதுக்களின் தொடர்பு, அவனது சங்கடங்களை எல்லாம் போக்கும் என்பதற்கேற்ப, தற்போது நீ மேன்மையான பலனைக் கொடுக்கக்கூடிய இந்நிலைக்கு வந்துள்ளாய்.

சத்துக்கள் எப்பொழுதும் சத்திய வழியை மட்டுமே காட்டுவார்கள். ஒருவன் எப்படிப்பட்ட தொடர்பை உண்டாக்கிக் கொள்கின்றானோ? அவன் அதற்கேற்ற பலனை மட்டுமே அடைகின்றான் என்பதில், எந்தவித சந்தேகமும் இல்லை.

"ஹே ராமா, இதற்கு உதாரணமாக ஒரு கதையை கூறுகின்றேன் கேள்! முன்னொரு காலத்தில் தசார்ண நாட்டிற்கு அதிபதியாக முக்தாசூடன் என்ற ஓர் அரசன் இருந்து வந்தான். அந்த அரசனுக்கு நல்ல குணவான்களாகவும், வசீகர அழகு உடையவர்களாகவும், நன்கு கல்வி பயின்று, அனைத்து கலைகளையும் கற்றவர்களாகவும் **ஹேமசூடன், மணிசூடன்** என்ற இரண்டு மகன்கள் இருந்தனர்.

பராக்கிரமசாலிகளான இந்த இளவரசர்கள் இருவரும் ஒருநாள் வேட்டையாட காட்டிற்குச் சென்று, அந்தக் காட்டிலுள்ள சிங்கம், புலி, காட்டெருமைகள், மான், காட்டுப்பன்றிகள், முயல் போன்ற மிருகங்களை வேட்டையாடிக் கொண்டே காட்டின் அடர்ந்த பகுதிகளுக்குச் சென்று விட்டனர்.

அப்பொழுது, திடீரென ஆலங்கட்டி மழையும், பலமான புயல் காற்றும் அடித்தது. அந்த கடுமையான சூழ்நிலை அமாவாசை இருட்டைப் போன்று காணப்பட்டது. எங்கும் இருள் சூழ்ந்த நிலையில் மரங்கள், பாறைகள் எதுவும் கண்ணிற்கு புலப்படாத அந்த அடந்த காட்டில் இராஜகுமாரர்கள் இருவரும் தங்கள் குதிரைகளில் ஏறி காட்டில் ஒதுங்க ஒரு இடம் தேடினர்.

அப்பொழுது, சிறிது தூரத்தில் ஒரு முனிவரின் ஆசிரமம் இருப்பதைக் கண்டனர். பிறகு இருவரும் அந்த ஆசிரமத்தை அடைந்தனர். அந்த ஆசிரமத்தின் உள்ளே உருக்கிவிட்ட தங்கம் போன்று உடல் முழுவதும் பிரகாசமாக ஒளி வீசுகின்ற அழகான பெண் ஒருத்தியைக் கண்டனர். அந்த அழகான பெண்ணிடம் மயங்கிய இளவரசன் ஹேமசூடன், "சுந்தரியே! நீ இந்த அடர்ந்த காட்டில் எப்படி பயமில்லாமல் வசிக்கின்றாய்? நீ யாருடைய புதல்வி?" என்று கேட்டான்.

இராஜகுமாரன் ஹேமசூடன் கேட்ட கேள்விக்கு, அந்த பெண் மிகுந்த மரியாதையுடன் "இளவரசரே! வாருங்கள்! இங்கு வந்து இந்த ஆசனத்தில் அமருங்கள். விருந்தினர்களை வரவேற்பது நம் பண்பாடு, மற்றும் **விருந்தோம்பல்** என்பது, மிக உயர்ந்த தவசீலர்களின் தருமம் ஆகும்.

புயலில் சிக்கி மிகுந்த சிரமத்துடன் இங்கு தாங்கள் இருவரும் வந்திருப்பதை அறிகின்றேன். முதலில் சற்று ஓய்வு எடுங்கள், சிறிது நேரத்தில் என்னுடைய தந்தையும், பிரம்ம ஞானியுமான தவசீலர் **வியாக்கிரபாதர்** அவர்கள் இங்கு வந்து விடுவார்" என்றாள்.



அதன்பிறகு, அவள் அந்த இராஜகுமாரர்கள் இருவருக்கும் பழங்களும், பழஇரசங்களும் பசியாற கொடுத்து உபசரித்து, கேள்வி கேட்ட இராஜகுமாரனான ஹேமசூடனிடம், "ஹே இராஜபுத்திரரே, **ஹேமலேகை** என்பது என்னுடைய பெயர். என்னுடைய தாயாரின் பெயர் வித்யாதரி என்பதாகும்", என்றவாறு பேசத் தொடங்கினாள்.

என் தாயான வித்யாதரி ஒரு நாள் இந்த வேணா என்ற நதியில் நீராட விரும்பி, இந்த நதியில் நீராடிக்கொண்டிருந்தாள், அப்பொழுது வங்கதேசத்து அரசனான சுஷேணன் இந்த நதியில் நீராட வந்தான். அந்த அரசன் என் தாயின் அழகில் மயங்கி, அவளுடைய சம்மதத்துடன் அவளுடன் கூடியிருந்துவிட்டுத் தன் நகரத்திற்கு திரும்பி விட்டான்.

மோகத்தால் மதியிழந்த என் தாயும், தன் வீடு திரும்பிச் செல்ல வழியின்றி, இந்த ஆசிரமத்திலேயே சில காலம் தங்கி என்னை ஈன்றெடுத்து விட்டு, அவளும் எங்கோ சென்று விட்டாள். அதன்பிறகு, அன்பே உருவானவரும், சிவபதத்தை சதா சிந்திப்பவரும், இந்த உலகத்தை வென்றவருமான இந்த மகாமுனி **வியாக்கிரபாதர்** என் நிலையைக் கண்டு, என்மீது இரக்கம் கொண்டு, மிகுந்த தயையுடன் என்னைப் பெற்ற தாயினும் மேலாக வளர்த்து வருகிறார்" என்றாள்.

மேலும், "நான் இந்த முனிவரை தந்தையாகப் பாவித்து, அவருக்குச் சேவைகளைச் செய்துக்கொண்டு, அவரது மகிமை யினால், ஒருபொழுதும் பயமில்லாமல் இங்கு இருக்கின்றேன். ஆதலால், துர்புத்தி கொண்ட தேவர்களோ, அசுரர்களோ, ஏன்? அரசர்களோ கூட, இந்த ஆசிரமத்திற்குள் அவரை மீறி பிரவேசிக்க முடியாது. அப்படி, மீறிப் பிரவேசித்தார்கள் என்றால், அவர்கள் நாசத்தை அடைவார்கள்" என்று கூறினாள்.

இராஜகுமாரனான ஹேமசூடன் இவளது வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைக் கேட்டு, மனம் இறங்கி, இவளுக்கு நல்வாழ்வு கொடுக்க விரும்பி, அந்த சுந்தரியை மணம் செய்துக் கொள்ள விரும்பினான்.

இதை அவன் நேரடியாக அவளிடமே கேட்க, அவளும் "சிறிது நேரத்தில் என் தந்தையார் இங்கு வந்துவிடுவார், அவர் வந்த பிறகு, அவரிடம் தங்கள் விருப்பத்தைக்கூறி சம்மதம் பெறலாம்" என்று, அந்த ராஜகுமாரனிடம் கூறிக்கொண்டிருந்த வேளையில், மகா மேன்மை பொருந்திய, **ஸ்ரீ வியாக்கிரபாத முனிவர்** அந்த ஆசிரமத்திற்குள் நுழைந்தார். அவ்வாறு, உள்ளே வந்த, அந்த முனிவரிடம், இளவரசன் **ஹேமசூடன்** இதுவரை நடந்ததை எல்லாம் எடுத்துக்கூறி, அவரது ஆசிகள் பெற்று, தன் மனதில் எழுந்த திருமண விருப்பத்தையும் எடுத்துக் கூறினான்.

"**மகரிஷியே! தங்கள் மகளை எனக்கு மணம் முடித்துக் கொடுக்க வேண்டும்**" என்றும் வேண்டினான். இதைக்கேட்ட ஸ்ரீ வியாக்கிரபாத முனிவரும் இது இறைவனின் சித்தம் என்பதை அறிந்து, அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைத்து, அவர்கள் நாட்டிற்கு வழியனுப்பி வைத்தார்.

ஹேமலேகையை மணந்துக்கொண்டு நாடு திரும்பிய ஹேமசூடன் தன் தாய், தந்தையிடம் நடந்ததைக் கூறினான். இதைக்கேட்ட ஹேமசூடனின் தந்தையான **முக்தாசூடன்** மிகுந்த மன மகிழ்ச்சி அடைந்து, நகரமெங்கும் விழாக்கோலம் பூண்டிருந்தது.

தன் நாட்டு மக்களாகிய அனைவரின் முன்னிலையில் இவர்களுடைய திருமண வைபவத்தை, அந்த நாடு முழுவதும் கொண்டாடும் வகையில் இன்னும் சிறப்பாக நடத்தினான். இவ்வாறு, ஹேமலேகையை திருமணம் செய்துக் கொண்ட இளவரசன் **ஹேமசூடன்** அன்று முதல், எப்பொழுதும் தன் மனைவியின் அழகில் மயங்கியவனாகவும், அவள்மீது அதிக ஆசைக் கொண்டவனாகவும், போக வாழ்க்கையில் அதிக ஆர்வம் கொண்டவனாகவும் இருந்தான்.

ஆனால், ஹேமலேகை அவனது விருப்பத்திற்கு மாறாக, அவனது மன மயக்கத்தை போகத்திலிருந்து, யோகத்திற்கு மாற்ற நினைத்தாள். ஒருநாள் இராஜகுமாரன் தனிமையில் இருந்த தன் மனைவியிடம் "அன்பே! நான் உன்னிடம் அளவுக் கடந்த ஆசை வைத்துள்ளேன். ஆனால், நீயோ என் மீது பிரியமில்லாதவள் போல நடந்துக் கொள்கின்றாய். இருவரும் இணக்கமாக இருந்தால்தானே இல்லற சுகத்தில் இன்பம் காண முடியும்.

நான் ஆசையுடன் உன் அருகில் வந்து, உன்னிடம் பேசும் பொழுதெல்லாம், சற்றும் நீ காது கொடுத்துக் கேட்காமல், அமைதியாக இருப்பதற்கு என்ன காரணம்? உன் மனதிற்கு விரோதமாக நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா? ஏன் உன் மனதை வேறு எங்கோ வைத்துக்கொண்டு, கண்மூடி இருப்பது போன்று காணப்படுகின்றாய்? என்ன காரணம் என்பதை நான் அறியலாமா?" என்று தன் மனைவியான ஹேமலேகையிடம் ஆசையுடன் கேட்டான்.

# அத்தியாயம் – 4

## சத்சங்கத்தின் பலன்

தன் பிரியமான கணவனின் சந்தேகங்களை கேட்ட ஹேமலேகை புன் சிரிப்புடன், மோகத்தில் மூழ்கியுள்ள தன் கணவனுக்கு, புத்தி தெளிவைக் கொடுக்க விரும்பி, அவனுக்கு யுக்தியினால்தான் ஞானம் உண்டாக்க வேண்டுமென்று கருதி, பின்வருமாறு கூறத்தொடங்கினாள்.

"இராஜபுத்திரரே! என் வார்த்தைகளைக் கவனமாகக் கேளுங்கள், நான் உங்களிடத்தில் பிரியம் இல்லாதவள் அல்ல. உண்மையில், உலகத்தில் பிரியமானது எது? பிரியமற்றது எது? என்பது எனக்கு விளங்காததினால், தினமும் அதைப்பற்றி ஆலோசனை செய்கின்றேன். இதுவரை, ஒரு முடிவும் எனக்கு கிடைக்கவில்லை. அதனுடைய தத்துவம் இன்னதென்றும் இதுவரை எனக்குப் பிடிபடவில்லை. எனவே, தாங்களே அதன் தத்துவத்தை எனக்குக் கூறவேண்டும்" என்றாள்.

இதைக்கேட்ட ஹேமசூடன், புன்னகையுடன் தன் மனைவியை நோக்கி, "அன்பே பெரும்பாலான பெண்களுக்கு

பேதமைக்குணம் உண்டு என்பதை, நானும் அறிவேன். அது உன்னிடத்திலும் காணப்படுவது ஆச்சரியத்தை அளிக்கின்றது.

பொதுவாக, பிரியமானது, பிரியமற்றது எது? என்பதை பசு, பக்ஷிகள்கூட நன்கு அறிந்து வைத்துள்ளன. அவைகளுக்கு பிரியங்களினால் சுகமும், பிரியம் இல்லாதவைகளினால் துக்கமும் உண்டாகின்றன என்பதை நடைமுறையில் நம்மால் காண முடிகின்றது.

அதாவது, எதனிடமிருந்து சுகம் உண்டாகின்றதோ? அதன்மீது அனைவருக்கும் தானாகவே பிரியம் வருகின்றது. எதனிடமிருந்து துக்கம் உண்டாகின்றதோ? அது பிரியமற்றது என்று ஒதுக்குவதும் உண்டாகின்றது. இதுவே அனைவரின் இயல்பாக இருக்கும்போது, இந்த விசயத்தை நினைத்து, நீ ஏன் மூடத்தனமாகச் சிந்தனை செய்து வருகின்றாய்?" என்றான்.

இதைக்கேட்ட ஹேமலேகை, "அன்பரே!, தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. "ஆம்! பெண்களுக்கு பேதமைக் குணம் உண்டென்பதை நானும் ஏற்கின்றேன். அவர்களுக்கு நல்ல ஆலோசனை சக்தி கிடையாது. அதன் காரணமாக, அறிவற்ற பேதையான எனக்கு அறிவைக் கொடுப்பது தங்கள் கடமையல்லவா? எனவே, உங்களால்தான் எனக்கு அறிவு உண்டாகி, அனாவசியமான சிந்தனைகள் செய்வதை விட்டு, விட்டு, எப்போதும் உங்களுடன் போகத்தில் இருக்கவேண்டும் என்றுதான் நானும் யோசிக்கின்றேன். ஆனால், எத்தகைய சுக, துக்கங்களிலிருந்து பிரியாப் பிரியங்கள் உண்டாகின்றன வென்று தாங்கள் தீர்மானித்தீர்கள்.

அதாவது, ஒரே விசயம் அதன் தேச, கால மாறுதல்களினால் பேதத்தை அடைந்து, இந்த மனம் அந்த ஒரு விசயத்திலேயே ஒருமுறை சுகத்தையும், மற்றொருமுறை துக்கத்தையும் உண்டு செய்கின்றதே! எல்லோருக்கும் இது நடைமுறையில் இருக்க உங்கள் தீர்மானமான முடிவு எங்கே?

உதாரணமாக, தீயின் வெப்பமானது குளிர் காலத்திற்கு மிகவும் பிரியமானதாக மாறி, அப்போது இதமாக இருக்கின்றது. அதுவே, கடுமையான வெயில் காலத்தில், அதன் உஷ்ணம் காரணமாக, பிரியமற்றதாக மாறி விடுகின்றது. அவ்வாறே, ஒருவருக்கு இனிப்பு பிரியமானதாக இருக்க, அதுவே, சர்க்கரை நோய் வந்தவர்களுக்கு அதே இனிப்பு பிரியமற்றதாக மாறி விடுகின்றது. இதுப்போன்றே, மனைவி, குழந்தைகள், நாடு, நகரம் முதலானவைகளைப் பற்றியும் கூறலாம்.

இவைகள் அனைத்துமே சுகத்தை மட்டுமே கொடுக்கும் என்று கூறுவதைவிட, இதனால், துக்கமும் உண்டாகின்றது. எனவே, சுகம் வேண்டும் என்பதற்காக, ஒருவன் இந்த உலகத்திலுள்ள அத்தனை விதமான சுக, போகங்களையும் அனுபவித்து விட முடியாது. அது சாத்தியமும் ஆகாது.

ஆனால், பெரும்பாலானவர்கள் ஆசையின் காரணமாக, அனைத்து செல்வங்களை வைத்துக் கொண்டிருந்தாலும், எப்போதும் கவலையுடன் காணப்படுகின்றார்கள். அதேசமயம், பொருட்செல்வம் ஏதுமற்ற பலரும் சிறிதும் கவலையின்றி காணப்படுகின்றார்கள்.

சுகத்தை அடைய விரும்புபவர்களுக்காக என்றே, ஏராளமான போக சாதனங்கள் இந்த பூமியில் இருந்தாலும், அவைகளின் வாயிலாக, ஒருபோதும் ஒருவனுக்கு நிலையான சுகம் உண்டாவதில்லை. அனேக போக சாதனங்களை ஒருவன் அடைய முடியாவிட்டாலும், ஏதேனும் ஒரு போகத்தின் வாயிலாக மட்டுமாவது, அவன் விரும்பும் அந்த உண்மையான சுகம் உண்டாகுமா? என்றுப் பார்த்தால், அந்தச்சுகமும், துக்கத்துடன் கலந்த, தற்காலிகமானச் சுகமாக இருப்பதினால், அதை **சுகம்** என்று கூறவே முடியாது.

பொதுவாக, துக்கத்தை **வெளி துக்கம், உள் துக்கம்** என்று இரண்டு வகைகளில் பிரிக்கலாம். அதில், தாதுக்களின் தோஷ குறை பாட்டால் தோன்றும், நோய்களின் காரணமாக உடலில் தோன்றுவது **வெளி துக்கம்** என்றும், ஆசையினால் மனதைப் பற்றிக் கொள்கின்ற துக்கம், **உள் துக்கம்** என்றும் ஆகின்றது.

இப்படிப்பட்ட உள் மன துக்கத்தினால், இந்த உலகம் முழுவதும் விழுங்கப்பட்டுள்ளது. **துக்கம் என்ற மரம் வளர ஆசை என்ற விதையே காரணம் ஆகின்றது**. ஆசைகள் சிறிது மிச்சம் இருக்கின்ற நிலையில், உண்டாகின்ற சுகம் உண்மையில் சுகமே அன்று.

ராஜகுமாரரே! அதனைத்தான் துக்கமென்றே அறிய வேண்டும். ஏனெனில், துக்கம் கலந்த சுகம் என்பது, மிருகங்கள், பறவைகளுக்கும்கூட இருக்கின்றது.

இதனைக் காரணமாகக்காட்டி மனிதர்களுக்கு உண்டாகும் சுகம் மேன்மையான சுகம் என்று கூறவீர்களா? ஆனால், மனிதர்களுக்கு உண்டாகும் சுகத்தை விட மற்ற ஜீவர்களுக்கு உண்டாகும் சுகமே மேன்மையானது. காரணம், அவைகளிடம் ஆசைகள் இருப்பதில்லை.

ஆனால், மனிதனிடத்திலோ அனேக ஆசைகள் இருப்பதினால், இந்த ஆசைகளின் இடையில் சில நேரங்களில் வந்து, போகின்ற அற்ப சுகத்தை சுகம் என்று கூறவே முடியாது. அதனைச் சுகம் என்று கூறுவதாக இருந்தால், உடல் முழுவதும் தீக்காயத்தினால் உடல் எரிச்சலுடன் இருக்கின்ற நிலையில், ஒருவனுக்கு அந்த உடலில் சிறிது சந்தனம் தடவி விடுவதினால் உண்டாகின்ற குளிர்ச்சியில் கிடைக்கின்ற சுகத்தை சுகமென்று கூற வேண்டும். ஆனால், அந்த நேரத்தில் அது அவனுக்கு முழுமையான சுகத்தைக் கொடுக்குமா?

மனிதர்கள் தங்களது பிரியமான மனைவியை ஆசையுடன் கட்டி தழுவியதில் அடைந்த சுகமானது, அவளது கைகளின் பலத்தால் பலமாக கட்டி தழுவும் பொழுது, அதே சுகம் அவனுக்கு துக்கமாக மாறுகின்றது. அடுத்து, புணர்ச்சிக்குப் பின்பு விந்து, நாதம் வெளிப்பட்ட உடல், பல சுமைகளைத்தூக்கி வந்த எருதுப்போல தளர்ச்சியை அடைகின்றது. ஆக, இப்படிப்பட்ட விசயத்தில் நீங்கள் என்ன சுகத்தை கண்டீர்கள்?

ஹே நாதா! கூறுங்கள், பிரியையின் சேர்க்கையினால், நாடி நரம்புகளுக்கு கிளர்ச்சிகள் உண்டாகி, அதனால் என்ன சுகம் தோன்றுகின்றதோ? அந்த சுகம் மிருகங்களிடத்திலும்

காணப்படவில்லையா? ஆனால், நீங்கள் வந்து என்னிடம் உன்னுடைய அழகைப் பார்த்துக்கொண்டிருப்பதினால் சுகம் அதிகமாகின்றது என்று கூறுவீர்களேயானால், அப்படிப்பட்ட அழகினால் உண்டாகின்ற சுகம் ஒருவனுக்கு கனவில்கூட கிடைக்கின்றது. இது அபிமானத்தினால் மட்டுமே உண்டான சுகமின்றி வேறில்லை. நாதா! உங்களுக்கு ஒரு கதையின் மூலமாக அழகின் அபத்தம் என்ன என்பதை கூறுகின்றேன் கேளுங்கள்" என ஹேமலேகை தன் கணவனுக்கு கதையை கூறத்தொடங்கினாள்.

முன்னொரு காலத்தில் மன்மதனைவிட அதிக அழகு உடையவனான ஒரு இராஜகுமாரன் மனதை மயக்கக்கூடிய அழகான ஒரு பெண்ணை தனது மனைவியாக அடைந்த ஆனந்தத்தில் திளைத்திருந்தான். அவன் தன் மனைவியிடம் எப்பொழுதும் மிகுந்த அன்புடனும், ஆசையுடனும் இருந்தான். ஆனால், அவளோ அந்த இராஜகுமாரனின் வேலைக்காரன் ஒருவனிடம் அதிகம் பிரியமுள்ளவளாக மாறி, எப்போதும் அந்த வேலைக்காரனுடன் சேர்ந்து, இராஜகுமாரனுக்கு வஞ்சனை செய்துக் கொண்டிருந்தாள்.

இவளது கணவனான இராஜகுமாரனுக்கு, இந்த விசயம் தெரியாமல், அனுதினமும் அந்த வேலைக்காரன் ஊற்றிக் கொடுக்கும் மதுவினைக் குடித்துவிட்டு, மதி மயக்கத்தினால், தன்நிலை மறந்து, தன் மனைவியை அனுபவிக்க அவனது அந்தப்புரம் செல்வான்.

ஆனால், அந்த வேலைக்காரனோ, இராஜகுமாரனது மனைவியை இவன் அனுபவித்துக் கொண்டு, அதற்குப் பதிலாக, அவனுக்கு ஒரு தாசியை அந்தப்புரத்திற்கு அனுப்பி விடுவான்.

மதுவினால் மந்த மதியடைந்த இராஜகுமாரன் தினமும் அந்த தாசியினை தன் மனைவி என்று கருதி மன மயக்கத்தில் என் அழகான, அன்பான மனைவியை அடைந்த நானே பாக்கியசாலி, எனக்கு நிகரான பாக்கியவான் எவன் இருக்கின்றான் என்று பலவாறாக எண்ணிக் கொண்டு, தன் வாழ்நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள் இராஜகுமாரனின் வேலைக்காரன் மதுவை அவனுக்கு ஊற்றிக் கொடுக்காமல், அப்படியே வைத்து விட்டு, அவசரமாக எங்கோ சென்று விட்டான். அன்றைய தினம் மதுவை அதிகம் குடிக்காத இராஜகுமாரன் தன் மனைவியின் மீதுள்ள பிரியத்தால், அந்தப்புரம் வந்து, அங்குள்ள ரம்மியமான தன்னுடைய படுக்கையறைக்குச் சென்று, அங்கு படுத்துக் கொண்டிருந்த தாசியை தன் மனைவி எனக்கருதி, கட்டித் தழுவும் பொழுதுதான் கவனித்தான்.

அங்கு அழகான தன் மனைவி இருப்பதற்குப் பதிலாக, அவலட்சணமான மற்றொருப் பெண் இருப்பதைக் கண்டு, அவளிடம் கோபமாக, **"என் பிரியமான மனைவி எங்கே?"** எனக் கேட்க, அவளும் இராஜகுமாரனின் மயக்கம் தெளிந்திருப்பதைக் கண்டு, அவனுக்கு அஞ்சியவளாக, நடந்த உண்மைகள் அனைத்தையும் கூறி விட்டாள்.

இதைக்கேட்ட இராஜகுமாரனும், தன் அறியாமையை எண்ணி, சீ! நான் என்ன மனிதன், மதுவினால் மதி மயங்கி, முட்டாளாக இருந்தவனை என்னவென்று கூறுவது?



வெகுகாலமாக, இவளை என்னுடைய உயிரிலும் மேலாக அல்லவா நேசித்தேன். ஆனால், இவளோ கட்டிய கணவனை விட்டு, விட்டு வேறு ஒருவனுடன் ஓடிப் போனாளே! என்னிடம் வஞ்சனையாக ஆசைக்காட்டி மோசம் செய்தாளே! இந்த மதுவினால் நானும் மதியிழந்து விட்டேனே! என்றுமே நான் விரும்பாத வேசியைத் தொட்டு வீணாகப் போனேனே! என்னுடைய இத்தகைய விபரீத புத்திக்கு காரணமே, அந்த மதிமயக்கும் மதுதானே! அந்த மதுவை தொட்டதினால்தானே, எனக்கு இதுபோன்ற துயரம் உண்டாகியது. என்னைப் போன்ற மூடன் யார் உள்ளார்கள்? அவளது அழகில் மயங்கி பித்தனாக இருந்ததினால்தானே என்னை அவள் இவ்வாறு வஞ்சித்து விட்டாள்.

அந்த வேலைக்காரப் பாவியோ எல்லா அங்கங்களும் அழகற்றவனாக இருந்தும், அவனிடம் இவள் என்ன அழகைக் கண்டாள்? எல்லோரையும் வசீகரிக்ககூடிய அழகைக் கொண்ட என்னைவிட, அவனிடம் எந்த அழகைக் கண்டு மயங்கினாள்?

மது மற்றும் மாது மேல் உள்ள ஆசையின் காரணமாக, இந்த நாட்டுக்கே ராஜாவான என்னுடைய நிலை இவ்வாறு கீழ்த்தரமானதாக மாறியதே! நான் எதை அறிய வேண்டுமோ? அதை அறியாமல் காலத்தைக் கடத்தி, இத்தனை நாட்களும் வீணாக இருந்து விட்டேன் என்று பலவாறாகப் புலம்பியவனாக, மிகுந்த மன வேதனைக் கொண்டவனாக, விரக்தியுடன் தனது அரச வாழ்க்கையைத் துறந்து, தீவிர வைராக்கியத்துடன் வனத்தை நோக்கிச் சென்றான்.

"ஹே ராஜகுமாரரே! அழகு என்பது மனதின் கற்பனை. நீங்கள் என்னிடம் அதிக அழகைக் கண்டவராக நினைத்துக் கொண்டு, அதன்வாயிலாக சுகத்தை அடைவதாக எண்ணிக் கொண்டிருப்பது உண்மையில்லை. அற்ப மதுவினால் மதி மயக்கம் அடைந்தவன் ஒரு வேசியைக்கூட அறிந்துக்கொள்ள முடியாமல், அவளைத் தன் மனைவியாக நினைத்து, அவளிடம் சுகத்தை அடைவதில் இருந்தே, சுகம் என்பது அவன் விரும்பும் பொருட்களில் மட்டும் இல்லை. அது அவனது மனதினைச் சார்ந்த விசயம் என்பது, தற்போது தங்களுக்குப் புரியும் என்று கருதுகின்றேன்.

என் பிரியரே! மனிதன் தனக்கு அன்னியமான ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் அவளது உருவம் அவன் சித்தத்தில்

பதிகின்றது. அந்த உருவத்தை அடிக்கடி மனதில் பதியவைத்து, அதையே சிந்தனை செய்வதால், அந்த ரூபத்திற்கு எது விசயமோ? அதனிடத்தில் அவனுக்கு ஆசை உண்டாகின்றது. அவ்வாறு, அவனது சித்தத்தில் பதிந்த அந்தப் பெண் உருவம்மீது உண்டாகின்ற தீவிரமான ஆசையின் காரணமாக, மனம் அதனை அழகானதாக மாற்றிக் கொள்கின்றது. மேலும், இந்த மனம் தன் கற்பனா சக்தியின் வாயிலாக, அழகை பெண்ணிடம் பொருத்திப் பார்க்கின்றது.

அதனால்தான் அழகற்ற ஆடவன் கூட அழகானவனாக அந்த இளவரசனின் மனைவிக்கு காணமுடிகின்றது. அதாவது, மனதில் பதியவைத்த பொருளை மீண்டும், மீண்டும் நினைவு படுத்திப் பார்க்கின்ற பொழுது, அவனது இந்திரியங்களும், மனமும் சலனத்தை அடைகின்றது. அதனால், அவன் மற்ற ஆசைகளை விட்டு, விட்டு பெண்ணிடம் மட்டுமே அழகைக் காண்கின்றான்.

அதுவே, தனது இந்திரியங்களை கட்டுப்பாட்டுடன் வைத்துக் கொண்டிருப்பவனுக்கு எவ்வளவு அழகு கொண்ட பெண்ணைப் பார்த்தாலும், அவனுக்கு அவள் மூலமாக ஆசை உண்டாவதில்லை. இதற்கு மூலக்காரணம், ஒருவனது மனம் அழகை அடிக்கடி சிந்தனைச் செய்துக் கொண்டிருப்பதுதான் ஆகும். அதுவே, இதுப்போன்ற சிந்தனைகள் குழந்தைகளுக்கும், யோகிகளுக்கும் உண்டாவதில்லை. ஆகையால் யாரெல்லாம், ஒரு பெண்ணை அழகு தேவதையாக காண்கின்றானோ? அவன் தன் மனதினால் அந்த பெண்ணிடத்தில் அழகு இருப்பதாகக் கற்பித்துக் கொள்கின்றான்.



என் பிரியரே! இரத்தத்தினால் நிரப்பப்பட்ட இந்த சதைப்பிண்டமே, நீங்கள் அதிகம் ஆராதிக்கும் அழகுப்பதுமை எனும் பெண். அவளது அழகு உடலைப் பகுத்துப் பார்த்தால், அதனுள் அருவெறுக்கத்தக்கப் பல விசயங்கள் உள்ளதைக் காண முடியும். இதில் உங்களுக்கு பிரியமானது, பிரியமற்றது என்று எதைக் கூற இயலும்.

இராஜபுத்திரரே! அழகு என்பது தன்னுடையது என்ற அபிமானத்தால் மட்டுமே வருவது. அது, மனதின் மயக்கமான கற்பனையே. இந்த உலகில் அழகற்றவர்கள் என்று நாம் தவறாகக் கருதிக் கொண்டவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், நீண்ட முகமுடையவர்கள், நீண்ட பற்கள் கொண்டவர்கள், நீண்ட காதுகளை கொண்டவர்கள், வழுக்கைத்தலையர்கள் எனப் பலவறாகக் காண்கின்றோம்.

ஆனால், அவர்களும் மற்றவர்களுக்கு மிகுந்த அழகு உடையவர்களாக கருதப்படுவது எப்போதெனில், தூய்மையான அன்பினால் ஆராதிக்கப்பட்ட தன் கணவனிடத்திலோ, அல்லது மனைவியிடத்திலோ சந்தோசத்தை அடைவதிலிருந்தே, அந்த அழகு என்பது, அவர்களது உடலில் இல்லை. அது அவர்களது மனதில்தான் இருக்கின்றது என்பது புரியும். ஆகவே, அளவிற்கு அதிகமாக பெண்களின் அழகில் பற்று வைக்கின்றவர்கள் மற்றவர்களால் நிந்திக்கப்பட வேண்டியவர்களே.

இராஜபுத்திரரே! எந்தச் சரீரம் உங்களுக்குப் பிரியமாகத் தோன்றுகின்றதோ? அதை விழிப்புற்ற விவேகப் புத்தியினால் விசாரித்து அறியவேண்டும். நாம் உண்ணும் அறுசுவைகள் கொண்ட உணவுகள்கூட, காலமாற்றத்தால் கழிவுப்பொருள் ஆகிவிடும்பொழுது, அழகான மனிதர்களின் இளமையும், கால மாற்றத்தினால் மாறுதலுக்கு உட்படும்போது, அதனுடைய நிலையாமை பற்றியும் அறிந்துக் கொள்ள வேண்டும். ஆகவே, இதில் உலகில் எது பிரியமானது, எது பிரியமற்றது என்று எவ்வாறு கூற இயலும்?"

இவ்விதமாக ஹேமலேகை கூறிய வார்த்தைகளைக் கேட்ட ஹேமசூடன் போக விசயங்களில் வைராக்கியம் வந்தவனாக மாறி, அவள் கூறிய வார்த்தைகளை எண்ணி வியப்புற்றான். அவள் கூறிய விசயங்களை மறுபடியும் தன் புத்தியினால் ஆலோசனை செய்துப்பார்த்து, சுக, போகங்களில் ஆசைகள் அற்றவனாக மாறி, அவளிடமிருந்து படிப்படியாகத் தத்பத நிலையைக் கேட்டறிந்து, தனித்த, ஒன்றேயான சித்ரூபமும், ஆத்மரூபிணியுமான ஸ்ரீ திரிபுரையை உள்ளத்தில்

தியானித்து, அகிலமும் தன்னுள்ளே என்ற ஒரே திருஷ்டியுடன் முக்தியை நாடினான்.

பிறகு, இளவரசன் மணிசூடன், ஹேமசூடனிடமிருந்தும், அரசன் முக்தாசூடன் தன் மகனிடமிருந்தும், முக்தாசூடனின் மனைவி தன் மருமகளான ஹேமலேகையிடம் இருந்தும், இந்த உயரிய ஆன்ம ஞானத்தை அடைந்தார்கள். அந்த அழகிய நகரில் மந்திரிகளும், மக்களும்கூட ஞானவான்கள் ஆயினர். அங்கு ஒருவர் கூட அஞ்ஞானிகளாக இருக்கவில்லை.

சத்திய லோகத்தைப்போன்று, அந்த நகரமே இந்த பூ உலகத்தில் மேன்மை பொருந்திய நகரமாக மாறி, அங்கு வசித்த பறவைகள் கூட இந்த ஆன்ம வித்யாவைக் கற்று மோக்ஷத்தை அறிந்திருந்தது. அவ்வாறு வாழும்போதே முக்தியை அடைந்த ஒரு **கிளி** பின்வருமாறு பாடியது.

அறுசீர் விருத்தம் பாடல்:–

**"சித்துருவான ஆன்மாவை சேத்தியம் நீக்கிப் பாரீர்**
**சித்தலாற் சேத்தியமில்லை திகழ் பளிங்குருவம் போலச்**
**சித்ததே சேத்யமாகும் சித்து நான்றானே எல்லாம்**
**சித்தினால் விளங்கலாலே சித்தொளி சுதந்திரந்தான்."**

பொருள்:–

கண்ணாடியில் பிரதிபலிக்கப்பட்ட பிம்பங்கள் போல உலகக் காட்சிகள் சித்திலிருந்து பிரதிபலிக்கப்பட்டவைகளே.

கண்ணாடியில் பிம்பத்தைப் பார்ப்பவன், கண்ணாடியைப் பார்க்கத் தவறுகிறான். அந்த பிம்பத்தை நீக்கினால் கண்ணாடி மட்டும் தெரிவதுப் போல, உலகக் காட்சிகளை நீக்கி சித்தை மட்டும் பார்க்க வேண்டும். கண்ணாடி இல்லாமல் பிரதிபலிப்பு இல்லை, அதுப்போல சித்தொளி இல்லாமல் காட்சிகள் இல்லை.

**"சித்தொளியினாலேயே எல்லாம் பிரகாசிக்கின்றன"**

எல்லாம் சித்தே!, நானும் சித்தே! சித்தின் ஒளியினா லேயே எல்லாம் விளங்குவதால், சித்தொளி சுதந்திரமானது.

கிளி வாமதேவர் என்ற ரிஷிக்கு மோக்ஷத்தை அடையும் வித்யாவைக் கற்றுக் கொடுத்ததினால், அந்த ரிஷியினால், **வித்யா நகரம்** என்ற பெயர் பெற்றது.

ஆகையினால், "ஹே ராமா! சகல சுபத்திற்கும் மூலக் காரணம், சாதுக்களாகிய சத்துக்களுடைய சங்கமம் என்பதை அறியவும். ஹேமலேகை என்ற ஒருவளின் சங்கத்தால், அந்த நகரமே ஞானத்தை அடைந்தது. ஆகவே, மேன்மை உடைய சுகத்தை அடைய சத்துக்களான சாதுக்களின் தொடர்பு மட்டுமே பரமமாயிருக்கின்ற மூலமென்று நீ தெரிந்துக் கொள்".

# அத்தியாயம் – 5

## ஹேமசூடனின் மனக்குழப்பம்

அத்திரி மகரிஷியின் புத்திரரான ஸ்ரீ தத்தாத்ரேயரினால் இவ்விதம் கூறப்பட்ட சத்சங்க மாகாத்மியத்தைக் கேட்டு ஜமதக்கினி முனிவரின் மகனான பரசுராமன் மிகுந்த மன மகிழ்ச்சியுடன் பின்வருமாறு அவரிடம் சில கேள்விகளைக் கேட்கத் தொடங்கினான்:–

சாதுக்களின் சங்கமமானது அனைத்து சுபங்களுக்கும் மூலகாரணம் என்று தாங்கள் கூறியது முற்றிலும் உண்மை. எவன் ஒருவன் இந்த விதமான தொடர்புகளை உண்டாக்கிக் கொள்வதில், ஆர்வமில்லாமல், அவனது மனம் போன போக்கில் போகின்றானோ? அதற்கேற்ற பலனை அடைகின்றான்.

அவரவர்களின் அனுபவத்திற்கேற்ற பலனைத்தான் அவரவர்கள் அடைகின்றார்கள். அதாவது சாதுக்களின் தொடர்பு ஒருவனை உயர்ந்த நிலைக்கும், தீயவர்களின் தொடர்பு ஒருவனை தாழ்ந்த நிலைக்கும் கொண்டு செல்லும் என்பதை எல்லோரும் அனுபவ உண்மைகளால் அறிய முடிகின்றது.

ஹேமலேகை பெண்ணாக இருந்தாலும், அவளது சேர்க்கையினால் அந்த நாடே மிகுந்த சுபிட்சத்தை அடைந்தது. ஹேமசூடன் அவளால் ஆத்ம ஞானத்தை அடைந்து ஜீவன் முக்தனாக, ஆனந்தமாக வாழ்கின்றான் என்பதினால், அவனது வாழ்க்கையை மேலும் விரிவாகக் கேட்க விரும்புகின்றேன்.

"தயாநிதியே! அவனது வாழ்க்கையை முழுவதுமாகக் கூற வேண்டும்" என்று பரசுராமன் கேட்க, ஸ்ரீ தத்தரும் அவனை நோக்கி "மிகவும் பரிசுத்தமான அக்கதையினை கூறுகின்றேன் கேள்!" என்று, கதையை விரிவாகக் கூற ஆரம்பித்தார்.

ஹேமலேகையின் இதமான வார்த்தைகளின் மூலம் சஞ்சலத்தில் இருந்து விடுபட்டு, **"போதுமிந்த உலக வாழ்க்கை!"** இனி ஹேமலேகை கூறியதுப்போன்று நிலையான சுகத்தை அடைய உலக விவகாரங்களில் இருந்து முழுவதுமாக ஒதுங்கி வாழ முயற்சித்தான். ஆனாலும், நீண்ட நெடு காலமாகவே அரசர்களுக்கான சுக, போக வாழ்வை வாழ்ந்தவனுக்கு, அந்த பழைய வாசனை களிலிருந்து, அவ்வளவு எளிதாக அவனால் விடுபட முடியாமல், அதைப்பற்றி ஹேமலேகையிடம் கூற வெட்கப்பட்டவனாகவும், சில நாட்களைக் கழித்தான்.

இதனால், அவனது உடல் மெலிந்து நோயுற்றவன் போன்று காணப்பட்டான். இவ்விதம் சோர்வான முகத்துடன், சாரியான தூக்கமற்ற, நிறம் மாறிய கண்களுடன் காணப்பட்ட தன் கணவராகிய இராஜகுமாரனைக் கண்ட ஹேமலேகை அவன் அருகே சென்று, "ஹே நாதா! நீங்கள் ஏன் முன்புபோலக்

களிப்புடன் இருப்பதில்லை, மிகுந்த கவலை அடைந்தவாறு காணப்படுகின்றீர்களே! இதற்குக் காரணம் என்ன?


மேலும், உங்களது சரீரம் ஏதோ வியாதியினால் பாதிக்கப்பட்டது போன்று காணப்படவில்லை. பொதுவாக, உலக சுக, போகங்களினால் **வாதம், பித்தம், சிலேத்துமம்** என்ற குணபேதங்களினால், மனிதர்களுக்கு வியாதிகள் உண்டாவது சர்வ சாதாரணம். இருப்பினும், அத்தகைய வியாதிக்கு நிவாரணமாக வைத்திய சாஸ்திரத்தில் மருந்துகள் ஏராளமாக உள்ளன. ஆனால், தங்களின் தோற்றத்தை காணுகின்ற பொழுது, இது தங்களது உடல் ரீதியான பிரச்சனையாகத் தெரியவில்லை. மன ரீதியான பிரச்சனையாகத் தெரிகின்றது.

எனவே, தங்களது மனப்பிரச்சனைக்கு எந்தவிதமான வைத்தியத்தில், எந்த மருந்தைக் கொடுக்க முடியும்? என் பிரியரே! உங்களுக்கு இந்தச் சோகம் என்ன காரணமாக உண்டாகியிருக்கின்றது எனக் கூறுங்கள்?" என்று கேட்டாள்.

ஹேமலேகை இவ்வாறு கூறியதைக்கேட்ட இராஜ குமாரனான ஹேமசூடன் அவளிடம், "என் பிரியையே! என் சோகத்தின் காரணத்தைக் கூறுகின்றேன் கேட்பாயாக. முன்பு எனக்கு சுகமாக தோன்றியதெல்லாம் உன்னுடைய உபதேச வார்த்தைகளைக் கேட்ட பிறகு, இப்பொழுது சுகப்படவில்லை.

இவைகளினால் சுகத்தை உண்டாக்க முடியும் என்ற நம்பிக்கையும் தற்பொழுது என்னிடம் காணப்படவில்லை. அதாவது, இது எப்படி இருக்கின்றது எனில், அரசரிடம் குற்றம்

செய்து தண்டனையைப் பெற்றவனுக்கு, அவனை தண்டிக்கும் முன்பு என்னதான் சுக, போக சாதனங்களை அனுபவிக்கக் கொடுத்தாலும், அவைகள் அவனுக்கு ஒரு போதும் சுகத்தைக் கொடுக்காதோ? அதுப்போன்று, எனக்கு எதுவுமே தற்பொழுது சுகத்தைக் கொடுக்கவில்லை.



என்னாலும், இந்த உலக விசயங்களை தியாகம் செய்ய வல்லமை இல்லாதபடியால், என்னுடைய முந்தைய வாசனை வசத்தால், இராஜ காரியங்களையே மீண்டும் கவனித்து கொண்டு வருகின்றேன். எனக்கு அரச வாழ்க்கையான அற்ப சுகங்களை விடவும் முடியவில்லை, அதேசமயம் நிலையான சுகத்தைக் கொடுக்கின்ற என் உண்மை சொரூப நிலைக்கு வரவும் முடியவில்லை.

இந்த இரண்டுக்கும் நடுவில் தவியாய் தவிக்கின்றேன். எதைச் செய்தால் இவற்றிலிருந்து விடுபட்டு, நான் பூரண சுகத்தைப் பெறுவேனோ? அவற்றை எனக்குக் கூறு!" என்றான்.

தன் கணவனின் வைராக்கியம் வலுப்பெற்று வருவதை அறிந்துக்கொண்ட ஹேமலேகை, இவரிடம் மேன்மை அடைவதற்கான விதை நிச்சயமாக முளைக்கத் தொடங்கி உள்ளது, தெரியவருகின்றது என்பதை உணர்ந்தாள்.

எவன் ஒருவன் இத்தனை மேன்மை பொருந்திய உபதேச வார்த்தைகளைக் கேட்டும் கொஞ்சம் கூட, அதற்கு செவி சாய்க்காமல், சிறிதும் தன் தற்போதைய சுபாவத்தால் மாறுபடாமல் அப்படியே இருக்கின்றானோ? அவனுக்கு ஒரு காலத்திலும் மேன்மை என்பது வரவே வராது.

யாரெல்லாம் மேன்மை பொருந்திய ஸ்ரீ திரிபுரையை விடாமல், அதிக காலம் ஆராதனை செய்கின்றார்களோ? அப்படிப்பட்டவர்களுக்குத்தான் இவ்விதமான வைராக்கியம் உண்டாகின்றது, என்று தன் மனதில் எண்ணிக்கொண்டு, மிகுந்த அறிவாளியான ஹேமலேகை தன் கணவனுக்கு ஆனந்தம் உண்டாகும் பொருட்டுத் தன்னுடைய பூரண ஞானத்தை வெளிக்காட்டாமல் மறைத்துக்கொண்டு, அவனைத் தெளிவடையச் செய்ய, பூடகமாக, ஆத்மா, ஜீவன், அந்தக் கரணங்கள், ஐம்புலன்கள், மற்றும் உலகத் தொடர்புகள் ஆகியவற்றை ஓர் உருவகக் கதையின் மூலம் கூற விரும்பி, அவனை நோக்கி, "ஹே இராஜகுமாரா! தங்களுக்கு ஒரு கதையைக் கூறுகின்றேன் கேட்கவேண்டும்" என்றாள்.

பிரபஞ்சம் என்ற ஒரு ஊரில் "**ஆத்மா**" என்ற பெயரைக் கொண்ட அனைத்து கலைகளிலும் வல்லமை பெற்ற சக்தியாக ஒரு அன்பான அம்மா இருந்து வந்தாள்.

அவளுக்கு "**ஜீவன்**" என்ற ஒரு அழகான மகன் இருந்தான். இவள் தன்னுடைய ஜீவன் என்ற மகனை தனக்கு நிகராக அனைத்து ஆற்றல் பொருந்தியவனாக வளர்க்க விரும்பி, அவனிடம் அலாதி பிரியம் கொண்டு, மிகுந்த அன்பாகவும், ஆனந்தமாகவும் வைத்திருந்தாள்.

தன்னுடைய மகன் தன்னைப் போன்றே சக்தி உடையவன் என்பதையும், தன்னிலிருந்து வேறானவன் அல்ல என்பதையும் அவன் அறியாமல் இருக்கின்றானே! எனக்கருதி, அவனுக்கு புரியவைக்க "**புத்தி**" என்ற ஒரு நல்ல நண்பனை அறிமுகம் செய்துக் கொடுத்தாள். அந்த புத்தியிடம் பழகுவதைக் கொண்டு, இவன் தன்னை அறிந்துக் கொள்வான் என்று எதிர்ப்பார்த்தாள்.

ஆனால், ஜீவன் என்ற இவனோ, அந்த புத்தியிடம் அளவிற்கு அதிகமாக நட்பு பாராட்டி, தன் தாயை மறந்தான். அனைத்து விசயங்களையும் தன் நண்பனான புத்தியிடம் மட்டுமே கலந்து ஆலோசிப்பான். அவன் கூறும் முடிவுகளை தன் தாயைக் கேட்காமலேயே செயல்படுத்துவான்.

இதுப்போன்று, இவர்களது நட்பு இருந்த வந்த நிலையில், ஒரு நாள் **புத்தி** என்ற நண்பன் இந்த ஜீவனை தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அங்கு ஜீவன் "**ஆசை**" என்ற அவனது சகோதரியைச் சந்தித்தான். அவளை சந்தித்த மறுகணமே, அவள் மீது விருப்பம் கொண்டு, அவளை புத்தியின் சம்மதத்துடன் மணம் முடித்தான்.

அதன்பிறகு, ஜீவன் தன் மனைவியான ஆசைக்கு பிடித்தவாறு வாழ விரும்பி, அவளது தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்பினான். இதனால், இவர்கள் இருவரும் மக்கள் அதிகமாக உள்ள இடத்தில் வாழ்ந்தால் மட்டுமே, அவர்களின் வாயிலாகத் தங்களின் விருப்பத்தை சாதிக்க முடியும் எனக் கருதினார்கள். அதனால், இந்த ஜீவன் தன் ஆசை மனைவியுடன் '**எண்ணங்கள்**' என்ற மக்கள் கூட்டம் நிறைந்த பகுதியில் வசிக்கத் தொடங்கினான்.

அதன்பிறகு, ஏராளமான எண்ணங்களாகிய மக்கள் கொடுத்த எல்லா வேலைகளை விருப்பத்துடன் செய்து, மிகவும் கடினமாக உழைத்து, அவர்கள் வாயிலாக '**மனம்**' என்ற பணத்தை சம்பாதித்து சேர்த்து, அதனை '**சித்தம்**' என்ற வங்கியில் மூதலீடு செய்து பாதுகாத்தான். இவ்வாறு, அதிகமாக சித்தம் என்ற வங்கியில் சேமித்து வைத்த மனம் என்ற பணத்தை, கொண்டு '**அஹங்காரம்**' என்ற வியாபாரத்தை விரிவு படுத்தத் தொடங்கினான்.

இந்த **அஹங்காரம்** என்ற வியாபாரம் நன்றாக நடைப் பெற்றால்தான் **சித்தம்** என்ற வங்கியில் **மனம்** என்ற பணத்தை மேலும், மேலும் தாராளமாக முதலீடு செய்ய முடியும் என்ற நோக்கத்தில், **எண்ணங்கள்** என்ற மக்களிடம் அதிகம் விரும்பி பழக ஆரம்பித்தான். அவர்கள் கொடுத்த வேலைகளை இன்னும் விருப்பமுடன் செய்து வந்தான்.

எண்ணங்கள் என்ற மக்களின் பழக்கத்தினால், '**ஆத்மா**' என்ற தாயை மறந்து, '**ஆசை**' என்ற தன் மனைவிக்கு மட்டுமே

அதிக முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்து வந்தான். இதனால், **எண்ணங்கள்** என்ற மக்கள் மத்தியில், இயல்பாகவே இருந்த **பொறாமை, களவு, பொய், கோபம்** போன்ற புதியவர்கள் இந்த ஜீவனுக்கு இன்னும் சில நண்பர்களாகச் சேர்ந்தனர்.

இதன் வாயிலாக, **பொறாமை, களவு, பொய், கோபம், களப்படம்** போன்ற தன் புதிய நட்பு வட்டங்களும், இத்துடன் விரிவு படுத்தப்பட்ட வியாபாரமான **அஹங்காரமும்** என எல்லாம் சேர்ந்து, அவனது வியாபாரம் நன்கு வளர்ந்து, அதன் மூலம் பணம் (மனம்) மேலும், மேலும் சேர்ந்தன. நாளுக்கு நாள் இத்தகைய வியாபாரத்தினாலும், நண்பர்களினாலும், மிகுந்த பலவானாக மாறிய ஜீவன் தன் '**ஆசை**' மனைவியை மேலும், மேலும் சந்தோசமாக வைத்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு, '**ஆசை**' என்ற மனைவியின் அதீத தேவை களை பூர்த்தி செய்யும் விதமாக, இந்த ஜீவன் தான் சம்பாதித்த "**மனம்**" என்ற வங்கியில் இருந்த பணத்தைக் கொண்டு, **மெய், வாய், கண், காது, மூக்கு,** என்ற தன்னுடைய பழைய நண்பர்களுக்கு இன்னும் பல பகட்டான ஆடம்பரப் பொருட் களை வாங்கிக் கொடுத்து, அவர்கள் மூலம் **உணர்ச்சி, சுவை, ஒளி, ஓசை, நாற்றம்** என்ற ஆனந்த அனுபவங்களை அடைந்து மகிழ்ந்தான்.

இவ்வாறு ஜீவனானவன் மேலும், மேலும் இதுப்போன்ற சுகத்திற்காக அதிகமாக **மனம்** என்ற பணத்தைப் பெருக்கி, அதனைக் கொண்டு, **அஹங்காரம்** என்ற வியாபாரத்தை விரிவு படுத்தி வந்தான். இவ்வாறு இவனது வியாபாரம் இன்னும்

அமோகமாக நடைப் பெற்றதினால், அதிக பணத்தை (மனம்) சம்பாதித்து, **சித்தம்** என்ற வங்கியில் முதலீடு செய்துக்கொண்டே மிகப் பெரிய பணக்காரன் (மனக்காரன்) ஆகிவிட்டான்.

இவனது அதீத வளர்ச்சியைக் கண்டு சகிக்காத இவனது புதிய நண்பர்களான **பொறாமை, களவு, பொய், கோபம்** போன்றவர்கள் இவனது பண (மன) வளர்ச்சியை தடைசெய்யத் தீர்மாணித்து, இவனுக்கு "**துக்கம்**" என்ற ஒரு வேசி – யை அறிமுகம் செய்து வைத்தனர். துக்கம் என்ற வேசியிடம் சிக்கிய இந்த ஜீவன் மிகுந்த பணத்தை (மனத்தை) அவளுக்கு கொடுத்து, அதிக மன உளைச்சலடைந்து, '**ஆசை**' மனைவியை விடவும் முடியாமல், '**துக்கம்**' என்ற வேசியைத் தொடவும் முடியாமல் அலைக்கழிக்கப்பட்டான். இந்த அலைச்சலின் காரணமாக தன் பழைய நண்பன் **புத்தி** – யை இழந்து விட்டான். மேலும், புத்தியை அறிமுகம் செய்து வைத்த, தன் அன்புத் தாயான **ஆத்மா** – வை மறந்து விட்டான்.

இதனால், இவனிடத்தில் புதியதாக அறிமுகமான '**துக்கம்**' என்ற வேசி, இவனைத் தன்பிடியில் பலமாக வைத்துக் கொண்டு, '**ஆசை**' என்ற மனைவிக்காக இவன் சேர்த்த **மெய், வாய், கண், காது, மூக்கு** போன்ற ஆடம்பரப் பொருட்களையும் அபகரித்து, அதன் வாயிலாக இவனை தன் இஷ்டம் போல ஆட்டுவித்தாள். இதனால், இன்னும் அதிக மன உளைச்சலுக்கு ஆளான ஜீவன் தன் நண்பனான **புத்தி** – யை இழந்து, தனது அன்புத் தாயான **ஆத்மா** – வை மறந்து, அற்ப பணத்தினால், (மனத்தினால்) பாதிக்கப்பட்ட இந்த ஜீவன் "**மரணம்**" என்பதைத் தழுவினான்.

## குறிப்பு:—

இந்த கதையிலிருந்து ஆத்மாவையும், ஆத்மா கொடுத்த புத்தியையும் சரியாக அறிந்து கொள்ளாமல், வாழ முயற்சிக்கின்ற ஜீவன் முடிவில் மரணம் என்ற நிலைக்குத் தள்ளப்படும்.

அதுவே, எந்த ஜீவன் தனக்கு கொடுத்த புத்தியைக் கொண்டு விசாரம் செய்து, தனக்கு நன்மை செய்த ஆத்மாவை ஆதரிக்கின்றதோ?" அப்போது மட்டுமே அது '**மரணமில்லா பெரு நிலையை**' அடையும் என்பதே இந்தக் கதையின் சாரம்.

(இந்த நூலைப் படிக்கின்றவர்களுக்கு **ஆன்மா – ஜீவன்** (அறிவு – மனம்) என்பதை எளிதாகப் புரிந்துக் கொள்ளும் வகையில், கற்பனையாக எழுதப்பட்டு இங்கு சேர்க்கப்பட்டது.

ஆனால், இதற்கு முந்தைய பழைய "**திரிபுர இரகசியம்**" என்ற மூலநூலில் கொடுக்கப்பட்ட கதையைப் படிப்பவர் களுக்கு, அது பழைய நடையில் இருப்பதினால், புரியாமல் குழப்பத்தைக் கொடுக்கும் என்பதினால், அந்தக் கதையை எளிமைப்படுத்தி, நேரடியாக தத்துவக் கருத்தை மட்டுமே இங்கு கொடுக்கப்படுகின்றது.)

## கதைக்கூறும் கருத்து:–

பழைய நூலாகிய "**திரிபுர இரகஷியம்**" என்ற மூல நூலில் *"என் தாய் எனக்கொரு தோழியைத் தந்தாள் அந்த தோழியினாலே நான் என் தாயைப் பிரிந்தேன்"* என்று பழையக் கதை ஆரம்பிக்கின்றது.

அந்தக்கதையில் தாயை ஆத்மாவாகவும், தோழியை புத்தியாகவும், தோழியின் மகனை அறியாமையாகவும், தன்னை ஜீவனாகவும் கூறிபடி, உருவகப்படுத்தி அந்த பழையக் கதை அமைக்கப்பட்டிருந்தது.

அத்துடன், புத்தியும், ஜீவனும் தோழிகள் என்பதினால், ஒருவருக்கு ஒருவர் இணைப்பிரியா நண்பர்களாக சித்தரிக்கப் பட்டுள்ளது. பிறகு தோழிக்கு ஒரு மகன், மகனுக்கு ஒரு மாமி என்று கதை மிகவும் நீண்டதாகவும், குழப்பம் நிறைந்த உறவுகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. ஆகவே, அந்த கதையின் சாரத்தை, இந்த கற்பனைக் கதையில் எளிமைப்படுத்தி இங்கு கொடுக்கப்படுகின்றது.

சத்துவ நிலையே உள்ள புத்தியின் தன்மையையும், ஆனால், அந்த புத்தி அறியாமையுடன் சேர்ந்து, செயல் நிலைக்கு வந்துள்ளது என்றும், அவ்வாறு செயல் செய்யும் நிலைக்கு புத்தி தள்ளப்படுவதால், அதன் ஆதி இருப்பான ஆத்மாவிடமிருந்து விடுபடுகின்றது.

மேலும், இந்த புத்தி ஆத்மாவைப் பிரிந்த காரணத்தினால், தன் அறியாமைக் கலப்பின் காரணமாக புதிது, புதிதாகப் பலதையும் உற்பத்தி செய்யும் திறனைப் பெற்று, அறியாமையினாலேயே கட்டுப்படும் நிலைக்கு தள்ளப்பட்டது.

அறியாமையின் ஆதிக்கத்தினால் ஆசையும், மோகமும் ஜீவனுக்கு உண்டாகி, புத்தி ஏதாவது ஒரு காரியத்தை செய்யத் தூண்டுகின்றது. புத்திக்கும், ஜீவனுக்கும் நட்பு ரீதியாக தொடர்பு இருந்ததால், அந்த புத்தியிடம் உண்டான ஆசையும், மோகமும் ஜீவனையும் ஆட்கொண்டது.

புத்தியின் மோகத்தினால், பல எண்ணங்கள் உதயமாகி மனம் என்ற ஒன்றை உண்டாக்கிக் கொண்டு, மூடத்தனத்தையும், அறியாமையையும் உற்பத்தி செய்து, தடையின்றி எங்கும் செல்லக்கூடிய ஆற்றல் மனதின் ஆசையினால் வந்தது. இந்த ஆசை பலமானதாக மாற, மாற புத்தி தடுமாற ஆரம்பித்து, முடிவில் மூடத்தனமான செயல்களை மட்டுமே செய்யக்கூடிய நிலைக்கு ஜீவன் தள்ளப்படுகின்றது. அவ்வாறு, ஆசைவயப்பட்ட புத்தியே அத்தனைக்கும் காரணம் என்றாலும், ஜீவன் தன் தாயான ஆத்மா கொடுத்த புத்தியிடம் அதீத நட்பு கொண்டாடி, தன் தாயை மறந்ததுதான் இத்தனை தவறுக்கும் காரணம் என்றும் புரிகின்றது.

சடமாகிய இந்த உடலுடன் அறிவாகிய ஆத்மாவின் பிரகாசம் வெளிப்படுகின்ற பொழுது, **நான்**, **எனது** என்ற எண்ணங்கள் உண்டாகின்றது. இந்த எண்ணங்களை நினைப்பதை **மனம்** என்றும், நினைப்பதைச் சேமிப்பதற்கு

**சித்தம்** என்றும், சேமித்த விசயத்தை செயல்படுத்துவதை **புத்தி** என்றும், செயலைச் செய்பவனை **அஹங்காரம்** என்றும் நான்கு விதமாகக் கொள்ளலாம்.

இந்த **மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்** என்ற நான்கும் ஒன்றான நிலையில், அதை "**அந்தக்கரணம்**" என்கின்றோம். மேலும், இந்த மனம் தான் உண்டாக்கும் கற்பனா சக்தியினால், அவைகளை அனுபவிக்க ஏதுவாக **மெய், வாய், கண், காது, மூக்கு** என்ற ஞானேந்திரியங்களை கொண்டே வெளியில் உள்ள விசயங்களைத் தொடர்பு கொள்கின்றது. அதன்பிறகு, **ஊறு, சுவை, ஒளி, ஓசை, நாற்றம்** போன்ற அனுபவங்களைப் பெறுகின்றது. அதற்கான ஒரு ஸ்தூல உடல் இந்த சூக்ஷ்ம மனதிற்கு தேவைப்படுகின்றது.

இவ்வாறு, உடலில் உள்ள புலன்களின் வழியாக அனுபவமாகப் பெற்ற பல்வேறு விசய சுகங்களில் சிலவற்றை வாசனைகளாக மாற்றி, இந்த மனம் சித்தத்தில் பதிய வைத்துக் கொள்கின்றது. அதன்பின்னர், அவ்வப்போது அவைகளை நினைவூட்டி, நினைவூட்டி அந்தச் சுகங்களை மீண்டும், மீண்டும் அடைய விரும்புகின்றது.

ஆனால், அவைகளை எவ்வளவுதான் அனுபவித்தாலும், தன்னுடைய ஆசைகள் முழுவதுமாக நிறைவடையாமல், மேலும், மேலும் இன்னும் சில விசய சுகங்களைத்தேடி, தேடி அலைந்து, அந்த ஆசைகளைப் பூர்த்தி செய்ய இயலாமல், வெறுப்பிலும், கோபத்திலும் **மனம்** கொந்தளிக்கின்றது.

இதனால், மனம் துக்கத்திற்கு ஆளாகி, புத்தியை பாதிக்கின்றது. மனதினிடமிருந்து பெறப்பட்ட **சத்வ, ரஜஸ், தமஸ்** போன்ற மூன்று குணபேதங்களினால், புத்தியும் தன்னுடைய சத்துவ குணத்தை இழந்து, சதா துக்கத்தில் ஆழ்கின்றது.

ஜீவன் (மனம்) எல்லாவற்றிற்கும் அடிப்படை ஆதாரமாக இருந்தாலும், புத்தியுடைய நட்பினால், அதன் சுபாவமான குணபேதங்கள் ஜீவனுக்கு வந்தடைந்தன. ஜீவன் இன்றி புத்தி இல்லை. ஆனால், புத்தி இன்றி ஜீவன் இருக்க இயலும்.

இதில் புத்தியின் அழுக்குகள் ஜீவனை மாசுபடுத்துவது போன்று தோன்றக் காரணம், ஜீவனின் அறியாமையே ஆகும். ஜீவன் தன் ஆதி இருப்பான ஆத்மாவின் சுத்த இருப்பை அறிந்துக்கொண்டால், அகப்புறக்கரணங்களை பொருட்படுத்தாது ஆத்மாவுடன் ஒன்றும்.

உடம்பை "**நான்**" என்றும் தனக்கு வேறாக இந்த உலகத்தையும், உலகத்தாரையும் கருதுகின்றவரை ஜீவன் **ஜீவாத்மா** என்று அழைக்கப்படும்.

பிம்பங்கள் எப்படி கண்ணாடிக்கு அந்நியமல்லவோ? அதுப்போலத் தோன்றும் தோற்றங்கள் அனைத்தும் ஆத்மாவின் பிரதிபலிப்பே என்ற ஞானம் உண்டாகிவிட்டால், அதற்குப்பிறகு ஜீவனுக்கு துக்கம் என்பதே கிடையாது.

புத்தியின் சேர்க்கையினால், ஜீவன் சுக, துக்கத்தில் இருப்பதுப்போலக் காணப்பட்டாலும், அந்த தூய அறிவாகிய சுத்த இருப்பான ஆத்மாவின் பிரதிபலிப்பே ஜீவன் என்பதினால், அந்த பரமாத்மாவைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்பது புரியவரும் போது, **ஜீவாத்மா – பரமாத்மா** என்ற இருமைகளால் உண்டான பேதமைகள் மறைகின்றது.

இவ்வாறு, வெகுகாலம் அவதிப்பட்ட புத்தியானது, விசாரத்தின் பலனாக விவேகம் அடைந்து, வைராக்கியமான மனதைப்பெற்று, ஆசைகளை அடக்கி, மோகங்களைக் கடந்து, எண்ணங்களற்ற நிலையில், ஜீவனில் கலந்து ஆத்மாவுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொண்ட நிலையில், பரம ஆனந்தத்தை அனுபவிக்கின்றது. எனவே, பந்தம், துக்கம், மகிழ்ச்சி, முக்தி போன்ற அனைத்தும் **புத்தியின் அறியாமையே** ஆகும்.

உண்மையில், ஆத்மாவின் பிரதிபலிப்பே **சிதாத்மா** என்று அழைக்கப்படுகின்ற **ஜீவாத்மா.** அதற்கு பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. மகிழ்ச்சியும் இல்லை, துக்கமும் இல்லை. இந்த அத்தனையும் புத்தியின் அறியாமை விளையாட்டே என்று ஹேமலேகை கூறி முடித்தாள்.

# அத்தியாயம் – 6

## நம்பிக்கையின் முக்கியத்துவம்

இவ்வாறு ஹேமலேகையான தனது மனைவி கூறிய வார்த்தைகளைக் கேட்ட இளவரசன் ஹேமசூடன் ஆச்சரியம் அடைந்தவனாக, "பிரியமானவளே! நீயோ குமரிப்பெண். முழுமையான வாலிபப் பருவத்தைக்கூட நீ இன்னும் கடக்க வில்லை. ஆனால், ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து விபரங்களை அறிந்துக் கொண்டவள் போல, அனைத்தையும் பேசுகின்றாய்! உன் வார்த்தைகளை உண்மை என்று எப்படி நான் நம்ப முடியும்?

"வானத்தில் காணப்படுகின்ற மேகக்கூட்டத்தில் தோன்றுகின்ற சித்திரம்போல, இவைகள் அனைத்தும் ஆதாரம் அற்றவைகளாக எனக்குத் தோன்றுகின்றது. உன்னுடைய வார்த்தைகளின்மேல், எனக்கு நம்பிக்கை வரவில்லை" என்றான்.

"ஹே நாதா! நான் உங்களிடம் கூறிய வார்த்தைகள் எப்படி அபத்தமாகும்? தவசீலர்களின் வார்த்தை ஒருபோதும் பொய்யாகாது. அவ்வாறே, பொய்யான வார்த்தைகள் ஒருபொழுதும் உண்மையாகாது. பொய் என்பது மெய் தவத்தை நாசம் செய்துவிடும் என்பதினால், உத்தம சத்தியசீலர்களான தபசிகளிடத்தில் பொய்யானது தங்குமா? எவனொருவன் ஜிஞ்ஞாஸுவினடத்தில் தேவையற்ற பொய்யையும், அநாத்ம விசயங்களையும் கூறுகின்றானோ? அவன் கீழ் உலகத்திலும், மேல் உலகத்திலும் சுகத்தைப் பெற முடியாது".

"இராஜபுத்திரரே! என் வார்த்தையைக் கேளுங்கள், ஒருவன் கண் நோய்க்கு மருந்தை அறிவதினால் மட்டும் அவனது கண் நோய் குணமாகிவிடாது. அந்த மருந்தைக் கூறுபவனை நம்பி, தைரியமாக அந்த மருந்தைக் கண்ணில் தடவவேண்டும். அதுப்போல, நமக்கு நெருங்கிய நம்பிக்கைக்கு உரியவர்களின் வார்த்தையை நம்பி, அதை ஏற்க வேண்டும்.

உங்களிடம் நான் பொய் கூறுவதினால், எனக்கு என்ன இலாபம் இருக்க முடியும்? நான் கூறியவைகளை பொய்! என்று கருதுவீர்களானால், அதனை நன்கு ஆலோசித்துப் பாருங்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்ட புத்தி சக்தியைப் பயன்படுத்தி, **நித்ய, அநித்ய விவேகத்தை** அடையப் பாருங்கள்.

பெரும்பாலும், இந்த உலகத்தார் தங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியின் உண்மையை மட்டுமே தெரிந்து வைத்துக் கொண்டு, முழுப்பகுதியையும் தீர்மானிக்கின்றார்கள். நான் ஒரு பகுதியின் உண்மையை மட்டுமே உங்களுக்கு இப்போது எடுத்துக் கூறினேன். ஆகவே, நம்பிக்கை உடையவர்களிடம் உண்டாகும் அவநம்பிக்கை, ஒருவனுக்கு மிகப்பெரிய எதிரியாகும். ஒருவன் **நம்பிக்கை** என்ற தாயைப் பணிந்தால், அவள் எல்லாவித பயங்களில் இருந்தும் அவனைக் காப்பாற்றுவாள். தன் தாயினிடத்தில் விசுவாசமில்லாத குழந்தை எவ்வாறு ஜீவித்திருக்க முடியும்? கூறுங்கள்.

அதுப்போல, மனைவியிடம் விசுவாசமில்லாத கணவன் எப்படி சுகத்தை அனுபவிக்க முடியும்? நம்பிக்கை இல்லாத உலகில் எந்தச் செயலும் நடைப்பெறாது. ஆகையால், பிரியமானவரே! தீவிர நம்பிக்கையுடன் இருங்கள்" என்று ஹேமலேகை அவனிடம் கூறினாள்.

"பிரியமானவளே! நீ கூறுவதுப் போன்று எந்த வகை யிலாவது நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றால், அந்த நம்பிக்கை சத்துக்களான சாதுக்களிடம் வைக்க வேண்டுமேயன்றி, அசத்துக்களான மூடர்களிடமும், சாதாரண பெண்களிடமும் வைத்தால், தூண்டிலின் வெளியிலுள்ள அழகைப் பார்த்து மயங்கிய மீன்கள் ஊசிமுனைகளில் சிக்கி

நாசமடைவதைப் போன்று அதோகதி உண்டாகும். ஆதாலால், நம்பிக்கை வைக்கும் முன்பு அவர்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்துக்கொள்ள வேண்டாமா?" என்று ஹேமசூடன் கேட்டான்.

"இளவரசே! உண்மையான சத்துக்களான சாதுக்களை சரியானபடி, அடையாளம் கண்டு, அவர்களுடன் சங்கமம் ஏற்படுத்திக் கொள்வதும், விசாரம் மேற்கொள்வதும், மேலும் மற்றவர்கள் கூறுவதை வைத்தோ? அல்லது சாஸ்திரங்களில் கூறப்பட்ட பிரமாணங்களை வைத்தோ? அதன்மீது நம்பிக்கை உண்டாயிற்று என்று கூறினால், அதில், எது சத்து?, எது அசத்து? என்ற முடிவில்லாத வாதத்திலேயே முடியும். அதனால், எந்தத் தீர்மானமும் ஏற்படாது.

காரணம், எதன்மீதும் நம்பிக்கை இல்லாதவனுக்கு எதனிடத்தில் நம்பிக்கை உண்டாகும்? சாஸ்திரத்தை மட்டும் அவன் எப்படி நம்புவான்? அல்லது சாஸ்திரங்களைக் கற்றுக் கொடுக்கும் சத்குருவை மட்டும் அவன் ஏற்பானா? அவன் நிச்சயமாக, அதில் ஏதாவது குறைகளைக் கண்டு வீண்வாதம் புரிவான். ஆகவே, வீண்வாதம் செய்பவன் ஒரு காலத்திலும் மேன்மையை அடைய மாட்டான்.

மேலும், இந்த ஒட்டுமொத்த உலகமும் நம்பிக்கையின் அடிப்படையில்தான் இயங்குகிறது". இதை ஒரு கதையின் வாயிலாகக் கூறுகின்றேன் என ஹேமலேகை கதையைக் கூறத் தொடங்கினாள்.

முன்னொரு காலத்தில் கோதாவரி நதிக்கரையில் இருக்கும் சகியமலை என்னுமிடத்தில் சாந்தமும், தவசீலரும், உண்மையை உணர்ந்தவருமான **கௌசிகர்** என்ற மகான் வசித்து வந்தார். அவரிடம் அனேக சிஷ்யர்கள் இருந்தனர்.

ஒரு நாள் அந்த குரு ஆசிரமத்தில் இல்லாத நேரத்தில், அவரது சிஷ்யர்கள் தங்களுக்குள், தங்கள் புத்திக்கு தகுந்தவாறு இந்த உலகத்தின் நிலையைப்பற்றித் தீர்மானம் செய்வதற்காகப் பலவாறாக வாதம் செய்துக் கொண்டிருந்தனர்.

அப்பொழுது, அனுப அறிவு ஏதுமற்ற, தன் குறுக்கு புத்தியினாலும், வறட்டு வாதத்தினாலும் எப்பொழுதும் வாதம் செய்து கொண்டிருக்கின்ற **சுங்கன்** என்ற சக மாணவன் மற்ற மாணவர்களிடம் அவர்கள் கருத்துக்கு எதிராக, சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள ஆதாரங்கள் வாயிலாக, அந்த தூய அறிவின் உண்மையை அறியலாம் என்ற கருத்தை ஏற்க மறுத்தான்.

அந்த சுங்கன் தன்னுடன் பயிலும் சக மாணவர் களிடத்தில், நீங்கள் கூறும் உண்மை இதுவரை நிருபிக்கப் படவில்லை. நீங்கள் பிரமாணமாக கருதும் சாஸ்திரத்தில் குறை உள்ளது. அதிலேயே ஒன்றினை விசாரித்து, அதை மற்றொரு ஆதாரத்தின் வாயிலாக அதைத் தவறு! என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதுவும் விவாதத்திற்கு உரியதே. எனவே, விவாதம் நீண்டுக் கொண்டே செல்கின்றது, விவாதங்கள் மூலமாக ஒரு தீர்மானமான முடிவுக்கு வர இயலவில்லை.

மேலும், இதை தீர விசாரித்துக் கொண்டே சென்றோ மானால், முடிவில் **சூன்யம்** மட்டுமே மிஞ்சுகின்றது. சூன்யத்தை தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆதலால், அறிபவனும், அறியப்படும் பொருளும் நிருபிக்கப்படாமலேயே போகின்றது. ஆகவே, **அறிவு** என்ற ஒன்றை நிருபிக்கப் படாமலேயே இருக்கின்றது. மேலும், எந்த ஒன்றை வைத்து, இந்த பிரமாணங்களை ஆராய்ந்தாலும், அவைகள் அனைத்தும் முடிவில் சூன்யத்தில்தான் முடியும். ஆகவே, **சூன்யம்** என்பது மட்டும்தான் உண்மை என்றான்.

இவனுடைய வாதத்தை உண்மை என்று நம்பிய சில மூடச்சீடர்கள் அவனுடன் சேர்ந்து, சூன்யவாதிகளாக மாறி நாசம் அடைந்தனர். மற்றவர்கள் குரு வந்தவுடன் அவர்களிடம் நடந்த விவாதத்தை எடுத்துக்கூறி, தங்களது சந்தேகங்களை

விளக்கி, சத்குருவின் வாயிலாக தெளிவை அடைந்து நிச்சய புத்தி உடையவரானார்கள்.

அந்த வகையிலே, அவர்களுக்கு சத்குரு கூறிய சத்தியமான உபதேசம் என்னவெனில், "சீடர்களே! ஒருவன் ஆழ்ந்த உறக்கத்தில் எதையுமே அறியாமல், நன்கு உறங்குகின்றான். அப்படி உறங்கி எழுந்தவன் நன்றாக உறங்கினேன் என்று எதன் அடிப்படையில் கூற முடிகின்றது?

யோசித்துப் பாருங்கள்! அதாவது, அவன் நன்கு உறங்கும்போது, அவனது மனம் அங்கு இல்லை, அவனது புலன்கள் எதுவும் வேலை செய்ய வில்லை. இந்த நிலையில் அவனது உறக்கத்தை எது அறிந்துக் கொண்டு, நன்றாக உறங்கினேன் என்று கூறியதோ? அதுவே, **அறிவு** ஆகும்".

"ஆம்! எனது அருமைக் குழந்தைகளே! அந்த சூன்யத்தை மட்டுமே அறிகிறேன் என்று ஒருவன் கூறுகின்றான் அல்லவா? அவ்வாறு, அந்த சூன்யத்தையும் அறிகின்ற ஒருவன், அந்த சூன்யத்திற்கு வேறாக இருக்கின்றான் அல்லவா? அவன் யாரோ? அவனே அந்த **அறிவு** என்பதை அறிய வேண்டும்.

அதாவது, விவேகத்தினால், அந்த அறிவை விசாரித்து அறியாமல், ஒன்றுமற்ற சூன்யத்தை மட்டும் பிடித்துக் கொண்டு வெறுமையில் இருப்பவர்கள், அந்த சூன்யத்தையே காட்டிக் கொடுக்கும், அந்த அறிவை அறியாத மூடர்கள் ஆவார்கள். அவர்கள் என்றுமே பிறவாப் பெருநிலையை அடைவதில்லை".

ஆகவே, "பிரியமானவரே! தங்களது, முடிவில்லாத வறட்டு வாதங்களை விட்டு, விட்டு, ஆகமங்களுக்கு அனுசரணையாக விசாரம் செய்து வருபவர்களே உண்மையில் மேன்மை பொருந்திய ஜிக்னாஸுக்கள் ஆவார்கள்" என்றாள்.

"பிரியமானவளே! உன்னிடம் இவ்வளவு உயரிய உண்மை ஒளிந்துக் கொண்டிருக்கும் என்பதை நான் சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை. நீ மிகவும் தன்மையாகப் பேசுகின்றாய். மிகவும் நன் நடத்தை உள்ளவளாகவும் இருக்கின்றாய். நானும் உன்னை அடைந்ததினால் தன்யனாக இருக்கின்றேன்.

நம்பிக்கையினால் மட்டுமே சகல விதமான மேன்மை களையும் சித்தியாக்க முடியும் என்று கூறினாய். அப்படிப் பார்க்கும்போது, ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களைக் கொண்ட அனேக ஆகம சாஸ்திரங்கள் இருக்கின்றன.

இதில் எதனிடத்தில் நான் நம்பிக்கை வைக்கலாம்? எதனிடத்தில் நம்பிக்கை வைக்கக் கூடாது? என்பதையும், பல்வேறு ஆச்சாரியர்களின், பல்வேறு மதங்களின் பலதரப்பட்ட கருத்துக்களின் பேதமையினாலும், அவர்களின் மாறுபட்ட சிந்தனைகளினாலும், அத்தகைய சாஸ்திரங்களுக்கு உரை எழுதியவர்களின் எதிர்மறைக் கருத்துக்களாலும் உண்டான விசயங்களில், எது எடுத்துக் கொள்ளத்தக்கது?, எது தள்ளத் தக்கது? என்பதை எடுத்துக் கூறுவாயாக.

மேலும், இதில் யாருக்கு எந்த சாஸ்திரத்தின்மீது அபிமானம் இருக்கின்றதோ? அதை நல்லதென்றும், எதனிடம் அபிமானம் இல்லையோ? அதை குற்றமுள்ளது என்றும் தள்ளி விடுகின்றார்கள். இதனால், இதன் விசயத்தில் என்னால் ஒரு உறுதியான தீர்மானத்திற்கு வர இயலவில்லை. அத்துடன் சூன்யத்தை ஆதரிக்கின்ற சூன்யவாதிகளுக்கு அனுகூலமாக அனேக ஆகமங்களும் இருப்பதினால், அப்படிப்பட்ட ஆகம சஸ்திரங்களின்மீது, நான் ஏன் அபிமானம் வைக்கக்கூடாது? இவைகளைப்பற்றியும் இன்னும் விரிவாக எனக்கு விளக்க வேண்டும்" என்றான் ஹேமகூடன்.

# அத்தியாயம் – 7

## ஈஸ்வர சொரூப நிருபணம்

இவ்விதம் தன் பிரியமான கணவரால் கேள்விகள் கேட்கப்பட்ட பொழுது, உலகத்தின் உண்மை நிலையை நன்றாக உணர்ந்தவளும், புத்திசாலியுமான ஹேமலேகை பின்வருமாறு கூறினாள்:–

"பிரியதமா! நான் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள். மனமானது குரங்குச் சுபாவம் உடையது. அதனால், எப்பொழுதும், எதையாவது நினைத்துக் கொண்டு இங்கும், அங்கும் தாவித்தாவி, சலனத்துடன் நிலையில்லாமல் அலையும் தன்மைக் கொண்டது. மனதின் சலனத்தினால் மனிதர்கள் அனேக துக்கங்களை அடைகின்றார்கள். சலனமடையும் மனமே எல்லா துயரங்களுக்கும் மூலக்காரணம்.

ஆனால், மனமும், உடலும் செயலற்ற ஆழ்ந்த உறக்க நிலையில் எல்லோரும் சுகத்தை அனுபவிக்கின்றார்கள்.

ஆகையால், அத்தகைய மனதை நிலையாக வைத்துக் கொண்டு நான் கூறுவதைக் கேட்க வேண்டும். கவனமின்றி கேட்பதும், கேளாமல் இருப்பதும் ஒன்றுதான்! ஆகவே, மிகுந்த கவனத்துடன் இனி நான் கூற இருப்பதைக் கேளுங்கள்.

முடிவில்லாத விதண்டாவாதங்களை எல்லாம் விலக்கி, உண்மையான சத்தைக்கொண்ட சத்விசாரங்களின் வாயிலாக, தெளிந்த புத்தி நிலையில், அதில் நம்பிக்கை கொள்கின்றவனே உண்மையான பலனை அடைகின்றான். எனவே, ஆன்ம அனுபவத்தை அடைவதற்குச் சத்தான வாதத்தையும், அதில் நம்பிக்கையையும் வளர்த்துக் கொண்டு, அதை சிந்தனை செய்து பாருங்கள்.

"பிரியரே! எவ்வாறு, பயிர்த்தொழில் செய்பவன் நல்ல யுக்தியினால் ஆலோசித்து, அந்தந்தக் காலங்களில் உழவு செய்து, தானியங்களை சரியான முறையில் சம்பாதிப்பதைப் போல, ஆத்மாவின் மேன்மையைக் கருதி, விசாரத்தினாலும், நம்பிக்கையினாலும் மேன்மையை சம்பாதிக்கப் பாருங்கள். நம்பிக்கையுடன் முயற்சி செய்பவனுக்கு ஒருவிதத்திலும் குறை வரவே வராது. திடமான மனதைக் கொண்டவன் நற்பலனை ஏன் அடையமாட்டான்?

பயிரிடும் விவசாயிகள் தானியத்தையும், வியாபாரிகள் தனத்தையும், அரசர்கள் செல்வத்தையும், பண்டிதர்கள் வித்தையையும், சூத்திரர்கள் சேவையையும், தேவர்கள் அமிருதத்தையும், தவசிகள் உத்தம லோகங்களையும் அடைகின்றார்கள். அதுவே, விதண்டாவாதத்தாலும், நம்பிக்கை இன்மையினாலும் எந்தப் பலனும் அடையப்படுவதில்லை. இவ்வாறு, நம்பிக்கையில்லாமல் சந்தேகத்துடன் இருப்பவர்கள் **தமக்குத் தாமே பகைவர்கள்** என்று அறிய வேண்டும்.

ஆகவே, நம்பிக்கையினாலும், சத்தான தர்க்கத்தினாலும் அதிக முயற்சியை மேற்கொண்டு, முக்தியை அடையவதற்கான தக்க சாதனையைச் சாருங்கள். அப்படிப்பட்ட சாதனங்கள் அனேகமாக உள்ளன. அவைகளை அனுபவத்தினால் இன்ன தென்று தீர்மானித்துக் கொண்டு, விரைவாக ஆரம்பிக்க வேண்டும். ஆகவே, அதைப்பற்றியும் கூறுகின்றேன் கேளுங்கள். அதாவது, எதனை அடைவதினால் ஒருவனுக்கு துயரம் உண்டாகாதோ? அதுவே அவனுக்கு மேன்மை தரக்கூடிய உண்மையான **சாதனம்** என்பதை அறியவேண்டும்.

நுண்ணிய அறிவினால் ஆராய்ந்துப் பார்த்தால் எங்கும், எதிலும் துக்கம் கலந்திருப்பதை அறிய முடியும். உதாரணமாக, தனம், மனைவி, மக்கள், இராஜ்ஜியம், செல்வம், தேகசுகம், வித்தை முதலியவைகளெல்லாம் கால, தேசத்திற்கு உட்பட்டு,

நிலையற்ற தன்மை உடையதால், இவைகளை துயரங்களுக் குண்டான **விதைகள்** எனக்கொள்ளலாம். ஆதலால், பரமமான மேன்மை இவைகளிடத்திலிருந்து இல்லை என்பதையும், வெளிப்பொருட்களில் இருந்து சுகம் கிடைக்கின்றது என்ற தவறான போக்கையும் விட்டு, உன்னதமான ஆனந்தத்தை அடைய இவைகள் சாதனமாகாது என்பதையும் அறிந்து, இந்த மதி மயக்கத்திற்கு காரணம், அந்த மனமாகிய மகேசுவரனே என்பதையும் புரிந்து, மோகத்தை விடவேண்டும்.

அற்ப வித்தையை உடைய சாதரண செப்படி (ஜால) வித்தைக்காரனிடத்தில் மயங்கி, அவனை ஜெயிக்க முடியாத மக்கள், மகா மாயாவியான மகாதேவனை எப்படி வெல்ல முடியும்? ஆகவே, அற்ப வித்தைக்காரனின் மாயைக்கு தகுந்த பிரதி வித்தை தெரிந்தவன் அந்த மாயா மோகத்திலிருந்து விடுபட்டு, சுகம் அடைவதைப் போன்று, அந்த மகா மாயாவியை பக்தி செய்து, இரண்டற்ற ஏகனை அறியும் ஆத்ம வித்தையை கற்றவனே அந்த மகா மாயையை அறிந்து, தன்னுடைய உண்மை சொரூபத்தை தெரிந்து, மோகத்திலிருந்து விடுபட்டு நித்திய சுகத்தை அடைகின்றான். இந்த உலகம் காரிய மயமானது என்பதை கண்கூடாகக் காண முடிகின்றது. இந்த ஜகத் காரியத்தின் ஆரம்பம் தெரியாவிட்டாலும், பஞ்சபூதங்களின் செயல் தன்மையால், இந்த உலகம் இயக்கப்படுவதை காண முடிகின்றது.

இந்த உலகை உருவாக்கிய கர்த்தா மற்ற சாதாரண செயல் செய்பவர்களிடமிருந்து மாறுபட்டவர். காரணம், இவரது காரியத்தில் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு சக்தி பொருந்தியதும், அனைத்தும் அறிவுப்பூர்வமாக ஒரு நியதிக்குள் இயங்குவதையும் காணும் பொழுது, இதைப்படைத்தவன் மிகப்பெரிய **பேரறிவாளன்** என்பதுவும் உறுதி செய்யப் படுகின்றது.

சில சூன்யவாத ஆகம சாஸ்திரங்கள் இந்த உலகம் தானாகவே தோன்றியது என்றும், அதுவே **சத்** என்றும், மண்பானை செய்வதற்கு, அதற்கான மண்ணும், அத்துடன் ஒரு குயவனும் இருப்பதினால், அந்த பானை உருவாகின்றது என்பார்கள். அவ்வாறே, அந்த பானைக்கு மண் எப்படி மூலப் பொருளாக இருந்ததோ? அதை செய்வதற்கு ஒரு குயவன் தேவைப்பட்டதோ? அதுப்போல, ஒன்றேயாகிய இறைவன் என்று, நீங்கள் கூறிக்கொள்கின்ற, இந்த உலகத்தைப் படைத்த படைப்பாளிக்கு, அவனுக்கு வேறாக மூலப்பொருள் எங்கிருந்து கிடைத்தது? அதை யார் படைத்தார்கள்? என்ற சந்தேகத்தை எழுப்பி, இந்த உலகத்தைப் படைத்தவன் ஒருவன் இல்லவே இல்லை என்பார்கள்.

இதிலிருந்து படைத்தவன் ஒருவன் இருக்க வாய்ப்பு இல்லை. இந்த உலகம் தானாகவே தோன்றியது என்று

குதர்க்கமான கேள்விகளையும், சந்தேகங்களையும் கேட்டுக் கொண்டு, புத்தியில்லாமல் நாசத்திற்கு வழியைக் காண்பிக்கும் அவர்கள் கூறும், ஆகம சாஸ்திரங்களை அவசியம் தள்ள வேண்டும்.




இந்த உலகத்தில் படைக்கப்பட்டவைகளைக் காணும் போது, இதைப்படைத்தவன் சாதாரண அறிவைப் படைத்தவன் செய்யக்கூடிய செயல்கள் இல்லை என்பதையும், படைக்கப்பட்ட உயிரினங்களில் மிகக்குறைவான அறிவு கொண்ட ஒரு சிலந்திப் பூச்சியே தன்னுடைய தேவைக்காக, ஒரு வலையைப் பின்னக்கூடிய, மூலப்பொருளை அதற்கு வேறாக வெளியில் இருந்து பெறாமல், தன்னுடைய உமிழ் நீரினாலேயே வலையை உண்டாக்கி, தானும் அந்த வலையில் வசித்துக் கொண்டு, அதில் வருகின்ற பூச்சி, புழுக்களை உண்டு

வாழுகின்றது. அவ்வாறு, அற்ப அறிவைக் கொண்ட ஒரு சாதாரண சிலந்திப்பூச்சியைப் படைத்த படைப்பாளியான அந்த இறைவன், தன்னுடைய இத்தனை படைப்புக்கும், இருப்புக்கும் தேவையான மூலப்பொருட்களை அவனுக்கு வேறாக, வெளியில் இருந்து பெற வேண்டிய அவசியம்தான் என்ன வந்தது?

ஆகவே, படைத்தவன் ஒருவன் இல்லை என்று கூறுகின்ற அபத்தமான ஆகமங்களை அவசியம் புறந்தள்ளி விட வேண்டும். பகுத்தறியும் புத்தியில்லாதவர்களே இதனை ஏற்பர். புத்தியில்லாமல் இந்த உலகத்தில் எதையும் அறிய முடியாது. புத்தியில்லாமல் எந்தச் செயலும் உருவாவதில்லை. இந்த உலகையும் புத்தி உள்ளவனே உருவாக்கினான் என ஆகம சாஸ்திரங்கள் ஆதாரத்துடன் அறிவிக்கின்றன. சத்தான தர்க்க விசாரங்களினாலும், தக்க ஆதாரங்களினாலும் இந்த உலகத்தை உருவாக்கியவன் ஒருவன் இருக்கின்றான் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகில் அளவிடமுடியாத செயற்கரிய காரியங்கள் நடைபெறுவதை காணும்போது, அவனது ஆற்றல் மிக அபரிமித மானது என்பதை அறிய முடிகின்றது. அப்படிப்பட்டவனை **பராபக்தி** செய்து, சரணடைந்தால், தன்னை சரணடைந்த சாதகர்களை, சாதனையாளர்களாக மாற்ற வைப்பதும் அவன்

அனுக்கிரஹமாகவே இருக்கும். ஆகவே, ஆசைகளற்ற நிஷ்காமிய பக்தியினால் அவனை அணுகுகின்றவர்களை அவன் என்றும் கைவிடுவதில்லை.

பொருள் ஆசைகளினாலும், பொருந்தாத மார்க்கங்களினாலும் அவனை அறிய முடியாது. அவரவர்களது கர்ம நியதிப்படியே, அவரவர்களுக்கு உண்டான பலாபலனைக் கொடுக்கின்றான். அதுவே, ஆசைகளற்று, அன்னிய பாவமின்றி, தன் இதய வெளிக்குள் அவனை உபாசிப்பவனை, தனக்கு உரித்தானவனாகக்கொண்டு, அவனது அனைத்து தேவைகளையும் தனதாக்கிக் கொண்டு, எல்லாவற்றையும் பூர்த்தி செய்கின்றான். அவ்வாறு, அவனை தன் உள்ளத்தில் அறிய முயற்சிக்கின்ற உண்மை முமுக்ஷுவுக்கு, முழு பயனையும் கொடுக்கின்றான். அதுவே, முயற்சியற்ற மூடர்களுக்கு மட்டுமே பிராரப்த கர்மாவும், கர்ம நியதிகளும் அடங்குகின்றன.

அதுவே, அவனை சரணடைந்த மார்க்கண்டேய மகரிஷிக்கு மரணமற்ற பெருவாழ்வாக, அவரது பிராரப்தக் கர்மாவையே மாற்றிக் கொடுத்தவன் அந்த மகேசுவரன் என்பதிலிருந்து அவனது மகத்துவத்தை அறியலாம்.

இது ஈஸ்வரனின் **பரிபூரண சுதந்திரம்** ஆகும். அதில் யாரும் தலையிட முடியாது. அத்தகைய ஈஸ்வரனோ சத்திய

சங்கற்பம் உடையவன். அதனால், அவனது நியதியை யாராலும் தடுக்க முடியாது. அதுவே, அவனைப் பராபக்தி செய்பவர்களின் விசயத்தில், அந்த நியதியானது வலிமை யற்றதாகி விடுகின்றது.

ஆகவே, "பிரியமானவரே! தாங்கள் ஈஸ்வரனை சரணடையுங்கள். அவர் உங்களை மேன்மையான வழிக்கு வழி நடத்திச் செல்வார். மோக்ஷமென்ற உப்பரிகைக்கு (மேல்மாடிக்கு) செல்லும் முதன்மையான ஏணி இதைவிட வேறு ஒன்று கிடையாது".

"பிரியமானவளே! நீ கூறுகின்ற, அந்த உள்ளத்தில் உறைகின்ற மகேசுவரனை என்னால் அடையாளங்காண முடியவில்லை. மதபேதங்களால் பிளவு பட்டுப் பலவாறான, பல உருவங்களை எல்லாம் கடவுளாக உருவகித்து வைத்துக் கொண்டு, சிலர் சிவன் என்றும், சிலர் விஷ்ணு என்றும், சிலர் புத்தர் என்றும், சிலர் கணேசன், முருகன், சூரியன், காளி, கருப்பராயன் என்று, பட்டியல் போட முடியாத அளவிற்கு உருவங்களை வழிபடுவது நீள்கின்றது.

இன்னும் சிலர், கண்ணிற்கு தெரியாத அணுவென்றும், பிராணன் என்றும் பலவாறாக கூறுகின்றனர். இவ்விதம் ஜகத்காரண ரூபமானது விசித்திரமான இந்த பல்வேறு

மதங்களின் பேதத்தினால், அறியாமை மக்களிடம் அனேக விதமாகக் கூறப்பட்டுள்ளது. இவர்களில் யாரிடம் நான் பக்தி செய்வது? இதற்கான வழியை நீ மட்டுமே கூற முடியும் என்று கருதுகின்றேன். காரணம் நீ மிகவும் உயர்ந்த ஞானிகளுக் கெல்லாம் மகா ஞானியான **வியாக்கிரபாத மகரிஷியினால்** வளர்க்கப்பட்டவள் என்பதினால், உன்னிடத்தில் இதைக் கேட்கின்றேன்" என்றான் இளவரசன் ஹேமசூடன்.

இம்மொழிகளைக்கேட்டு ஹேமலேகை மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள். "நாதா! உங்களுக்கு ஈஸ்வரனுடைய சொரூப நிர்ணயத்தை கூறுகின்றேன் கேளுங்கள். இந்த உலகத்தின் உற்பத்திக்கும், முடிவுக்கும் கர்த்தாவானவன் ஈஸ்வரன். அவன் அந்த பேரறிவு சொருபமாக தன்னில் தானாய் இருக்கக் கூடியவன். அவனுக்கு என்று எதுவுமே தேவையில்லை. அப்படிப்பட்டவனிடமிருந்து வெளிப்பட **மனம்** என்ற மாயா சக்தியானது, இந்த எல்லையற்ற பிரபஞ்ச மனமாக விரிந்து, அதன் வாயிலாகத் தோன்றிய நாம, ரூபங்கள் எல்லாமே, அந்த ஏக அறிவின்மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது.

அத்தகைய அறிவின்மீது ஏற்றி வைக்கப்பட்ட உருவங் களில், அவனே விஷ்ணு, அவனே சிவன், அவனே பிரம்மா, அவனே சூரியன் என எல்லாவிதத்திலும், எல்லாவற்றிலும் அறியக்கூடிய, அந்த அறிவாகவே அவன் இருக்கின்றான்.

அதாவது, உருவமற்ற நிர்குண ஸ்வரூமனான அவன் உருவத்தில் வரும்போது, சற்குண வடிவாக ஆகின்றான். அதனால், அவனது அறிவு வியாபகம் எங்கும், எதிலும் பரவி இருக்கின்றது. ஆகவே, நீங்கள் கூறுகின்ற பெயர்கள் மற்றும் உருவங்களில் மட்டும் அவன் அடங்கக்கூடியவன் அல்லன்.

இதன் உண்மையைக் கூறுகின்றேன் கவனமாகக் கேளுங்கள். சைவர்கள் உலகைப்படைத்த பரம்பொருளை ஐந்து முகங்களும், மூன்று கண்களும் உடைய **சிவன்** என்கின்றார்கள். வைணவர்கள் **விஷ்ணு** என்கின்றார்கள். சாக்தர்கள் **சக்தி** என்கி றார்கள். இவ்வாறு, இவர்கள் ஒவ்வொருவரும் அபிமானிக்கின்ற அவர்களுடைய அபிமான தேவதைகளை இவ்வாறு உருவத்துக்குள் கொண்டு வந்து அடக்குகின்றார்கள். இவ்விதமாக இந்த பிரபஞ்ச கர்த்தாவை மண்குடம் செய்கின்ற குயவனைப்போல அறிவுடையவனாக, கண்ணிற்குத் தெரிகின்ற உடல் உடையவனைப்போல பாவித்துக் கொள்கின்றார்கள். இவர்கள் உடலைக்கொண்ட உருவத்தில், அவனை பாவனை செய்து, அதற்கான வழிபாடுகளை மட்டுமே மேற் கொள்கின்றார்கள்.

ஆனால், அவ்வாறு பல உடல்களில் காணப்படுகின்ற அந்த ஏக அறிவுப்பொருளாகிய சேதனத்தைக் கவனியாமல், அதன் உண்மை உயிர்ப்பாகிய உணர்வை உணராமல்,

அறியாமையினால், அந்த உயிருள்ள ஜீவர்களை எல்லாம் அழித்து, அவைகளை உணவாக உட்கொள்கின்றார்கள். அதிலே, இன்னும் சிலர் அவைகளைத் துன்புறுத்துகின்றார்கள்.

உண்மையில், சேதனமற்ற ஜடப் பொருட்களான கல், மண் போன்றவைகள் எதையும் புதியதாக படைப்பது இல்லை. அவைகள் மற்றவைகளை அழிப்பதும் இல்லை. அதுவே, உயிருள்ளவைகளாக உடலைப் பெற்று, அந்த அறிவாகிய சேதனத்தை, அந்தர்யாமியாக தன்னுள்ளே கொண்ட ஜீவர்கள் மட்டுமே, படைப்பதையும், காப்பதையும், அழிப்பதையும் அன்றாடம் காணமுடிகின்றது அல்லவா? இதிலிருந்து, சேதனத்தை (**அறிவு – சைதன்யம்**) தன்னுள் கொண்ட உயிர்கள் மட்டுமே செயலாற்றுவதைக் காண முடிகின்றது.

இவ்விரண்டின் மத்தியில் உள்ள வித்தியாசங்களைப் பார்க்கும்போது, உயிரற்ற ஜடப்பொருட்களைக் காட்டிலும், உயிருள்ள ஜீவர்கள் மட்டுமே, தன் உள்ளே உறையும் உணர்வாகிய சேதனத்தை ஆதாரமாகக் கொண்டுதான் அவைகளின் அத்தனை செயல்களும் நடைமுறையில் உள்ளது என்பதை அறிய முடிகின்றது.

அது எப்படியென்றால், ஒருவன் இந்த கண்ணிற்குத் தெரிகின்ற ஸ்தூல உடலை மறந்து விட்டு, உறக்கத்தில் கனவு

காணும் பொழுது, கனவில் அதே அறிவாகிய சைதன்யத்தின் சக்தியினால், தனக்கு விருப்பமான இன்னும் சில சிருஷ்டிகளை அவனே படைத்து அனுபவிக்கிறான் அல்லவா? ஆகையினால், கர்த்தாவான சிதாத்மாவிற்கு (ஜீவனுக்கு) காரியம் செய்ய, இந்த உடம்பு காரணமாக மட்டுமே அமைகின்றது. இத்தகைய ஜீவர்கள் பூரணமானவர்கள் அல்ல. மேலும் ஈஸ்வனைப் போன்று சுதந்திரமானவர்களும் அல்ல.

அதனால், இவர்களுக்கு கண்ணிற்குத் தெரிகின்ற புறக்கரணங்களைக் கொண்ட உடலும், கண்ணிற்குத் தெரியாத அகக் கரணங்களைக் கொண்ட மனமும் அவசியம் ஆகின்றது. அதுவே, ஜகத்கர்த்தாவான ஈஸ்வன் என்பவன் பூரணமானவன். முழுச்சுதந்திரம் உடையவன் என்பதினால், அவனுக்கு தனித்த உடலும், தனித்த மனமும் இல்லாமலேயே, இந்த உலகத்தைப் படைக்க முடியும்.

அதுவே, அவர் சாதாரண ஜீவர்களைப் போன்று சரீரம் கொண்டு இருந்தால், இந்த உடலுக்கு உண்டான அத்தனை பிரச்சனைகளையும், மனித மனதிற்கு உண்டான அத்தனை தடுமாற்றங்களையும் அவர் சந்திக்க வேண்டியது வரும். அதுமட்டுமல்ல, ஜகத் சிருஷ்டிக்கு முன்னரே கரணங்களைக் கொண்ட உடல் ஈஸ்வரனுக்கு இருக்குமானால், அவரை பூரணமானவன் என்று கூற முடியாமல் போகும்.

காரணம், புறக்கரணங்களான **கை, கால், கண், வாய், முக்கு, காது** போன்றவைகள் காலத்தால் மாறுதலுக்கு உட்பட்டு அழியக்கூடியவைகள். ஆதலால், கண்ணிற்குத் தெரிகின்ற உருவத்தில் வந்தால், அவைகள் ஒரு நாள் அழிவுக்கு உட்படும் என்பதினால், அந்த ஈஸ்வரன் உருவத்தில் இல்லாமல், இந்த உலகத்தை படைத்து, காத்து, அழிக்கின்றார்.

உடல் இல்லாத ஈஸ்வரனை, உடல் கொண்ட ஸ்தூல புத்தியுடையவர்கள் மோகத்தினால், தேகத்தினைப் படைத்து கற்பனை செய்துக் கொள்கின்றனர். அவரவர்களின் அறிவுக்கு ஏற்றபடி ஈஸ்வரனை எப்படி உபாசிக்கின்றனரோ? அப்படி அவர்களது பக்திக்குத் தக்கவாறு, அவர்களுக்கு விருப்பமான உருவங்களினால் அவனை வடிவமைத்து வழிபடுகின்றனர். ஆக, அனைத்து உருவங்களும் அவனுக்குள் அடங்குமே தவிர, அவனுக்கு என்று எந்த ஒரு உருவமும் கிடையாது. அவன் பிளவுபடாத **சுத்த அறிவாக** மட்டுமே இருக்கின்றான்.

பார்ப்பதற்கு பிளவுபட்ட இந்த உலகத்தில், பிளவுபடாத அந்த சித்து (அறிவு) எங்கு இருக்கின்றது? என்ற சந்தேகம் உண்டானால், உண்மையில் இந்த உலகம் என்பது கண்ணாடியில் பிரதிபலிக்கின்ற பிரதிபிம்பம் போன்று, சுத்த அறிவிலிருந்து பிரதிபலிக்கின்றது.

அதாவது, "கண்ணாடியில் தன் முகத்தை காணும் ஒருவன் அவனது பிரதி பிம்பத்தை மட்டும் கவனித்துக் கொண்டு, கண்ணாடியை கவனிக்காமல் தவற விடுகின்றானோ? அதுப்போல, மூடர்கள் இந்த உலகத்தை மட்டும் கவனித்துக்கொண்டு, கடவுளை (அறிவை) அறியாமல் தவற விடுகின்றார்கள்".

இறைவன் உருவமற்ற ஏகனாக இருப்பதினால், அவனை, சிவன், விஷ்ணு என்று உருவ பேதத்தில் கொண்டு வந்து, சிவன் சிறந்தவன், விஷ்ணு தாழ்ந்தவன் என்றோ, விஷ்ணு உயந்தவன், சிவன் தாழ்ந்தவன் என்றோ? பேதபுத்தி கொள்வது என்பது அறிவற்றவன் செய்கின்ற செயல்கள் ஆகும்.

ஆகையினால், பிரக்ஞையுடையவரே! உருவமற்ற அரூபியான பரம்பொருளை, அந்த அறிவை எங்கும், எதிலும் உபாசனை செய்யுங்கள். இப்படி அரூபமாக, நிர்குணமாக இருக்கின்ற பரமன், தன்னுடைய மாயா சக்தியினால், இந்த பிரபஞ்சமாக விரிந்துக் காணப்படுகின்றார். அவரது நிர்குண வடிவமே, உருவத்தில் வரும்பொழுது, **சற்குணம்** ஆகின்றது

அதாவது, அந்த ஒரே அறிவு தன்னுடைய பிரதிபிம்பமான உபாதியாகிய மனதில் பிரகாசிக்கும்போது, அந்த மனதில் ஏற்றி

வைக்கப்படுகின்ற நாம, ரூபங்களுக்கு ஏற்றவாறு, பலவாறாகக் காணப்படுகின்றது.

அவ்வாறு, அறியப்படுகின்ற உருவமும், பெயரும், அந்த அறிவின்மீது ஏற்றி வைக்கப்படுவதால், அவைகளும் அந்த அறிவுக்கு வேறாக இருக்க முடியாது என்பதை உணர்ந்துக் கொண்டு, உபாசனை செய்ய வேண்டும். அதை விடுத்து, வெறும் உருவத்தை மட்டும் பிடித்துக் கொண்டு, அதிலேயே சிக்கிக் கொண்டு இருக்கக்கூடாது.

பொதுவாக, ஒருவனுக்கு எந்த உருவத்தின் மீது, அதிக அபிமானம் உண்டாகி, அதன் வாயிலாக, அவர்களது மனமானது திட பக்தியுடன் அந்த உருவத்தின்மீது ஈடுபடுகின்றதோ? அந்த உருவத்தின் உள்ளே உறைகின்ற, அழியாத அந்த அறிவாகிய சைதன்யத்தையும் சேர்த்துத் தியானம் செய்ய வேண்டும்.

மேலும், இந்த ஒரு உருவத்தின் மீதுள்ள பற்று காரணமாக, மற்ற உருவங்களில் உள்ள கடவுள்களை உதாசீனம் செய்யக்கூடாது. ஆகவே, அனைத்திலும் அந்த அறிவைக்கண்டு, தங்களது மனதை மேன்மையான வழிக்கு கொண்டுவர முயற்சியுங்கள். இதைத்தவிர கோடி ஜென்மங்கள் எடுத்தாலும், வேறு கதியில்லை" என்று கூறிமுடித்தாள்.

# அத்தியாயம் – 8

**சம்சார பந்தம்**

இவ்விதம் தன் மனைவியின் விளக்கங்களைக் கேட்டு, உண்மையை உணர்ந்துக் கொண்ட ஹேமசூடன் மனமானது அவ்வளவு எளிதாக நிர்குண பக்தி (உருவமற்ற நிலையில்) செய்யத் தகுதி அற்றதாகவே இருந்தது.

அதற்குக் காரணம், அனேக ஜென்மங்களாகவும், இந்தப் பிறவியில் பிறந்தது முதல், இதுவரையிலும், மற்றவர்களால் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களின் வாயிலாகவும், புறத்திலே பலவாறான பெயர்கள் மற்றும் உருவங்களைப் படைத்துக் கொண்ட அவனது அறியாமை மனம், அந்த உருவங்களை மட்டுமே ஆராதிக்கின்றதே தவிர, உருமற்ற அந்த அறிவை, நிர்குண பிரம்மத்தை, உருவங்களுக்குள்ளே உறையும் உணர்வைப் பிடிக்கத் தெரியவில்லை.

அதன்காரணமாக, சகுண உபாசனை (உருவத்துடன் வழிபடுதல்) செய்ய விரும்பி, ஸ்ரீ திரிபுரையின் கருணையை அறிந்து, துரியமும், சின்மயமுமான மகேஸ்வரியின் மகத்துவத்தை, மனதிலிருத்தி, திடபக்தியுடன் உபாசனை செய்ய ஆரம்பித்தான்.

இவ்வாறு, ஹேமசூடன் சில மாதங்கள் ஸ்ரீ திரிபுரை உபாசனையை செய்து வந்தான். தன் மனைவி ஹேமலேகை கூறிய அறிவுரையின்படி, அவனிடம் உண்டான **அனன்ய பக்தி** (தனக்கு அந்நியமாக அந்த இறைவனை பிரித்துப் பார்க்காத பக்தி) மூலம், எத்தகைய பிரதிபலனும் எதிப்பார்க்காத, ஆசைகள் ஏதுமற்ற, நிஷ்காமிய கர்மத்தின் காரணமாக, பரமேசுவரியான திரிபுரை (திரிபுரை – அறிவு) அவனது இருதயக் கமலத்தில் அவனுக்கு அனுக்கிரஹம் செய்தாள்.

அவனை வெளிமுக நாட்டத்திலிருந்து விலக்கி விட்டு, அகமுக நாட்டத்திற்கு அழைத்துச் சென்று, அவனது உள்ளே உறையும் உணர்வை பிடிக்கும், உயரிய விசாரத்தில் ஈடுபடும் விருப்பத்தைத் தூண்டி, அவனது சித்தத்தை சிவமயமாக்கி, மோக்ஷத்திற்கு தகுதியுடையவனாக மாற்றினாள்.

"இராமா! ஒருவனுக்கு எந்நாள் வரையிலும், மனதிடம் விசாரமானது உண்டாக வில்லையோ? அந்நாள் வரையிலும், அவன் ஆயிரம், ஆயிரம் பூசைகளையும், அக்னி கர்மங்களையும், எத்தகைய ஆடம்பரமாக செய்தாலும், அல்லது ஓயாது கோயில் கோயிலாகப் பல ஸ்தலங்களுக்கு பாதயாத்திரையாக ஓடிக் கொண்டிருந்தாலும், ஒருபொழுதும் மேன்மை என்பது உண்டாகாது".

இவ்வாறு, ஹேமசூடன் விசார சீலனாக மாறி, மீண்டும் தன் மனைவியைக் காணச் சென்றான். தானிருக்கும் இடத்திற்கு தன் மணாளன் வருவதை தூரத்தில் இருந்தே பார்த்த ஹேமலேகை தன் இருக்கையில் இருந்து எழுந்து, அவனை அழைத்து வந்து, ஆசனத்தில் அமரவைத்து, அவனுக்கு பாதசேவைகள் செய்து, பின்வருமாறு கூறினாள்:–



மிகவும் பிரியமானவரே! வெகு நாட்களுக்குப் பிறகு இன்றைக்குத்தான் தங்களைப் பார்க்கின்றேன். இதுவரையில் உங்களுக்கு உடல் உபாதைகள் ஏதாவது உண்டாயினவா? கூறுங்கள். ஏனென்றால், இதுநாள் வரையில் என்னைப் பார்க்க வராமலும், என்னுடன் பேசாமலும் இருந்து விட்டீர்கள்.

இதுப்போன்று, நீங்கள் ஒரு நாளும் என்னைப் பிரிய மனமின்றி, என்னைப்பாராமலும் இருக்க மாட்டீர்கள். ஆனால், இப்பொழுது, இவ்வளவு இடைவெளி உண்டாவதற்கு யாது காரணம்? என்று வினவினாள்.

"பிரியையே! நான் முன்பு போல, உன்னை ஆராதிக்க வரவில்லை. மேலும், என்னுடைய பிரிவு உனக்கு சோகத்தை உண்டாக்காது என்பதையும் நான் அறிவேன். காரணம், நீ சதா பராபரத்தை தியானித்துக் கொண்டிருப்பதினால், மோகமானது உன்னைத் தீண்டாது என்பதையும் நான் அறிவேன். ஆதலால், உன்னிடம் சில கேள்விகளைக் கேட்பதற்காக இவ்விடத்திற்கு வந்தேன். அதனைக் கூறுகின்றேன் கேள்!" என்றான்.

முன்னொரு சமயம், நீ கூறிய கதையில், ஒரு தாய் இருந்தாள் என்றும், அவள் ஒரு மகனை அடைந்திருந்தாள் என்றும், அவனுக்கு ஒரு தோழனை அறிமுகம் செய்து வைத்தாள் என்றும் கூறினாயே? அந்த தோழன் யார்?

இதைப்பற்றி அன்று எனக்கு அவ்வளவாகப் புரிந்துக் கொள்ள முடியவில்லை. தற்பொழுது விபரமாகத் தெரிந்துக் கொள்ளலாம் என்று வந்துள்ளேன் என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட ஹேமலேகை தன் கணவன் இறைவனின் அனுக்கிரஹத்தால் நிர்மல சித்தனாக மாறி இருக்கின்றான் என்றும், விசயங்களிலிருந்து விலகி, அந்த அறிவை அறிய ஆவல் கொண்டுள்ளான் என்றும் அறிந்துக் கொண்டாள். அந்த மகேஸ்வரியின் வல்லமையினால், அவன் முன்செய்த புண்ணியம் பலிதமாயிருக்கின்றது என்பதை புரிந்துக்கொண்டு, இதுவே அவன் ஞானம் அடைவதற்கு தகுந்த காலம் என்று சந்தோசமடைந்து, இனிய முகத்துடன், அவனை நோக்கி பின்வருமாறு கூறத்தொடங்கினாள்.

"ஹே நாதா! ஈசன் கருணையினால், நீங்கள் மகா பாக்கியத்தை தற்போது அடைந்திருக்கின்றீர்கள். அவனது கருணையின்றி, ஒருவருக்கும், ஒரு காலத்திலும் விசாரத்தில் ஆர்வம் உண்டாகாது. விசய, சுகங்களில் விரக்தியுண்டாகாது. ஆகவே, அந்த விளக்கத்தைக் கூறுகின்றேன்" என்றாள்.

"ஆத்மாவே தாய், ஜீவனே அவளது புத்திரன். ஜீவனுக்கு, புத்தியைக் கொடுத்தது, எதற்காக என்றால், தன் தாயான ஆத்மாவை இன்னாரென்று அறிந்துக் கொள்வதற்காக மட்டுமே.

ஆனால், இந்த ஜீவன் தன் தாயான ஆத்மாவை அறியாமல், அவள் கொடுத்த புத்தியைக் கொண்டு, உலக விவகாரங்களில் ஈடுபட்டு, அனைத்து காரியங்களுக்கும் தானே கர்த்தா என்ற அஹங்காரத்தில் செய்துக் கொண்டிருந்தான்.

மேலும், மற்றவர்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்டு, மனம் போனபடி வாழ்ந்து, மதி மயங்கி, ஆசைவயப்பட்டு, அதன்வாயிலாக பொறாமை, பொய், கோபம், விருப்பு, வெறுப்பு, கஞ்சத்தனம் என்ற துற்குணங்களை வளர்த்திக் கொண்டு, தன் தாயான ஆத்மாவை மறந்து, அவளால், அறிமுகப்படுத்தப்பட்ட புத்தியையும் இழந்து, ஆசையினால் துயர நிலைக்கு தள்ளப்பட்டு, முடிவில் **மரணம்** என்ற துர்பாக்கியத்தை அடைகின்றது.

இவ்வாறு பிறப்பு, இறப்பு என்ற சம்சார சக்கரத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் ஜீவனுக்கு, மரணமில்லா பெருநிலையை உண்டாக்க விரும்பி, யுக்தி பூர்வமாக அதை புரிந்துக் கொள்ள ஒரு கதையாக கூறப்பட்டது. தாங்களும் இதை யுக்தி பூர்வமாக புரிந்துக் கொண்டால், அந்த ஆத்மாவை அறிந்து, ஆனந்த அனுபவத்தை எளிதாக அடையும் மேன்மை உண்டாகும்" என்று கூறினாள்.

# அத்தியாயம் – 9

## ஆத்மாவின் நிலை

தன் பிரியையின் வார்த்தைகளை கேட்ட ஹேமசூடன் மிகுந்த சந்தோசத்துடன், தன் மனைவியை நோக்கி, மேலும் பின்வருமாறு கேட்கத் தொடங்கினான்.

"பிரியையே! நீ மேன்மை பொருந்திய பொறுமை சாலியாக இருக்கிறாய். மகா பண்டிதையான உன்னுடைய ஞானத்தின் மகிமை மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. மேலும், உன்னுடை சொற்கள் அனைத்துமே, மிகவும் ஆழ்ந்த பொருளையும், திடமான உறுதியையும் காட்டுகின்றது.

உன் வார்த்தைகளை உள்ளங்கை நெல்லிக்கனி போல, எளிதாக எடுத்துக்கொண்டு, என்னால் கையாள முடிகின்றது. இதில், பர சித் சொரூபத்தை தாய் என்றாய், யார் அந்தத் தாய்? அவளுக்கு ஏன் பிறப்பு இல்லை? இதில், நாம் யார்?

நம்முடைய சொருபம் என்ன? இதில் நான் யார்? இவைகளை எனக்கு தெளிவாக புரியும்படி விளக்க வேண்டும்".

"நாதா! உங்கள் கேள்விகள் மிகவும் ஆழமானவை. இதற்கு பதில் கூறுவது, சற்று சிரமமாக இருப்பினும் கவனமாகக் கேளுங்கள். ஆத்ம சொரூபத்தை எண்ணங்கள் அற்ற மனதைக் கொண்டு, தெளிந்த புத்தியினால் நீங்களே விசாரித்துப் பாருங்கள். அதைப்பார்க்க முடியாது. அதை விளக்க முடியாது. அப்படியிருக்க நான் மட்டும் எப்படி அதைப்பற்றிக் கூற இயலும்? ஆத்மாவை அறிந்தவன் தன்னை அறிந்தவன் ஆகின்றான்.

சதாசிவ தத்துவம் முதற்கொண்டு, கண்ணிற்குத் தெரியாத கிருமிகள் வரையிலும், எல்லாவற்றிலும் ஆத்ம சொரூபம் அப்பட்டமாக விளங்குகின்றது. கருமையான மேகங்களால் மறைக்கப்பட்ட சூரியனின் பிரகாசம் தடைபட்டுக் காணப்படுவதுப் போன்று, இந்த உலகத் தோற்றங்களை உண்மை என மயங்கிய மந்த புத்தியினால், அந்த அறிவாகிய ஆத்மாவின் சுயம்பிரகாசம் தடைபட்டுக் காணப்படுகின்றது.

மேகம் அகன்ற ஆகாயத்தில் எப்படி சூரியன் பிரகாசமாக காணப்படுமோ? அதுப்போல, புத்தியில் உள்ள மன அழுக்குகள் நீங்கினால், அந்த தூய அறிவாகிய ஆத்மா எங்கும், எதிலும், எப்பொழுதும் பிரகாசமாக விளங்கும்.

அதாவது, சூரியனுடைய வெளிச்சம் எங்கும், எதிலும் பரவியிருந்தாலும், பாதரசம் பூசப்பட்ட கண்ணாடியில் பட்டு பிரதிபிம்பிக்கும்போது, அந்த வெளிச்சத்தை கண்ணாடியே வெளிப்படுத்துவது போன்று, பிரகாசமாகவும், தெளிவாகவும் தெரிவதைப் போன்று, **விசாரம்** என்ற இரசம் பூசப்பட்ட, புத்தியில் மட்டுமே அந்த அறிவாகிய ஆத்மா மிகத் தெளிவாக விளங்கும். அத்தகைய ஆத்மாவைத் தனக்கு வேறாகக் காண்பித்துக்கொடு! எனத் தாங்கள் கேட்பது, என்னுடைய கண்களை எனக்குக் காட்டிக்கொடு! என்று கேட்பதற்கு நிகரானது.

ஆச்சாரியர் எவ்வளவுதான் புத்திமானாக இருந்தாலும், இவனது கண்ணை இவனுக்கே எப்படிக் காட்டிக் கொடுக்க முடியாதோ? அதுப்போல, ஆத்மாவையும் காட்டிக் கொடுக்க முடியாது. ஆதலால், ஆத்ம சொரூபத்தின் அருகில் ஒருவனைக் கொண்டு செல்வது மட்டும்தான் குருவின் செயல். இதற்கான வழியை மட்டுமே குருவானவர் காண்பித்துக் கொடுக்கின்றார்.

ஆத்ம விசயத்தைப் பொருத்தவரை, எதுவரையில் மனமானது **"நான்"** என்ற அகங்காரமும், **"எனது"** என்ற மமகாரமும் கொண்டிருக்கின்றதோ? அதுவரை, ஆத்ம சொரூபத்தை அறிய முடியாது. மனமானது, தன்னை **'நான்'** என்று பாவிப்பதிலும், **'என்னுடையது'** என்று எண்ணுவதிலும் இருந்து முழுவதுமாக விடுபட்டு, உள்ளதை உள்ளபடி

அறிகி றதோ? அதுவே, நிஜமான **ஆத்ம சொரூபம்** ஆகும். அதுவன்றி, "**எதெல்லாம் என்னுடையது**" என்று விளங்கு கின்றதோ? அவையெல்லாம் ஆத்மாவல்ல! என புறந்தள்ளி விட்டு, எதனிடத்தில் '**நான்**', '**எனது**' என்ற எதுவும் தோன்ற வில்லையோ? அதைமட்டுமே ஆத்மாவென்று குறிப்பிடுங்கள்.

உங்களுக்கு என்னுடையது என்பதாக உங்கள் மனைவியான நான் இருப்பதால், என்னிடத்தில் உங்களுக்கு ஆத்ம புத்தி இல்லை. மனைவி என்ற சம்பந்தத்தினால் மட்டுமே, நான் உங்களுடையவளாக இருக்கின்றேனே தவிர, அதையும் கடந்து, என்னுள்ளே உறையும் உண்மை உணர்வை உங்களால் உணர முடிந்தால் மட்டுமே, உங்களுக்கு வேறாக நான் இல்லை என்பதும், நான் உங்கள் சொரூபத்தில் அடங்கினவள் என்றும் உங்களுக்குப் புரியும்.

அப்போது மட்டுமே நீங்கள், உங்களுக்கு வேறாக மற்றவைகள் இருக்கின்றது என்ற எண்ணத்தை விட்டு விடுவீர்கள். அத்துடன் அவைகளை என்னுடையது என்றும் கூற மாட்டீர்கள். காரணம், உங்களை நீங்களே அதில் பார்ப்பதால், அவைகள் உங்களுக்கு வேறாக எப்போதும் இல்லை.

"**என்னுடையது**" என்பதற்கு விசயமான யாவற்றையும் தள்ளிவிட்டு, யாதொன்றை தள்ள முடியவில்லையோ? அதனை **ஆத்மா** (அறிவு) என்று அறியுங்கள். இந்த அறிவே உங்களுக்கு மேன்மை பொருந்திய அறிவாக இருக்கும் என்றாள்".

தன்மனைவி இவ்வாறு கூறியதைக்கேட்ட ஹேமசூடன் உடனடியாக அங்கிருந்து எழுந்து, குதிரையின் மீது ஏறி நகரத்தை விட்டு வெளியேறி, நந்தவனத்திற்கு நிகரான ஒரு அடர்ந்த கானகத்தை அடைந்து, அதிலிருக்கும் பரண் போன்ற உயந்த மேடையுள்ள ஒரு மரத்தை அடைந்து, அந்த மரத்தின் மீது ஏறி, அதன் மேற்பகுதிக்குச் சென்று, தன் பரிவாரங்களை அரண்மனைக்கு திரும்பிப்போகும்படி உத்தரவிட்டுவிட்டு, தன்னுடன் வந்த இரு காவலர்களை மட்டும், தன் பாதுகாப்புக் கருதிக் கூடவே வைத்துக் கொண்டான்.

அதன்பிறகு, தான் ஏகாந்தமாக விசாரம் செய்யப் போகும் வேளையில், யாருமே உள்ளே வருவது கூடாது என்ற கட்டளை இட்டு, மந்திரிகளானாலும், ராஜாவேயானாலும், நான் மறு உத்தரவு கொடுக்கின்ற வரையில், ஒருவரையும் உள்ளே விடுவது கூடாது என்று இரு காவலர்களுக்கும் உத்தரவு கொடுத்தான்.

இவ்வாறு உத்தரவு கொடுத்துவிட்டு, ஹேமசூடன் அந்த மேல் மாடிபோன்ற அமைப்புடைய மரத்தின் மீது ஏறி, எப்போதும் காற்று வீசுகின்ற இடத்தில், எல்லாச் சுற்றுப் பிரதேசங்களையும் பார்வையிடக் கூடிய நிலையில், மிருதுவான ஒரு ஆசனத்தில் அமர்ந்துக் கொண்டு, அன்னிய விசயங்களை மனதில் இருந்து நீக்கி, திடமாக தன்னுள்ளே விசாரணை செய்ய ஆரம்பித்தான்.

உலக மக்கள் அனைவருமே மோகத்தில் இருப்பதற்குக் காரணம் என்ன? ஒவ்வொருவரும் ஆத்மா இப்படிப்பட்டது என்பதை அறிந்துக்கொள்ள சிறிதுகூட ஆரவம் காட்டுவதில்லை. ஆனால், மக்கள் எல்லோரும் சுகத்தைத்தேடி, பலவாறாக ஓடி, ஓடி உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்னும் சிலர் வேதம், வேதாந்தம் போன்ற சாஸ்திரங்களை அனுதினமும் படிக்கின்றனர். ஆனால், அவர்களும் தங்கள் தேவைக்காக மட்டுமே இவைகளைப் படிக்கின்றனர். ஆனால், இவர்களும் "**தான்**" இன்னாரென்று அறிந்ததாக இதுவரை இல்லை. இவர்களது மனமயக்கத்திற்கு காரணம் யாது? ஐயகோ! ஆச்சரியம் ஆத்மாவைத் தெரிந்து கொள்ளாமல் (நான் யார்? என மனதை விசாரிக்காமல்), ஒவ்வொருவரும் செய்யும் இத்தகைய செயல்கள் எல்லாம், கனவிலே செய்த செயல்கள் போன்று வீணானதே. ஆகையினால், அதை விசாரித்துப் பார்க்கின்றேன்.

மனை, மனைவி, மக்கள், தனம், தானியம், நாடு என்னும் இவைகளிடத்தில் "**நான்**" என்று தோன்றாமையால், இவைகள் எதுவும் என்னுடைய உண்மை சொரூபம் ஆகமாட்டாது. இவைகள் அனைத்தும் எனக்காக ஏற்பட்ட விசய சுகங்கள் ஆனபடியால், நான் இவைகளில் இருந்தும் வேறானவன். அதாவது, நான் இந்த உடல் மட்டுமே! நிச்சயமாக நான் சத்திரிய குலத்தில் பிறந்தவன், கௌரவமான உடல் அங்கங்கள் கொண்டவன் என்பதில், எந்தவித சந்தேகமும் இல்லை.

ஆனால், இந்த உடலை அல்லவா எல்லோரும் '**நான்**' என்று பற்றிக்கொண்டிருக்கின்றார்கள். இவ்விதம் தன் உடலை '**நான்**' என்று ஹேமசூடன் தீர்மானம் செய்து கொண்டு, அதன் வடிவத்தை சிந்தனை செய்தான்.

சிறிது நேர சிந்தனைக்குப்பிறகு, இரத்தம், எலும்பு, மஜ்ஜை போன்ற, நிமிடத்திற்கு நிமிடம் மாறக்கூடிய, மாறிக் கொண்டிருக்கின்ற இந்த உடல் எப்படி என்னுடையது ஆகும்? ஆதலால், **இது நான் அல்ல**! ஆகவே, இது எப்படி ஆத்மாவாகும்? இந்த உடலில் இருந்து ஒரு கையை வெட்டி எடுத்து விட்டால், அந்த கை "**நான்**" என்று கூறுவதில்லை. மேலும், அந்தக் கை ஒரு கட்டை அல்லது கல் போன்ற ஜடப் பொருட்களுக்கு இணையாக மாறிவிடுகின்றது.

அதுப்போலவே, கனவு காணும் போதும், இந்த உடல் அங்கு இல்லை. இதற்கு பதிலாக வேறு ஒரு உடல் அந்த கனவில் காணப்படுகின்றது. அது அங்கு பல காரியங்களை செய்கின்றது. இதனைப் பார்க்கும் பொழுதும், '**நான்**' என்பது இந்த உடல் இல்லை. இதனிடமிருந்து வேறானவன்தான் நான்.

மேலும், ஆழ்ந்த உறக்கத்தில் கனவும் இன்றி, நினைவுமின்றி, ஒன்றுமில்லாத சூனியத்தை அனுபவிப்பதால், விழிப்பு நிலைக்கு வந்தபிறகு மட்டுமே, நான் நன்றாக, ஆனந்தமாக தூங்கினேன் என்று, அதையும் அறிந்தவன் ஒருவன் இருக்கின்றான். அந்த ஆழ்ந்த உறக்கத்தில் ஒன்றுமில்லாத சூனியத்தை, விழிப்பு நிலையில் அவனே விளக்குகின்றான். ஆகவே, சூனியமும் நான் அல்ல.

அதுப்போலவே, பிராணன், மனம், புத்தி போன்றவைகள் அனைத்தும் என்னுடையது என்று வருகின்ற பொழுது, அதுவும் நான் ஆக இருக்க முடியாது. காரணம், நான் அதிலிருந்து வேறானவனாக இருப்பதினாலேயே, அதனை என்னுடைய மனம், என்னுடைய மூச்சுக்காற்று என்று கூறுகின்றேன்.

ஆகவே, அதுவும் நான் அன்று. பொதுவாக, நான் இல்லை யென்று சொல்வதற்கான நிலை எப்பொழுதும் வந்ததில்லை. காரணம், "**நான் இருக்கிறேன்**" என்பதை

எப்போதும் விளங்கிக் கொண்டிருக்கின்றேன். இத்தகைய சாமான்ய நிலை எனக்கு ஏன் விளங்காமல் உள்ளது?

கண்ணினால் வெளிப்பொருட்களை நன்றாகப் பார்க்கின்றேன். காற்றாகிய பிராணன் உடலின் தோல் என்ற தொடு உணர்ச்சியினால், நன்கு உணரப்படுகின்றது. மனமும், புத்தியும் அறிவினால் ஊகித்து (சிந்தித்து) அறியப்படுகின்றன. ஆனால், இந்த **"நான்"** மட்டும் என்ன காரணத்தினால் எனக்கு விளங்காமலிருக்கின்றது? இந்த ஆத்மாவிற்கு வேறான அனைத்து விசயங்களும் நன்கு விளங்கும்போது, ஆத்மா மட்டும் எதனால், எனக்கு விளங்கவில்லை?

ஆகவே, இந்த தேவையற்ற அநாத்ம விசயங்களை நினையாமல் இருந்து விடுகின்றேன். அப்பொழுதாவது இந்த **"நான்"** எனக்கு விளங்குகின்றதா? என்று பார்க்கப் போகின்றேன் என்று, தீர்மானம் செய்துக் கொண்டு, தன் மனத்தினை எண்ணங்கள் அற்ற நிலையில், நிறுத்திப்பார்க்க முயன்றான்.

இதனால், அவன் மனதில் ஒருவிநாடி அடர்ந்த இருளானது உண்டானது. **"இதுதான் என் ஆத்ம சொரூபம்"** என்று அவன் மனதில் நிச்சயித்துக் கொண்டு, மிகவும் சந்தோசத்துடன் இன்னும் ஒரு முறை இதுப்போல முயற்சித்துப்

பார்த்தான்.இம்முறை அவனது மனதை நிலை நிறுத்தும் முயற்சியில், அந்த ஒரு நொடிப்பொழுதில், ஒரு பிரகாசமான ஜோதியைக் கண்டான். இந்நிலையில் அவன் மேலும் குழப்பத்தை அடைந்தான். என்ன இது? ஒரு முறை இருள் நிறைந்து இருந்தது, மறு முறை ஒளி பிரகாசிக்கின்றது.

இதில் எது ஆத்மா? எனச் சிந்தித்து மீண்டும் இதுப்போன்ற ஆராய்ச்சியைத் தொடர்ந்தான். இம்முறை அவன் ஆழ்ந்த மன அமைதிக்கு முயற்சி செய்ததில் தூக்கம் ஆட்கொண்டு, நன்றாக தூங்கியவனுக்கு கனவுக் காட்சிகள் வந்தன. மனதின் பல்வேறு விசித்திரமான காட்சிகளைக் கனவாகக் கண்டவன், ஆழ்ந்த சிந்தனையின் வாயிலாக, இதற்கு முன்பு கண்ட இருளும், ஒளியும் கூட இந்த கனவைப் போன்ற ஒரு நிலைதானா? அப்படியானால், மனதின் உல்லாசம் அல்லவா இந்த கனவு? இந்த உல்லாசத்தை எப்படி நீக்குவேன்? என்று குழப்பத்துடன் ஆழ்ந்த உறக்கத்தில் இவைகள் எதுவும் தோன்றாத நிலையில், அங்கும் ஒரு விதமான ஆனந்தத்தை அனுபவித்தேன்.

அப்படியானால், அதுதான் ஆத்மாவா? அதுதான் ஆத்மா என்றால், இதுப்போன்ற ஒரு சுகத்தை, நான் விழிப்பு நிலையில், இந்த உலக விசய, சுகங்களில் ஈடுபடும் பொழுது, அனுபவிக்க முடிவதில்லையே, இதற்குக் காரணம் என்ன?

ஆத்மாவை அடைய நான் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் அல்லவா முடிந்துள்ளது? ஆதலால், நான் மீண்டும் இது விசயமாக என் மனைவி ஹேமலேகையிடமே கேட்கலாம் என்ற முடிவுடன், அங்கிருந்த காவலர் ஒருவரை அழைத்து, தாங்கள் உடனடியாகச் சென்று என் மனையை, '**நான் அழைத்து வரும்படி கூறினேன்**' என்று, இங்கு அழைத்து வாருங்கள் என்று கட்டளை இட்டான்.

காவலர் ஒருவருடன் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்த ஹேமலேகை தன் மணாளனான ராஜகுமாரன் அமைதியுடன், இந்திரியங்களை அடக்கியவனாக, ஆழ்ந்த நிஷ்டையில் அமர்ந்திருப்பதைக் கண்டாள். அவனது அருகே சென்று, அவனுக்கு மிகவும் அருகாமையில் அமர்ந்துக் கொண்டு, அவனைக் கவனித்தாள். அவன் சிறிது நேரத்தில், தனது நிஷ்டையை கலைந்து, கண்களைத் திறந்துப் பார்த்து தன் மனைவி தனக்கு அருகே அமர்ந்து இருப்பதைக்கண்டு, ஆனந்தம் அடைந்து, அவளிடம் பின்வருமாறு கேள்விகளைக் கேட்டான்.

"பிரியையே! உன் வார்த்தைகளைக் கேட்டு, நான் தனிமையான இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து, ஆத்மாவின் ரூப இலக்ஷ்ணங்களை ஆர்வமுடன் விசாரணை செய்து பார்த்தேன். அதில், ஒருமுறை இருளும், மற்றொருமுறை வெளிச்சமும்,

அடுத்து ஆழ்ந்த உறக்கமும் உண்டாகி, அதனால் ஒரு சுகமும் கிடைத்தது. அத்மாவை அடைய மற்ற விசய சுகங்கள் தடையாக உள்ளன என்பதினால், அவைகளை நீக்கி, திடமான மனதுடன், எண்ணங்கள் அற்று இருக்க முயற்சி செய்ததில், இதுப்போன்ற அனுபவங்களை அடைந்தேன்.

இதில் எது ஆத்மாவினுடைய ரூபம், அல்லது இதைத் தவிர வேறு ஏதாவது உள்ளதா? இதனை நன்றாக விவரித்து நான் புரிந்து கொள்ளும் விதமாகக் கூறவும் என்றான்".

இவனது விருப்பத்தை அறிந்த ஹேமலேகை, "பிரியரே! நான் கூறு வருகின்ற விசயத்தை, சலிப்படையாத மனதுடன் சற்று கவனமாகக் கேளுங்கள். வெளி விசயங்களில் நீங்கள் மனதை செலுத்தாமல் தவிர்த்து வருவது, ஒரு வகையில் நல்லதுதான். காரணம், அறிஞர்களான ஞானிகளும் இதை சம்மதிக்கக்கூடும். அவ்வாறு மன அமைதி கொள்ளாமல், ஒருவனாலும், ஒரு பொழுதும் ஆத்மாவை அறிய முடியாது.

அதேசமயம், மனதை அடக்கினால் மட்டும், அடையக் கூடிய விசயமாக அது இருக்குமானால், அது ஆத்மாவன்று. தானாகவே இருக்கின்ற ஒன்றை தேடியோ, அடக்கியோ அடைவது எவ்வாறு? அதை தேடி அடைய முயற்சிப்பதினால், அதை அடையவே முடியாது.

உதாரணமாக, தன் கழுத்தில் அணிந்துக் கொண்டிருந்த முத்து மாலையை, மறந்து விட்டு, அனைத்து இடங்களிலும் தேடி அடைய முயற்சித்தால், அதை எப்படி அடைய முடியாதோ? அதுப்போல, தானாக இருக்கின்ற ஆத்மாவை மனதினால் தேடி அடைவது எவ்வாறு முடியும்? அடைய முடியாத ஒன்றை, அடைய முயற்சி செய்வது என்பது ஒன்று கிடையாது.

**"முயற்சிகள் எல்லாமே அறியாமையை அகற்றுவதற்காக மட்டுமே, ஆத்மாவை அடைவதற்கல்ல."**

தன் கழுத்தில் அணிந்துள்ள முத்துமாலையை அறியாமல் அதைத் தேடிக்கொண்டிருப்பவனுக்கு, அது தங்கள் கழுத்திலேயே இருக்கின்றதே என்று காட்டிக்கொடுக்க வேறு ஒருவர் எப்படி அவசியமோ? அதுப்போலவே, அறியாமையை அகற்றி, அந்த ஆத்மாவே நீதான் என்று தன்னைக் காட்டிக் கொடுக்க சத்குருநாதர் என்பவர் அவசியம்".

"பிரியரே! மனதின் எண்ணங்கள் அற்ற நிலையில் இருளானது தோன்றுவதற்கு முன்பு விகற்பமின்றி நீங்கள் மட்டுமாக மிஞ்சியிருந்த யாதொரு நிலையுண்டோ? அந்த பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடியதான அந்நிலையைச் சதா பாவனை செய்யுங்கள். காரணம், முதலில் வெளிப்பொருட்களில் உள்ள நாட்டம் இதனால் குறையும்.

அதாவது, இருட்டில் உள்ள பொருட்களைக் காண முடியாமல் இருக்கின்ற பொழுது, அங்கு ஒளி வந்தவுடன், இருள் அகன்று அனைத்து பொருட்களும் தெளிவாகத் தெரியும். இருளை அகற்றியது மட்டுமே ஒளியின் செயல், ஆனால், ஒளியால் அந்த பொருள் அடையப்படவில்லை. அது ஏற்கனவே அங்கேயே இருந்ததுதான். அதாவது, இருளிலும், ஒளியிலும் அந்த பொருட்கள் அங்கேயே இருந்தன.

இதை அறியாமல், ஒளியால் பொருளை அடைந்தேன் என்பது எவ்வளவு மடமையோ? அதுப்போல, வெளி விசயங்களில் ஈடுபட்டு, ஆத்மாவை அடைய முடியும் என்று கருதுவதும் மடமையே ஆகும்.

இதுப்போன்று, சாஸ்திரங்களைக் கற்ற பெரும்பாலான பண்டிதர்களும் வெளியில் பார்த்தே பழகி விட்டதினால், இந்தப் பாவனையை அறியாமல் ஆத்மாவைத்தேடி இரவும், பகலும் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர்.

அதாவது, மனதை விசாரணை செய்து, சிரவணத்தினால் அடைந்த புத்தியைக் கொண்டு, அவைகளை மனனம் செய்வதினால் மட்டும் இந்நிலையானது அகப்படாது. அனைத்தையும் கற்ற பண்டிதன் ஆனவன் எதுவரையில் சிரவணம், மனனம் செய்கின்றானோ? அதுவரையிலும்,

சாதாரணமாக அது அவனுக்கு பிடிபடாது. காரணம், அவனது புத்தியில் சேர்த்து வைக்கப்பட்ட எனக்கு எல்லாம் தெரியும் என்ற மாசுக்கள் நீங்காமல், அதை அவன் அறிய முடியாது. ஆகவே, அது இருந்த இடத்திலேயே சும்மா இருந்து அறியக்கூடியது.

உலக விசயங்களைப்போல, விசாரத்தின் வாயிலாக, அறியக் கூடியது அல்ல. உண்மையாகவே அது விசாரம் அடங்குமிடத்தில், தானாகவே விளங்குகின்றது.

ஒருவன் நடந்து செல்லும் பாதையில் தன் முன்னால், தன் தலையின் நிழலை கண்டு, அதை தாவித், தாவி மிதிக்க முயற்சிக்கும் பொழுது, அது தள்ளித் தள்ளிப்போவதைப் போல, ஏதாவது செயல்களைச் செய்து, ஆத்மாவை அடைய முயற்சிக்கும் செயலும் இதுப்போன்றே வீணானது".

"நாதா! இந்த உலகம் அறிவு, அறிபடுபொருள் என இரண்டு விதமாக இருக்கின்றது. உலகை நேரடியாகக் காணுவதால், அதற்கு நிரூபணம் தேவையில்லை. அறிவு இல்லையென்றால், அறிபடுபொருளையும் அறியப்படமுடியாது. அறிவே எல்லாவற்றிற்கும் ஆதாரமாக உள்ளது. இது சித்ரூபமாக எப்பொழுதும் விளங்குவதால், சூரியனது வெளிச்சத்திற்குத் தீபம் தேவையில்லாததுபோல, சித்ரூபத்தை சாதிக்க சாதனமான வேறு ஒரு பிரமாணம் தேவையில்லை.

(ஆதாவது, நான் இருக்கின்றேன் என்பதை அறிய வேறு ஏதாவது ஆதாரம் தேவையா? அல்லது வேறு யாராவது வந்து கூற வேண்டுமா?)

இதற்கு ஞானம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அந்த நான் இருக்கும். அது அழியாத நிலைக் கண்ணாடி, கண்ணாடியில் பிம்பம் போல, யாவும் அதனுள் அடக்கம்".

"ராஜகுமாரா! ஸ்தூலமான கண்ணிற்குத் தெரிகின்ற பானைக்குள்ளே சூக்ஷுமமான கண்ணிற்குத் தெரியாத மண் இருப்பதுப்போல, ஒவ்வொரு ஜீவனின் கண்ணிற்குத் தெரிகின்ற உடலுக்குள்ளே, கண்ணிற்குத் தெரியாத அந்த சைதன்யம் அறிவாக, உணர்வாக இருக்கின்றது. அந்த தூய சைதன்யமே உங்களது உண்மை சொரூபமாக இருக்கின்றது. அதையே தாங்கள் "**நான்**" என புரிந்துக் கொண்டு, அந்த சைதன்யத்திடம் ஒன்றி, பேதமற்று எவ்வித முயற்சியும் செய்யாது, அந்நிலையில் நிலைத்திருப்பதே **தன்மயமாதல்** எனப்படும்.

நான் என்னுடைய சுய ஆனுபவத்தைக் கூறுகின்றேன் கவனமாகக் கேளுங்கள். தூக்கத்திற்கும், நினைவிற்கும் மத்தியிலும், இரண்டு எண்ணங்களுக்கு இடை நிலையிலும், அறிவு, அறிபடுபொருளுக்கு மத்தியிலும், நுட்பமான புத்தியினால்,

அந்த இடைவெளியை மட்டும் கவனிக்கவும். அந்த நிலைதான் உங்களது நிஜசொரூபம். அதனை அடைந்தால் மோகமில்லை. அதனை தெரிந்துக் கொள்ளாததுதான் இங்கு அறியாமை. இந்த அறியாமையினால் உலகம் துக்க மயமாக காணப்படுகின்றது.

நினைவிற்கும், தூக்கத்திற்கும் மத்தியில் உண்டாகும் அந்த வெட்டவெளியில் மனம் லயம் ஆகும்போது, அந்த நிலையில் மனம் முழுவதுமாகவே அகமுகமாக இருக்கின்றது. அப்பொழுது, மனம் வெளித்தொடர்பிலிருந்து விடுபடுகின்றது. உலக விவகரங்கள் ஏதுமற்ற அமைதியான சூழலில் சிதாத்மா (ஜீவன்) பிரகாசிப்பதுதான் சைதன்யத்தின் உண்மை சொரூபம் ஆகும். இதற்கு அன்னியமாக இந்த உலகில் எதுவும் இல்லை. எல்லா வடிவங்களில் அது இருந்தாலும், அதன் உண்மை சொரூபம் ஒன்றே ஒன்றுதான். அதுவே **பிரம்மா, விஷ்ணு, சிவன்** எல்லாமே.

உதாரணமாக, ஒருவன் பொருட்காட்சியில் உள்ள கண்ணாடி மாளிகைக்குள் சென்றான் என்றால், அங்கு பலவிதமாக பாதரசம் தடவப்பட்ட, பல்வேறு முகம் பார்க்கும் கண்ணாடிகளைக் காணலாம்.



அந்தக் கண்ணாடிகளில் இவனது உருவம் பிரதி பிம்பிக்கின்ற பொழுது, சில கண்ணாடிகள் இவனைக் குள்ளமாகவும், சில கண்ணாடிகள் இவனது முகம் நீண்டு இருப்பதுப் போலவும், சிலவற்றில் உயரமாகவும், சிலவற்றில் பருமனாகவும், சிலவற்றில் ஒல்லியாகவும், சிலவற்றில் முகம் விகாரமாகவும் காண முடிகின்றது அல்லவா?. ஆனால், உண்மையில் இருப்பது இவன் ஒருவன் மட்டுமே.

உபாதியான கண்ணாடியின் தகுதிக்கு ஏற்ப இவனது உருவத்தோற்றம் எப்படிப் பலவாறாக மாறுபட்டு காணப் படுகின்றதோ? அதுப்போல, ஒரே வடிவான அந்த சைதன்யம் பல உடல்களின் வாயிலாக, இந்த பிரபஞ்சத்தில் பிரதி பிம்பிக்கின்ற பொழுது, பலவிதமான உருவ தோற்றத்திலும்,

பல்வேறு குணங்களுடன் கூடியதாகவும் காண முடிகின்றது. ஆனால், உண்மையில் அந்த ஆத்மாவின் பிரதி பிம்பங்களே இந்த உலகமும், உலகப்பொருட்கள் அனைத்துமே என்பதை நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும்.

எப்படிக் கண்ணாடி இல்லையென்றால், பிம்பங்கள் இல்லையோ? அதுப்போல, சைதன்யம் இல்லையென்றால், இந்த உலகில் எதுவும் இல்லை. அது எங்கும், எதிலும், எப்பொழுதும் இருப்பதினாலேயே **சர்வேஸ்வரத் தன்மை** கொண்டது. மனம் வெளியே செல்வதை சற்று நிறுத்தி, உள்முகமாக மன விகாரங்களிலிருந்து விடுபட்டு, தானே தன் ஆத்ம சொரூபத்தைப் பார்க்க வேண்டும். பார்க்கின்றேன் என்ற எண்ணமும் உண்டாகாமல், எப்படிப் பிறந்த குழந்தையின் மனதில் எந்த எண்ணங்களும் உண்டாகாதோ? அந்த சுத்த நிலையில், எந்த உருவத்தையும் கற்பனை செய்யாமல், எதுவாக இருக்கின்றீர்களோ? அதுவே உங்கள் உண்மை சொரூபம். அதனை தாமதமின்றி அடைய முயற்சியுங்கள்" என்று ஹேமலேகை கூறி முடித்தாள்.

ஹேமசூடன் அவள் கூறிய அவ்விதமே முயற்சி செய்து, அந்நிலையை இன்னதென்று அறிந்து, நீடித்த நிர்விகல்ப சமாதியில் வெளி உலகை மறந்து வெட்டவெளித் தன்மையில் பரமானந்தத்தில் நின்றான்.

# அத்தியாயம் – 10

## சாதுக்களின் அவசியம்

ஹேமலேகை கூறிய வார்த்தைகளினால் மெய் மறந்து, பர நிலையின் பரவசத்தில் அமர்ந்திருந்த தன் மணாளனை அங்கிருந்து எழுப்ப மனமின்றி, சற்று அமைதியுடன் அவனை நோக்கியவாறு இருந்தாள். அதன்பிறகு, சற்று நேரம் கழித்து, கண்களைத் திறந்து பார்த்த ஹேமசூடன், அதே நிலையில் மீண்டும் அமர்ந்திருக்க விரும்பி, மீண்டும் தன் கண்களை வேகமாக மூடிக்கொள்ள முயன்றான். அந்த நேரத்தில் அவனை தன் கரங்களால் தடுத்து நிறுத்திய ஹேமலேகை பின்வருமாறு கூறுகின்றாள்:–

"நாதா! நீங்கள் என்ன காரணத்தினால் கண்ணை மூடிக் கொண்டீர்கள்? அதனைத் திறந்தால் தானென்ன? கண்களை மூடுவதினாலும், மூடாமல் இருப்பதினாலும் உங்களுக்கு என்ன இலாபம்? என்ன நஷ்டம்? கூறுங்கள்.

கண்களைத் திறந்தால், எது உங்களால் அடைய முடியாமல் இருக்கின்றது? கண்களை மூடினால் எது அடையக் கூடியதாக இருக்கின்றது? இதனை எனக்கு கூறவேண்டும். உங்களுடைய நிலையை நான் அறிய விரும்புகின்றேன்" என்றாள்.

"பிரியையே! வெகு நாட்களாக இல்லாது, இப்பொழுது மிகுந்த செயலற்ற நிலையை நான் அடைந்திருக்கின்றேன். துக்கம் நிறைந்த இந்த வெளி உலகத்தில், ஒருபொழுதும் எனக்கு நிம்மதி உண்டாகவில்லை. இரசமெடுக்கப்பட்ட கரும்பின் சக்கையைப் போலவும், அரைத்ததையே அரைத்து மென்றுக் கொண்டிருக்கும் பசுக்களைப் போலவும், ஒரே காரியத்தை தினம், தினம் சலிக்காமல் வேலைகளைச் செய்யும், இந்த மூட ஜனங்களைப் போல, நானும் மூடனாக இந்த வெளி உலக விவகாரங்களில் சுகம் இருப்பதாக நினைத்து இதுவரை ஏமாந்தது போதும்.

பாக்கியமற்றவனாக, மூடனாக இந்நாள் வரையிலும் இந்த ஆத்மாவின் சுகத்தை அறியாமல் இருந்து விட்டேன். தன்னிடம் இருக்கும் நிதியை தெரிந்துக்கொள்ளாமல், பிச்சை வாங்கித் திரிபவன்போல, நானும் என்னிடம் இருக்கும் சுகானு பவத்தை தெரிந்துக் கொள்ளாமல், துக்கங்களே நிறைந்த விசய சுகத்தையே அடிக்கடி மேன்மையானதென்று நம்பினேன்.

மின்னல் ஒளிப்போலத் தோன்றி மறையும் இந்த உலக வாழ்க்கையை அதிகம் விரும்பி, அதன் காரணமாக அனேக துயரங்களை இதுவரை அனுபவித்து வந்தேன். இதனால் நிம்மதியின்றியும் இருந்தேன். ஐயகோ! இந்த ஜெனங்கள் துக்கம் எதுவென்றும், சுகம் எதுவென்றும், பகுத்துப் பிரித்தறியும் தன்மையற்றவர்களாகவே இருக்கின்றனர். இவர்களுக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேகப் பகுத்தறிவை அறியாமல், அற்ப சுகத்தில் ஆர்வம் கொண்டு, அறியாமையினால் எப்பொழுதும் துக்கத்தைக் கொடுக்கக்கூடிய செயல்களையே செய்கின்றனர். கஷ்டப்பட்டு உழைத்தாலும், இவர்கள் நிம்மதியின்றி துக்கத்தையே அடைகின்றனர்.

பிரியையே! என்னிடம் கிருபை செய்வாய். சுகமே வடிவாக கொண்ட ஆத்மாவினிடத்தில் இருக்கின்ற நீடித்த நிம்மதியை நான் எப்போதும் விரும்புகின்றேன். ஐயகோ! நீ இந்த நிலையை அறிந்தவளாக இருந்தும் பாக்கியமற்றவளாக இருக்கின்றாய். இந்த நிம்மதியை கைக்கொள்ளாமல் மூடத்தனத்தால் துக்கத்தில் இருக்க முயல்கின்றாய்" என்றான்.

இவனது இத்தகைய வார்த்தைகளைக் கேட்டு புன் சிரிப்புடன் ஹேமலேகை தன் கணவனிடம் பின்வருமாறு கூறுகின்றாள்.

"நாதா! பரம பவித்ரமான அந்நிலையை நீங்கள் அனுபவத்தில் அறியவில்லை என்று நன்றாகத் தெரிகின்றது. அதற்குக்காரணம், எந்த ஒரு நிலையில் இருந்தால், பரிசுத்தமான பண்டிதர்கள் மோகம் அடைய மாட்டார்களோ? அந்நிலைக்கும், உங்களுக்கும் உள்ள தூரம் மண்ணுக்கும், விண்ணுக்கும் இருக்கும் தூரம் போன்றது. நீங்கள் எதை தெரிந்துக் கொண்டதாக நினைத்துக் கொண்டு இவ்வாறு கூறுகின்றீர்களோ? அது நீங்கள் தெரிந்துக் கொள்ளாததற்கு சான்றாக இருக்கின்றது.

அதாவது, தங்கள் கண்களை மூடுவதினாலோ, திறந்துக் கொண்டு இருப்பதினாலோ? அந்த உண்மை நிலையானது இல்லாமல் போய்விடுமா? அல்லது அந்நிலையானது ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டும் வந்து செல்லக்கூடுமா? எங்காவது காடு, மலைகளுக்குச் சென்றோ, செல்லாமலோ அடையப்படுகின்ற நிலையாகுமா?

மேலும், கண்களை மட்டும் மூடுவதினாலோ? அல்லது கண்களை திறந்து மேலே விட்டத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்து இருப்பதினாலோ? அந்த நிலையை அறிந்துக் கொள்ள முடியுமா? இந்தச் செயல்களினால் எல்லாம், அந்த நிலையை அடையப்பட்ட பூரண நிலை என்று எவ்வாறு கூற இயலும்?

ஒருவன் தன் கண்ணை மூடிக்கொண்டு இந்த உலகமே இருண்டுவிட்டது என்று கூறுவது போன்று உள்ளது உங்கள் நிலை. கண் இமைகளை மூடுவதினாலும், கண்களைத் திறந்துக் கொண்டு மேலே பார்ப்பதினாலும், அந்நிலையை அறிய முடியுமானால், அது நிச்சயமாக பூரண நிலையாக இருக்க முடியாது.

அந்த தூய அறிவு எங்கும், எதிலும், நிறைந்திருக்கின்ற **பூரணப்பிரகாசம்** என்பதினால், அது சாதாரணக் கண்ணிற்குள் அடங்கிவிடுகின்ற விசயம் ஆகாது. சிலர் உங்களைப் போன்றே, கண்ணிற்குள்ளேயும், கண்ணின் கருமணிக்குள்ளேயும் கடவுளைத் தேடிக்கொண்டு, அங்கும், இங்கு அலைந்துக் கொண்டிருகின்றனர். இத்தகைய மூடர்களின் செயலைப் போன்று உள்ளது உங்கள் செயல்.

ஐயகோ! உங்களுடைய மோகத்தின் மகிமையை நான் என்னவென்று கூறி உங்களுக்கு புரியவைப்பேன். எந்த ஒன்றிடம் கோடிக்கணக்கான பிரமாண்டங்கள் அடங்கியிருக் கின்றனவோ? அந்தச் சைதன்யத்தை ஒரு அங்குல அளவுள்ள இமைகளைத் திறந்ததினால் மறைபட்டுப் போகும் என்று கூறுவதும், அந்த இமைக்குள் உள்ள கண்ணின் கருமணிக்குள் மட்டுமே காண முடியும் என்று கூறுவதும் மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது.

ராஜகுமாரரே! தத்துவத்தின் சாரமாக நான் கூறுவதைக் கேளுங்கள். இதுப்போன்ற அழியக்கூடிய உடல் ஜடம். ஆனால், ஆத்மா அழிக்க முடியாத அறிவு. உடலுக்கும், ஆத்மாவுக்கும் இடையில், உடலின் எல்லைக்குள் உதிப்பது "**நான்**" என்ற அகந்தை. இதை **சித்ஜடக்கிரந்தி** எனவும், **பந்தம்** எனவும், **சூக்ஷ்ம உடல்** எனவும், **மனம்** எனவும், பலவாறாகப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது. இந்த கிரந்தியானது (முடிச்சு) எதுவரையில் அவிழாமல் இருக்கின்றதோ? அதுவரையிலும், ஒருவனுக்கு சுகம் கிடையாது. மோகம் என்ற கயிற்றினால் உண்டான ஆனேக முடிச்சுக்கள் கோடிக்கணக்கில் இருக்கின்றன. இங்கே சொரூபத்தை அறியாமல் இருப்பதே மோகம் என்ற கயிறாகும்.

இந்த கயிற்றினிலே விபரீத புத்திகள் என்ற அனேக முடிச்சுக்கள் அவிழ்க்க முடியாமல் இருக்கின்றன. இதில் முதலாவதாக இந்த உடலை உண்மையென்று கருதி, இந்திரியங்களின் வாயிலாக இறைவனை காண முயற்சிப்பது, அவனுக்கு மேலும், மேலும் தேகாத்ம புத்தியை கொடுக்கின்ற மிகப்பெரிய முடிச்சாகும். அத்துடன் கண்ணாடியில் பிரதி பிம்பிக்கின்ற தோற்றமாத்திரமான இந்த உலகத்தை உண்மை என்று நம்புகின்ற புத்தி உண்டாவது மற்றொரு கிரந்தியாகும்.

இவ்விதமே ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் பேதமுண்டு என்ற கொள்கை முதலியவைகளும் முடிச்சுக்களே. இவைகள்

அநாதி காலமாக ஏற்பட்டு மீண்டும், மீண்டும் நடந்து வருவதினால், ஒரே கயிற்றில் பல முடிச்சுக்கள் போடப் பட்டுள்ளது. இதனால், அந்த கயிறே முடிச்சு போல மாறிவிட்டது.

அந்த ஒரே கயிறு தோற்றத்தில் பல முடிச்சுக்களாகத் தோன்றுவது எப்படியோ? அதுபோன்று தேகத்திற்கு ஆதாரமான சிதாத்மப் பிரதேசத்தில் (அதாவது ஜீவனிடத்தில்) இந்த உலகம் உண்மை போன்று தோற்றங்களாக காணப்படுகின்றது. இந்த முடிச்சுக்களால் ஜீவன் கட்டப்படுகின்றான். இந்த முடிச்சுக்கள் அழியும்போது மட்டும்தான், ஒருவன் பந்தத்திலிருந்து விடுபட்டு முக்தனாகின்றான். அதாவது, **பிறப்பு – இறப்பு** என்ற சம்சார துக்கத்திலிருந்து விடுபடுகின்றான்.

கண்களை மூடிக்கொள்ளும் பொழுது, நீங்கள் எந்த ஒரு நிலையை அடைகின்றீர்களோ? அது இரண்டற்ற சுத்த அறிவான உங்களுடைய உண்மை சொரூபம்தான். அதுதான் அகிலமான சம்சாரமென்ற சித்திரத்திற்கு ஆதாரமான பெருங்கண்ணாடி. எந்த வேளையில், எந்த இடத்தில், எந்த ரூபத்தில், அந்த தூய உணர்வு தோன்றாமல் இருக்கின்றது என்பதை எனக்குக் கூறுங்கள். கண்ணாடி இல்லையென்றால், பிரதி பிம்பம் இல்லை. அதுப்போல, அந்த தூய மெய்யறிவு (ஆன்மா) இல்லையென்றால், உங்களுடைய சிற்றறிவு (மனம்) இல்லை.

ஆதலால், சைதன்யத்தை தள்ளிவிட்டு, மற்றொன்றை அறிய முடியாது. அப்படிப்பட்ட ஒன்று உங்கள் கண்களைத் திறந்தவுடன் எப்படித் தோன்றாமல் மறைந்துவிடும்? நீங்கள் எதுவரையில் **"பார்க்கின்றேன்", "அறிகின்றேன்"** எனும், அறியாமை முடிச்சுக்களால் பலமாகக் கட்டப்பட்டிருக்கின் றீர்களோ? அதுவரையில், அந்நிலை அடையப்படவில்லை என்று கூறலாம். ஏதாவது அடையப்பட்டிருக்குமானால், அது அந்நிலையுமன்று. மேலும் கண்களை மூடிக்கொள்வதும், திறந்துக் கொண்டு மேலே பார்ப்பதும் கிரியையினால் (செயல்களினால்) உண்டாகின்ற படியால், அது பூரண நிலையல்ல.

காரணம் கால தேசங்களுக்கு அப்பாற்பட்ட அந்த பரிபூரண வஸ்து எங்குதான் இல்லை. அது சுயம்பிரகாசம் அன்றோ? அப்படிப்பட்ட பரம பதத்தை அறிந்தபிறகு, அதற்காக நீங்கள் செய்ய வேண்டிய செயல்கள் ஒன்றுமில்லை.

கண்களை மூடித் தடைப்படுத்தி அதை பார்க்க முயற்சிக்கின்றேன் என்பதையும், கண்களைத் திறந்துக் கொண்டு மேலே பார்த்து, அதை நிலை நிறுத்த முயற்சிக்கின்றேன் என்பதையும், கண்ணுக்குள்ளே அதைக் கருமணியாகக் காண்கின்றேன் என்பதையும் விட்டு விடுங்கள்.

இந்த முயற்சிகள் அனைத்துமே முக்குணங்களின் வெளிப்பாடு என்பதினால், அவைகளெல்லாம் உங்களிடமுள்ள அறியாமையின் முடிச்சுக்கள் ஆகும். அதைவிடுத்து, குணங்கள் ஏதுமற்ற, "**குணாதீதன்**" என்ற நிலைக்கு நீங்கள் உண்மையில் உயர வேண்டும். மேலும், '**இது நானல்ல!**' என்ற உடலின் மீது இருக்கின்ற வன்மை பொருந்திய முடிச்சையும் அவிழ்த்து விடுங்கள். எங்கும், எதிலும் அந்த அகண்ட சத்சிதானந்த சொரூபமே இருப்பதாகப் பாருங்கள். அகில பிரபஞ்சத்தையும், கண்ணாடியில் தெரிகின்ற பிரதிபிம்பம் போலத் தனக்கு உள்ளேயே பாருங்கள். அதன்பிறகு, எங்கும், எதிலும் இருக்கின்ற அந்த சின்மாத்திர சொரூபமே "**நான்**" என்று தன் சொரூபத்திலேயே தன்னிலையில் அமர்ந்திருங்கள்".

இவ்வாறாகத் தன் பிரியை கூறியவைகளைக் கேட்ட **ஹேமசூடன்** பூரணமான ஆத்ம சொரூபத்தை அறிந்து, எவ்விடத்திலும், சந்தேகமற்றவனாக, படிப்படியாக பூரண ஆத்ம நிஷ்டையில் சதா இருந்துக் கொண்டு ராஜ்ஜிய பரிபாலனை செய்து, பல காலங்கள் தன் மனைவி ஹேமலேகையுடன் ஜீவன் முக்தனாக வாழ்ந்தான். இவன் மட்டுமின்றி, இவனைச் சார்ந்த தனது தாய், தந்தை, தம்பி என அனைவரையும் ஆத்ம ஞானத்தை அறியவைத்து, அரசவை மந்திரிகளையும் மாற்றி, மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்தான்.

# அத்தியாயம் – 11

## ஜகத் தத்துவ நிரூபணம்

இவ்விதமாக ஹேமசூடனின் கதையைக் கேட்ட பரசுராமனது மனதில் சந்தேகமும், குழப்பமும் உண்டாகி, தன் எதிரே அமர்ந்திருக்கும் ஸ்ரீ தத்தகுருவை நோக்கி, பகவானே! பரமகுருவே, தாங்கள் கூறிய மகா அற்புதமான ஞானமானது சாத்தியமாகக் கூடியதாகத் தோன்றவில்லை. மேலும், பல விவகாரங்களைக் கொண்ட இந்த உலகம் எப்படி எதிலும் சம்பந்தப்படாத சித்தின் (அறிவின்) சொரூபமாக இருக்க முடியும்? இது தங்கள் வார்த்தைகளின் மீதுள்ள நம்பிக்கையின் மேல், நான் அங்கீகரிக்கும் படியாக இருக்கின்றதேயன்றி, எனக்கு உண்மை பிடிபடவில்லை.

அதாவது, அறியப்படுகின்ற பொருட்களை புலன்களின் துணையின்றி, அந்த தூய அறிவினால் மட்டுமே அறிய முடியும் என்பதை என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை.

அப்படிப்பட்ட அறிவு இருக்கின்றது என்பதை எப்படி தீர்மானமாக ஏற்றுக் கொள்வேன்? தாங்கள் கிருபைக் கூர்ந்து, இதைப்பற்றி இன்னும் சற்று தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்று அவரது பாதத்தை நமஸ்கரித்து எழுந்தான் பரசுராமன்.

இதைக்கேட்ட பகவான் ஸ்ரீ தத்தகுரு பரசுராமனிடம் பின்வருமாறு கூறத் தொடங்கினார். "இராமா! கேள், காட்சி சொரூபங்களின் உண்மைத் தன்மையைக் கூறுகின்றேன். அதாவது, காணும் காட்சிகள் அனைத்தும் காண்பவனின் வடிவமே அல்லாமல் வேறல்ல. ஏற்கனவே அனுபவப்பூர்வமாக இது உனக்கு உபதேசிக்கப்பட்டது. இருப்பினும், நீ அனேக குழப்பத்துடன் இருப்பதால், மீண்டும் அதைப் பற்றி இப்பொழுது யுக்தி பூர்வமாக கூறுகின்றேன். ஒரே மனதுடன், கவனத்துடன் காது கொடுத்துக் கேள்.

இந்த உலகில் காணப்படும் பொருட்கள் எல்லாம் புதிது, புதிதாக உருவாகிக் கொண்டே இருக்கின்ற விசயங்கள். இது உற்பத்தி செய்கின்றவனின் வியாபாரத்திற்கான விசயங்கள் ஆகும். உற்பத்தி என்றால், புதிதாகப் படைக்கப்படுவது. அதாவது, ஒவ்வொரு நொடியிலும் இந்த உலகம் புதிது புதிதாக படைக்கப் படுவதால் உருமாறிக்கொண்டே இருக்கின்றது. இருப்பினும், இந்த உலகமானது ஒரு நொடியில் உண்டானது என்று சில மதத்தைச் சேர்ந்தவர்கள் கூறுகின்றார்கள்.

இதற்குப் பிரமாணம் புத்த மதம். அசையும், மற்றும் அசையாப் பொருட்களின் கூட்டமே உலகு. இதில் ஆகாயம் போன்ற அசையாப் பொருட்கள் நிலையானது. அசையும் பொருட்கள் நிலையற்றது என இன்னும் வேறு சில மதத்தைச் சார்ந்தவர்கள் கருதுகின்றார்கள். இதற்குப் பிரமாணம் வைஷேசிகம் எனும் மதம். காரணமின்றி இயல்பாகவே காரியங்கள் நடைப்பெறுகின்றன. உலகும் எந்தக் காரணமும் இன்றி இயல்பாகத் தோன்றியதுதான். காரியத்திற்கு காரணம் தேவை இல்லை. அதுப்போல, காரணத்திற்கு காரியம் வேண்டியதில்லை. இவைகள் தானே தன் இயல்பில் இயங்குகின்றது என்பது, மற்றொரு மதவாதிகளின் கருத்து. இதற்குப் பிரமாணம் சார்வாகர்கள். இருப்பினும், இந்த உலகம் உருவானதை பொதுக் கருத்தாக எல்லோரும் ஏற்கின்றனர்.

ஒவ்வொருவரும் உற்பத்தியை ஏற்றுக் கொள்ளும் போது, அதற்கு காரணமான, மூலம் நிச்சயம் இருந்தாக வேண்டும். காரண, காரியங்கள் நியதி வடிவாக இருக்கின்றன என்னும் தீர்மானத்தாலும், இந்நியதி பிசகாது நடக்கின்றதென்று கண்கூடாக காண்கின்றபடியாலும், காரிய வடிவமான இந்த உலகம் காரணமில்லாமல் திடீரென்று எப்படி உண்டாகும்? காரணம் இன்னதென்று, காணப்படாத சில காரியங்கள் தானாகவே நடக்கின்றது என்று கற்பனை செய்வோமானால், அக்கொள்கையானது எல்லோருடைய அனுபவங்களுக்கும்

முற்றிலும் விரோதமாகவே இருக்கும். பெருவாரியான உலகக் காரியங்களுக்குப் பின்னால், ஏதேனும் ஒரு காரணம் இருந்ததை கண்டறியப்பட்டுள்ளது. சில விசயங்களில் காரணம் வெளிப்படையாகத் தோன்றாமல் இருக்கலாம். உலகக் காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி இயல்பாகத் தொடர்ந்து நடைப்பெறுவதால், இதற்கான காரணி ஒன்று இருந்தே ஆகவேண்டும்.

காரணமின்றி எந்தக் காரியமும் இல்லை என்பதே உண்மை. இந்த உலகம் தானாகவே தோன்றியது என்பதற்கு எந்த ஆதாரமுமில்லை. கண்ணிற்குத் தெரியாத அணுவினால் இந்த உலகம் உருவானதாக சிலர் கருதுகின்றார்கள். பரம அணுவிலிருந்து இரண்டாக, மூன்றாக பிரிந்து வந்து, பிறகு தன்னிலிருந்து பல அணுக்களாகப் பிரிந்து, பிரிவதற்கு முன்பு இல்லாமலும், பிரிந்து வந்த பிறகும், இறுதியில் இல்லாமலும் போகின்றது என்பது அவர்களது கொள்கை. இதுவும் ஏற்புடையதல்ல.

இருட்டும், வெளிச்சமும் எப்படி ஒரே இடத்தில் இருக்காதோ? அதுப்போல, இருப்பும், இல்லாமையும் எப்படி ஒரே இடத்தில் உருவாக முடியும்? இப்படி முற்றுலும் மாறுபட்ட குணங்கள் ஒன்றாக இருக்க முடியாதபோது, இதுபோன்ற முரண்பாடான கருத்துக்களால் குழப்பமே மிஞ்சும்.

ஆதியில் பரம அணு பலவாக பிரியும் செயல் யாரால் உண்டாயிற்று? அதற்கு ஒரு கர்த்தா இருக்க வேண்டும் அல்லவா? இயற்கையின் விருப்பத்தினால், அது தானாக நிகழ்ந்ததாகக் கூறினால், அதுக்கூட ஏற்புடையதாக இல்லை. காரணம் என்னவெனில், விருப்பத்தினாலேயே ஒரு செயல் தானாக நடைப்பெறுமானால், போரில் எதிரியை வெல்ல விரும்பும் அரசனின் விருப்பத்தினாலேயே அவனது அம்புகள் அவன் ஏவாமலேயே எதிரிகளைத் தாக்கி அழிக்க வேண்டும். இது சாத்தியமா? யோசித்துப் பார் இராமா!

முக்குணங்களான **சத்வ, ரஜஸ், தமஸ்** மூன்றும் நிலைக்குலைய காரணம் இல்லை. மகாப் பிரளயத்தில் மூன்று குணங்களும் சமமாக இருக்க வாய்ப்பும் இல்லை. அதாவது, அசேதனமான ஜடப்பொருட்களில் செயல் இல்லாமையால், ஜடமான பிரக்ருதியிலிருந்து, சுயமாகவே இந்த உலகம் உண்டானது என்ற சாங்கியமதம் கூறுவதையும் ஏற்பதற்கு இல்லை. இப்படிப்பட்ட நிரூபிக்கப்படாத, உறுதி செய்யப்படாத விசயங்களில் குழப்பமடைந்து உண்மையைத்தேடி, அலையும் ஆன்ம சாதகர்களுக்கு, உறுதியான நிச்சயத்தைக் கொடுக்கக் கூடியது சனாதன தர்மத்தின் **"ஸ்ருதி"** என்று அழைக்கப் படுகின்ற **வேதம்** ஒன்றே பிரமாணம் ஆகும்.

ஏன்? இந்த சனாதன தர்மத்தின் ஸ்ருதியை மட்டும் நம்ப வேண்டும். மற்ற மதங்கள் கூறுவதை ஏற்க முடியாத அளவிற்கு, அப்படியென்ன இதில் மகத்துவம் இருக்கின்றது? என்ற சந்தேகம் சிலருக்கு உண்டாகக்கூடுமானால், அதுவும் நன்றே! காரணம், எதையும் தீரவிசாரணை செய்யாமல், அப்படியே ஏற்பது என்பது, அறிவுடையவர்கள் செய்யும் செயல் அல்ல.

ஆகவே, பல மதங்களின் ஆகமங்களை ஆராய்ந்து பார்க்கின்றபொழுது, அது யுக்தி பூர்வமாக உண்மையை நிரூபிக்கத் தவறுகின்றது. ஆனால், சனாதன தர்மத்தில் உள்ள ஸ்ருதி (வேதம்) ஒன்று மட்டுமே, எப்படிப்பட்ட சந்தேகங்களை, எந்த கோணத்தில் விசாரணைகள் செய்து கேள்விகள் கேட்டாலும், அதற்கான தக்க பதிலை ஆதாரப் பூர்வமான சான்றுகளுடன், உண்மையை மட்டுமே தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

அதற்குக்காரணம், ஒரு பொருளை படைப்பவன், அந்த படைக்கப்பட்ட பொருளை பற்றிய முழு விபரங்களையும் அறிந்தவனாக இருப்பதினால், அவனால் மட்டுமே அந்தப் பொருளை கையாளும் விபரங்கள் அடங்கிய கையேட்டை வெளியிட முடியும்.

மற்றவர்கள் அந்த பொருளைப் பற்றி என்னதான் எடுத்துக் கூறினாலும், அதன் முழுமையான இரகசியங்கள் அந்தப்பொருளைப் படைத்தவனால் மட்டுமே வெளியிட முடியும்.



அதுப்போன்று, இந்த உலகைப் படைத்தவன் ஒருவன் இருக்கின்றான் என்பதையும், அவன் ஒருவன் மட்டுமே இந்த உலகத்தை எப்படி கையாள்வது என்பதைப் பற்றிய அறிவை உடையவனாக இருப்பதினால், அவனால் மட்டுமே அந்த அறிவை கையேட்டுப் புத்தகமாக **ஸ்ருதி** என்ற வேதத்தை வழங்க முடியும் என்பதையும், அதில் கூறப்பட்ட அனுபவ பூர்வமாக நிரூபிக்கப்பட்ட விசயங்களில் இருந்து ஆணித்தரமாக அறிந்து கொள்ளலாம் என்பதை **சனாதனதர்மம்** ஏற்கின்றது.

மற்ற மத தர்மங்கள் முரண்பாடான கருத்துக்களை கூறுவதிலிருந்தே, இந்த உலகத்தைப் பற்றியும், இந்த

உலகத்தைப் படைத்தவனைப்பற்றியும், அவைகள் தெளிவாக அறியவில்லை என்பதுவும் புலனாகின்றது. ஆகவே, வேதம் கூறும் உண்மை என்னவெனில், ஒரு மனிதன் தான் காணும் கனவிலும், தன் மனக்கற்பனையிலும் கற்பிக்கப்பட்ட தேகத்தை "**நான்**" என்று அபிமானிப்பதைப் போன்று, ஈசனும் தன்னால் கற்பிக்கப்பட்ட ஜகத்தை அபிமானிக்கின்றான். கனவிலிருந்து கனவு காண்பவன், அந்தக் கனவிற்கு வேறாக இருப்பதுப் போன்று, இந்த உலகிலிருந்து உலகைப் படைத்தவன் வேறாக இருக்கின்றான்.

மேலும், விழிப்பு நிலையில் ஒருவன் மற்றவர்களின் உடல்களிலிருந்து, தான்மட்டும் வேறாக இருப்பதினால், அவன் தன்னை மட்டும் "**நான்**" என்று அபிமானித்துக் கொள்வதைப் போன்று, ஈஸ்வரனும் இந்த உலகத்திலிருந்து தான் வேறாக இருப்பதினால், தன்னை மட்டும் அழிவில்லாத "**சித்து**" என்று அபிமானித்துக் கொள்கின்றான்.

ஒருவன் கண்ணாடி முன்பு நின்று தன்னுடைய பிரதி பிம்பத்தை நான்தான் அது என்று ஏற்பதற்கு, அங்கு அவனும், அவனைக் காட்டிக் கொடுக்கின்ற அதற்கான வெளிச்சமும் இருக்க வேண்டும். ஆனால், ஈஸ்வரன் தன்னுடைய பிரதி பிம்பமான உலகத்தை நான்தான் அது என்று ஏற்பதற்கு, அவனுக்கு ஒன்றுமே தேவையில்லை.

ஏனெனில், அவன் சுயம்பிரகாசமாக இருப்பதினால், தன்னை காணக்கூடிய, தனக்கு அந்நியமான காட்சிகளை, தனக்கு அந்நியமாக ஓரிடத்திலும் தோன்ற முடியாததாகையால், ஈஸ்வனைத் தவிர வேறு ஒன்றும் சித்தாக இருக்க முடியாது. சமுத்திரம் இன்றி அலைகள் இல்லாதது போன்று, **சித்** (அறிவு) இன்றி இந்த உலகமும் இல்லை.

ஆதலால், இந்த உலகை படைத்தவன் ஒருவன் இருக்கின்றான். சுத்த அறிவாகிய சைதன்ய ரூபனான மகாதேவன் சிருஷ்டிக்கு முன் இருந்தான். அவன் பூரணமானவன். நினைத்துக்கூட பார்க்கக் முடியாத இந்த பிரபஞ்சத்தைப் படைத்தவன் அவனே. இதையே **சிருஷ்டி** (படைப்பு), **ஸ்திதி** (இயக்கம்), **லயம்** (மறைப்பு) என்ற முத்தொழிலை ஈஸ்வரன் செய்வதாகவும், அதற்கு மூன்று உருவங்களில் அவன் வெளிப்படுவதாகவும் கருதப்படுகின்றன.

இதனைப்பற்றி, சந்தேகம் இன்றி அறிய, அந்த சர்வேஸ்வரனாகிய அறிவில் வெளிப்பட்டு, அனேக ரிஷிகளால் விவரிக்கப்பட்ட வேதம் ஒன்றே கற்க வேண்டிய **வித்யா** ஆகும். அதுவே, அறியக்கூடிய உண்மையான அறிவுமாகும். அந்த அறிவை காட்டிக் கொடுக்கும் கல்வியை "**பராவித்யா**" என்று அழைக்கப்படுகின்றது. (வித்யா என்றால், கல்வி எனப்படும்)

இந்த பராவித்யா – வை அறிந்துக்கொள்ள மட்டுமே, அதற்கான, **'அ', 'ஆ'** போன்ற மற்ற கல்வி முறைகளான அபரா வித்யாவை கற்கலாம். காரணம், மற்ற கல்வியைக் கற்கின்ற பொழுதுதான், பராவித்யாவின் உன்னதத் தன்மையை உணர முடியும். அதாவது, வெயிலில் இருப்பவனுக்குத்தான் நிழலின் அருமை தெரியும் என்பதுப்போல, அபராவித்யாக்களை கற்று அறிந்தவனால்தான் அதில் ஒன்றுமில்லை என்பதை தெரிந்துக் கொண்டு, இதைக் கற்க காரணமாக இருந்த உண்மை அறிவை அறியும் **பராவித்யா** – வை நாடமுடியும்.

அதைவிடுத்து, அபராவித்யாவைக் கற்று, அதில் சிக்கிக் கொள்பவன் அந்தோ பரிதாபம்! கண்ணாடி முன்பு நிற்கின்ற உண்மையான தன்னை விட்டு விட்டு, கண்ணாடியில் தெரிகின்ற பொய்யான தன்னுடைய பிரதி பிம்பத்திற்கு ஒப்பனை (அலங்காரம்) செய்கின்ற மூடன் ஆவான். அவன் எத்தனை முறை அந்த பிம்பத்திற்கு ஒப்பனை செய்தாலும், இவனது உண்மை உருவ நிலையில் எந்த மாற்றமும் நிகழாதோ? அதுப்போல, பராவித்யாவை அறியாமல், அபரா வித்யாவிற்கு முக்கியத்துவம் கொடுப்பவன் தன் உண்மை அறிவை அறியமுடியாமல் மீண்டும், மீண்டும் **அபரா வித்யா** பாடங்களைப் படித்துக் கொண்டிருப்பான். அதன் இறுதியில் கற்றதினால் ஒருபயனும் இல்லை என்பதை உணர்வான்".

## குறிப்பு:–

ஒருவன் எவ்வளவுதான் **அபராவித்யா** என்ற உலக அறிவைக் கொண்டவனாக இருந்தாலும், பல மொழிகளைக் கற்றவனாக இருந்தாலும், கணித மேதையாக இந்த பிரபஞ்சத்தையே கணக்கிட்டு புள்ளி விபரங்களைக் காட்டினாலும், அவனது இறப்பிற்கு பின்பு, அவனது உடலோடு சேர்ந்து, அவன் அடைந்த அனைத்து அறிவுகளும் (மருத்துவம், விஞ்ஞானம், கணிதம், ஜோதிஷம்) என எதுவும் அவனுக்கு பயன்படாது போய் விடுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம்.

*ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப் புடைத்து.*

அதுவே, **பராவித்யா** என்ற மெய் அறிவு கொண்டவன் ஒருவன் இறப்பிற்கு பின்பு, அந்த உண்மை அறிவாகவே (சித்தாகவே) மாறி விடுகின்றான். இதுவே பராவித்யாவிற்கும், அபராவித்யாவிற்கும் உள்ள வித்தியாசம் ஆகும்.

"இராமா! உன்னுடைய மானசீகமான சிருஷ்டி, மனோ மயமாகவே இருந்தும், அதனிடம் பலவிதமான படைப்புக்களும், படைப்பாளிகளும் தோன்றி, பல்வேறு வேற்றுமைகளால்

வித்தியாசப்பட்டு இருந்தாலும், அவைகள் ஒருபொழுதும் உன் மனதிற்கு அந்நியமாகாது. மனதிலே உற்பத்தியாகி, மனதிலேயிருந்து செயல்பட்டு, பிறகு மனதிலேயே மறைந்து போகக்கூடிய இவைகள் அனைத்தும் மனதின் தோற்றமாகவே இருப்பதுப்போல, சிவத்திலிருந்து, இந்த சிருஷ்டி உற்பத்தியாகி, சிவத்தினாலேயே செயல்பட்டு, இறுதியில் சிவத்திலேயே மறைந்து போகின்றது.

சிவம் என்றாலே, **சித்** என்று பொருள். அவன் சித்தே தன் வடிவாகக் கொண்டவன். சித்தின்றி வேறு வடிவம் இல்லாதவன். அந்த **சித்தான சிவமே நீ.**

உண்மையில் அந்த மெய்யறிவு இருப்பதினாலேயே, நீ கொண்டிருக்கும் உடலுக்கு **சிவம்** என்றும், அதுவே, அந்த சித்தான சிவமற்ற ஜட உடலை **சவம்** என்றும் கூறுவர். இதிலிருந்து, அந்த சித்தின் சுய ஒளியாலேயே அனைத்தும் பிரகாசிக்கின்றது. அந்த **சித்** அற்ற மற்ற ஜடப்பொருட்கள் பிரகாசிக்க அதனிடம் சுயமான ஒளி கிடையாது.

**"காணப்படுகின்ற அனைத்தையும் இது, இது இன்னதென்று, அந்த அறிவினாலேயே அறியப்படுவதால், அந்த சித்து (அறிவு) அறியாத இடமே இல்லை."**

ஆகவே, சித்து இல்லையென்றால், இந்த உலகமும், பொருள்களும் இல்லாததாக ஆகிவிடும். ஜடப்பொருட்களுக்கு உருவாக்கும் தன்மையோ, சுயப் பிரகாசமோ இல்லை.

ஆனால், இந்த உலகமும், உலகப் பொருட்களும் கண்களுக்குத் தெரிவது அந்த சித்தின் சுயப் பிரகாசத்தினால் மட்டுமே ஆகும். பிரதிபிம்பங்களுக்கு இருப்பைக் கொடுப்பது கண்ணாடி, அதுப்போல, உலகத்திற்கு இருப்பைக் கொடுப்பது அந்த சித் பிரகாசமே.

சூரியன் தன் ஒளியால் பொருட்களைக் காட்சிப்படுத்தும் போது, அதன் பிரகாசத்தில் பொருட்களைக் கண்டு, சூரியன் இருப்பதை அறிகின்றோம். அதுப்போல, சித்தின் ஒளியாலேயே இந்த உலகமும், உலகப்பொருட்களும் காட்சியாவதால், அதன் பிரகாசத்தினால் சித்தின் இருப்பை நாம் கண்டுக்கொள்ள முடிகின்றது. ஜடமான கண்ணாடிக்கு சுயமான ஒளி இல்லாததால், அது பிம்பத்தை பிரதிபலிக்க, அதற்கு வெளிச்சமும், பொருளும் தேவை. ஆனால், சேதனமான, சுத்த சுயம் பிரகாசமான சித்திற்கு ஒன்றும் தேவையில்லை. சித் எதையும் தன்னுள்ளே நுழைய விடுவதில்லை. எனவே, இது மிகவும் கடினத்தன்மை வாய்ந்தது.

அசுத்தம் பிறப்பொருட்களின் சேர்க்கையினால் உண்டா கின்றது. சித்தோ எதையும் தன்னுள்ளே சேர்க்காததினாலேயே இது பரிசுத்தம் ஆகும். தோன்றும் பொருட்களுக்கு எல்லாமே ஒளியாக மட்டுமே சித் இருப்பதினால், அந்த பொருட்களின் அசுத்தம் சித்தை பாதிக்காது.

ஆகவே, எந்த விதமான கலப்புமற்ற சித்து களங்க மற்றதும் ஆகும். எனவே, சித்தின் கடினம் மற்றும் அதிசுத்தம் காரணமாக, அதிகப்பிரகாசமாக இந்த உலகத்தை தெளிவாகக் காணும்படி பிரகாசிக்கின்றது. இந்த உலகம் ஜடம், இதனுடன் சித் (அறிவு) சேர்வதினாலேயே பிரகாசிக்கின்றது. இந்த சித் (அறிவு அல்லது சேதனம்) அற்ற ஜடமான பிணத்திற்கு இந்த உலகமும் பிரகாசிக்காது. அதுவும் ஜடம், இதுவும் ஜடம் ஆகும்.

சித்தின்றி இந்த உலகம் இல்லை. கண்ணாடியில் பிரதிபலிக்கும் தோற்றத்திற்கு பிம்பம் எப்படி அவசியமோ? அதுப்போல, உலகம் என்ற பிம்பம் தோன்றுவதற்கு சித் அவசியம் ஆகின்றது. சித் சுயம் பிரகாசம் என்பதால், அதற்கு கண்ணாடி போன்ற உபாதி தேவையில்லை.

குயவனால் ஒரு பானை உருவாக்குவதற்கு மண் அவசியமாகின்றது. மண் பானையாக மாறியதும் அதற்கு உருவமும், பெயரும் கொடுக்கப்படுகின்றது.

பானை தோன்றும் போதும், மண் மட்டுமே இருந்தது. பானை உடைந்து மறையும் போதும், மண் மட்டுமே இருக்கின்றது. இதற்கு இடையில் நாம் கற்பித்துக் கொண்ட "**பானை**" என்ற பெயரும், அதற்கான உருவமும் வந்து போகின்றன அவ்வளவே!

மனித மனதினால் உலகம் உருவாக்குவதற்கு சித் அவசியமாகின்றது. சித் உலகமாக மாறியதும் அதற்கு உருவமும், பெயரும் கொடுக்கப்படுகின்றது. உலகம் தோன்றும் போதும், சித் மட்டுமே இருந்தது. உலகம் மறையும் போதும், சித் மட்டுமே இருக்கின்றது. இதற்கு இடையில் நாம் கற்பித்துக் கொண்ட "**உலகம்**" என்ற பெயரும், அதற்கான உருவமும் வந்து போகின்றன".

"ஹே இராமா! உன்னுடைய சங்கற்பத்தினாலேயே உன்னுடைய கனவில் எந்த மூலப்பொருட்களும் இன்றி, உன்னால் பலப் பல உருவங்களை படைத்தும், செயல்கள் பல நடைப்பெறுவது போன்றும், கனவுக் காண முடிகின்றது. அதுப்போல, ஈஸ்வரனின் சங்கற்பத்தால் இந்த உலகமும், உலகப்பொருட்களும் பலப் பல உருவங்களாகப் படைக்கப்பட்டு, செயல்கள் நடைப் பெறுவதைப்போன்றும் காண முடிகின்றது.

இதிலிருந்து, உன்னுடைய உறக்க நிலையில் நீ காணும் கனவு உனக்கு எப்படி உண்மையாகத் தோன்று கின்றதோ? அதுப்போலவே உன்னுடைய விழிப்பு நிலையில், ஈஸ்வரன் காணும் கனவும், உனக்கு உண்மையாகத் தோன்றுகின்றது. அதாவது, நீ காணும் இந்த உலகம் உனக்கு உண்மையாகத் தோன்றினாலும், அது **ஈஸ்வரனின் கனவு நிலை** என்பதினால், இந்த **ஜகத் மித்யா** ஆகும்.

(மித்யா என்றால் பார்வைக்கு இருப்பது போன்றுத் தெரியும். ஆனால், அவைகள் உண்மையில் இல்லை.)

அந்த ஈஸ்வரனே உன் தேகத்தில் சித்தாக (அறிவாக) இருந்துக்கொண்டு, இந்த உலகத்தை உன் கனவில் படைப்பதைப் போலவே, நீ அனுபவித்துக் கொண்டிருக்கும் விழிப்பு நிலையிலும் படைக்கின்றான். ஆனால், நீ கனவில் பார்க்கின்ற உலகத்தை இந்த உடலின் உதவியின்றி மனதினால் மட்டுமே அனுபவித்து, விழிப்பு வந்தவுடன் மாயத் தோற்றம் என்று தள்ளி விடுகின்றாயோ? அதுப்போல, நீ நினைவில் பார்க்கின்ற இந்த உலகத்தை இந்த உடலின் இறப்பிற்கு பின்பு, **மாயத்தோற்றம்** என்று தள்ளிவிடத்தான் போகின்றாய்.

இதை எவன் ஒருவன் இந்த உடல் இருக்கும் போதே அறிகின்றானோ? அவனே பிறப்பு, இறப்பு என்ற சம்சார பந்தத்தை வென்றவன் ஆகின்றான். அவன் மீண்டும் பிறப்பதில்லை. பிறந்தால்தானே இறப்பதற்கு?

ஆக, அவன் எப்பொழுதும் சித்தாகவே எங்கும், எதிலும் பிரகாசிக்கின்றன். சூரியனின் சுயப்பிரகாச ஒளி உபாதியான கண்ணாடியில் நுழைந்தவுடன், உபாதியான கண்ணாடி சூரியனின் வெளிச்சத்தை பிரதிபிம்பிக்கச் செய்தாலும், அது கண்ணாடியின் சுயம்பிரகாச வெளிச்சம் அல்ல. அது சூரியனிடம் இருந்து பெறப்பட்ட ஒளி.

ஆகவே, உபாதியான கண்ணாடியின் தகுதிக்கு ஏற்ப பிரதி பிம்பிக்கின்ற வெளிச்சமும் இருக்கும். கண்ணாடி அழியும் போது, அதனுடன் சேர்ந்து பிரதிபிம்பிக்கின்ற வெளிச்சமும் சேர்ந்து நீங்கி விடும். சித்தின் சுயம்பிரகாசமான அறிவு உபாதியான உடலில் (மனிதன், மிருகம், பறவை, மரம் போன்ற எதில்) நுழைந்தவுடன், உபாதியான உடலும் சித்தின் அறிவைப் பிரதி பிம்பிக்கச் செய்தாலும், அது உடலின் சுயம்பிரகாச அறிவு அல்ல. அது உபாதியான உடலின் தகுதிக்கு ஏற்ப பிரதி பிம்பிக்கின்ற **சித்தின் அறிவே** ஆகும்.

இந்த உடல் அழியும்போது, அதனுடன் சேர்ந்து பிரதி பிம்பிக்கின்ற சித்தின் அறிவும் சேர்ந்து நீங்கி விடும். எங்கும், எதிலும், எப்பொழுதும் சுயப்பிரகாசமான அறிவு (சித்) மட்டுமே எப்போதும் இருக்கின்றது. இவ்வாறு, உடல் எடுத்த ஜீவர்கள் தங்களுக்கு கிடைத்த உபாதியான உடலின் தகுதிக்கு ஏற்றவாறு சித்தை (அறிவை) பிரதிபிம்பிக்கின்றனர். உதாரணமாக, ஓர் அறிவு முதற்கொண்டு ஆறறிவு வரை கொண்ட ஜீவர்கள் தங்கள் உடலுக்கு ஏற்ற தகுதியில், அந்த தூய அறிவை (சித்தை) வெளிப்படுத்துவதை காணமுடிகின்றது.

இதில் ஆறறிவு உபாதியான மனித உடலைப் பெற்றவர்களில் பலரும் தங்களுடைய சங்கற்பத்தினால் ஏற்படுகின்ற சாதாரண பாவனைகளினாலேயே இந்த மனித உடலின் மகத்துவத்தை அறியாமலும், அதில் பிரதிபிம்பிக்கின்ற சித்தின் பிரகாசத்தை உணராமலும், மனதின் பிடியில் சிக்கிக் கொண்டு, மனம் போனபடி, வாழ்ந்து இறுதியில், இந்த உடலை விடும்பொழுது, அந்த சித்தின் பிரதிபிம்ப அறிவையும் இழந்து, மீண்டும் தங்கள் சங்கற்பத்திற்கு ஏற்றவாறு, வேறு ஒரு உடலை எடுத்துக் கொண்டு பிறக்கின்றனர். இவர்கள் பிறப்பு, இறப்புச் சக்கரத்தில் சிக்கிக்கொண்டு நசுக்கப்படுகின்றனர்.

எவன் ஒருவன் இடைவிடாத அப்பியாசத்தினாலும், சாதுக்களின் சங்கமத்தினாலும் விசாரணை மேற்கொண்டு,

தன்னிடம் பிரதிபிம்பிக்கின்ற அறிவைக் கொண்டு, சித்தின் சுயம்பிரகாச முழுமையை அறிகின்றானோ? அவன் மட்டுமே அவனிடம் உள்ள அஞ்ஞான இருட்டை விளக்கி, ஞான வெளிச்சத்தில் இறைவனைக் காண்கின்றான்".

"ஹே இராமா! இந்திரஜால வித்தைக்காரன் செய்வதைப் பார்! ஒரு மூலப்பொருளும் இன்றி, தன் சங்கற்பத்தினாலேயே யானை, குதிரை மற்றும் புறா போன்ற உயிரினங்களை விசித்திரமாக படைக்கும் பொழுது, அதைக் காண்கின்றவர்கள் தங்கள் கண்களையே நம்ப முடியாமல், உண்மை போன்று உள்ள அவைகளைக்கண்டு மனம் மயங்கினாலும், இறுதியில் அதை ஏற்காமல், அது பொய்த்தோற்றம் என அறிகின்றனர். அதுப்போல, உலகம் ஈஸ்வரனது சங்கற்பத்தினால், இவ்வாறு பலவாகப் படைக்கப்பட்டு காட்சிக்குத் தெரிகின்றது. இதைக் கண்டு மனம் மயங்கினாலும், விசாரத்தின் இறுதியில், இது பொய்த் தோற்றம் என்று அறிவதே **அறிவு** (சித்) ஆகும்.

சிருஷ்டிக்கப்பட்டவைகளை அந்த ஜால வித்தைக்காரன் மீண்டும் மறைய வைப்பதுப்போன்று, ஈஸ்வரனும் தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த மாயா உலகத்தை மீண்டும் மறைய வைக்கின்றான். இதை பராவித்யா வாயிலாக விசாரத்தினால் அறியும் பொழுது, இந்த **ஜகத் பொய்** என்பது நிரூபணமாகின்றது.

ஆடைகள் ஏதுமற்ற ஆதிவாசி கூட்டங்களின் மத்தியில் ஆடை அணிந்த ஒருவன் இருந்தால், அவனை மதிக்காமல் மற்றவர்கள் எப்படி உதாசீனப்படுத்துவார்களோ? அதுப்போல, அபரா வித்யாவை அறிந்த அஞ்ஞானிகளின் கூட்டங்களின் மத்தியில் பராவித்யாவை அறிந்த ஞானி மற்றவர்களால் மதிக்கப்படாமல் உதாசீனப்படுத்தப்படுவது என்பது, இன்றைய நடை முறையில் நம்மிடையே சகஜமாக உள்ளது. ஆனால், சத்தியமானது, தன் சுபாவத்தை எப்பொழுதும் நழுவ விடாது. ஆனால், அசத்தியமானது தன் சுபாவத்தை நிச்சயம் நழுவ விட்டு விடும். இதை அறிவதே ஞானம்".

"ஹே இராமா! வெகு சஞ்சல சுபாவம் பொருந்திய இந்த உலகத்தைப் பார்! பிரதி பிம்பங்களை காட்டும் கண்ணாடியைப் போல, எங்குமுள்ள இந்த உலகத்தை இது சத்தியம், இது அசத்தியம் என்ற பிரிவினைப்படி விசாரணை செய்து உண்மையான பிம்பம் எது? என்று அறிந்துக் கொள். கண்ணாடி அசைவற்று இருக்கும். ஆனால், அதில் தெரிகின்ற பிம்பங்கள் அசையும்.

அதுப்போல, இந்த உலகம் அசைவற்று இருக்கின்றது. ஆனால், உலகப் பொருட்கள் அசைவதை யாவராலும் உணரப்படுகின்றது. இதுப்போல, **சிவம்** (அறிவு) அசைவற்று இருக்கும். ஆனால், அதில் பிரதிபிம்பிக்கின்ற **சக்தி** (மனம்) இந்த

உலகமாக அசைகின்றது. இதை இன்னும் சிலரால் புரிந்துகொள்ள முடியாததற்குக் காரணம், சூரியன் பொருட்களை பிரகாசமான வெளிச்சம் போட்டு காட்டும் தன்மை கொண்டதாக இருந்தாலும், பகலில் இருட்டைக் காணும் ஆந்தை போன்ற ஜீவர்களுக்கு அது இருளாகவே தெரிகின்றது.

இவ்வாறு, சில பகற்குருடர்களுக்கு என்னதான் புரிய வைக்க முயன்றாலும், அவர்களால், அந்த சுயப்பிரகாச வெளிச்சத்தை உணர முடியாமல், அவர்களது அறியாமை அவர்களைத் தடுத்து விடுகின்றது.

கண்ணாடியில் தூரத்தில் தெரிகின்ற ஒன்றைப் பார்க்கின்ற பொழுது, அது எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று விசாரித்து அறிய முற்படும்பொழுது, அங்கு தூரம் தெரியாமல் கண்ணாடி மட்டுமே காணப்படுவது போன்று, சித்திடம் காணப்படுகின்ற ஒளியும், இருளும் விசாரணையின் முடிவில், ஒன்றுமில்லாமல் போய், அங்கு சித்து மட்டுமே காணப் படுகின்றது. ஆதலால், பிரதிபிம்பத்திற்கு ஆதாரமான சித்து இன்றி ஒன்றுமே இல்லை. உலகமாக நீ எதைக்காண் கின்றாயோ? அந்தக் காட்சியின் பிரகாசம், உன்னுள்ளே அந்தர்யாமியாக இருக்கின்ற சித்தின் சுயம்பிரகாசமே. எனவே, ஈஸ்வரனது அறிவுப் பிரகாசமே இந்த **ஜகத் சொரூபம்** ஆகும்.

# அத்தியாயம் – 12

## கண்ட மலையைக் கண்டு வியத்தல்

இவ்விதம் ஸ்ரீ தத்தாத்ரேயரிடம் இருந்து ஜகத்தின் உண்மை வடிவத்தை அறிந்துக் கொண்ட பிறகும், சந்தேகம் தீராத பரசுராமன் பின்வருமாறு கேட்கின்றான்:–

"பகவானே! தாங்கள் கூறிய அற்புத உபதேசங்களைக் கேட்டேன். ஜகத்தின் உண்மை சொரூபம் தாங்கள் கூறியது போன்றே பொய்யான கனவுப்போல இருக்கின்றது என்றால், பிறகு ஏன்? இந்த உலகம் பார்வைக்கு உண்மை போன்றே காணப்படுகின்றது. எல்லோரும் இதனை உண்மையாகவே நினைப்பதற்குக் காரணம் என்ன? தாங்கள் இவ்வளவு தூரம் விளக்கமாக இதைப்பற்றி எடுத்துரைத்தும், எனக்கு இன்னும் இது உண்மையாகவே தோன்றுவது ஏன்?

ஐயனே! என்னுடைய இந்த சந்தேகம் நீங்குவதற்கு தாங்களே கிருபை கூர்ந்து, எனக்கு வழிகாட்ட வேண்டும்" என்று அவரைப் பணிந்து நின்றான்.

பரசுராமன் இவ்வாறு கேட்டதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்த மகாத்மாவான ஸ்ரீ தத்தாத்ரேயர் உலகத்தை உண்மையாகக் கருதும் காரணம், இன்னதென்று கூறத் தொடங்கினார்.

"இராமா! உலகத்தின் உண்மைத் தோற்றத்திற்கு அநாதியான மூலக்காரணத்தைக் கவனமாகக் கேள். ஒரு வஸ்துவை அறியாமையினால், மற்றொரு வஸ்துவாக கற்பனை செய்துக்கொள்வது மனதின் மயக்கமே எனலாம்.

உதாரணமாக, கயிற்றை பாம்பு என்று கருதுவதையும், ஆத்மாவை, உடல் என்று கருதுவதையும், கவனத்தில் கொள்ளலாம். உயிரற்ற ஜட வஸ்துவான கயிறும், உயிருள்ள சேதன வஸ்துவான பாம்பும் பார்க்கின்றவனின் பார்வையில் உண்டாகும் அறியாமையினால் ஒன்றாகி விடுமா?

அதுப்போலவே, இரத்தம், மாமிசம், எலும்பு முதலியவை களைக் கொண்ட உடல் எங்கே? அதி நிர்மலமான, சிதாத்மா எங்கே? ஆனால், அறியாமையினால் அழிவற்ற ஆத்மாவை, அழியக்கூடிய உடலாகப் பாவிப்பதுவும், கயிற்றை பாம்பாக நினைத்து பயப்படுவதும், மன மயக்கத்தினாலேயே ஆகும். இதுப்போன்ற அறியாமையினாலேயே, இந்த உலகமும் உண்மைப் போன்று தோன்றுகின்றது.

அதாவது, அவர்களது விபரீத பாவனையின் மூலமாக மன மயக்கத்தினை மாற்றலாம். எவர்கள் எவ்விதமாக பாவனை செய்கின்றார்களோ? அவர்களுக்கு அவ்விதமாகவே உலகம் காட்சி அளிக்கின்றது. அதாவது, உண்மையை உணர்ந்த உத்தம யோகிகள், உலகத்தை தங்களது பிராரப்த கர்மாவின்படி அனுபவிக்கும்போது, அதனிடம் மதிமயங்காமல், சந்தோசத்தை அனுபவிக்கும்போது, ஈஸ்வரானாகவும், துயரம் அனுபவிக்கும்போது, மித்யாவாகவும் நினைத்து, இவைகள் இரண்டினாலும் பாதிப்படையாமல், இந்த உலகத்தை வெற்றுப் பார்வையாகக் காண்கின்றனர்.

இந்த உலகம் பார்ப்பதற்கு பாவனைக்கு மட்டுமே பொருந்தக்கூடியது என்பதை விளக்கும், ஒரு அற்புதமான கதையைக் கூறுகின்றேன் கேள்.

வங்க தேசத்தில் சுந்தரபுரி என்ற ஒரு அழகான நகரம் இருந்தது. அதனை சுஷேணன் என்ற பெயர் உடைய புத்திசாலியான அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அந்த அரசனுக்கு மகாசேனன் என்ற ஒரு தம்பி இருந்தான். அவ்வரசன் தர்மத்தை முன்னிட்டு எல்லோருக்குக்கும் சம்மதமாக, தன் இராஜ்ஜியத்தை எந்த குறையும் இன்றி அரசாண்டு வந்தபொழுது, தன் தம்பியின் விருப்பத்திற்காக **அசுவமேத யாகம்** செய்ய ஏற்பாடு செய்தான்.

இவன் அசுவமேத யாகம் செய்வதை நாட்டு மக்களும், மற்ற அரசர்களும் அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதினால், அந்த யாகத்திற்கு பயன்படுத்தும் குதிரையை நாடு முழுவதும் சுற்றி வர அனுப்பி வைத்தான். அத்துடன், அரசன் தன் இரண்டு புதல்வர்களான அரசகுமாரர்களை தன் சேனைகள் மற்றும் பரிவாரங்களுடன், அந்த யாகக் குதிரையை பின் தொடர்ந்து செல்லவும் உத்தரவிட்டான்.




இந்தக் குதிரையைத் தடுப்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை இளவரசர்கள் தங்கள் பராக்கிரமத்தால் வெற்றிக் கொண்டு, அந்த குதிரையின் பின்னாலேயே தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர்.

ஒரு நாள் அந்த குதிரை ஐராவதி நதிக்கரைக்கு வந்து சேர்ந்தது. அரச குமாரகளும் அந்த குதிரையின் பின்னாலேயே அந்த நதித்தீரத்திற்கு வந்து சேர்ந்தனர். அந்த நதி தீரத்தில் **தங்கணர்** என்ற இராஜரிஷி ஒரு குடில் அமைத்து, அதில் தவம் செய்து வருவதைக் கண்டனர்.

அந்த ரிஷியைக் கண்டும், காணாதது போன்று அரசகுமாரர்கள் இருவரும் அவரை வணங்காமலேயே, தங்கள் பாதையில் செல்ல முயன்றனர். அதனை தங்கணரின் புதல்வன் பார்த்து மிகுந்த கோபம் கொண்டு, அசுவமேத யாகத்திற்கு அவர்கள் அழைத்துச் செல்லும் குதிரையை பிடித்துக்கட்டி வைத்துவிட்டு, அந்த அரசகுமாரர்களை பார்த்து, சாதுக்களை மதிக்கத் தெரியாத மூடர்கள் என்று குற்றம் சாட்டினான்.

இதனால், கோபமடைந்த அரசகுமாரர்கள் அவனை எதிர்த்து எதிர்வாதம் செய்ததின் முடிவில், அது வாய் சண்டையிலிருந்து, கைச் சண்டையாக மாறி ஒருவரை ஒருவர் வில், அம்புகளால் சண்டையிட்டனர். இந்த சண்டையில் அரசகுமாரர்களை எதிர்த்து சண்டையிட்ட தங்கணரின் புதல்வன், அவர்களது யாகக் குதிரையை இழுத்துக்கொண்டு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே, எதிரில் இருந்த கண்ட சைலம் என்ற மலைக்கு உள்ளே நுழைந்து விட்டான்.




யாகக் குதிரையுடன் தங்கணரின் புதல்வன் அந்த மலைக்குள் நுழைந்ததைக்கண்ட இராஜகுமாரர்கள் தங்களிடம் உள்ள அஸ்திரத்தினால் மலையை இரண்டாகப் பிளக்க முயன்றனர். அவ்வாறு இரண்டாகப் பிளக்கப்பட்ட அந்த கண்ட மலையிலிருந்து பல போர்வீரர்களுடன் தங்கணரின் புதல்வன் வெளிப்பட்டு, இந்த அரசகுமாரர்களின் படைகளை வென்று, அவர்களது படைகளை நாசம் செய்து, இராஜகுமாரர்களையும் பிடித்துக்கட்டி, அவர்களையும் அழைத்துக்கொண்டு மீண்டும் அந்த கண்டமலைக்குள் நுழைந்து விட்டான்.

அரசகுமாரர்களுடன் யாகக் குதிரையைத் தொடர்ந்து வந்த, அவர்களது மிஞ்சிய படை வீரர்கள், அந்த யாகக் குதிரையையும், அரசகுமாரர்களையும் தங்கள் நகருக்கு திரும்ப

அழைத்துச் செல்ல முடியாமல், வெறும் கையுடன் அரசர் சுஷேணணைச் சந்தித்து நடந்த விபரத்தைக் கூறினார்கள்.

சுஷேணன் மிகுந்த ஆச்சரியமடைந்து, தன் தம்பி மகாசேணனை அழைத்து, "தம்பீ! நீ உடனடியாக தங்கண முனிவர் தங்கி இருக்கும், ஐராவதி நதி தீரம் சென்று, அந்த அளவிட முடியாத சக்தி படைத்த தவசியான தங்கண முனியைச் சந்தித்து, அவரைச் சந்தோசப்படுத்தி, மன்னிப்பு கேட்டு, நம் குழந்தைகளான அரசகுமாரர்களையும், அசுவமேத யாகக் குதிரையையும் மீட்டு அழைத்து வரவேண்டும்" என்றான்.



மேலும், அந்த தங்கண முனிவரை தேவர்களும், அசுரர்களும்கூட வெல்ல முடியாது என்பதை எடுத்துக்கூறி, அவரிடம் பணிவாகப் பேசி, காலதாமதம் செய்யாமல் காரியத்தை சாதித்து வா! என்று கூறினான். அத்துடன், அசுவமேத யாகத்திற்கு தகுந்த **வசந்த காலம்** வர இருப்பதாகவும், அதற்குள் யாக குதிரை இங்கு வரவேண்டும் என்றும், தவசிகளுக்கு கோபத்தை உண்டாக்கும் காரியமோ? அவமானம் செய்யக் கூடிய காரியமோ? ஒரு நாளும் செய்யத்தகாது என்ற அறிவுரையும் கூறி, தன் தம்பியை வழி அனுப்பி வைத்தான்.

கட்டைப்போன்றும், இந்திரியங்கள், மனம் என்ற அனைத்தையும் ஒடுக்கியவராக, நிர்விகல்ப சமாதியில் ஆழ்ந்து இருந்த அந்த தவசீலரான தங்கணரின் ஆசிரமத்தை அடைந்து அங்கு அவரை கண்டு, அவர் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்து எழுந்த மகாசேணன் தன் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு அவரை பலவாராக துதி செய்து வந்தான். இந்த துதியின் சப்தத்தைக் கேட்டு சந்தோசமடைந்த தங்கண ரிஷியின் புதல்வன் அங்கு தோன்றி மகாசேணனை ஆசிர்வதித்து, "இராஜனே! உமது துதியினால் நான் சந்தோசமடைந்தேன். உங்களது கோரிக்கை என்னவென்று கூறுங்கள். தாமதமின்றி அதனை சாதித்துக் கொடுக்கின்றேன்" என்றான்.

மேலும், அவரை நோக்கி, நான் இந்த மகாபுருஷரான தங்கண முனிவரின் புதல்வன் என்று கூறி தன்னையும் அறிமுகம் செய்துக் கொண்டான். அதன்பிறகு, "இராஜனே! தாங்கள் என் தந்தையான தங்கண மகரிஷியிடம் பேசக் கூடிய காலம் இதுவன்று. அவர் இப்பொழுது சமாதியில் இருக்கின்றார். பனிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை மட்டுமே, அவரது நிஷ்டை கலைந்து எழுவார். இதுவரை ஐந்து ஆண்டுகள் மட்டுமே ஆகியுள்ளது.

அவர் நிஷ்டையிலிருந்து எழுவதற்கு இன்னும், ஏழு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும். இந்த நியமத்தை அவர் வெகுகாலமாக கடைப்பிடித்து வருகின்றார் என்றான். ஆகையினால், அவரிடமிருந்து நீங்கள் எதைப் பெற விரும்புகின்றீர்களோ? அதனை இன்னதென்று கூறினீர்கள் என்றால், அதை நான் தங்களுக்கு கொடுக்கின்றேன். என் தந்தைக்கு நிகரான தவசக்தியுடைய என்னை ஒரு சிறிய பாலகன் என்று உதாசீனமாகக் கருத வேண்டாம். யோகிகளாக தவசிகளுக்கு செய்ய முடியாத காரியம் என்று எதுவுமே இந்த உலகத்தில் இல்லை" என்றான்.

முனிகுமாரனின் மிகத் தன்மையான வார்த்தைகளைக் கேட்ட அதிபுத்திசாலியான மகாசேணன் அந்த தங்கணரின் புதல்வனை வணங்கி, "முனிபுத்திரரே! தாங்கள் என்னுடைய

கோரிக்கையை உண்மையாகவே சாதித்துக் கொடுப்பீர்கள் என்றால், உங்களுடைய தந்தை சமாதியிலிருந்து இப்பொழுது எழுந்திருக்க வைத்தால், நான் அவருடன் சற்று உரையாடி விசாரணை செய்ய வேண்டும் என்பதே என்னுடைய முக்கியமான கோரிக்கை ஆகும். உமது கிருபைக்கு நான் பாக்கியமுடையவனாக இருந்தால், இதனைச் சீக்கிரத்தில் சாதித்துக் கொடுக்க வேண்டும்" என்றான்.

இராஜாவின் வார்த்தைகளைக் கேட்ட முனிகுமாரன் மீண்டும் கூறுகின்றான். இராஜனே! நீங்கள் கூறுவது எவ்விதத்திலும் சாத்தியமில்லை. இருப்பினும் உங்களுக்கு நான் வாக்கு கொடுத்து விட்டதினால், அதனை எவ்வாறு மறுக்க முடியும்? யோகத்தினால் எனக்கு உண்டாகியிருக்கும் யோக சக்தியைப் பாருங்கள். மேலும், என்னுடைய குருவான இவர் இவ்வேளையில் பரம பாவனையாக அமைதி நிலையில் அமர்ந்திருப்பதால், அவரை வெளிப்புற முயற்சியினால் எழுப்ப முயற்சிப்பது கூடவே கூடாது.

ஆதலால், என்னுடைய சூக்ஷும யோக யுக்தியினால் இவரை மானசீகமாக உணர்ந்தெழும்படி செய்கின்றேன் என்று கூறியவாறு, தன் இந்திரியங்கள் யாவற்றையும் செயலற்ற நிலையில் ஒன்று சேர்த்துப் பிராணனிடத்தில் அபானனைக் கூட்டி, தன்னுடைய மனோ சக்தியினால், தங்கணமுனிவரின்

பிராணனுடன் ஒன்றாக இணைந்து தன் தந்தையான தங்கண முனிவரின் மனதிற்குள் புகுந்தான். அந்த விநாடியிலேயே சாந்தசீலரான தங்கணமுனிவர் அதை உணர்ந்தவராகி, தன் எதிரே தன்னை நமஸ்காரம் செய்துக்கொண்டு நின்றிருக்கும் இராஜனைப் பார்த்து, நடந்த அனைத்தையும் தன் யோக திருஷ்டியினால், அறிந்துக் கொண்டு, தன் மைந்தனிடம் பின்வருமாறு கூறுகின்றார்.

"குழந்தாய்! இதுப்போல, இனி தவறுகள் செய்யாதே!. விரோதம் என்பது, என்றுமே தவசிக்குக் கூடாது. அரசர்கள் உலகத்தின் நன்மைக்காக யாகங்கள் செய்வதை தடையின்றி நடக்க, நாமும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். யாகத்துக்கு இடையூறு செய்வது, அசுரர்களுடைய அற்ப சுபாவம் ஆகும். அது ஒருக்காலும் நம்மைப் போன்ற முற்றும் துறந்த முனிவர்களுக்கு வரக்கூடாது. நீ உடனடியாகச் சென்று, யாகக் குதிரையையும், அரசகுமாரர்களையும் நல்ல மனதுடன் இவரிடம் ஒப்படைத்து விடு. மேலும் அந்த யாகமானது காலதாமதமின்றி நடக்க வேண்டி இருப்பதினால், இவர் சீக்கிரம் இங்கிருந்து செல்ல வேண்டும்" என்றார்.

இவ்விதம் தன் தந்தை கூறிய உடனேயே முனிபுத்திரன் நொடியில் கண்ட மலைக்குள் புகுந்து யாகக் குதிரையையும், அரசகுமாரர்களையும் வெளியில் கொண்டுவந்து அவரிடத்தில்

சந்தோசத்துடன் ஒப்படைத்தான். அதன்பிறகு, மகாசேணன் யாகக் குதிரையுடன் அரச குமரர்களையும் நகரத்திற்கு அனுப்பி விட் , தங்கண முனிவரை துதி செய்து, கைகளைக் கூப்பியபடி, மிகவும் பணிவுடன், "பகவானே! குதிரையுடன் என் அண்ணனின் புதல்வர்கள் எப்படி இந்தக் கண்ட மலைக்குள் இருந்தார்கள்? அதை நான் அறிய விரும்புகின்றேன். அதனை தாங்கள் தயவு செய்து எனக்கு விளக்க வேண்டும்" என்றான்.

இவ்வாறு கேட்ட இராஜனைப் பார்த்து தங்கண முனிவரும், "இராஜனே! கேளும் கூறுகின்றேன். முன்னொரு காலத்தில் நான் அரசனாக இருந்து, கடல் சூழ்ந்த பகுதிகளை வெகுகாலங்களாக அரசாட்சி செய்துக்கொண்டு வந்தேன்.

அந்த மகாதேவனின் அனுக்கிரஹத்தால், ஸ்ரீ திரிபுரையான சர்வேஸ்வரியை உணர்ந்து, இந்த உலகத்தின் உண்மைத் தன்மையான நிலையாமையைக் கருதி, எனது புத்திரர்களிடம் என்னுடைய இராஜ்ஜியத்தை ஒப்படைத்துவிட்டு, இந்த அடர்ந்த வனத்திற்கு தவம் செய்ய வந்தேன். என்னுடன் சேர்ந்து, பதி விரதையான எனது மனைவியும் இந்த கானகம் வந்தாள். நாங்கள் இருவரும் இங்கு சில ஆண்டுகள் தவம் செய்ய ஆரம்பித்தோம். என் மனைவி சிறந்த தவயோகினி ஆவாள்.

ஒருநாள் எனது மனைவி அவளது சங்கல்பத்தினால், தன்னுடைய பாவனா பலத்தால், என்னுடன் உறவு கொண்டு, இந்தப் புதல்வனை பெற்றெடுத்தால். அதன்பிறகு, சமாதியில் இருந்த என்னை எழுப்பிப் புதல்வனை என் மடியில் வைத்து விட்டு, தன் பூத உடலைப் பிரித்துப் பஞ்சபூதங்களில் கலந்து விட்டாள். நானும் என் புதல்வனை என்னைப் போன்றே உத்தமமான யோக சித்திகளைப் பெறவைத்து, அவனைச் சிறந்த தவயோகியாக வளர்த்தேன்.

நான் அரசனாக இருந்ததை அறிந்த இந்த புதல்வன் தானும் அரசாள விரும்பி, என்னை வணங்கி என் அனுமதியை பெற்றுத் தன் பாவனா பலத்தால், இந்தக் கண்ட மலையில் கடல் சூழ்ந்த ஒரு இராஜ்ஜியத்தை உருவாக்கி, அதை ஆட்சி செய்துக் கொண்டு வருகின்றான். அவன் படைத்த அந்த மானசீகமான இராஜ்ஜியத்திற்குள்தான் இந்த இளவரசர்களையும், யாகக் குதிரைகளையும் கட்டி வைத்திருந்தான் என்று விளக்கினார்.

இவற்றைக் கேட்ட அரசன் "முனிவரே உங்களது வார்த்தைகள் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தருகின்றது. நான் அந்த மனோ இராஜ்ஜியத்தைப் பார்க்க விரும்புகின்றேன். எனக்கு தயவுசெய்து, அந்த மனோ உலகத்தைக் காட்டி அருள வேண்டும்." என வேண்டினான்.

இராஜனது ஆர்வத்தைக் கண்ட தங்கண முனிவரும் தன் மகனை அழைத்து, "மகனே! இவரை அழைத்துச் சென்று நீ உருவாக்கிய உலகைக் காட்டு" எனக் கூறிவிட்டு மீண்டும் சமாதியில் ஆழ்ந்தார். தன் தந்தையின் வார்த்தைகளை தட்டாத முனி புத்திரனும், "அரசே இந்த இராஜ்ஜியம் பாவனா பலத்தால் உண்டாக்கப்பட்டு இருப்பதினால், இதனுள் அனைத்துப் பகுதிகளுக்கும், இந்த பரு உடலுடன் சென்று அந்த உலகத்தை முழுமையாகக் காண முடியாது. உங்கள் உடலை இங்கேயே பத்திரமாகப் படுக்க வைத்துவிட்டு, தங்களுடைய மனோ உடலுடன் என்னுடன் கண்ட மலைக்குள் நுழையுங்கள் என்றான்."



இதைக் கேட்ட அரசன் முனியே! இந்த தேகத்தை இங்கேயே விட்டு விட்டு, மனோ தேகத்தில் எவ்வாறு நான் அங்கு வருவது? பலாத்காரமாக இந்த தேகத்தை நீக்க முயற்சித்து, இந்த தேகம் நாசத்தை அடைந்து விட்டால், என்ன ஆவது? என்ற குழப்பத்துடன் வினவினான்.

அரசனின் இந்த அறியாமை வார்த்தைகளைக் கேட்ட முனிபுத்திரன் சிரித்தவாறு, அரசே நீர் யோகம் அறியாதவராக இருப்பதினால், இவ்வாறு பயப்படுகின்றீர்கள்.

பரவாயில்லை, கண்களை மூடி அமைதியாகப் படுத்துக் கொள்ளுங்கள் என்ற முனிபுத்திரன் அரை நிமிடத்திற்குள்ளாக தன் யோக சக்தியினால், அந்த இராஜனை அவனது கண்ட மலைக்குள் அழைத்துச் சென்றான். அதன்பிறகு, இராஜனும் தன்னுணர்வு பெற்று, அந்த முனிபுத்திரனால், பலமாகப் பிடித்துக் கொள்ளப்பட்டவனாகி, மிகப்பெரிய ஒரு இராஜ்ஜியத்திற்குள் தான் இருப்பதைக் கண்டான்.

அவன் முனி புத்திரனின் கையைப் பிடித்தவாறே, அந்த உலகத்தைப் பார்த்து, மிகுந்த ஆச்சரியமடைந்தான். அங்கு சூரிய மண்டலம், சந்திர மண்டலம், நட்சத்திர மண்டலம், எல்லையற்ற ஆகாயம், கடல் சூழ்ந்த பூமி என ஒரு பேரண்டமே இருந்ததைப் பார்த்து மிகுந்த ஆச்சரியமுற்றான். மேலும், அந்த இராஜ்ஜியத்தில் சத்தியலோகத்தில் பிரம்மா, வைகுண்டத்தில் விஷ்ணு, கையிலாயத்தில் ருத்திரன் என முத்தொழிலைப் புரியும் கர்த்தாவாக முனிபுத்திரனே இருப்பதைக் கண்டு மிகுந்த ஆச்சரியம் அடைந்தான். அந்த முனிபுத்திரனின் தவ வலிமை யையும், யோக சக்தியையும், அவனது சித்து விளையாட்டையும் எண்ணி வியப்பில் ஆழ்ந்தான்.

அந்த உலகத்தில் நதிகளும், மரங்களும், காடுகளும், மலைகளும், பள்ளத்தாக்குகளும், இந்த பூமியில் இருப்பது போன்றே அனைத்தையும் கண்டான்.

இத்துடன் இந்திரன் முதலான தேவர்களையும், அசுரர்களையும், மனிதர்களையும், மற்றும் இராக்ஷதர்களையும் கண்டான். ஆச்சரியத்தில் வாயடைத்து பேசமுடியாமல். இருந்த இராஜனைப் பார்த்து முனிபுத்திரன் கூறுகின்றான்.

"இராஜனே! இந்த உலகத்தை நாம் இதுவரை சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்ததில், பல வருடங்கள் ஓடி விட்டன. இன்னும் ஒரு நாள் நாம் இங்கு தங்கியிருந்தோமானால், வெளி உலகத்தில் பல வருடங்கள் கடந்திருக்கும்" என்றான். இதைக் கேட்ட இராஜன் கலக்கமடைந்து, "ஐயனே! என்னை மீண்டும் அந்த பழைய உலகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்" என்று வேண்டினான்.

முனிபுத்திரனும் இராஜனது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு, அவனை அந்த கண்ட மலைக்குள் இருந்து, மீண்டும் தன் தந்தை வசித்துக் கொண்டிருக்கும் வெளி உலகத்திற்கு வந்து சேர்ந்தான்.

# அத்தியாயம் – 13

## கண்ட மலை தரிசனம்

வெளி உலகத்திற்கு வந்த முனிகுமாரன் மீண்டும் **மகாசேணன்** தனது தேகத்தை உணரும்படி செய்து, அவரை வெளி உலகத்தின் மாற்றத்தைக் காணவைத்தான்.

அரசன் மகாசேணனும் வெளி உலகத்தைக் கண்டு தன் கண்களையே தன்னால், நம்ப முடியாத அளவிற்கு, வெளி மாற்றங்களை பார்த்து ஆச்சரியமடைந்தான். புதிய மரம், செடி, கொடிகளும், சம வெளியாக நதி ஓடிக்கொண்டிருந்த இடத்தில் மலைகளும், மடுக்களும், நீர் அருவிகளும், விவசாயமும் செய்யக்கூடிய புதிய மக்களையும், புதிய நீர் நிலைகளையும் கண்டு வியப்படைந்தவனாக, முனி புத்திரனை நோக்கி, "மகா பாக்கியவானே! இது நாம் முன்பிருந்த இடம்போன்று தோன்ற வில்லையே, எல்லாம் மாறியிருக்கின்றதே! நாம் இப்போது எங்கே இருக்கின்றோம்? இதன் அற்புதத்தைக் கூற வேண்டும்" என்று மகாசேணன் கேட்க, அதற்கு முனிகுமாரன் பின்வருமாறு கூறுகின்றான்.

மன்னரே! கேளும், நாம் முன்பு நின்று கொண்டிருந்த அந்த உலகமே தற்போது இவ்வாறு உருமாறி இருக்கின்றது. அதாவது, நாம் இருவரும் அந்த கண்டமலைக்குள் சென்று விட்டு வர, பல ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டதினால், இந்த இடம் மாறுதலடைந்து, வேறு ஒரு இடம் போன்று காணப்படுகின்றது. உலகின் இயல்பே மாறும் தன்மை கொண்டதுதானே, நாம் கண்டமலையை சுற்றிப் பார்த்த, இந்த கால இடைவெளியில் பல மாற்றங்கள் நடந்தேறியுள்ளன.



நாம் கண்ட மலைக்குள் சென்று ஒரு நாள் கழிந்ததற்கு இங்கு **பனிரெண்டு ஆயிரம் வருடங்கள்** சென்று விட்டன. அதனால்தான், இந்த உலகம் மாறுபட்டு காட்சியளிக்கின்றது. இப்பொழுது, இந்த உலகத்தில் வேறான விவகாரங்களையும், வேறு மொழிகள் பேசுகின்றவர்களையும் பாரும். மேலும், பகவானான என் தந்தை தவம் செய்த இடத்தையும் பாருங்கள்.

அங்கு நின்றல்லவா? நீங்கள் அவரை துதி செய்தீர்கள். அப்போது நீர் பார்வையிட்ட கண்ட மலையை அங்கு பாரும். உங்களது அண்ணனின் வம்சத்தில் ஆயிரக்கணக்கான தலைமுறைகள் ஆட்சிக்கு வந்து போய்விட்டன. மேலும், அந்த வங்கதேசத்திலுள்ள **சுந்தரபுரி** என்ற உங்களது நகரமானது, இப்பொழுது வனமாகக் காட்சி அளிக்கின்றது.

அங்கு உமது தந்தையாரின் வம்சாவளி வந்த **வீரபாகு** என்ற பெயருடையவன் ஷிப்ரா நதிக்கரையில் உள்ள மாளவ நாட்டையும், வேறு சிலர் தாமிரபரணி நதிக்கரையில் திராவிட நாட்டையும் ஆண்டு வருகின்றனர். ஏற்கனவே நீங்கள் ஆண்ட தேசமோ, இப்பொழுது காடுகளாக உள்ளது. உலகத்தின் நிலையாமை இதுதான். எதுவும் நிலையானதல்ல.

இந்த உலகம் புதியதாக தோன்றக்காரணம், இங்கு நீடித்த காலங்கள் ஆகிவிட்டபடியால், மலைகளும், மடுக்களும், நதிகளும், இருப்பிடங்களும், கால மாற்றத்தினால், வேறு ஒரு மாற்றத்தில் காணப்படுகின்றன. அப்போதிருந்த மலைகள், இப்போது ஆழமான பள்ளத்தாக்குகளாகவும், அன்றைய பள்ளங்கள் இன்று மேடாகவும், அன்றைய வறண்ட நிலங்கள் இன்று வளமான பூமியாகவும், அன்று வளமாக இருந்தவைகள் எல்லாம், இன்று வறண்ட பாலைவனங்களாகவும், அன்று கடினமான பாறைகளாக இருந்த இடமெல்லாம், இன்று

அழகான சமவெளிகளாகவும் மாறியுள்ளன. இதனால், நதிகளின் ஓட்டமும் தடம்மாறி, இடம் மாறிக் காணப்படுகின்றன. மேலும், சில காலங்கள் மனிதர்கள் அதிகமாகவும், சில காலங்கள் விலங்குகள் அதிகமாகவும், சில காலங்களில் பறவை இனங்கள் அதிகமாகவும் என மாறி, மாறி வந்து போயிருகின்றன. ஆனால், இது நாம் முன்பிருந்த அந்த இடமே ஆகும் என்று முனிகுமாரன் கூறி முடித்தான்.

இதைக்கேட்ட அரசன் மிகுந்த மன வருத்தத்தினால், சோகத்தில் மூர்ச்சையடைந்தான். பிறகு, முனிபுத்திரனால், மூர்ச்சை தெளிவித்து எழுந்தவன் மிகுந்த துயரத்துடன் அழ ஆரம்பித்தான். தன் அண்ணனை நினைத்தும், அண்ணனது குமாரர்களான இளவரசர்களை நினைத்தும், தன் மனைவி மக்களை நினைத்தும் விம்மி, விம்மி அழத்தொடங்கினான். அதன்பிறகு உறவினர் ஒருவரை இழந்தாலே கவலையைத் தரும் இந்நிலையில், என் அண்ணன் முதற்கொண்டு பல வம்சங்களை இழந்து நிற்கின்ற, தன் பரிதாப நிலையை எண்ணி மிகுந்த துயரம் அடைந்தான்.

இதனைக்கண்ட முனிகுமாரன் "அரசனே! கவலை வேண்டாம். நீர் நிச்சயமாக புத்திசாலிதான். காரணம், புத்திசாலிகள் கடந்தவைகளை நினைத்துக் கவலைப்பட மாட்டார்கள்.

நீங்கள் சோகமாக இருக்க, இப்போது  தாங்கள் இழந்த இந்த உறவுகள் மட்டுமே காரணமானால், நீங்கள் பிறப்பதற்கு முன்பு இருந்த உங்கள் பாட்டன், முப்பாட்டன் முதலானவர்களை நினைத்தும், நீங்கள் கவலைப்பட வேண்டுமே? இதற்கு முன்பு அவர்களைப் பற்றி, ஏன் கவலைப் படவில்லை" என்றான்.

மேலும், உங்கள் தாய், தந்தை வழியில் வந்த உறவுகள் எல்லாம் உங்களுக்குச் சொந்தம் எனில், உங்கள் உடல் இந்த பூமியில் பிறக்கும் பொழுது, உங்களுடன் ஒட்டிப்பிறந்த குடற் புழுக்கள், பூச்சிகள், கண்ணிற்குத் தெரியாத கிருமிகள் முதற் கொண்டு அனைத்தும் உங்கள் சொந்தங்களாக அல்லவா இருக்க வேண்டும்? அவைகளை நினைத்து மட்டும் ஏன் கவலைப்படுவதில்ல? இதில் நீங்கள் யார்? என்றும், உங்களால் இழக்கப்பட்டவர்கள் யார்? என்றும் விசாரித்துப் பாரும். நீர் இந்த உடலா? அல்லது இந்த உடலுக்கு வேறானவரா?

நீங்கள் இந்த உடல் என்று கருதினால், உடலுடன் கூட இருக்கின்ற மூத்திரம், மலம், சளி, முடி, மற்றும் நகம் என்று அனைத்தும் சதா நாசமடைந்து வருகின்றன. அவைகள் உங்களுடன் சேர்ந்து இருந்தவைகள்தானே? அவைகளின் நாசம் மட்டும் உங்களுக்கு நாசமாகத் தெரியவில்லையா? உங்கள் உடலுக்கு வேறாக இருக்கின்ற, உறவுகளை மட்டும் எப்படி உங்கள் சொந்தங்கள் என்று அழைக்கின்றீர்கள்?

அப்படி உங்கள் சொந்த பந்தங்கள் இந்த உடல் எடுத்து வந்த பொழுது, அவர்களின் உடல் இந்த மண்ணிலிருந்து வந்த உணவை உட்கொண்டு வளர்ந்து வந்தது போலவே, மீண்டும் மண்ணிற்கே உணவாகப் போய்விட்டது. இதில் என்ன ஆச்சரியம் இருக்கின்றது?

ஆனால், அவர்கள் மண்ணினால் ஆன, தங்களது இந்த உடலை இழந்து விட்டாலும், அவர்களின் உடலை இயக்கிய இறை அம்சமான சேதனம் எப்பொழுதும் ஆகாயம் போன்று, அழியாமல் எங்கும் நிறைந்திருக்கின்றது. அந்த வகையில் நீர் இந்த உடல் அல்ல!. பின்பு யாரென்றால்? நீர் அந்த ஆகாயம் போன்று அழிவில்லாத **ஆத்மா** ஆவீர். அந்த ஆத்மாவை இந்த உடலாக பாவிப்பதினால், நீர் அழிவை நினைத்து வருத்தம் அடைகின்றீர்கள்.

எவ்வாறு, எனது ஆடை என்று சொல்லக்கூடிய உடை உங்கள் உடலிலிருந்து வேறாக இருப்பதால், அதை நீங்கள் என்னுடையது என்ற பாவனையில் கூறுகின்றீர்களே தவிர, அதை **"நான்"** என்று கூறுவதில்லை.

அதுப்போலவே, இந்த உடலும் உங்களுக்கு வேறாக இருப்பதினாலேயே, அவைகளை என்னுடைய கைகள், என்னுடைய கால்கள், என்னுடைய கண்கள், என்னுடைய

உடம்பு, என்னுடைய மனம், என்னுடைய பிராணன் என்று பிரித்து அறிகின்றீர்கள். அதாவது, இங்கு என்னுடையது என்பது எதுவுமே, முற்றிலும் எனக்கு வேறாக இருப்பதினாலேயே அவ்வாறு என்னால் அழைக்க முடிகின்றது எனும்போது, இப்பொழுது கூறுங்கள் நீங்கள் யார்? அந்த உடலா? பிராணனா? மனமா? கையா? காலா? எது உங்கள் உண்மை சொரூபம்?" என்று முனிகுமாரன் அரசனைப் பார்த்து கேட்டான்.

மீளமுடியாத, மிகுந்த துயரத்தில் ஆழ்ந்திருந்த அரசன், அந்த முனிகுமாரனிடம் இருந்து வந்த, இத்தகைய கேள்விக் கணைகளினால், ஆச்சரியம் அடைந்தவனாக, "பகவானே! நான் யாரென்று எவ்விதத்திலும், இதுவரை எனக்குத் தெரிய வில்லை. சாதாரண மனிதனாகிய என்னுடைய சுபாவத்தின் காரணமாக இவ்வாறு கலவைப்படுகின்றேனே தவிர, அதன் உண்மைக்காரணம் எனக்குப் புலப்படவில்லை.

ஆதலால், நான் தங்களையே சரண் அடைகின்றேன். பொதுவாக, நம்முடைய உறவுகளில், நாம் யாரை இழந்தாலும் கவலைப்படுவது இயல்புதானே!, இதற்குக்காரணம் அவர்கள் நம்முடன் ஒன்றாக இருந்தவர்கள் என்பதினால், அவர்களுடைய இழப்பை உடல் அளவில் மட்டுமே நாம் பார்க்கின்றோம், பொதுவாக, நாம் எல்லோரும் அந்த ஆத்மாவை அறிந்தவர்கள் அல்லர்.

மேலும், நாம் நமக்கு வேண்டிய உறவுகளைத் தவிர்த்து, நமக்கு வேறாக உள்ள மற்ற உறவுகளைக் கண்டு ஒரு நாளும் கவலைப்படுவதும் இல்லை. ஆகவே, தாங்கள் இதற்குக் காரணம் என்னவென்று எனக்கு எளிதாக எடுத்துக் கூறுங்கள்" என்று முனிபுத்திரனிடம் மகாசேணன் ஆர்வத்துடன் கேட்டான்.

"அரசனே! கவனமாகக் கேளும். மகாதேவியின் மாயையினால் மக்கள் அனைவரும் மோகமடைந்து தங்கள் உண்மைத்தன்மையை அறியாமல் எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கின்றனர். தங்கள் உண்மை சொரூபமான ஆத்ம தத்துவத்தை அறிந்துக் கொள்ளாத வரையிலும், அவர்களிடத்தில் அறியாமையும், சோகமும் எப்பொழுதும் குடிகொண்டு இருக்கும். எவ்வாறு, கனவு காண்பவன் கனவில் வருகின்ற துயரங்களை நினைத்து, அதை உண்மையெனக் கருதி கவலைப்படுகின்றான். அதுவே, அவனது கனவு முடிந்து, தூக்கம் கலைந்த பின்புதான், கட்டிலில் படுத்திருப்பதைக் கண்டு, அவன் கவலைப்பட்டது வீணானது என்று அறிகிறான்.

அதுப்போலவே, ஒரு மாயாஜால வித்தைக்காரனின் மாயையினால் உருவாகிய பாம்பைக்கண்டு, பயப்படுகிறவன் பின்னர், இது மாய வித்தைதான் என்று தெரியவரும் பொழுது, பயத்திலிருந்து விடுபடுகின்றான். அதாவது, இந்த இரண்டு நிலைகளிலும் கவலைப்பட்டு, பயந்தவன் அதன் உண்மைத்

தன்மை தெரிந்ததும், அதிலிருந்து விடுபட்டு, எப்போதும் போல இயல்பாக இன்பத்துடன் இருப்பதைப்போன்று, ஆத்மாவை அறிந்தவன் இது மாயையின் விளையாட்டு எனத் தெளிந்து, ஒரு நாளும் வருந்துவதில்லை. ஆகையால், இராஜனே! நீர் ஆத்ம தத்துவத்தை உணர்ந்து, மாயையைத் தாண்டி, ஆத்மானு பவத்தில் எப்பொழுதும் திளைத்து, மோகத்தால் வரும் சோகத்தை ஒழிப்பீராக! என்றான்.

மகாசேணன் முனிபுத்திரரிடம் "பகவானே! தாங்கள் கூறுவது எனக்கு ஏற்புடையதாக இல்லை. இதை ஒரு விபரீத சிந்தனையாகவே கருதுகின்றேன். கனவு மற்றும் மாயா ஜாலங்களில் தோன்றுபவைகள் எல்லாம் உண்மையான இருப்பு அற்றவைகள். அவைகள், சில நிமிடங்களே தோன்றி மறைபவைகள். ஆனால், நாம் காணும் இந்த நினைவு உலகில் எல்லாமே சத்தியமாகவும், நிலைத்து இருப்பதாகவும் உள்ளது. இதை எப்படிக் கனவுடன் ஒப்பிடமுடியும்?" என்று கூறினான்.

இதற்கு அதிபுத்திமானான முனிபுத்திரன் "மன்னரே கேளும், கனவே உண்மையில்லை! அதுவே ஒரு மயக்கம். அந்தக் கனவில் பாம்பைக் கண்டு பயப்படுவது இன்னொரு மதி மயக்கம். அதுப்போல, பார்க்கப்படும் பொருள்களைப் பார்ப்பவனிலிருந்து வேறாக எண்ணுவதும், அதை உண்மை என்று கருதுவதும் மன மயக்கமே ஆகும்".

உலகைக் கண்டு மயங்கிய நிலையில் இருப்பவன், கனவில் கண்ட காட்சிகளை பொய் என்று கூறுவதும் இன்னொரு மயக்கமே. கனவில் காணுகின்ற மரம் வருகின்ற வழிப்போக்கனுக்கு நிழலைத் தருவதில்லையா? கனவில் வருகின்ற மனிதர்களுக்கு உணவைக் கொடுத்து திருப்தி அடையச் செய்வதில்லையா? ஆகவே, கனவு காணும் வரை அது உண்மையானதாகவும், நிலையானதாகவும் உள்ளது. அதனுடைய நிலைத்தன்மை பாதிக்கப்படுவதில்லை. ஆனால், ஒருவன் கனவிலிருந்து விழித்து எழுந்தவுடன், விழிப்பு நிலையில், கண்ட கனவுகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு, பாதிப்பை அடைகின்றன.

அதுப்போலவே, ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பவனுக்கு விழிப்பு நிலையின் நனவுலகம் துண்டிக்கப்பட்டு, தான் யார்? எங்கிருக்கின்றோம்? என்பதை அறிய முடியாமலும், தன் உறவுகளையும், நண்பர்களையும் கூட தெரியாமல், இந்த நனவு உலகம் பாதிக்கப்படுகின்றதே! அதாவது, ஆழ்ந்த தூக்கத்தில் இந்த உலகம் இருப்பற்றதாகவே இருக்கின்றது. இதிலிருந்து கனவில் பார்ப்பதற்கும், விழித்துக் கொண்டு பார்ப்பதற்கும் இருப்பில் எந்த வேறுபாடும் இல்லை.

தூக்கத்தில் ஒடுங்கியிருந்த உலகம் விழித்தவுடன் மீண்டும் தோன்றுகின்றது. ஆனால், கனவில் முதல் நாள்

பார்த்த அதே கனவு, மீண்டும் அடுத்த நாள் விடுபட்ட இடத்திலிருந்து தோன்றுவதில்லையே என்ற வாதத்தை முன் வைத்தாலும், மறுநாள் விழித்தவுடன் மீண்டும் தோன்றும் உலகம், முதல் நாள் இரவு தூங்கச் செல்லும் முன்பு பார்த்து விட்டு, தூங்கிய அதே உலகம் இல்லை என்பதுவும் உண்மை.

இந்த உலகம் நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கின்றது. நாம் காணும் மரம், செடி, கொடி, நீர், நதி எல்லாம் மாறிக்கொண்டே இருக்கின்றது. நதியில் நாம் மூழ்கும்போது இருந்த நீர், நாம் எழும்போது இருப்பதில்லை. முன்னது கடந்து, பின்னது புதிதாக வந்த நீராகவே இருக்கின்றது. அதுப்போலவே, மலைகளும், கடல்களும் கணத்திற்கு கணம் மாறிக்கொண்டே இருக்கின்றது. அடுத்த நொடிக்கு, தொடர்ச்சியாக அவைகள் உள்ளது என்று கூறும் நிலையில், எந்தப் பொருளும் நனவிலும், கனவிலும் உண்மையாகவே இல்லை. எனவே, மன்னரே! நுண்ணிய அறிவினால் தீர விசாரித்துப் பார்த்தால், கனவிலும், நனவிலும் தொடர்ச்சியில் ஏற்படும் துண்டிப்பு இரண்டிலும் சமமாகவே உள்ளது.

காரண, காரிய நிலையில் தொடர்ச்சி இருப்பதாக வாதிடலாம். உதாரணமாக, காரியமான பானை உருவாவதற்கு காரணமாக மண் இருந்தது. பானை உண்டான பின்பும், அதே மண் இருக்கின்றது. இதில் தொடர்ச்சி பாதிக்கப்படவில்லை

என்பதை சுட்டிக்காட்டலாம். உண்மையில், கனவில் தோன்றிய அனைத்தும், விழிப்பு நிலை வந்தவுடன், போதிய ஆதாரம் இன்மையினால் அது **பொய்** என்று அறியப்படுகின்றது. ஆனால், விழிப்புநிலையில் தோன்றுகின்ற அனைத்தும் நிலையானது போல இருக்கின்றன. அவைகளை பொய் என்று கூறுவதற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஆதாரம் இருந்தால், அவைகள் கனவு போன்று மறைய வேண்டும், ஆனால், விழிப்பு நிலையில் அப்படி இல்லையே என்று சிலர் வாதிடலாம்.

இதை, எப்படிப் புரிந்து கொள்வது என்றால், கனவில் கண்டது பொய் என்று எப்பொழுது அறியப்பட்டது? அதாவது, விழித்து எழுந்தவுடன்தானே! மேலும், கனவு காணுகின்றவரை கனவுக்காட்சிகள் அந்நிலையில் உண்மையாகவே உள்ளது போன்று, நினைவில் காணுகின்ற நினைவுக்காட்சிகளும். அந்நிலையில் உண்மையாகவே தோன்றினாலும், அதுவும் ஆழ்ந்த உறக்கத்தில் ஒன்றுமில்லாமல் போனதையும் நம்மால் அறிய முடிகின்றது அல்லவா?

அதாவது, விழிப்பு நிலையில் காணுகின்ற உலகம், கனவிலும், ஆழ்ந்த உறக்கத்திலும் ஒன்றுமில்லாமல் போனது? அவைகளின் இருப்பை அப்பொழுது அறிய முடியவில்லை. சில குறிப்பிட்ட காலம் அந்த உலகம் இல்லை அல்லவா?

இதிலிருந்து, *"கனவிலிருந்து விழிப்படைந்த ஒருவன் அதைப் பொய் என்று கருதுவதுபோன்று, அறியாமையிலிருந்து விழிப்படைந்த ஒருவன் **நினைவைப் பொய்** என்று கருதுவான்."*

அதாவது, இந்த உலகின் இருப்புத்தன்மை விழிப்பு நிலையில் எவ்வாறு உணரப்பட்டதோ? அவ்வாறே கனவு நிலையில் உணரப்பட்டது. ஆனால், கனவை, அந்த கனவு இருக்கின்றவரை உண்மை என்று கருதுவதுப் போன்றே, இந்த நினைவை, நினைவு இருக்கின்றவரை உண்மை என்று கருத முடிகின்றது. ஆனால், **கனவு, நினைவு** ஆகிய இரண்டும் ஒன்றுபோலவே உள்ளன. ஆகவே, நம்மைப் பொருத்தவரை நனவுலகம், கனவுலகத்திலிருந்து வேறுபட்டதல்ல.

கனவு உலகத்தில் ஏற்படுகின்ற இழப்புகளைக் கண்டு, நனவு உலகத்தில் யாரும் வருந்துவதில்லை. அதுப்போலவே, நனவு உலகத்தில் ஏற்படுகின்ற இழப்புகளைக் கண்டு, ஆழ்ந்த உறக்கத்தில் யாரும் வருந்துவதில்லை. இதிலிருந்து மூன்று அவஸ்தைகளான **கனவு, விழிப்பு, உறக்கம்** என்ற இவைகள் ஒன்றுக்கு ஒன்று தொடர்ச்சி இருப்பதில்லை என்பதிலிருந்து, இவைகள் மூன்றுமே **மனதின் பாவனை** என்பது புரிகின்றது அல்லவா?

இதில், கால, தேசம் மாறுபாடுகள் இருப்பினும், காணும் காட்சியில் அவைகள் பொய் தோற்றம் என்பதை அறிவாயாக!, அதாவது, கனவில் கனவு உலகம் சில நிமிடங்களும், நனவில் நனவு உலகம் சில மணி நேரங்களும் தோன்றினாலும், ஆழ்ந்த உறக்கத்தில் எத்தனை மணி நேரம், இந்த இரு உலகங்களும் அறிய முடியாமல் இருந்தது என்பதை யாராலும் கூற முடியாது என்பதிலிருந்து, **இந்த உலகம் உண்மையிலேயே இல்லை!** அது மனதின் வெறும் பாவனைதான் என்று அறிவீர்களாக! என முனிபுத்திரன் கூறினான்.

மேலும், இந்த கண்டமலை அளவில் சிறியதுதான், ஆனால், அதன் உள்ளே பிரமாண்டமான பல அண்டங்களை கண்டு ஆச்சரியமடைந்தீர்கள். அது கனவு உலகமா? அல்லது நனவு உலகமா? அங்கு ஒரு நாள் என்பது இங்கு பனிரெண்டு ஆயிரம் ஆண்டுகள் என்பதிலிருந்து, காலமும் (Time), தேசமும் (Space) காணுகின்ற காட்சியில் பொய் என்பதை உங்களால் அறிய முடியவில்லையா?

என்னுடைய மனோ பாவனையினாலேயே நீர் பார்த்த அந்த அகண்ட உலகம் உருவானது. அதுப்போலவே, நனவு உலகமும் நம் மனதின் பாவனையினாலேயே உருவானது. அத்தகைய மன பாவனையை அகற்றி விட்டால், கனவு உலகம் போன்று, இந்த நனவு உலகமும் மறைந்து விடும்.

ஆகவே, இந்த நனவு உலகமும், கனவு உலகம் போன்றதுதான் என்று அறிந்து, மனக் கவலையை விட்டு விடுங்கள்" என்று கூறி முடித்தான்.

இதை எப்படி கனவுப் போல விடமுடியும் என்றால், *"கண்ணாடியில் பிரதிபிம்பிக்கின்ற பிம்பத்திற்கு ஆதாரமாகத் தன்* ***உருவம்*** *இருப்பதைப் போன்று, மனதில் பிரதிபிம்பிக்கின்ற கனவு, நனவு உலகத்திற்கு ஆதாரமாக* ***ஆன்மா*** *இருக்கின்றது".*

**"கண்ணாடியை அறிந்தவன் அதில் பிரகாசிக்கும் பிரதி பிம்பத்தைப் பொய் என்று அறிவதுப்போல, ஆன்மாவை அறிந்தவன் அதில் பிரகாசிக்கும் உலகத்தைப் பொய் என்று அறிந்துக் கொள்வான்".**

இவ்வாறு, கனவிலும், நனவிலும், உறக்கத்திலும் தோன்றி மறையும், இந்த உலகின் நிலையாமையையும், இல்லாமையையும், அறிந்துக்கொண்டு, பொய்யான உலகத்தில், பொய்யான உறவுகளுக்காக, பொய்யான சுக, துக்கங்களை அடையும் மனதின் அறியாமையை உணர்ந்து, மெய்யான அறிவே (ஆத்மாவே) அவைகள் அனைத்திற்கும் ஆதாரம் என்று அறிய வேண்டும் என அரசனுக்கு முனிபுத்திரன் அறிவுரை கூறி முடித்தான்.

# அத்தியாயம் – 14

## பாவனையின் பலன்

அரசன் முனிபுத்திரனின் அறிவுரைகளைக் கேட்டு, ஆழ்ந்த சுய விசாரத்தினால், உண்மையை உணர்ந்துக் கொண்டு, தன் சோகத்தை விடுத்து, முனிபுத்திரனைப் பார்த்து பின்வருமாறு கேட்கத் தொடங்கினான்.

"மகா ஞானியே! தாங்கள் நித்திய, அநித்திய வஸ்து விவேகத்தைக் கொண்டவர் என்பதில், எனக்கு சிறிதும் சந்தேகம் இல்லை. மேலும், தங்களுக்குத் தெரியாதது என்று ஒன்றுமில்லை. நான் கேட்கின்ற சில சந்தேகங்களுக்கு மட்டும் தாங்கள் கிருபையுடன் விடையருள வேண்டும்.

யாவும் மனதின் பாவனையினால் ஏற்பட்டவைகள் என்று கூறினீர்கள். அது எவ்வாறு? அப்படி இருக்க முடியும்? தாங்கள் கூறியதைக் கேட்டு, நான் தற்போது பாவனைகள் பல செய்தும் அவ்விதமாக வெளியில் எதுவும் காணப்படவில்லையே.

ஆனால், தாங்களோ பாவனையின் சக்தியினால் அண்ட சராரசரங்களைக் கொண்ட புதிய உலகத்தை பாவித்து, அதில் ஆட்சி செய்து வந்தீர்கள்! மேலும், காலமும், தேசமும் ஒரே காலத்தில், ஒரே இடத்தில் பலவிதமான மாறுபாட்டில் உள்ளன. இவற்றில் எது உண்மை? எது பொய்? இதனை இன்னும் சற்று விளக்கமாகக் கூறுங்கள்" என்றான்.

## குறிப்பு:–

* மன உடல், பரு உடல் மாற்றம் பெறுவது எவ்வாறு?

---

* (காலம், தேசம் என்பது, நாம் வசிக்கும் பூமியில் மட்டுமே நம்மால் உணரப்படுகின்றது. இங்கு பகலாக இருக்கின்ற காலம், மற்றொரு தேசத்தில் இரவாக இருக்கின்றது. நாம் இங்கும், அங்கும் பயணிக்கி ற பொழுது, அதில் சில மணி நேரங்கள் நடைமுறையில் காணாமல் போகின்றது.

இதுப்போல அண்டவெளியிலும் பல ஒளியாண்டுகள் (ராக்கெட்டின் துணையுடன்) பயணம் செய்யும் பொழுது கால, தேசத்தை கணக்கிட முடியாமல் போகின்றது.

---

பொதுவாக, **இந்தக் காலம், தேசம்** என்பது, சூரியனை மையமாக வைத்து, பூமியைப் பொருத்த வரை மட்டுமே உண்மையில் கணக்கிடப்படுகின்றது.

அதுவே, இந்த பூமியை மையமாகக் கொண்ட சூரியனுக்கு அப்பாற்பட்ட அண்ட வெளியில் காலமும், தேசமும் முடியாத ஒன்று.

அவ்வாறே, நம்முடைய புறக் கண்களுக்குப் புலப்படாத **சூக்குமமனம்** என்பது, நம் சாதாரண கண்களுக்குப் புலப்படக்கூடிய ஸ்தூல நிலையில், பரு உடலில் மனிதனாகப் பிறந்து, இந்த பூமியில் கால, தேச வரையறைக்குள் வந்து, அந்த பௌதீக உடல் அழிவுக்கு உட்பட்டு, மரணத்திற்குப்பிறகு, மீண்டும் அந்த சூக்கும மனம், அந்த பயனற்ற உடலைவிட்டு வெளிக்கிளம்பி, பல ஆண்டுகள் அண்டவெளியில் மீண்டும் கால, தேசமற்ற நிலையிலிருந்து விட்டு, அதன்பிறகு மீண்டும் பஞ்சபூதங்களின் சேர்க்கையால், ஸ்தூல உடல் எனும் பௌதீக உடல் (கண்ணிற்கு தெரிகின்ற உடல்) கொண்டு, இந்த பூமிக்கு வருகின்றது எனும், இந்த ஆழமான உண்மையை சற்று சிந்தித்துப் பார்க்கவும்.

அரசனின் இந்த சந்தேகத்தை கேட்ட முனிகுமாரன் "மன்னரே! சங்கற்பமே பாவனை என்று கூறப்படும். அந்த பாவனையானது சித்தம், அசித்தம் என்று இருவகைப்படும். இதில் **சித்தம்** எனப்படுவது, வெளி விசயங்களில் கலக்கப்படாத மனதினைக் கொண்டது. தேவையற்ற எண்ணங்களை விடுத்து, ஒரே சிந்தனையில் மனம் இருப்பதை **சுத்த சங்கல்பம்** எனலாம். இந்த சுத்த மனத்தையே **சித்** என்று அறிந்துக் கொள்.

அதாவது, சிந்தனைகள் வெளிமுகமாக இருந்தால், அதை **மனம்** என்றும், சிந்தனை ஒன்றாகி உள்முகமாக இருந்தால், அதுவே, **அறிவு** (சித்) என்று  புரிந்துகொள்!.

நான்முக பிரம்மாவின் சித்த பாவனையினால், இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்டது. சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தை உண்மையான பாவனையினால் பார்க்கின்ற அனைவருக்கும் திடமாக, அது இருப்பதுப்போன்று தோன்றுகின்றது. இந்த உலகம் சிருஷ்டிக்கப்பட்ட பிரம்மாவின் புத்தியில் சத்திய சங்கல்பம் இருப்பதினால், சிருஷ்டிக்கப்பட்ட உலகம் பாவனை என்பதை, அவரால் அறிய முடிகின்றது. ஆனால், உன்னுடைய புத்தியில் சத்திய சங்கல்பம் இல்லாததினால், சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தை பாவனையாக பார்க்க இயலாமல், உண்மையாக கருதுகின்ற நிலை உருவாகி விடுகின்றது.

வெளி உலகத்தை உன் மனதினால் பலவிதமாக கற்பிக்கப்பட்டு, அவைகளை உண்மையென்று கருதுகின்ற வரை, உன்னுடைய பாவனா சக்தி கைக்கூடாது. ஒரே ஆத்ம நிஷ்டையில் மனம் இருந்தால், உன்னுடைய பாவனை சக்தி கைக்கூடி, நினைத்த **சங்கல்பம்** செயல்பட ஆரம்பிக்கும்.

மனதின் பாவனையின் பலன் எவ்விதம் என்றால், அது பலவாறாக உலகத்தில் கையாளப்படுகின்றது. உதாரணமாக, சிலர் பிறக்கும் பொழுதும், சிலர் மந்திரங்களை பிரயோகித்தும், சிலர் பெற்ற வரத்தினாலும், சிலர் யோகத்தினாலும், சிலர் அமிர்தத்தினாலும் பாவிக்கும் திறனைப் பெற்றுப் பலனை அடைகின்றார்கள். அதாவது, பிறப்பால் பிரம்மாவும், மந்திரத்தால் மாந்திரீக மந்திரவாதிகளும், பெற்ற வரத்தால் தவசிகளும், யோகத்தால் யோகிகளும், அமிர்தத்தால் தேவர்களும் பாவனைத் திறனைப் பெறுகின்றார்கள்.

பாவனையை சாதிப்பது எவ்வாறு எனில், மனதின் இருமைகளால் சூழப்பட்ட எந்த எண்ணங்களும் அற்று, இருப்பது, அந்த ஏக அறிவு மட்டுமே என்றும், அதன் அறிவு ஒளிப்பிரகாசம், மனதில்பட்டு, பிரகாசிப்பதினால், மனம் மனித உடலில் உள்ள புலன்களின் வாயிலாக, இந்த உலகத்தில் ஒவ்வொன்றையும், உருவாக்க முடிகின்றது என்பதையும் அறிந்து, அவ்வாறு உண்டாகும் அனைத்து நாம, ரூபங்களும்,

அந்த தூய அறிவுக்கே உரித்தானது என்ற புரிதலினால், மனதைக் கையாளுவது ஆகும். அதாவது, அந்த தூய அறிவு இருப்பதினாலேயே, மனதிற்கு பாவனை சித்தியாகின்றது.

அந்த ஏக அறிவை அறிந்து, அதன் வெளிப்பாடுதான் எல்லாமே என, மனதிற்கு பயிற்சியை பல காலங்கள் பழக்கி வரவேண்டும். அதன் மூலமாக, இந்த பாவனா சக்தியை அடைந்து விட்ட ஒருவன், தான் விரும்  னால் ஒழிய, தன்னிடம் எண்ணங்கள் தோன்றாத நிலைக்கு உயர்ந்து இருப்பான். அதுவே, பாவனா சித்தியானதற்கு அடையாளம் ஆகும்.

பலவிதமாக ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்களினால், உமது பாவனையானது பயன்படாமல் போகின்றது. தாங்கள் எதையாவது பாவனை மூலமாக சிருஷ்டிக்க விரும்பினால், இந்த சாதனையை தொடர்ந்து பழகி வரவேண்டும். பலருக்கும் பலவாக பாவனை செய்வதே, அவர்கள் இயல்பாக உள்ளது. ஆனால், இவர்கள் இந்த உலகின் உண்மைத் தன்மையை அறியாததால், இந்த உலகம் அவர்களுக்கு உண்மையாகவும், அற்புதமாகவும் தோன்றுகின்றது".

"கேளுங்கள் இராஜனே! தேச, காலங்கள் இருவிதமாக இருப்பதைக் கூறுகின்றேன். இருமையே உலகெங்கும்

நிலவுகின்றது. சூரிய ஒளி ஆந்தைக்கு இருளாகவும், மற்றவர்களுக்கு பிரகாசமான வெளிச்சமாகவும் உள்ளது.

அவ்வாறே, புழு, பூச்சிகள், மிருகங்கள், பறவைகள் மற்றும் மனிதர்கள் போன்ற எல்லாமே, நீரில் மூழ்கினால் மூச்சு விட முடியாமல் மிகவும் சிரமமாகப் போகின்றது. அதுவே மீன்களுக்கு நீரில் இருந்தால் மட்டுமே மூச்சு விட முடிகின்றது. மேலும், நெருப்பு மனிதர்களுக்கு சுடுகின்றது. ஆனால், அந்த நெருப்பே தித்திரி பறவைக்கு உணவாக உட்கொள்ளப் படுகின்றது. இவ்விதமே எல்லாவிதமான உலக பாவங்களும் இருமைகள் பொருந்தியதாக இருக்கின்றன.

இந்திரியங்களால் அறியக்கூடிய மற்றும் அறிய முடியாத இடங்களிலும்கூட, இந்த இருமைகள் காணப்படுகின்றது. ஒன்றுக்கொன்று எதிரான இத்தகைய இருமைத் தன்மைகள் ஆயிரக்கணக்கில் உள்ளது. இவைகளை அறிய ஒரு யுக்தி கூறுகின்றேன். ஒரு மனதாகக் கவனமாக கேளும்.

பொதுவாக, நாம் காண்கின்ற காட்சிகள் அனைத்தும், நம்மிடமுள்ள புறக் கண்களினால் மட்டுமே ஆகும். ஆகவே, நம்மிடம் இருக்கும் பார்வையின்றி பார்க்கப்படும் பொருள்கள் எதுவும் இங்கு இல்லை. உதாரணமாக, காமாலைக் கண் உடையவனுக்கு, அவன் காண்கின்ற காட்சிகள் அனைத்தும்

மஞ்சள் நிறமாகத் தோன்றுவதும், அவ்வாறே, கண்புரை வந்தவனுக்கு காட்சிகளில் காண்பவைகள் எல்லாமே இரண்டு, இரண்டாகத் தெளிவற்று தெரிவதும் என இவைகள் எல்லாமே கண்களின் கோளாறு காரணமாக, காட்சிகளில் வேறுபாடுகள் உண்டாகின்றன. மேலும், கிழக்குச் சமுத்திரத்தின் மத்தியில் காரண்டத் தீவில் வசிப்பவர்களுக்கு, எப்பொழுதும் காட்சிகள் எல்லாமே இரத்தச் சிவப்பு வர்ணத்தில் உள்ளது.

இதுப்போலவே, ரமணகத்தீவில் வசிக்கின்ற மக்களுக்கு காணுகின்ற காட்சிகள் யாவும் அவர்களுக்கு தலைகீழாகவே காட்சியளிக்கின்றது. இவ்வாறு, அவரவர்களின் கண்களின் தகுதிக்கு ஏற்றவாறு, காட்சிகளைக் காண முடிகின்றது.


அதாவது, அவரவர்களின் கண்கள் எப்படியோ? அதுப்போன்றே அவரவர்களின் காட்சிகளும் காணப்படும். அதுப்போல, அவரவர்களின் எண்ணங்கள் எப்படியோ? அதுப்போன்றே அவரவர்களின் மனமும் காணப்படும். எனவே, வாசனைகளும், எண்ணங்களும் நமக்கு வெளியில் இல்லை. அதுப்போலவே, இந்த காலமும், தேசமும் நமக்கு வெளியில் இல்லை. இவைகள் எல்லாம் நம் மனதில்தான் உள்ளது. இராஜனே இன்னும் கேளும்! ஒரு சித்திரம் வரைவதற்கு சுவர் ஆதாரமாக உள்ளதுப் போன்று, உலகம் தோன்றுவதற்கு சித் ஆதாரமாக உள்ளது.

இந்த சித்தை அறிவதற்கு "**வெளி**" என்ற ஆகாசத்தை உதாரணமாகக் கொள்ளலாம். வெளி என்பது, இந்த உடலைக்கொண்டு, **உள் – வெளி** என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. காணுகின்ற பொருளும், இந்த உலகமும், உடலுக்கு அந்நியமாகத் தோன்றுவதால், வெளியில் உள்ளதாக நினைக்கின்றோம். அனால், இங்கு கூறப்படுகின்ற "**வெளி**" (Space) அது மட்டுமே இருக்கின்றது. அதனால் இந்த உடலும், இந்த உடலைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற பூமியும், மற்ற அண்ட சராசரங்களும் இந்த **வெட்டவெளி** – யில்தான் இருக்கின்றன.

அதாவது, "**இருளில் இருக்கின்ற பொருட்கள் எல்லாமே, சூரியப்பிரகாசத்தின் வெளிச்சத்திற்குள்ளேயே காட்சியாவதுப் போன்று, வெட்டவெளியில் இருக்கின்ற உலகங்கள் எல்லாமே, அறிவுப்பிரகாசத்தின் வெளிச்சத்திற்குள்ளேயே காட்சியாகிறது**".

அதாவது, காண்பவனுக்குள்ளேயே, காணுகின்ற இந்த உலகம் உள்ளது. அதுவே, உண்மை. அதாவது **சித்** என்ற சிதாகாசம் மட்டுமே பூரணமாக இருப்பதினால், அதற்கு வேறாகப் படைக்கப்பட்ட சிருஷ்டி இருப்பதாகத் தோன்றுவது, சித்த விருத்தியினால் உண்டாகின்ற **பாவனை** மட்டுமே ஆகும்.

அதாவது, மாறுபாடுகள் ஏதுமற்ற அந்த சித்திடம், மாற்ற மடைகின்ற இந்த உலகங்கள் எவ்வாறு உருவாக முடியும்? என்றால், **"கண்ணாடிக்குள்ளேயே பிம்பம் பிரதிபிம்பிப்பது போன்றே, இந்த சித்தானது தனக்குள்ளேயே இந்த 'வெளி' இருப்பதை விளக்குகின்றது"**.




எல்லாத் தோற்றங்களும் இதை அடிப்படையாகக் கொண்டு தோன்றுவதால், இதுவே முதலும், முடிவுமான தோற்றம் ஆகும். இந்த வெளியையே (அவித்தை) மாயை எனப்படும். இந்த வெளியின் தோற்றத்தை உபநிஷதங்கள் **"மூல வித்தை"** என்கின்றன.

சுவரில்லாமல் சித்திரம் இல்லை. அதுப்போல, வெளியில்லாமல் இந்த உலகம் இல்லை. வரையப்பட்ட சித்திரத்திற்கு சுவர் ஆதாரமாக இருப்பதைப் போன்று, உலகம் என்ற சித்திரத்திற்கு ஆதாரமாக, வெளி இருப்பதினால், அதனை **மூலவித்தை** என்று அழைப்பது பொருத்தமாக இருக்கின்றது.

விளக்கப்பட்ட பொருளுக்கு இன்னொன்றை விளக்கும் தன்மை இருக்க முடியாது. ஒன்றே கர்த்தாவாகவும், கர்மமாகவும் செயல்பட முடியாது. அதைப்போலவே, ஒரு பொருளை காண்பதில், ஒளி, காணும் பொருள், காண்பவன் என மூன்று நிலைகள் உள்ளன. அதாவது, **பொருளும்**, அவைகளைக் **காண்பவனும்** இருந்தாலும், இந்த இரண்டையும் இணைக்கின்ற மூன்றாவதான **ஒளி** அங்கு தேவை. ஒளி இல்லையென்றால், **காண்பவனும், காணப்படும் பொருளும்** இருந்து பயன் இல்லை.

ஆனால், சித்தைப் பொருத்தவரை அப்படி மூன்றாவதாக ஒரு அம்சம் தேவையில்லை. ஒன்றேயாகிய காண்பவனே சுய ஒளியுடைய சுதந்திரன், பூரணன் என்பதினால், **காண்பவன், காட்சி, காணப்படும் பொருள்** என்ற பலவாக இருக்கின்றான். இவ்விதம் சர்வப் பிரபஞ்சத்தையும் தன்னுள்ளேயே வைத்துக் கொண்டிருக்கும் பாவ ரூபமானது, தனக்குள்ளும், எங்கும், எப்பொழுதும் சுதந்திரமாக விளங்குகின்றது.

இதையே **பராசித்** என்றும், **திரிபுரை** என்றும், **பரமேஸ்வரி** என்றும், **பேரறிவு** என்றும், **ஆன்மா** என்றும் பலவாகக் கூறப்படுகின்றது. இதனையே, வேதம் அறிந்தவர்கள் **பிரஹ்மம்** என்றும், சிவனை வழிபடுபவர்கள் **சிவன்** என்றும், வைஷ்ணவர்கள் **விஷ்ணு** என்றும், சாக்தர்கள் **சக்தி** என்றும், காணாபத்தியத்தைச் சார்ந்தவர்கள் **கணபதி** என்றும், கௌமாரத்தைச் சேர்ந்தவர்கள் **கந்தன்** என்றும் பலவாறாக உருவங்களுக்குள் வடித்து வழிபடுகின்றார்கள்.

சர்வ ஜகத்தும் அந்தச் **சித்** சக்தியினால், கண்ணாடியில் தெரிகின்ற பிரதிபிம்பம் போலவும், குளத்தில் உள்ள நீரில் தெரிகின்ற ஆகாஷத்தைப் போலவும், வியாபிக்கப்பட்டுள்ளது. கண்ணாடியில் பலவாறான உருவங்கள் தோன்றிக் கொண்டிருந்தாலும், அந்த உருவங்களினால் கண்ணாடி சிறிதும் பாதிக்கப்படாததுப் போன்று, இந்த விசித்திரமான உலகமும், பலவாறாகத் தோன்றிக் கொண்டிருந்தாலும், அந்த உருவங்களால், வெளி சிறிதும் பாதிக்கப்படாது.

உருவங்கள் காரியமாற்ற, உபாதியான **கண்ணாடி** எப்படிக் காரணமாக இருக்கின்றதோ? அதுப்போலவே, இந்த உலக உருவங்கள் காரியமாற்ற, உபாதியான **வெளி** காரணமாக இருக்கி–ன்றது".

"இராஜனே! ஆகாசம் ஒன்றுமற்ற சூன்ய வடிவாக இருந்தாலும், இரண்டாவதாக இந்த பிரபஞ்ச உலகிற்கு இடம் கொடுத்துள்ளது. ஆனால், ஏக ரூபமான சித்தோ இருமைக்கு இடங்கொடாமல், தனது சுதந்திரத் தன்மையால், எதனுடைய உதவியும் இல்லாமல், எதைக் குறித்த நோக்கமும் இல்லாமல், தன்னிடத்திலேயே ஒன்றுக்கொன்று வேறான, பல அசையும், அசையா உருவங்களை உருவாக்குகின்றது.

தன்னில் பிரகாசிக்கும் பிம்பங்களினால், ஒரு கண்ணாடியானது, தனது உண்மைத் தன்மையில் சிறிதும் பாதிப்படையாமல் எப்பொழுதும் ஒரே மதிரியாக இருப்பதுப் போன்று, சித்தானது தன்னில் பிரகாசிக்கும் இந்த உலகை பலவாறாக விளங்க வைத்தாலும், **நனவு, கனவு, உறக்கம்** என மூன்று நிலைகளிலும் விதவிதமான அனுபவங்களின் பார்வையாளனாக இருந்தாலும், அவைகளினால் சிறிதும் பாதிப்படையாமல் இருக்கின்றது.

உலகத்தை சிருஷ்டி செய்வதாக இருந்தாலும், பிரளய காலத்தில் உலகத்தை ஒடுக்கவதாக இருந்தாலும், சித்து தன்னில் பாதிப்படையாமல், ஏக ரூபமாகவே எப்பொழுதும் இருக்கின்றது. ஏக ரூபமாக இருந்தாலும், தனக்குள்ளேயே "**வெளி**"யை விளக்கிக் கொண்டிருக்கின்ற சித்தே, "**சிவ தத்துவம்**" ஆகும். இது, பரசித்தின் ரூபமே ஆகும்.

இந்த சிவ தத்துவத்திடம் தோன்றுகின்ற தன் உணர்ச்சியே "**நான்**" என்கின்ற "**சக்தி தத்துவம்**" ஆகும். "**நான்**" என்று விளங்குவது, சித்தின் சுபாவமாகையால், இரண்டிற்கும் பேதமில்லை. இருப்பினும், நிர்விகல்ப நிலையைச் **சிவத் தத்துவம்** என்றும், தன்னுணர்வைச் **சக்தி தத்துவம்** என்றும் கூறப்படுகின்றது. வெட்டவெளி சூன்யமாக இருப்பதினால், அதனை **மகா சூன்யம்** என்று அழைப்பர். இந்த மகா சூன்யமே உலகம் தோன்ற ஆதாரமாக இருக்கின்றது.

அப்படிப்பட்ட இந்த வெட்ட வெளியை "**நானே இது**" என்ற பாவனை வருகின்ற பொழுது, அதற்குச் "**சதாசிவ தத்துவம்**" என்றும், சிவத் தத்துவத்தில் ஜடத் தத்துவம் மிகுந்து "**இதுவே நான்**" என்ற பாவனை வருகின்ற பொழுது, அதற்கு "**மகேச தத்துவம்**" என்றும், இவ்விரண்டு தத்துவங்களுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை விசாரித்து, அதற்கான விடையாக, "**நானே இது**", "**இதுவே நான்**" என்ற யாதார்த்த நிலைகளை விளக்குவதே "**சுத்த வித்தை**" என்றும் அழைக்கப்படுகின்றது. இவைகள், இரண்டு நிலைகளாகக் காணப்பட்டாலும், இரண்டிற்கும் பொதுவாக "**நான்**" இருப்பதால், வேற்று மையிலும் ஒருமையே உள்ளது. இந்த ஐந்து நிலைகளிலும் பேத சக்தி அடங்கி யிருப்பதால், இவைகள் சுத்த தத்துவங்களாகும். சித்துவின் சுதந்திரத் தன்மையில் பேத புத்தியுடைய ஜடசக்தி மிகும் பொழுது, அது "**மாயா சக்தி**"

எனப்படுகின்றது. தன்னுடைய பேத புத்தியினால், அளவற்ற மாயா தோற்றங்களை இந்த மாயா சக்தி உருவாக்குகின்றது.

இவ்வாறு, ஏராளமான பேத புத்தியினால் சூழப்பட்டதின் காரணமாக சித்தின் அம்சமானது **கலை, வித்தை, இராகம், காலம், நியதி** என்ற ஐந்து உறைகளைப் பெற்று புருஷன் தன்மையை (ஜீவனாக மாறியது) அடைந்தது. இதில் **கலை** என்றால், செய்யும் தன்மை, **வித்தை** என்றால், அறியும் தன்மை, **இராகம்** என்றால், தீர்மானிக்கும் தன்மை, **காலம்** என்றால், வரையறைக்குட்பட்ட ஆயுள் கொண்ட தன்மை, **நியதி** என்றால், மற்றவைகளை சார்ந்திருக்கும் தன்மை என, இந்த ஐந்து உறைகளால் ஜீவன் சுற்றப்படுகின்றான்.

சிதாத்மாவின் சக்தியை ஆதாரமாகக் கொண்டிருக்கும் ஜீவர்களுடைய வாசனைகள் அநாதி காலமாக தொடர்ந்து வருவதால், வாசனைகளுடன் கூடிய சமுதாயமே **பிரக்ருதி** என்று கூறப்படுகின்றது. கர்மங்களின் பலனானது மூன்று வகைப்படுகின்ற காரணத்தினால் இப்பிரக்ருதி மூன்று வகைப்படும்.அவைகள், **சத்வ, ரஜஸ், தமஸ்** என்ற மூன்று குணங்களைக் கொண்ட நிலையில் ஏற்படுகின்ற மாற்றமே **"சித்தம்"** எனப்படும். ஆழ்ந்த உறக்கத்தில் பூர்வ சம்ஸ்காரங்கள் எனும் வாசனைகள் அடங்கியிருப்பதினால், ஜீவபேதம் மறைந்து **பிரக்ருதி** மட்டும் விளங்குகின்றது.

உறக்கம் கலைந்து எழுந்தவுடன் வாசனைகள் மேலோங்கி விடுவதால், இதுவே **சித்தம்** ஆகின்றது. இவ்வாறு, ஜீவனின் பேத புத்தியினால் சித்தம் பலவிதமான வாசனைகளைக் கொண்டுள்ளது. ஆழ்ந்த உறக்கத்தில் ஜீவனிடம் பேத புத்தி இல்லாததால், சித்தமானது ஒரே விதமாக மாறி, பிரக்ருதித் தன்மையை அடைந்து, உறக்கத்தின் முடிவில், விழிப்பு நிலைக்கு வந்ததும், மீண்டும் சித்தமாக ஆகி விடுகின்றது.

பிரக்ருதி தத்துவமானது கிரியையின் பேதத்தினால், **அகங்காரம், புத்தி, மனம்** என்ற வடிவங்களைக் கொண்ட **அந்தக்கரணம்** என்று அழைக்கப்படுகின்றது. அதன்பிறகு, **ஐந்து ஞானேந்திரியங்கள்** (கண், காது, மூக்கு, நாக்கு, மற்றும் உடல்), **ஐந்து கர்மேந்திரியங்கள்** (வாய், கை, கால், குதம், மற்றும் குறி), **ஐந்து சூக்ஷ்ம, ஐந்து ஸ்தூல பூதங்கள்** (ஆகாயம், காற்று, நீர், நெருப்பு மற்றும் நிலம்) முதலியன உண்டாகின. இவ்வாறு, திரிபுரையானவள் பிரக்ருதியாகவே மாறி **படைத்தல், காத்தல், அழித்தல்** என்ற முத்தொழில்களைச் செய்து, எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருந்து, அனைத்தையும் நடத்தி வருகின்றாள்.

இவ்வாறு ஈஸ்வரி என்பவள் பிரம்மாவைப் படைத்து, (மனதைப் படைத்து) பிரம்மாவின் பாவனை சங்கல்பத்தால், இந்த பிரபஞ்சம் தோன்றியுள்ளது. இந்தச் சிருஷ்டியில் **"நீ"**,

"**நான்**" என்று விளங்குகின்ற அனைத்தும் அந்த பராசக்தியான **சித்** மட்டுமே ஆகும். இதில் எந்த வேற்றுமைகளும் கிடையாது.

பொதுவாக, காணுகின்ற வேற்றுமைகள் அனைத்தும் உபாதிகளால் விளங்குகின்றது. உபாதிகள் அனைத்தும் பிரம்மாவின் பாவனா சக்தியால் உருவானவையே. ஆக, அந்த சித்திடம் இருக்கின்ற பாவனா சக்தியானது, உம்மிடத்தில் மாயையினால் சூழப்பட்டுள்ளது. அந்த அறியாமை அகன்று விட்டால், உம்முடைய பாவனையும் சித்தியாகும்.

தேசமாகட்டும், காலமாகட்டும், மற்ற எந்த விசயங்க ளாகட்டும், எவன் எப்படிப் பாவனை செய்கின்றானோ? அப்படியே அவைகள் அங்கங்கே சூக்ஷ்மமாகவும், நீடித்த தாகவும், பலவாறாகவும் விளங்கும். என்னால், ஒரே நாளாக பாவனை செய்யப்பட்ட காலமே, இங்கு பிரம்மாவினால் பனிரெண்டு ஆயிரம் வருடங்களாக பாவனை செய்யப்பட்டது. இவ்விதம் பாவனையின் வித்தியாசத்தால், ஒரே காலம் ஒரு நேரத்தில் நீடித்ததாகவும், மற்றொரு நேரத்தில் சிக்கிரமாகவும் மாறுகின்றது. இவ்விதம், இருவகையான கால, தேசங்கள் உண்மையில்லை".

ஆகையினால், "இராஜனே! பாவனை ஒன்றையே வடிவமாகக் கொண்டிருக்கும் இந்த உலகமானது சிதாத்மாவின்

"**வெளி**" வடிவமான சுவரில் வரையப்பட்ட சித்திரம் போன்றுக் காணப்பட்டாலும், இதுவும், அந்த தூய சித்தின் வெளிப்பாடே ஆகும். எனவே, தூரமானாலும், சமீபமானாலும், நீண்டகாலமோ, கணப்பொழுதோ எதுவானாலும், சித்தென்ற கண்ணாடியை ஆதாரமாகக் கொண்ட **பாவனை** மட்டுமே ஆகும். இதன் காரணமாகவே, யோகிகள் நீண்ட தூரத்தையும் கணப் பொழுதில் அடைந்து விடுகின்றனர். இதை நன்கு உள் வாங்கிக் கொண்டு, சுத்த சித்தைப் பாவனை செய்து, பயத்தை விட்டு, நீங்களும் என்னைப் போன்றே, எல்லாத் தடைகளையும் அகற்றி, முழு சுதந்திரனாக ஆகலாம் என முனிகுமாரன் கூறி முடித்தான்.

இதை நன்றாக உள் வாங்கிக்கொண்ட அரசன் மகாசேணனும் மன மாயையை அகற்றி, சுத்த சித்தை அறிந்து, தொடர் அப்பியாசத்தினால் நீண்ட நெடுகாலம் தன் நிஜ சொரூபத்தில் (ஆத்ம நிஷ்டையில்) இருந்து, தேகத்தை விடுத்து, பரம பவித்ரமான **மகா நிர்வாணத்தை** அடைந்தான். எனவே, பரசுராமா! சத்தியமென்று நீ பாவனை செய்யும் இந்த உலகமானது, உனக்கு உண்மையாகத் தோன்றுவதை, விசாரத்தின் வாயிலாக அசத்தியம் என அறிந்து, உன்னுடைய சித்தத்தில் பதிந்துள்ள வாசனைகளான அறியாமையை அகற்றி, அந்த சித்தை (அறிவை) அறிந்துக் கொண்டால், இந்த உலகம் உனக்கு உண்மையாகத் தோன்றாது".

# அத்தியாயம் – 15

## ஆத்மாவை அறிதல்

இவ்வாறு, கண்டமலை அதிசயத்தையும், பாவனா சக்தியின் மகத்துவத்தையும் அறிந்துக்கொண்ட பரசுராமன் மிகுந்த ஆச்சரியத்தை அடைந்தான். ஸ்ரீ தத்த குருவின் உபதேசங்களைக் கேட்டு, நன்றாகத் தெளிவு பெற்றவனாக, எண்ணங்களற்ற நிர்மல புத்தியினால் தீர்மானம் செய்து, அவரிடத்தில் மறுபடியும் சென்று சாஷ்டாங்கமாக கீழே விழுந்து, அவருக்கு தன் பணிவான நமஸ்காரங்களை சமர்ப்பித்து எழுந்தவன், அவரை நோக்கி மேலும் பின்வருமாறு கூறத் தொடங்கினான்.

"ஹே குருநாதா! தாங்கள் கூறிய பலவிதமான விளக்கங்களைக்கேட்டு, தெளிவை அடைந்திருக்கின்றேன். "**அறிவு ஒன்றே சத்தியம், அறியப்படுபவைகள் அனைத்தும் கண்ணாடியில் காணப்படுகின்ற பிம்பம் போன்ற அசத்தியம்**" என்பது நன்கு புலனாகின்றது.

மகேஸ்வரியான அந்த சித்தானவள் ஒரு உபாதானமும் இன்றி, தன்னுடைய சுதந்திரத்தின் மூலமாக தன்னில் தானாகவே, இந்த உலகமான சித்திரத்தை விளக்குகின்றாள். இதனை நுண்ணிய அறிவினால் ஆராய்ந்தால் மட்டுமே, அறிய முடியும் என்ற உண்மையையும் நன்கு அறிந்து கொண்டேன்.

அப்படிப்பட்ட உன்னத உணர்வான (அறிவான) அவளை பூரணமானவள் என்பதிலிருந்து, அவளுக்கு வேறாக எதுவுமே இல்லை என்பதையும் அறிய முடிகின்றது. அதேசமயம், அறியப்படுகின்ற பொருளை எளிதாக அறிய முடிவதைப் போன்று, அனைத்தையும் அறியும் அறிவுப் பொருளாகிய இந்த சித்தை, அனைவராலும் அறிய முடியாமல் இருப்பதற்கு யாது காரணம்?

மேலும், அது எப்பொழுதும் அறிபடு பொருளாகவே இருந்தாலும், அந்த அறிவின் இருப்பை உணர்வு பூர்வமாக உணர்ந்து கொள்ளாமல், சாஸ்திர அறிவைக் கொண்டு மோக்ஷம் எவ்விதம் கைகூடும்?

விசாரத்தினால் விசாரித்து அந்த உண்மையை அறிந்து கொண்ட ஞானிகள்கூட, இந்த உலக அரங்கில் வெளி விவகாரங்களில் ஈடுபடுபவர்களாகவே உள்ளனர்.

இவர்களுக்கு அந்த அறிபடுபொருள் எப்படி நிர்விகற்ப அறிவாகத் தோன்றும்? அதுவே, அது சுத்த அறிவாகத் தோன்றுமானால், அவர்களால் எப்படி உலக விவகாரங்களில் செயல்பட முடியும்?

மோக்ஷ சாதனமானது ஒன்றேயான சுத்த அறிவாக இருக்கின்ற பொழுது, அதன் பலனான மோக்ஷமும் ஒரே மாதிரியாக இல்லாமல், உலகத்தில் அதை உணர்ந்த ஞானிகள் தங்களுக்குள் பலவிதமாகப் பேதப்பட்டு இருப்பதற்கு யாது காரணம்?

சிலர் சாஸ்திரங்கள் கூறியபடி நின்று, கர்மங்களைச் செய்கின்றார்கள். இன்னும் சிலர் பலவிதமான மார்க்கங்களை அனுசரித்து, பல தேவதைகளை ஆராதனை செய்கின்றார்கள். சிலர் இந்திரியங்களை அடக்கி சமாதியில் இருக்கின்றார்கள்.

சிலர் தேகத்தையும், இந்திரியங்களையும் தொந்தரவு செய்து தவம் செய்கின்றார்கள். சிலர் தங்கள் சீடர்களுக்கு பாடம் எடுத்துக்கொண்டு, குருகுல வாழ்க்கை நடத்துகின்றனர். சில ஞானிகள் நீதி தவறாமல் அரசாட்சி செய்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் ஞானிகள் என்று அறியப்பட்டாலும், இவர்களது செயலில் இவ்வளவு பேதம் இருப்பது ஏன்?

இவர்கள் உணர்ந்த ஞான நிலையில் ஏற்றத்தாழ்வு என்று ஏதாவது உண்டா?

ஐயனே! தாங்கள் மட்டுமே இதற்கு சரியான விளக்கத்தை கொடுக்க முடியும் என்பதினால், தங்களையே சரணடைகின்றேன். அருள் கூர்ந்து, எனக்கு தங்கள் கருணையினால் விடையளிக்க வேண்டும் என்று வேண்டி நின்றான்.

பரசுராமனின் சந்தேகங்களை கேட்டு, புன்னகைத்த அத்திரி மகரிஷியின் குமாரர் ஸ்ரீ தத்த குரு பரசுராமனை நோக்கி, பின்வருமாறு கூறத்தொடங்கினார்.

"புத்திமான்களில் சிறந்தவனான இராமா! நீ அந்தப் பரபதத்தை அடையக்கூடிய சாமார்த்தியம் நிறைந்தவனாக இருக்கின்றாய். ஏனென்றால், உன்னுடைய நுட்பமான அறிவால் நீ விசாரித்து அறிய முன் வந்துள்ளதை நினைத்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இதற்கு, அந்த ஈஸ்வரனின் அனுக்கிரஹம் இருந்தால் மட்டுமே, உன் ஹிருதயத்தில் சத்தான விசாரணையை உண்டாக்க முடியும், ஆத்ம தேவதை சந்தோசப்படுவாளானால், நல்ல ஆலோசனைகளை தினமும் முமுக்ஷுக்களுக்கு விருத்தி செய்வாள்.

நீ கூறிய அனைத்துமே உண்மைதான். ஆனால், உன்னால் கிரகித்துக் கொள்ளப்பட்ட அந்த சித்து ரூபத்தைப் பற்றிய அறியாமை இன்னும் உன்னிடத்தில் உள்ளது. காரணம், நீ இன்னும் அந்த சித்தை அனுபவப்பூ வமாக உணரவில்லை!

மாணிக்கக் கல்லை முன், பின் பார்த்து அனுபவப்படாத மூடர்கள், சாலையில் அந்த மாணிக்கக்கல் அழுக்கு அடைந்ததாக விழுந்து கிடப்பதைக் கண்டாலும், அதனை அறியாமல், உதாசீனமாக காலால் எட்டி உதைத்து, தூரமாக தள்ளி விட்டுத்தான் செல்வார்கள். அதுப்போலவே, ஞான நிஷ்டையில் முன், பின் அனுபவப்படாத மூடர்கள் புத்தக அறிவினால், பெற்ற ஞானத்தைக்கொண்டு, மற்றவர்களின் உயரிய ஞானத்தைக் குறை கூறிக்கொண்டு, அவர்களை உதாசீனமாக ஒதுக்கித் தள்ளுவார்கள். உண்மையில், பாம்பின் கால், பாம்பறியும் என்பதைப் போன்று, ஒரு பிரம்ம ஞானியை மற்றொரு பிரம்ம ஞானியினால் மட்டுமே அடையாளம் கண்டுக் கொள்ள முடியும்.

பரசுராமா! நீ, கண்ணால் கண்ட காட்சிகளையே விவரித்து இருக்கின்றாய். பார்வையில் பட்டவைகளை உண்மை என்று எண்ணுகின்றாய். ஒவ்வொரு பொருளிலும் ஊடுருவியிருக்கும் அந்தச் சித்தை நீ இன்னும் அனுபவமாக அறியவில்லை.

அனுபவ அறிவு உன்னிடத்தில் இல்லாத காரணத்தினால், உண்மைத் தன்மையை உன்னால் உணர முடியவில்லை. உண்மையை உணர்ந்தவனுக்கு இந்த வெளிக் காட்சிகள் இருப்பதில்லை. கனவில் அடைந்த ஒன்றை கொண்டு, விழிப்பு உலகில் அனுபவிக்க முடியாதது போன்று, அனுபவ அறிவு வராதவரை, இந்த கேள்வி ஞானத்தினால் எந்தப் பயனும் இல்லை.

இதைப்பற்றி ஒரு கதையைக் கூறுகின்றேன் கேள் என்று ஸ்ரீ தத்தாத்ரேய குரு பரசுராமனுக்கு கதையைக் கூறத்தொடங்கினார்.

முன்னொரு காலத்தில் தர்மசீலனும், சிறந்த ஞானியும் ஆகிய ஜனகர் என்ற மன்னர் சீரும், சிறப்புமாக ஆட்சி செய்து வந்தார். அவர் ஆத்ம தேவியின் அருளை வேண்டி ஒரு உத்தமமான யாகத்தை நடத்தினார். அந்த யாகத்திற்கு வித்வான்களும், தவசிகளும், யோகிகளும், கலைஞர்களும், பிராம்மணர்களும் எனப் பலரும் கலந்து கொண்டனர். அதே வேளையில் வருணனும் ஒரு யாகத்தை செய்ய ஆரம்பித்தான். பிராமணர்கள் முதலானோர் ஜனக மகாராஜாவினால் பூஜிக்கப்பட்டு, முழு திருப்தியுடன் அவனது யாகத்தில் விருப்பம் உடையவர்களாக, மிகுந்த மகிழ்ச்சியுடன் அங்கேயே இருந்து, யாகத்தை வெகு சிறப்பாக நடத்தினர்.

வருணன் அந்த பிராம்மணர்களுக்கு தானும் அழைப்பு விடுத்தும் யாரும் அங்கு அந்த வருணனின் யாகத்திற்குச் செல்லவில்லை. இதனால், வருத்தம் அடைந்த வருணனின் மகன் பிராமணனாக மாறுவேடம் பூண்டு, ஜனகரின் யாக சாலைக்குச் சென்று அங்கு இருந்தவர்களை பார்த்து, தரக்குறைவாகப் பேச ஆரம்பித்தான்.

"சபையோர்களே! கேளுங்கள். ஓ அரசனே! தாமரை தடாகத்தில் காக்கைக் கூட்டம் வந்து சேர்ந்ததுப் போல, உங்கள் யாகச்சாலை அவ்வளவுச் சிறப்பாக இல்லை. அதுவே, தாமரை தடாகத்தில் அன்னப்பறவைகள் கூட்டமாக கூடுவதுப் போல, வித்வான்கள் நிறைந்த சபையானது மிகவும் சிறப்பாக இருக்கும். இந்தச் சபையில் ஒரு வித்வான்கூட இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. அரசனே! நீர் நன்றாக இரும். நான் மூடர்கள் நிறைந்த சபையில் இருக்க விரும்பவில்லை. நான் இங்கிருந்து போகின்றேன் என்றான்.

அவனது பேச்சைக் கேட்டு கோபம் அடைந்த சபையோர்கள் "ஏ துர்புத்தி கொண்ட பிராமணா, நீ பிராமணனாக இருந்தும், எல்லோரையும் தரக்குறைவாகப் பேசுகின்றாய். எங்கள் எல்லோரையும் ஜெயிக்கக் கூடியதான உன்னிடத்திலிருக்கும் அப்படிப்பட்ட வித்தை என்ன உள்ளது? அதைக்கூறு" என்றனர். அதற்கு வருண புத்திரன் "என்னுடைய வாதத் திறமையால், உங்களை ஒரு நொடியில் வென்று விடுவேன்.

ஆனால், அதற்கு முன்னால் ஒரு நிபந்தனை, நான் தோற்றால் என்னைக் கடலில் அமிழ்த்தி விடுங்கள். அதுவே, நீங்கள் தோற்றால் உங்கள் அனைவரையும் கடலில் மூழ்கடிப்பேன். இந்த நிபந்தனைக்குச் சம்மதம் எனில், என்னிடம் யாரும் வாதிடலாம்" என்றான். சபையோர்களும் அவனது நிபந்தனையை ஏற்று வாதத்திற்கு சம்மதித்தனர். ஆனால், பிராமணன் தனது விதண்டா வாதத்தாலும், குதர்க்க வாதத்தாலும் அவர்களை மடக்கி, எல்லோரையும் வாதத்தில் வென்று கடலில் மூழ்கடித்தான். அவ்வாறு மூழ்கடிக்கப்பட்டவர்களை அங்கிருந்த வருண தூதர்கள் மீட்டு, அவர்களை வருணனுடைய யாக சாலைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் எல்லோரும் வருணனால், மிகுந்த மரியாதையுடன் பூஜிக்கப்பட்டு, அவனது யாகத்தில் பங்கு கொள்ள செய்தான். இதனால், அவர்கள் மிகுந்த சந்தோசமடைந்தனர்.

இந்த சூழ்நிலையில் தன் தந்தையான கஹோலர் என்ற முனிவரை வருண புத்திரன் கடலில் மூழ்கடித்தான் என்பதை கேள்வியுற்று அஷ்டாவக்கிரர் என்ற ஞானி அந்த அரசவைக்கு வருகைத் தந்தார். அஷ்டாவக்கிரர் தன் தந்தையை ஜெயித்த வருண புத்திரனை வாதத்தால் வென்று, அவனை கடலில் மூழ்கும்படி கூறினார். தோல்வியியை ஒப்புக்கொண்ட வருண புத்திரன் தன்னுடைய பிராம்மண வேடத்தைக் கலைந்து, உண்மையைக் கூறித் தன் தந்தையான வருணனிடம் சென்று, அங்கிருந்த பிராமணர்கள் அனைவரையும் விடுவித்து,

அவர்களை மீண்டும் ஜனகர் சபைக்கு அழைத்துக் கொண்டு வந்து சேர்த்தான். அவ்வாறு, திரும்பி வந்த பிராம்மணர்களின் மத்தியில் கஹோல முனிவரின் குமாரரான அஷ்டாவக்கிரர் அவர்கள் அனைவரையும் விடுவிக்கச் செய்தது தன்னாலேயே என்று மிகுந்த கர்வத்துடன் அனைவரிடமும் கூறினார்.

எங்கு வித்தை உள்ளதோ? அங்கே அகந்தையும் இருக்கும் என்பதற்கேற்ப, அஷ்டாவக்கிரரின் இந்த ஆணவமான வார்த்தைகளால், சபையோர்களான பிராமணர்கள் மிகுந்த வருத்தம் அடைந்தனர். அந்த வேளையில் காவி வஸ்திரம் தரித்தவளும், ஜடாமுடி கொண்டவளுமாக மகா தபஸ்வியுமான தெய்வீக அழகு பொருந்திய ஒரு பெண் அந்த அரசவைக்குள் நுழைந்தாள்.

அந்த தபஸ்வினியை ஜனகராஜன் பூஜித்து, வரவேற்று மகிழ்ந்தார். சபையோர்களும் அவளை வணங்கி, தங்கள் மனக்குறையை அவளிடம் கூறினர். அந்த தபஸ்வினியும் எல்லோரையும் அமைதிப்படுத்தி விட்டு, அஷ்டாவக்கிரரைப் பார்த்து, "குழந்தாய் கஹோலக் குமாரா! நீ சிறந்த புத்திமான் என்பதை நிரூபித்து, வருண புத்திரனை ஜெயித்துப் பிராமணர்களை மீட்டு அழைத்து வந்தது மிகுந்த மகிழ்ச்சியை அடைய வைக்கின்றது".

இருப்பினும் புத்திக் கூர்மையால் மட்டுமே உண்மையை அறிந்துவிட முடியாது. அதனால், சில கேள்விகளை நான் உன்னைக் கேட்கின்றேன். கபடமின்றி விடையளிப்பாயாக. "யாதொரு நிலையை அறிந்தால் அகண்டமான அமிருதத்துவம் உண்டாகின்றதோ? யாதொரு நிலையை அறிந்தால் எல்லாச் சந்தேகங்களும் நிவர்த்தியாகின்றதோ? எதை அறிந்தால் ஆசைப்படுவதற்கு எதுவுமில்லையோ? எதை அறிய முடியாததாக இருக்கின்றதோ? அதை அறிந்திருந்தால் விளக்குவாயாக" என்றாள்.



இதைக் கேட்ட அஷ்டாவக்கிரரும் அந்த தபஸ்வினியை நோக்கி பின்வருமாறு கூறத்தொடங்கினார். "தவமணியே! அந்த நிலையானது எனக்கு நன்றாகத் தெரியும். நான் கூறுகின்றேன் கேளும். உலகத்தில் நான் அறியாதது ஒன்றுமில்லை. அனேக சாஸ்திரங்களை நான் கற்றுத் தெளிந்திருக் கின்றேன். உமது கேள்விகளுக்கான பதிலைக் கூறுகின்றேன் கேளும்".

அனைத்து உலகங்களுக்கும் காரணமானதும், ஆரம்பம், நடு, முடிவு இல்லாததும், கால, தேசத்தால் பிளவு படாததும், எங்கும், எதிலும், பரந்து விரிந்த சுத்தமான சித் வடிவமே அது. கண்ணாடியில் விளங்கும் பிம்பம், எவ்வாறு கண்ணாடியை சார்ந்து விளங்குகின்றதோ? அதுப்போல, சித்தில் விளங்கும் உலகம், அந்த சித்தைச் சார்ந்து விளங்குகின்றது.

அதுதான் பரம்பொருள். அதை அறிந்தால் ஆசையில்லாத அமிருதத்துவம் உண்டாகும். கண்ணாடியை அறிந்து கொண்டவன், அதில் தெரியும் பிம்பம் பொய் என்பதை எப்படி நன்கு அறிவானோ? அதைப்போன்று, சித்தை அறிந்தவனுக்கு, அதில் தெரியும் உலகம் பொய் என்பதையும் நன்கு அறிவான்.

இந்த பேருண்மையை அறிந்தவனுக்கு ஆசைதான் ஏது? அந்த சித்தை அறிவதற்கு, அதற்கு அந்நியமாக ஒருவன் இல்லாததால், அதை அறிய முடியாது. என்று அஷ்டாவக்கிரர் கூறி முடித்தார். மேலும், என்னைப் போன்று சாஸ்திரம் கற்றறிந்த அனைவருமே, இதை நன்கு அறிவார்கள் என்று விளக்கமளித்தார். அஷ்டாவக்கிரரின் இந்த விளக்கத்தைக் கேட்ட தபஸ்வினி பின்வருமாறு கூறினாள். முனிகுமாரா! நீ இதுவரை கூறியதை, நாங்கள் அனைவரும் ஏற்கின்றோம்.

ஆனால், "**அறிபவன் இல்லாததினால், அதை அறிய முடியாது**" என்றும், "**அதனை அறிந்துக் கொண்டால், அழியாத அமிருதத்துவம் அடையலாம்**" என்றும், நீ கூறியது ஒன்றுக் கொன்று முரண்பாடாக இருக்கின்றதே? அஃதெப்படி? அதை அறிய முடியாதது என்றால், அது இல்லை! என்றே பொருள்படும். ஆனால், அறியக்கூடியதே உள்ள பொருளாக இருக்க முடியும். இல்லாத பொருளை ஒருபொழுதும் அறிய முடியாததே! ஆகவே, அதை தெரிந்துக் கொள்ளவே முடியாது என்றாகிறது.

மேலும், நீ இவ்வாறு கூறிவிட்டு, "**அதை அறிந்தால், அழியாத அமிருதத்துவம் உண்டாகும்**" என்று கூறுவதில் இருந்தே, முனிகுமாரா! நீ சாஸ்திரத்தின் வாயிலாக அறிந்ததை வைத்தே, விவரித்தாயேதவிர, அதனை சுயமாக அனுபவித்து அறிந்தவன் இல்லை என்பது தெளிவாகின்றது. உன்னிடம் உள்ள அறிவு அனுபவ அறிவு அல்ல. நீ எல்லாப் பிரதி பிம்பங்களையும் பார்த்தவனாக இருந்தும், கண்ணாடியை இன்னும் அறியவில்லை.

வெறும் பிம்ப அறிவினை வைத்துக் கொண்டே வாதிடு கின்றாய். இதற்கான காரணம் என்ன கூற இருக்கின்றாய்? அதுவும், ஜனகராஜன் மற்றும் இத்தனை சபையோர்களின் முன்னால், உன் அனுபவத்திற்குப் பொருந்தாத வார்த்தைகளை கூறியதிலிருந்து, உன்னுடைய அறியாமையை ஒப்புக்

கொண்டு, நீ உன் தோல்வியை ஏற்றுக்கொள் மகனே! என்று தபஸ்வினி கூறி முடித்தாள்.

தபஸ்வினி இவ்விதம் கூறியதை ஏற்று, சற்றும் மறுமொழி கூறாமல் அஷ்டாவக்கிரர் தலை குனிந்தவாறு, அவள் கூறியவைகளை ஆலோசித்துப் பார்த்து, அவள் கேள்விகளுக்கு பதில் தோன்றாமல், பின்வருமாறு கூறுகின்றார்.

"தவமணியே! தங்கள் கூற்றை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றேன். தங்களது விவாதத்திற்கு பொருத்தமான பதில் என்னிடத்தில் இல்லை. நான் தங்களை சரணடைகின்றேன். என்னை தங்களது சிஷ்யனாக ஏற்றுக் கொண்டு, எனக்கு விபரமாக அதனை போதிக்க வேண்டும். ஆனால், நான் பொய் கூறவில்லை" என்றார் அஷ்டாவக்கிரர்.

அவரது உண்மை வார்த்தையை கேட்டு சந்தோசமடைந்த தபஸ்வினி அஷ்டாவக்கிர முனியையும், சபையோரையும் பார்த்துக் கூறுகின்றாள்.

"குழந்தாய்! இதற்குச் சரியான பதிலைத் தெரிந்துக் கொள்ளாமல், பல சாஸ்திரங்களைக் கற்ற ஆச்சாரியர்கள்கூட அறிவீனர்களாக இருக்கின்றார்கள். '

ஆகவே, இதை வெறும் தர்க்கத்தினால் மட்டுமே அறியக்கூடிய விசயமன்று. இது மிகவும் ரகசியமானது. இங்கிருக்கும் சபையோர்களில் ஒருவருக்கும் இதைப் பற்றித் தெரியாது. இந்த அரசன் ஜனகருக்குத் தெரியும். எனக்குத் தெரியும்.

எங்கள் இருவரைத்தவிர, இதன் ரகசியம் தெரிந்தவர்கள் இந்தச்சபையில் ஒருவருமில்லை. எவ்வளவுதான் வாய் வார்த்தைகளினால், வீணாக வாதாடிக் கொண்டிருந்தாலும், விசாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், நான் கேட்ட கேள்விக்கு விடை அகப்படாது.

நன்கு படித்த வித்வான்களுக்கெல்லாம் தர்க்கம் செய்ய மட்டுமே தெரியும். இவர்கள் எவ்வளவு புத்திமான்களாக இருந்தாலும், பணிவுடன் குருவிடம் சேவை செய்து, அவர் அனுக்கிரஹத்தைப் பெறாமல், வெறும் விசாரத்தினால் மட்டுமே, ஒருக்காலும் இதைப் புரிந்துக் கொள்ள முடியாது.

முனிகுமாரா! நான் கூறுவதை ஒரே புத்தியில் கேட்பாயாக. இதன் இரகசியத்தை அறிந்த ஞானவான்கள் தங்களைத் தேடி வருகின்ற முமுக்ஷுக்களுக்கு கூற முற்படும் போது, கேட்பவனிடம் அதைக் கேட்கக்கூடிய தகுதியாக, பணிவும், சித்த சுத்தியும், ஏகாக்கிரமும் இல்லாவிடில், இது

அவனுக்குத் தெரிய வராது. அதாவது, அவனுக்கு குரு கூற வருவது என்னவென்று புரியவே புரியாது.

மேலும், இந்த உண்மையை தன்னிடத்திலேயே அனுபவம் ஆகாத ஒருவன் தனக்குத்தானே குருவாக மாறி, அதை தன் சிஷ்யர்களுக்கு சாஸ்திர ஞானத்தினால் அயிரம் தடவைக்கு மேலாக உபதேசமாக கூறினாலும் சரி, அல்லது மற்ற குருமார்களிடம் இருந்து உபதேசமாக இவன் கேட்டாலும் சரி, அதனால் எந்தப்பிரயோஜனமும் இல்லை.

இது எப்படி யென்றால், ஒருவன் தன் கழுத்தில் அணிந்திருக்கின்ற முத்துமாலையை, திருடர்கள் அபகரித்துச் சென்று விட்டார்கள் என்றெண்ணி புலம்பிக்கொண்டிருப்பதைப் பார்த்த, வேறு ஒருவன் அந்த முத்துமாலை உன் கழுத்தில்தான் உள்ளது என்று சுட்டிக் காட்டினாலும், அவனாக அதை கழுத்தில் தடவிப்பார்த்து, அதன் உண்மையை உணராதவரை, அவன் எப்படிப்பட்ட புத்திமானாக இருந்தாலும், அந்த முத்துமாலை அவன் கழுத்தில் இருப்பதை அவன் அறிய முடியாது.

இதுப்போன்றே, ஆத்மாவைப் பற்றி ஆயிரம் ஆயிரம் புத்தகங்களின் வாயிலாக படித்து அறிந்து வைத்திருந்தாலும், வேறு ஒருவன் ஆத்மாவைப் பற்றி விரிவாக எடுத்துரைத்ததை கேட்டிருந்தாலும், இவனாக ஆத்ம சொரூபத்தை அகமுகமாக

உள் நோக்கி உள்ளத்தில் உணராதவரை, அதை எப்படி அறிந்துக் கொண்டதாகக் கூறமுடியும்?

ஒரு தீபமானது, அனைத்து விசயங்களையும் பிரகாசமாக விளக்குகின்றது. அதே தீபத்திற்கு தன்னை விளக்க வேறு ஒரு தீபத்தின் பிரகாசம் தேவையில்லை. அது தானாகவே சுயம்பிரகாசமாக விளங்கு கின்றது. அதே தீபத்தை பகலில் சூரிய ஒளி பிரகாசத்தில் வைக்கப்படும் பொழுது, அந்த தீப ஒளி சூரியப் பிரகாசத்துடன் ஒப்பிடும்பொழுது, மங்கியே காணப்படுகின்றது.

அதனால், தீப ஒளி இல்லை என்று கூறமுடியுமா? உண்மையில் தீப ஒளி தானாகவே சுயம்பிரகாசமாக விளங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. அதுப்போல, புறத்தில் சூரிய ஒளி எவ்வளவு பிரகாசமாக காணப்பட்டாலும், அகத்தில் அந்த சித்தின் சுயப்பிரகாசம் இருப்பதால், மட்டுமே அனைத்தும் விளங்கு கின்றது என்பதே உண்மை.

இவ்விதம், உள்ளே ஒளிரும் சித்பிரகாசத்தால் மட்டுமே வெளியே தெரிகின்ற தீபம், சூரியன் எல்லாம் விளங்குகின்ற பொழுது, அந்த சித் பிரகாசத்தினாலேயே, அறிய முடியாத அந்த சித் தத்துவத்தையும் அறிந்துக் கொள்ள முடியும் என்று கூறுவதில் உனக்கு என்ன தயக்கம் முனிகுமாரனே? இதில் என்ன சந்தேகமும் உமக்கு இருக்க முடியும்?

ஆகையினால், விளங்காத சிதாத்மாவும் உள் நோக்கிப் பார்க்கின்ற பொழுது விளங்குகின்றது. இவ்வாறு உள்ளே விளங்கும் சிதாத்மாவின் பிரகாசம் சுயம்பிரகாசமா? என்பதை நீ உள்முகமாகவே விசாரம் செய்து தெளிவை அடைவாயாக.

மேலும், சர்வ காரணியும், சர்வ ரூபிணியும், எல்லா வற்றிற்கும் ஆதாரமானவளும், சகலத்தையும் விளக்குகின்ற இந்தச் சித் சக்தியானவள் எங்குதான், எப்பொழுதுதான் பிரகாசிக்கவில்லை? அவளது பிரகாசம் இன்றி மற்றவைகள் எப்படி விளங்கும்? ஆழ்ந்த உறக்கத்தில் கூட அவள் பிரகாசித்துக் கொண்டிருப்பதினால் மட்டுமே, உறங்கி எழுந்தவுடன் நன்றாக உறங்கினேன் என்று விளங்கிக் கொள்ள முடிகின்றது.

இதனை உன்னுடைய அதிசூக்ஷும விசாரணை யினாலேயே அறிந்துக் கொள்ள வேண்டும். இந்த சுத்த சித் விசயத்தில் பண்டிதர்களும், புத்திமான்களும்கூட உள் முகமாக விசாரிக்கத் தவறுவதால், உண்மைத் தெரியாமல் மீண்டும், மீண்டும் சம்சாரத்தில் உழன்று வருகின்றனர். உள்முகமாக விசாரணை செய்வது என்பது, மனதினுடைய வெளிமுக விசயங்களினால் உண்டாகின்ற சங்கற்பங்களை நீக்காமல் ஒரு பொழுதும் உண்டாகாது.

எதுவரையில் உள்முகமாக விசாரணை தொடங்கப்படவில்லையோ, அதுவரை அந்த சுத்த சித்தை அறிந்து கொள்ள முடியாது. இருமைகளால் சூழப்பட்ட எண்ணங்களற்ற நிலையில் சங்கற்பமற்று இருப்பது உள்முக திருஷ்டியாகும். பலவிதமான வெளி எண்ணங்களை உண்டாக்கிக்கொண்டு, அவைகளில் இருமைகளைக் கற்பித்துக் கொண்டு, அதன் வாயிலாக, சங்கற்பங்களை மேலும், மேலும் பெரிது படுத்திக் கொண்டிருக்கின்ற வரையில் இந்த உள்முக திருஷ்டி உண்டாகாது.

ஆகையால், உன் சங்கற்பங்களை முழுவதுமாக நீக்கி, உன் சுய சொரூபத்தில் அமர்ந்திரு. இவ்வாறு நீ தினம், தினம் எந்தவித சிந்தனையுமற்று, ஏகாந்தமாக அமர்ந்து, சுய சொரூபத்தில் இருக்க பயிற்சி செய்தாயானால், சில வினாடிகள் நீ உன்னுடைய சுய சொரூபத்தில் நிலைத்து இருப்பதை, உன் ஞாபக சக்தியினால் நீ அறிந்து கொள்ளலாம். இந்தப் பயிற்சி மேலும் உன்னிடம் தொடருமானால், உன்னால், மிக விரைவில் அந்த சித்தை அனுபவமாகவே அறிந்துக் கொள்ளவும் முடியும்.

இதுவே, நீ அந்த அறிய முடியாத சித்தை அறிந்துக் கொள்ளக்கூடிய வழிமுறையாகும். இவ்விதம் அறிய முடியாத சித்தை அறிந்தவன் என்றும் அழியாத, அமரத்துவத்தை அடைகின்றான். இதுவரை நான் கூறியதை உன் அனுபவமாக

அடைந்தாயானால், நீயும் அந்த சித்தை அனுபவப் பூர்வமாக அறிந்தவன் ஆகின்றாய். இதுவரை நான் கூறியது உனக்கு விளங்க வில்லையானால், புத்திமான்களில் சிறந்தவரான இந்த ஜனகராஜன் உனக்கு மேலும் போதிப்பார்.

உனக்கு உண்டாகும் சந்தேகங்களை அவரிடத்தில் கேட்டு அறிந்து நிவர்த்தி செய்துகொள். நான் இத்துடன் உங்கள் அனைவரிடமிருந்தும் விடைப் பெறுகின்றேன் என்று வந்தனம் செய்தவாறு, இராஜனாலும், அங்கிருந்த சபையோர்களாலும் பூஜிக்கப்பட்டவளான தபஸ்வினி காற்றினால் விலக்கப்பட்ட மேகத்தினைப் போன்று, ஒரு நொடிப்பொழுதில் அங்கிருந்து மறைந்தாள்.

இவ்வாறு இந்தக்கதையை ஸ்ரீ தத்தாத்ரேயர் பரசுராமனை நோக்கி, இராமா! நீ கேட்டுக்கொண்ட **ஆத்மாவை அறிய வேண்டிய மார்க்கம் இதுதான்** என்று கூறி முடித்தார்.

# அத்தியாயம் – 16

## உள்முக விசாரம்

பரசுராமன் இக்கதையைக்கேட்டு மனம் மகிழ்ந்தவனாக, மேலும் ஸ்ரீ தத்த குருவிடம் பின்வருமாறு கேட்கின்றான்.

"பகவானே! தாங்கள் கூறிய இந்தக் கதையில் அஷ்டாவக்கிரரும், ஜனக மகாராஜனும் மேலும் எத்தகைய விசாரங்களை மேற்கொண்டு பேசினார்கள் என ஆவலாக இருக்கின்றேன். அத்துடன், அவர்களது விசாரங்களின் வாயிலாக ஆத்மாவை அனுபவமாக அறியக்கூடிய விசயம் எதுவென்றும், தாங்கள் அடியேனுக்கு இன்னும் சற்று விரிவாக எடுத்துக்கூற வேண்டும்.

எனக்கு, இன்னும் இதைப்பற்றி அறிய அதிக ஆர்வம் உண்டாகின்றது. இதுவரையிலும், நான் இதுப்போன்று ஆத்ம ஞானத்தைப்பற்றி இவ்வளவுத் தெளிவாகக் கேட்டதில்லை.

"ஹே பகவானே! தங்களிடம் இதுப்போன்ற ஆத்ம ஞான உபதேசங்களை பெறுவதற்கு, நான் மிகுந்த பாக்கியம் செய்துள்ளேன். ஆத்மாவை அறியும் மார்க்கம் பரம பவித்ரமானது என்பதை அறியும்போது, அந்த உன்னதமான வழியை தங்களிடம் கேட்டு அறிவது, எனக்கு மிகுந்த ஆனந்தத்தை உண்டாக்குகின்றது. அந்த ஆத்ம அனுபவம் எனக்கும் சித்தியாக தாங்கள் கிருபை கூர்ந்து அருள் செய்யுங்கள்" என்று வேண்டி நின்றான்.

பரசுராமன் இவ்வாறு கேட்டுக்கொண்டதை அடுத்து பரம பவித்ரமான ஆத்மாவை அகமுகமாக அனுபவத்தில் அறிய முடியும் என்பதை பகவான் ஸ்ரீ தத்தாத்ரேயர் கூறத் தொடங்கினார். மகாத்மாவான ஜனகர் யாது கூறினார் என்பதை மிகுந்த கவனமாகக் கேள்! அதி சூக்ஷும ரகசியங்களை நுண்ணிய அறிவினால் மட்டுமே எளிதாக அறிந்துக் கொள்ள முடியும்.

சாதாரணமாக கதை கேட்பது போன்று, இதை கேட்பவர்களுக்கு இந்த இரகசியங்கள் விசய ஞானம் போன்றே கருதப்படும். நுண்ணிய அறிவினால் விசாரித்து அறிய விரும்புபவர்களுக்கே ஆத்ம இரகசியம் வெளிப்படும். தபஸ்வினி சென்றபிறகு, அஷ்டாவக்கிரர் ஜனக மகாராஜனிடம் சென்று, ராஜனை நோக்கி, ஹே ராஜனே! விதேக நாடாளும் மன்னவா!

தபஸ்வினி கூறியது எனக்கு ஓரளவுக்கு மட்டுமே புரிந்தது. இந்த ஆத்மாவைப்பற்றிய ஞானம் என்னிடம் இருந்தாலும், அதன் அனுபவம் எனக்கு சித்தியாக வில்லை. ஆகவே, தாங்கள் இதைத் தெளிவாக இன்னும் எனக்கு விளக்க வேண்டும்.

தயாநிதியே!, அறிய முடியாத அந்த ஆத்ம அனுபவத்தை நானும் அனுபவமாக அறிவது எவ்வாறு? என்பதைக் கருணையுடன் வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

ஜனகராஜனும், அஷ்டாவக்கிரரின் அதீத ஆர்வத்தை அறிந்துக் கொண்டு, மகா மேன்மை பொருந்திய முனிபுத்திரரே! நான் கூறப்போவதைக் கேளும். இந்த சுத்த சிதாத்ம தத்துவம் எவ்விதத்திலும் அறிய முடியாததும் அன்று, எளிதில் அறியக் கூடியதும் அன்று. எவ்விதத்திலும் இதை அறியமுடியாது என்றால், குருவினால் மட்டும் எப்படி இதைக் கூறமுடியும்? இந்த சித் தத்துவத்தை அனுபவமாக அறிய விரும்பும் ஜிக்னாஸு முதலில், அதை அனுபவத்தில் அறிந்த ஒரு சத்குருவைச் சென்று சந்தித்து, அவரது கருணையினால், இந்த தத்துவத்தை முழுவதுமாக அவரிடம் உபதேசம் பெற்று, அதை அகமுகமாக தீர விசாரிப்பவனுக்கு, அந்த சித்தை அனுபவமாக உணரக்கூடிய நிலை விரைவில் உண்டாகும்.

அந்த சுத்த சிதாத்ம தத்துவம் ஒருவகையில் அறிவது சுலபமும், ஒரு வகையில் கஷ்டமும் ஆகும். அதாவது, உள்முகமாக விசாரம் செய்பவனுக்கு சுலபமும், வெளிமுகமாக விசாரம் செய்பவனுக்கு கஷ்டமும் ஆகும்.

தனித்த நிரூபிக்க முடியாத இந்த தத்துவம் அறிய முடியாததாக இருந்தாலும், வேறு சில வழிமுறைகளில் நிரூபிக்கப்பட்டிருப்பதால், இதை எளிதாக அறியமுடியும் என்பதுவும் உண்மையே. எளிமையாக விசாரத்தின் அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்க்கின்றவனுக்கு, அவன் காணும் காட்சியிலிருந்து காண்பவளை உறுதி செய்யலாம். அதாவது, காட்சியை எது காண்கின்றதோ? அதுவே அது என்பதை அறிவாயாக.

**"அறிபவள் இல்லை என்றால், அறியப்படும் பொருளும் இல்லை"**. இதைத்தான் எது காண்கின்றதோ? அது அவ்வடிவாகவே ஆகின்றது என்பதை, சூக்ஷூமமாக கவனித்து அறியப்பட வேண்டியது. தேவையற்ற குதர்க்க வாதங்களைக் கொண்டு மற்றவர்களுடன் வாதிடுவதினால், இதை அறிந்துக் கொள்ள முடியாது. அனுபவமற்ற மற்றவர்களிடம் இதைப்பற்றி அதிகம் பேசுவதையும் தவிர்க்கப்பட வேண்டும்.

தான் காணும் காட்சிகளையும், பொருட்களையும் காண்பவன் யார்? என்பதை தன்னுடைய நுண்ணிய அறிவினால் விசாரணை செய்து அறிய வேண்டும். இவ்வாறு ஆராய்ந்து பார்க்கும்பொழுது, பகலாக இருந்தாலும், இரவாக இருந்தாலும் புலன்களின் புரிதலினால், கண்களின் பார்வைக்கு ஆதாரமான வெளிச்சம் எங்கிருந்து வெளிப்பட்டு இந்த உலகத்தைக் கண்கள் காண்கின்றது என்பதை அறிபவனுக்கு, அந்த ஒளி மட்டுமே காட்சிகள் (பொருள்கள்) அனைத்தையும் விளக்குகின்ற வெளிச்சமாக இருப்பதினால், அந்த வெளிச்சத்தில் காட்சியாக (பொருள்களாக) விளங்குகின்ற அனைத்தையும் நீக்கிப் பார்த்தால், இத்தனை காட்சிகளுக்கும் ஆதாரமான அந்த வெளிச்சம், சித் என்ற அந்த சிதாகாசத்தின் வெளிப்பாடு என்பதை அறிந்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு சுயப்பிரகாசமாக ஒளிரக்கூடிய ஒளியான சித் சக்திதான், சுத்த சிதாத்ம தத்துவம் என்பதை நீர் அறிவீராக. அறியப்படுகின்ற பொருள்கள் தாமாக விளங்கக்கூடிய தன்மை யற்றதால், அவைகள் அறிபவளாக இருக்க முடியாது. ஆகவே, அறிபவள் அறிபடுபொருளிலிருந்து வேறாக இருப்பதால், இந்த சித்தினாலேயே (அறிவினாலேயே) அறிபடு பொருள்கள் அறியப்படுகின்றனவே அன்றி, வேறு எந்த வகையிலும் இந்த பொருள்களை (காட்சிகளை) அறிந்துக் கொள்ள முடியாது.

பலவிதமான உருவங்களில் காட்சியாக அறியப்படுகின்ற பொருள்களை அறிபவளே அந்த அறிவு (சித்) ஆகும். அறிபடு பொருள்களின் அந்தந்த பல பெயர்களுக்கும் உருவங்களுக்கும் ஏற்றவாறு, அறிபவள் பலவாக ஒருபொழுதும் மாறுவதில்லை. அத்தகைய, நாம, ரூப பேதங்கள் அனைத்துமே, அறிபடுப் பொருள்களில் (காணுகின்ற காட்சிகளில்) மட்டுமே உள்ளன வேயன்றி, அறிபவளிடத்தில் எந்த பேதமையும் கிடையாது.

அதாவது, அந்த சித்திடம் எந்த வேறுபாடும் கிடையாது. காணும் பொருள்களின் (காட்சிகளின்) உருவங்களின் தன்மையைப் பொருத்து, பேதங்கள் விளங்குகின்றன. ஆனால், உருவமற்ற அறிபவளிடத்தில் ஒருபோதும் பேதங்கள் இல்லை.

எவ்வாறு, முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று மட்டுமே இருந்தாலும், அதன் வாயிலாகக் காணப்படுகின்ற அனைத்துமே, பலவாறான பிரதி பிம்பங்களாக, அந்த ஒரே கண்ணாடியின் மூலமாகவே காட்டப்படுகின்றன. அவ்வாறே, சித் (அறிவு) ஒன்று மட்டுமே இருந்தாலும், அதன் வாயிலாகக் காணப்படுகின்ற அனைத்துமே, பலவாறான பிரதி பிம்பங்களாக, அந்த ஒரே சித்தின் (அறிவின்) மூலமாகவே காட்டப்படுகின்றன.

இவ்வாறு, அந்த அறிவுக்கு வேறாக அறியப்படுகின்ற பொருள்களை இதுவல்ல!, இதுவல்ல! என்று நீக்கி, உற்று உள்

நோக்கிப் பார்த்தோமானால், அதை அறிபவளை அறியலாமே தவிர, மற்ற பொருள்களை அறிவதுப்போன்று இந்த சித்தை அறிய முடியாது. ஏனென்றால், அந்த சித்தானவள் அறிகின்றவனுடைய சொரூபமாகவே இருக்கின்றதினால், அறியப்பட அவளுக்கு வேறாக ஒன்றுமே இல்லை.

அஷ்டாவக்ரரே! உமது சொரூபத்தை விசாரித்துப் பாரும். நீர் இந்த உடல் அல்ல, பிராணன் அல்ல, மனம் அல்ல, இவைகள் அனைத்துமே பல பேதமைகளுடன் கூடிய நிலையற்ற தன்மை கொண்டதினால், நிச்சயம் சித்தாக இருக்க முடியாது. எந்த ஒரு காரணத்தினாலும் மாற்றத்திற்கு உட்படாத, நிலையான, அஹம் என்ற எண்ணத்தை கைவிடாத சித்தானவள் நிறைந்து இருக்கின்றாளோ? அவளே யாவற்றையும் அறிபவள்.

ஆக, உண்மையில் அவள்தான் நீர். இதுவரை நான் கூறியது கற்பனையன்று, அனுபவித்து அறியக்கூடிய ஆழமான அறிய உண்மை நிலையை அனுபவமாக உள்ளே திரும்பி, அகக் கண்களால் அந்த ஆத்மாவைப் பார்வையிடும்.

இதைப்பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அலட்சியம் காட்டாமல், உத்தம புத்திமான்கள் உபதேச காலத்திலேயே தங்கள் ஆத்ம சொரூபத்தைப் பார்த்துக் கொள்வார்கள்.

அவ்வாறு பார்க்கக்கூறியது உங்களது புறக்கண்களான இந்த ஊனக் கண்களை கொண்டு அல்ல. சற்றே திரும்பி, உங்கள் உள்ளே கனவுக் காட்சிகளைப் பார்க்கின்ற அகக் கண்களை கொண்டு பார்க்கும்படி கூறினேன். எவ்வாறு, அகக் கண்களைக் கொண்டு, உள்ளே திரும்பிப் பார்க்க முடியும் என்பதைப்பற்றி, இனியும் கூறுகின்றேன் கவனமாக கேளுங்கள் முனிபுத்திரரே! என்று ஜனகர் பின்வருமாறு கூறத் தொடங்கினார்.

அஷ்டாவக்கிரரே! கண்களின் திரும்புதல் எவ்விதம் என்றால், ஒரு பொருளைப் பார்க்க வேண்டுமென்றால், அதற்கு முன்பு பார்த்துக் கொண்டிருந்த பொருளிலிருந்து மனதைத் திருப்புவதுடன் மட்டும் நில்லாமல், இனி பார்க்கப்போகின்ற பொருளுடன் மனதைக் கொண்டு சென்று, அதனுடன் ஒன்றினால்தான் அந்த பொருள் பார்க்கின்றவனுக்கு இன்னது என்று புலப்படும். மனம் அந்தப் பொருளுடன் ஒன்று சேராமல், அங்கு காட்சி தோன்றாது.

இதுப்போன்றே மனம் கலவாதபோது, காதும் கேட்பதில்லை. உடலும் உணர்வதில்லை. அதாவது, மனம் இன்றி எந்தப் புலன்களும் எதையும் அறிய முடியாது.

மேலும், மனதிடத்தில் உண்டாகும் சுகமும், துக்கமும் மனதின் கலப்பாலேயே உண்டாகின்றது. மனம் எதைப் பற்றிக் கொண்டுள்ளதோ? அதிலிருந்து விடுபட்டு திரும்பாமல், மற்ற எந்த ஒன்றையும் அறிய முடியாது.

அதுப்போலவே, மனம் ஒரு பொருளைப் பார்க்க விரும்பினால், அப்பொருளிடம் ஆசை உண்டாகவேண்டும். அப்பொழுதுதான், ஏற்கனவே பற்றிக் கொண்டிருக்கின்ற ஒன்றை விட்டு விட்டு, புதிய பொருளை விரும்பி, அதைப் பற்றுவதினாலேயே, மனம் திரும்ப முயற்சிக்கின்றது. அத்துடன், அது ஏற்கனவே பற்றிக் கொண்டிருந்த பொருளிடமிருந்து விடுபட்டு, மனதை இந்த பொருளுக்கு திருப்பவும் முடிகின்றது.

ஆக, மனம் இரண்டு காட்சிகளை ஒரே சமயத்தில் பற்றிக் கொள்ளாது. உதாரணமாக, ஒரே காட்சியில் ஒரு பறவை யையும், ஒரு மரத்தையும் ஒன்றாகக் கண்டாலும், மனம் உடனே ஆராய்ந்து, அது ஒரு காகம் என்றும், அந்த மரம் ஒரு தென்னை மரம் என்றும், பிரித்தே அறிந்து கொள்ளும். காரணம், மனதின் முற்பதிவுகளைப் பொருத்தே, அவைகளை இவ்வாறு பிரித்து அறிந்து கொள்ளும்.

## <u>மனம்</u>

{குறிப்பு:– மனம் பற்றிய இரகசியம் வெளிப்படுத்தப்படுகின்றது.}

மனம் என்பது "**ஜீவன்**" ஆகும்.

ஆம்! இந்த ஜீவன் ஆத்ம சொரூபத்தின் பிரதி பிம்பிக்கின்ற ஓர் அதிசயசக்தி என்பதை அறியாததினால், அஹங்காரத்தின் உச்சத்தில் தன்னை "நான்" என்று சதா பிரகடனப்படுத்திக் கொண்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட ஜீவனின் சூக்ஷும சரீரம்தான் கண்ணுக்குத் தெரியாத மனம். எண்ணங்களாகத் தோன்றுகின்ற நினைவுகளையெல்லாம் நீக்கிப் பார்க்கின்ற பொழுது தனியாக மனம் (ஜீவன்) என்ற ஒன்று இல்லை. சம்ஸ்காரங்களாக (காரண தேகத்தில்) பதித்துக் கொண்ட நினைவுகளின் சொரூபமே மனம்.

அதாவது, ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களில் எழுந்த நினைவுகளாலேயே இந்த உலகை படைத்துக் கொண்டு, இதனுடன் ஒன்றி, நான் படித்தவன், நான் பணக்காரன், நான் சிவ பக்தன், நான் சக்தி உபாசகன், நான் சேவை செய்பவன், நான் பொறுக்கி, நான் அப்பாவி, நான் பகுத்தறிவுவாதி, நான் அரசியல்வாதி, மந்திரி, பக்தன், ஞானி, யோகி என்று பலவாறாக தன்னை கற்பனை செய்துக்கொண்டு,

அதிலேயே சிக்கிக்கொண்டு நினைவுகளின் பதிவுகளிலிருந்து வெளியே வர மறுக்கின்றது.

அதேசமயம், இந்த மனம் ஆத்ம சொரூபத்திலிருந்து பிரதிபிம்பித்து, வெளியே வந்ததினால், இந்த உலகம் உண்மையாகத் தெரிகின்றது. இதே மனம் மீண்டும் திரும்பி, தன் சுயத்தை அறிந்த, அந்த ஆத்மாவுடன் சென்று ஒன்றாக ஒடுங்கினால், இனி மனதிற்கு இந்த உலகம் தனக்கு வேறாகத் தெரியாது.

அதாவது, அனைத்தையும் அறிவு இந்த மனதின் மூலம் பிரகாசிப்பதினால், அந்த பிரகாசத்திற்குக் காரணமான மூலத்தை மனம் அடையும்போது, தன்னைப் பற்றிய தவறான பதிவுகள் நீங்கி "நான் ஆத்மா" என்ற உண்மை நிலைக்கு வந்து, தன் சொரூபத்தில் நின்று விடும்.

அதன்பிறகு, இருமைகள் அற்ற எந்த பேதங்களும் இன்றி தன்னில் தானாய் சொரூபத்தில் இந்த ஸ்தூல உடல் இருக்கின்றவரை, இந்த பூமியில் இருந்துவிட்டு, அதன் பிறகு எங்கும், எதிலும், எப்பொழுதும் இருக்கின்ற சுத்த, புத்த, முக்த சுயம் பிரகாச ஆத்மாவாக பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

இந்த நிலையை அடையத்தான் அனேக ஜெனங்கள் பாதை தெரியாமல், பல மதங்களை உருவாக்கிக் கொண்டு அலைகின்றார்கள்.பல்வேறு மதங்களின் பிடியில் சிக்கிக் கொண்ட மனிதன் (ஜீவன் அல்லது மனம்) தன்னை அறிய ஆர்வம் இல்லாமலும், தன்னை அறியும் ஆர்வம் வந்தாலும், எப்படி அதை அறிவது? என்று தெரியாமல், இந்துவாகப் பல தீர்த்த ஸ்தலங்களுக்கும், கிறிஸ்துவனாக பல சர்ச்சுகளுக்கும், முஸ்லீமாக பல தர்காக்களுக்கும் சென்று இறைவனைத் தேடுகின்றனர்.

அத்துடன், இவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொடுக்கின்ற ஒரு கருவியாக மட்டுமே, அவர்களது கடவுளைக் காண்கின்றனர். மேலும், பலவிதமான பயிற் சாதனைகளைப் பிடித்துக் கொண்டு (பூஜை, ஜபம், பிராணாயாமம், யோகா, உபாசனை, கர்மங்கள்) மனதை சுத்தி செய்யாமல், அந்த சாதனைகளையே தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டு, அதிலேயே இது உயர்ந்தது, இது தாழ்ந்தது என இருமைகளால் சிக்கிக் கொண்டுள்ளது.

மேலும், இதே மனம் ஞானம் எனக்கு வராது, பக்தி எனக்கு போதும், யோகா மட்டுமே சிறந்தது, இறை நாமத்திற்கு நிகர் எதுவுமில்லை, என்னுடைய சிவன் பெரியது, கிறிஸ்து இரட்சிக்கின்றவர், அல்லா அனைத்துக்கும் ஆதாரம் என்றவாறு

பலவிதமான அறியாமைகளை வளர்த்துக் கொண்டு, சித்த சுத்திக்காக மட்டுமே, இந்த சாதனைகள் என்பதைக்கூட ஏற்றுக்கொள்ள மனமின்றி, தன் மனம் போன போக்கில் போய்க் கொண்டிருக்கின்றார்கள். இதைச் சுட்டிக் காட்டத்தான் **சத்குருவும், சாஸ்திரமும்** தேவைப்படுகின்றது.

இப்படிப்பட்ட மனதின் வெளிமுகப் பார்வையில் அது இரண்டு நிலைகளில் செயல்படுகின்றது. அவைகளில் ஒன்று **பார்த்து அறிதல்**, மற்றொன்று **திரும்பி அறிதல்** என்ற இரு நிலைகளாகும். மனதின் இந்த இருமைத் தன்மையே பொருளைக் காட்சிப்படுத்துகின்றது. ஆனால், ஆத்ம சொரூபத்தை அறிய வேண்டுமானால், மற்ற வெளிப் பொருள்களை பற்றியுள்ள மனதை, அதிலிருந்து விடுவித்து உள்முகமாக திருப்புதல் மட்டுமே செய்தால் போதுமானது.

அவ்வாறு திருப்பி விடப்பட்ட மனம், அகமுகமாக திரும்பியவுடன், அங்கே பற்றிக்கொள்ள ஏகவஸ்துவான சிதாத்மாவைத் தவிர, பேதமை கொண்ட இருமைகள் இல்லாத காரணத்தினால், இத்தனை காலம் அறியாமல் இருந்ததன் மூலத்தை உணர்ந்து, அந்த சிதாத்மாவுடன் தன்னை கரைத்துக் கொள்கின்றது. இனி, மனதிற்கு வேலையில்லை.

இனி, இருப்பது அந்த **சித்** (அறிவு) மட்டுமே என்பதினால், இவ்வளவு காலமும் வெளிப்பொருட்களைப் பார்த்து, அவைகளை எல்லாம் தனக்கு வேறாக எண்ணி, மயங்கிக் கொண்டிருந்த மனம், அதிலிருந்து விடுபட்டு உள்முகமாகி விட்டதால், **காண்பவன், காட்சி, காணப்படுபவைகள்** அனைத்தும் அந்த அறிவுக்கு வேறாக இல்லை என அறிந்து, அந்த ஆத்மாவின் முன்னால், தன்னையும் இழந்து செயலற்றுப் போகின்றது.

ஆனால், இதைச் செய்யாமல் சதா வெளி விசயங்களில் அலைபாய்கின்ற மனமானது, உள்ளே திரும்பிப்பார்க்காதவரை, சித்தை அறிவதற்கு பெருந்தடையாக இருக்கின்றது. ஆகவே, மனதிற்கு அதன் உண்மை சொருபத்தைக் காட்டிக் கொடுக்க வேண்டும். அப்போது மட்டும்தான் மனம் அடங்கும்.

அது எவ்வாறு எனில், கண்ணாடி முன்னால் நின்று பிரதி பிம்பத்தை மட்டும் பார்த்து பழகி வந்தவன், அந்த பிம்பத்தைக் காட்டும் கண்ணாடியை அடையாளம் கண்டு கொண்டவுடன், அந்த கண்ணாடியில், இதுநாள் வரை பார்த்த பிம்பம் தன்னுடைய பொய்யான பிரதி பிம்பம் என்பதை அறிவதுப்போன்று, சித்தை அறிந்துக் கொண்டவனுக்கு, இதுநாள்வரை பார்த்த, இந்த உலகம் அதனுடைய பிரதிபிம்பம் என்றும், அது பொய்யானது என்றும், உண்மை விளங்கும்.

அவ்வாறு, தன் உண்மை சொரூபத்தை அறிந்தவன் வெளி விவகாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், அதைக் கண்டு மயங்கவோ, ஆசைப்படவோ செய்யாமல், தன் சொரூப இருப்பில் எப்பொழுதும் ஆனந்தமாக இருப்பான்.

(புறக்கண்களால் வெளி விசயங்களைக் கண்டு மயங்கிய மனம், அகக் கண்ணால் ஆத்மாவை அறிந்து அமைதி அடையும்.)

இந்த விசயத்தில் அற்ப மனம் ஆத்மாவை அறிய முடியுமா? மேலும், உடல், மனம், புத்தி போன்ற அனைத்தையும் இல்லை, இல்லை (நேதி, நேதி) என்று விலக்கி விட்டால் மட்டுமே, ஆத்மாவை அறியமுடியும் என்பதை வெளிமுகமாக விசாரித்து, அற்ப மனதினால் ஆத்மாவை அறிய முடியாது என்ற எண்ணத்தில், மகா பண்டிதர்களில் பெரும்பாலானவர்கள் ஆத்ம இரகசியத்தை நேரடி அனுபவமாக அறியாமலேயே ஆத்மாவைப் பற்றி அதிகம் பேசிக்கொண்டு அங்கும், இங்கும் அலைந்துக் கொண்டிருப்பார்கள். ஒரு கண்ணாடியில் பிம்பம் மாத்திரமல்ல, ஆகாசமும் (வெளி) அங்கு காணப்படுகின்றது என்பதை அனைவரும் அறிந்ததே. பிரதிபிம்பிக்கின்ற பிம்பத்தை மட்டும் கவனிப்பவனுக்கு, ஆகாசத்தில் (வெளியில்) கண்ணாடி இருப்பதைக் கண்டு கொள்ள முடிவதில்லை.

ஆகாசம் (வெளி) கண்ணாடி முழுவதும் வியாபித்துள்ளது. ஆகாசத்தை அறிய பிம்பங்களிடமிருந்து பார்வையை மட்டும் திருப்பினால் போதுமானது. இதுவரை ஆகாசத்தை அறியவிடாமல் தடுத்துக் கொண்டிருந்தது பிம்பங்களே என்பதினால், பிம்பங்களிடமிருந்து பார்வையை திரும்புதல் மட்டுமே ஆகாசத்தைக் காட்டுகின்றது.

அதுப்போலவே, சித்தானவள் ஆகாசத்தைப் போன்று, எங்கும், எதிலும், எல்லாக் காலத்திலும், பரந்து, விரிந்து வியாபித்து இருக்கின்றாள். அவள் இல்லாத இடமே இல்லை. அவளே வெளியாக மனதிலும் நிரம்பியுள்ளாள். எனவே, வெளிப் பொருட்களிடமிருந்து மனதை திருப்புதல் மட்டுமே சித்தைக் காட்டுகின்றது.

ஒரு பானையில் நிரப்பி வைக்கப்பட்ட தானியங்களை வெளியே எடுத்து விட்டால், அந்த பானையில் எப்பொழுதும் இருக்கின்ற ஆகாசம் அகப்படும். அதுப்போன்று, மனதில் நிரப்பி வைக்கப்பட்ட விசய, சுகங்களை வெளியே எடுத்து விட்டால், அந்த மனதில் எப்பொழுதும் இருக்கின்ற சித் அகப்படும். சித் இன்றி எதுவுமில்லை. சித்தை அறிந்த மனமானது, தன் உண்மை நிலையும் அதுதான் என்று அமைதியடைந்து விடுகின்றது.

இப்படிப்பட்ட மனதின் உண்மை அமைதியையே சாந்தி, சமாதி, மௌனம், மோக்ஷம், முக்தி என்று பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

## குறிப்பு:–

**("அறிபவள் (சித்) இல்லை என்றால், அறியப்படும் பொருளும் (மனம்) இல்லை".)**

இதைத்தான் எது காண்கிறதோ? அது அவ்வடிவாகவே ஆகின்றது என்பதை, சூக்ஷுமமாக கவனித்து அறியப்பட வேண்டியது அவசியம் என்று ஏற்கனவே கூறப்பட்டது. எதுவரையில், மனது தூய்மையாக மாறவில்லையோ? அதுவரையில், ஆத்மஞானம் எப்படி உண்டாகும்? மனம் தூய்மையாக இருந்தால், ஆத்ம ஞானம் ஏன் எளிதில் உண்டாகாது?

எல்லா சாதனங்களும் முடிவில் சித்த சுத்தியை மட்டுமே உண்டாக்குகின்றது. ஆகவே, சித்த சுத்தி நடைப் பெறத் தேவையான சாதனை எதுவோ? அதுவே, உண்மையில் சாதனை என்று கூறப்படுகின்றது. அது புறத்தில் நாட்டம் கொண்ட மனம் வெளி விசயங்களில் இருந்து விடுபட்டு உள்ளே திரும்புவது மட்டும்தான்.

அதுமட்டும்தான் ஆத்மாவை அனுபவமாக அறிவதற்கான மிக முக்கியமான சாதனமென்று அறிய வேண்டும். இதை விடுத்து, எண்ணங்களுடன் எப்பொழுதும் "**நான்**", "**நான்**" என்று எது வெளிப்படுகின்றதோ? அது தூய்மையாகாத **மனம்** எனப்படுகின்றது.

மனதில் தோன்றுகின்ற பலவிதமான எண்ணங்களைக் கொண்ட நினைவுகளுக்கு எல்லாம் தலையாய முதல் நினைவு இந்த "**நான்**" என்ற முதல் நினைவே ஆகும். இதற்குப் பிறகுதான் மற்ற நினைவுகள் எல்லாம் தோன்றுகின்றன.

இந்த "**நான்**" என்ற நினைவை மனதினால் நீக்க முடியாது. காரணம், அதன் மூலமான ஆத்மாவிலிருந்து இந்த "**நான்**" வெளிப்படுவதால், இது தன்னையே (மனம் அல்லது ஜீவன்) "**நான்**" என்று நினைத்துக் கொண்டு விடுகின்றது.

அதனால், வெளிமுகமாக தன்னை "**நான்**" என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற, மனதை உள்முகமாக திருப்பிவிட்டு, அந்த மூலத்தை கவனிக்கத் தொடங்கினால், அங்கு தூய அறிவாகிய, ஆத்மாவை மட்டுமே கண்டு, அதில் ஒடுங்குகின்ற மனமானது "**நான்**" என்ற தன் முனைப்பான அஹங்காரத்தை இழந்து, அந்த சித்தை (அறிவை) மட்டுமே குறிப்பிடுகின்ற உண்மையான "**நான்**" ஆக மாறிவிடுகின்றது.

இவ்வாறு மனம் மாற, மனதில் தோன்றுகின்ற எண்ணங்களை இது யாருக்கு உண்டானது? என்று அகமுகமாக விசாரித்து அறிய முற்படும்போது, எனக்கு என்று முதலில் தோன்றும், இதில் என்னையே "**நான் யார்?**" என்று, மேலும் விசாரிக்கும்போது, அந்த "**நான்**" என்பது "**ஜீவன்**" என்று அடுத்து புரியவரும். மீண்டும், அந்த ஜீவன் என்பவன் யார்? என்று விசாரித்து அறிய முற்படும்போது, அதுவும் "**நானே**" என்று மீண்டும் தன்னை வெளிப்படுத்தும்.

இவ்வாறு "**நான்**", "**நான்**" என்று கூறுகின்றவன் யார்? என்று மேலும், மேலும் ஆராயும்போது, அதுவே தன் சுய சொரூபம் என்பது தெரியவரும். இவ்வாறு, மனதை தீர விசாரிக்கும்போது, தன்னைத் தவிர ஒன்றுமில்லை என்ற உண்மை புரிய வரும்.

ஆக, ஜீவனாகிய தானே ஆத்மாவாகவும், ஆத்மாவிலிருந்து பிரதிபிம்பிக்கின்ற ஜீவனாகவும் இருப்பதை, ஒன்றே என அறிய முடியும். இதுவே, ஆத்ம ஞானம். இதை அனுபவிப்பதே ஆத்மானுபவம். இதுவே, **இறை தரிசனம்**. அதன்பிறகு, இங்கு "இருப்பதெல்லாம் இறைவனே! அந்த இறைவனைத்தவிர வேறொன்றும் இல்லை!" என்ற உண்மை வெளிப்படும்.

தன்னை அறியாமல் அந்த ஆத்மாவை அறிய முடியாது. ஆத்மா எது? என்று தெரியாமல் இறைவனை அறிய முடியாது. இறைவனை அறியாமல் செய்கின்ற பூஜை, புனஸ்காரங்கள், கர்மங்கள், உபாசனைகள், ஜப தபங்கள் போன்ற சாதனைகள் அனைத்தும் பயன் தராது.

இந்த ஆத்மாவின் பிரதி பிம்பம்தான் "**நான்**" என்ற அறிவு மனதிடம் உண்டாகிவிட்டால், அதன்பிறகு அந்த மனம் (ஜீவன்) தன்னை "**நான்**" என்று ஒருபொழுதும் கூறமுடியாது. அது ஆத்மாவிற்கே உண்டான சுயம்பிரகாச "**நான்**" என்பதை யறிந்து அமைதியாகி விடும். இவ்வாறு தன் பிறப்பிடத்திற்கே திரும்பிய மனம், அதன்பிறகு வெளியே எதைச் செய்தாலும், அது ஈஸ்வர காரியம் (அதாவது, ஆத்மாவின் பிரதி பிம்பிக்கின்ற செயல்) என்பதில் தெளிவாக இருக்கும்.

அதன்பிறகு ஆத்ம நிஷ்டனாக மனம் உலக விவகாரங்களில் ஈடுபட்டாலும், உண்டாலும், உறங்கினாலும், பேசினாலும், தொழில் செய்தாலும், பாடங்களை எடுத்தாலும், பாடிக்கொண்டிருந்தாலும், பல காரியங்களை செய்துப் பலரால் பாராட்டப்பட்டாலும், தூற்றப்பட்டாலும் அவைகளால் அந்த மனம் பாதிப்படையாது. அவனே **ஜீவன் முக்தன்**. அவனே **யோகி**, அவனே **ஞானி**.

இவ்வாறு, மனம் ஆத்மாவிடம் ஐக்கியப்பட்டு ஆற்றுகின்ற காரியங்களால் ஜீவனுக்கு (மனதிற்கு) ஆகாமிய கர்மம் உண்டாகாமல் தடுக்கப்பட்டு, பிராரப்த கர்மாவின்படி உடல் (மனதின் ஸ்தூல உடல்) இருக்கின்றவரை, இந்த உலகத்தில் பல காரியங்களை செய்துக்கொண்டு, எப்பொழுதும் ஆத்ம நிஷ்டையில் ஜீவன் முக்தனாக இருந்துக் கொண்டு, ஒரு நாள் இந்த ஸ்தூல உடலை விட்டு விடும்.

இந்த ஸ்தூல உடலை விட்டு, விதேக முக்தி அடைந்த மனம் அந்த பரப்பிரம்மத்துடன் இரண்டறக்கலந்து விடுகின்றது. அதனுடைய பிறப்பிற்கு, உடல் கிடைக்க காரணமாக இருந்த, கண்ணிற்குத் தெரியாத, காரண தேகத்தில் சேர்த்து வைத்துள்ள பல பிறவிகளின் பதிவுகளான (சம்ஸ்காரங்கள்) சஞ்சித கர்மா – வும் மனம் (ஜீவன்) இல்லாததால் பயனற்று விடுகின்றது.

இவ்வாறு, மனம் (ஜீவன்) தன் மூலத்தில் (சித்தில்) இணைந்து விட்டதால், அது தன் தனித்துவத்தை இழந்து விட்டது. இனி மனமும், ஆத்மாவும் ஒன்றே. இதுப்போன்று மூன்று கர்மாக்களையும் கடந்த மனம் (ஜீவன்) கால தேசத்தை கடந்த நித்திய, நிர்மல சித்தாகவே (ஆத்மாவாகவே) எங்கும், எப்பொழுதும், எல்லாக் காலங்களிலும் இருக்கும்.

அது பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. இதுவே, பிறவாமை எனும், பெரு நிலையை அடைகின்ற வழி என்பதை அறிவீராக!. வெளி விசயங்களை நினைவுகளாகப் பிடித்துக் கொண்டிருந்த மனம், இருமைகளற்று, திரும்பி அகமுகமாக உள்ளே பார்த்து, அந்த அறிவுடன் ஐக்கியமடைவதை ஜீவ – பிரம்ம ஐக்கியம் என்று அழைக்கப்படுகின்றது.

(மனம் = ஜீவன்).

ஆதியான அந்த ஆத்மாவிலிருந்து பிரதிபிம்பித்த மனம் (ஜீவன்) மீண்டும் திரும்பி உள்முகமாக அந்த ஆதியுடன் சமமாக ஒன்றுவதைத்தான் **"சமாதி"** என்று அழைக்கப்படுகின்றது. ஆகவே, இந்த உலகம் உண்மையாகத் தோன்றுவதற்கு மனதின் பல்வேறு நினைவுகளே காரணம் ஆகும். இந்த நினைவுகளை நீக்கிப் பார்க்கின்றபொழுது, தனியாக மனம் என்ற ஒன்று இல்லை. மனம் ஆத்ம சொரூபத்திலிருந்து விடுபட்டு வெளிப்படும்போது இந்த உலகம் தோன்றுகின்றது. எனவே, இந்த உலகம் உண்மையாகத் தோன்றும்வரை, ஆத்ம சொரூபம் தோன்றாது. ஆத்ம சொரூபம் தோன்றும்போது, இந்த உலகம் தோன்றாது. ஜனகர் கூறிய ஆத்மாவை அறியும் உள் விசார முறையை அறிந்துக்கொண்ட அஷ்டாவக்கிரர், மீண்டும் கேட்கின்றார்.

"ஓ ராஜனே! ஆனாத்ம வஸ்துக்களில் இருந்து (வெளி விசயங்களில் இருந்து) மனமானது உள் நோக்கி திரும்புவ தினால், அந்த ஆத்ம சொரூபம் தோன்றுகின்றது எனில், ஆழ்ந்த தூக்கத்தில் மனம் எந்த விதமான அந்நிய விசயங்களில் ஈடுபடாதவாறு, உள்முகமாகத் திரும்பி இருக்கின்ற பொழுதும், அந்த ஆத்ம சொரூபம் அப்பொழுதும் தோன்ற வேண்டுமே? அதை ஏன் தூக்கத்தில் விளங்கிக் கொள்ள முடியவில்லை? பிறகு ஏன் விழிப்பு நிலையில், இதுப்போன்ற சாதனைகள் தேவைப்படுகின்றன?" என்று அஷ்டாவக்கிரர் கேட்டார்.

இவ்விதம் அஷ்டாவக்கிரரின் ஆட்சேபமான வார்த்தை களையும், சந்தேகங்களையும் கேட்ட ஜனகராஜன் பின்வருமாறு கூறத்தொடங்கினார்.

"முனிகுமாரரே! உங்கள் சந்தேகம் சரியானதுதான். ஆழ்ந்த உறக்கத்தில் மனம் வெளி விவகாரங்களை விட்டு, விட்டு, உள்ளே திரும்புதல் உண்டு என்பதை எவ்விதத்திலும் மறுக்க முடியாது. ஆனால், ஆழ்ந்த உறக்கத்தில் மனம் தமோ குணத்தினை அடைவதினால், தன்னுடைய இயல்பான "நான்" என்ற அஹங்காரத்தின் வலுவிழந்து காணப்படும். அப்பொழுது அது எதையும் அறிந்து கொள்ளும் ஆவல் இன்றி ஜடம் போலத்தான் இருக்கும். இந்நிலையில் திரும்பிய மனம் சித்தின் சொரூபத்தை எவ்விதம் அறிய முடியும்?

அதாவது ஆழ்ந்த உறக்கத்தின் காரணமாக, மனமானது செயல் இழந்து ஜடம் போன்று மாறி, சித்தைக் காணக்கூடிய தகுதியை இழந்து விடுகின்றது. ஜடம் சித்தைக் காண முடியும் என்றால், ஜடமான மரக்கட்டையும் சித்தைக் கண்டு விடுமே?

ஆகையினால், விழிப்பு நிலையில் உள்ள மனதிற்கு மட்டுமே எதையவது அடைய வேண்டும் என்ற ஆசை இருப்பதினால், தற்பொழுது பற்றிக் கொண்டிருக்கும் ஒன்றை விட, சிறப்பானது என்று மற்றொன்றை நினத்தவுடன் இதை விட்டு, விட்டு, அதை பற்றிக்கொள்ளும் திறன் கொண்டது. அதனால், மனதை, மற்றொன்றின் மீது ஆசையை திருப்பி விட்டால், விரைவில் அதை அடைய முயற்சிக்கும்.

இவ்வாறு வெளிப்புறத்தில் பல எண்ணங்களை விருத்தி செய்கின்ற மனம் உள்ளே திரும்புவது என்பது, அன்றாடம் ஆழ்ந்த உறக்கத்தில் நடைப்பெற்றாலும், அது உள்ளே திரும்பியவுடன் உறக்கத்தின் காரணமாக, அங்கு தமோகுணம் ஓங்கியிருக்கும் நிலையில், இருள் சூழ்ந்துள்ளதால், அதனால், ஆத்மாவை அறிய முடிவதில்லை.

இதனால்தான், விழிப்பு நிலையில் இருமைகளால் சூழப்படாமல், அந்த ஏக அறிவைக் காணும் ஆர்வமுள்ள சுத்தமான மனம், தன் உள்ளே கவனித்தவுடன், அங்கு சித்தின்

சுயப்பிரகாச "**நான்**" தன் சுய சொரூபத்தை விளக்குவதால், அந்த "**உண்மையான நான்**" என்பதுடன், இந்த பொய்யான "**அஹங்கார நான்**" தன்னை இழந்து விடுகின்றது.

இருமைகளற்ற தூய்மையான மனதினில்தான், அந்த சித்தானவள் விளங்குகின்றாள். இருமைகளால் சூழப்பட்ட எண்ணங்கள் அதிகம் கொண்ட மனம் சித்தை விளங்கிக் கொள்ளும் தகுதியை இழப்பதற்குக் காரணம், தனக்கு வேறாகப் பலவற்றை துவைதத்தில் பார்க்கின்ற மனம் அத்வைதத்தில் சித்தை அறிய இடம் கொடுப்பதில்லை. அதாவது, காலியான பானையில் நீரை நிரப்புவதற்கும், ஏற்கனவே நீர் நிரம்பிய பானையில் நீரை நிரப்புவதற்கும் உள்ள வித்தியாசமே, இரண்டற்ற தூய்மையான மனதிற்கும், பலவற்றைப் பதித்து வைத்துக் கொண்டுள்ள மனதிற்கும் உள்ள வித்தியாசம் ஆகும்.

இதுப்போன்றே, மனதில் இருமைகள் ஏதுமற்ற, இன்று பிறந்த குழந்தைக்கும், தூய்மையான மனம் இருந்தும், அந்தக் குழந்தை தமோகுணம் கூடிய, மந்த நிலையில் உள்ளதால், அதனிடத்தில் சித் பிரகாசிக்காது. அதனால்தான், பிறந்த குழந்தைக்கும் ஒன்றும் விளங்குவதில்லை. தன் முன்னே காட்சியாகும் எதையும், பிரதிபிம்பித்து காட்டும் குணமுடைய கண்ணாடியானது, தன் மீது பூசப்பட்ட பாதரசத்தினை பிரதிபிம்பித்து காட்டுவதில்லை.

ஏன் காட்டவில்லை என்றால், கண்ணாடியும், பாதரசமும் ஒன்றுபட்டு இருக்கின்றக் காரணத்தினால், கண்ணாடியிடம் பிரதிபிம்பம் உண்டாகவில்லை. ஆனால், கண்ணாடியின் குணம் பிம்பங்களை பிரதிபிம்பித்து காட்டும் தன்மை கொண்டது என்றாலும், தன்மீதே பூசப்பட்ட பாதரசத்தின் பிம்பத்தை அதனால் பிரதிபிம்பிக்க முடியாது.

இதுப்போன்றே, ஆழ்ந்த உறக்கத்தில், மனம் தமோ குணம் கூடிய உறக்கத்துடன் ஒன்றுபட்டு இருக்கின்ற காரணத்தினால், அது அந்நிய விசயங்களை காணாது இருந்தும், தன்னுள்ளே திரும்புதலுக்கு இடமின்றி, ஆத்மாவை அறிய முடியவில்லை. அதனால்தான் தூக்கத்திலிருந்து விழித்து எழுந்தவுடன் யாதொரு மூடத்தன்மை அனுபவிக்கப்பட்டதோ? அது ஞாபகத்திற்கு மட்டுமே வருகின்றது.

இதை அறியாத பலரும் ஆத்மாவை அறிய விரும்பி, தியானம் செய்ய ஆரம்பித்து, ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்று ஆனந்தமாகத் தூங்கிவிட்டு, விழிப்பு வந்தவுடன் நான் ஆனந்தமாக தியானத்தில் இருந்தேன் என்று தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கின்றனர். இவர்கள் மனதின் தமோகுண நிலையான அமைதியை சித்தின் அனுபவமாக தவறாக நினைக்கின்றனர். இவர்களது மனம் உறக்கத்தில் அமைதிக்குப் போகாமல், தமோ குணத்திற்குப் போகின்றது.

இது தெரியாமல், ஆழ்ந்த உறக்கத்தை, ஆனந்தமான தியானம் என்று கூறுகின்றனர்.

ஹே! ஜனக மகராஜனே, மனம் விழிப்பு நிலையில் எண்ணங்களற்று அடங்கினால், ஆத்ம பிரகாசம் விளங்கும் என்றால், விழிப்பு நிலையில், பிராணாயாமம், வாசியோகம் போன்றவற்றினால் மனதை அடக்கி ஆத்மாவை அறிய முடியாதா?

மனதிற்கும், பிராணனுக்கும் பிறப்பிடம் ஒன்றே. பல எண்ணங்களுடன் கூடிய நினைவே மனதின் சொரூபம். இதில் "நான்" என்ற நினைவே முதல் நினைவு என்றும், அதுவே அஹங்காரம் என்றும் அறியப்பட்டது. அஹங்காரம் எங்கிருந்து உற்பத்தியாகின்றதோ? அங்கிருந்துதான் மூச்சும் வெளிப்படுகின்றது. இதில், மனம் அடங்கும்போது, பிராணனும் அடங்கும். பிராணன் அடங்கும்போது, மனமும் அடங்கும். அதுவே, உறக்கத்தில் மனம் தமோ நிலையில் அடங்கி இருந்தாலும், அங்கு பிராணன் அடங்கவில்லை.

காரணம் உடலின் பாதுகாப்பு கருதி, உறக்கத்தில் உடல் மடிந்து விட்டது என்ற சந்தேகம் தோன்றாமல் மூச்சு மட்டும் செயல்படுமாறு ஈஸ்வர நியதி ஏற்பட்டிருக்கின்றது. விழிப்பு நிலையில் மூச்சை அடக்கினால், மனம் அடங்கும்.

ஆனால், மூச்சை அடக்கி மனதை அடக்க முயற்சிப்பது ரஜோகுணத்தில் நடைப்பெறுவதால், ஆத்மா அங்கும் அனுபவப்படுவதில்லை. இந்த பிராணயாமம், வாசியோகம் போன்றவைகள் எல்லாம் மனதை அடக்க உதவியாக இருந்தாலும். இருமைகளுள்ள நிலையில் மனம் தூய்மை யாகாது.

ஏனெனில், பிராணன் அடங்கி இருக்கின்ற வரையில், மனமும் அடங்கியிருக்கும். பிராணன் வெளிப்படும்போது, மனமும் வெளிப்பட்டு வாசனைகளின் வசத்தால், மீண்டும் அலையும். இந்த பிராணாயாமம், வாசியோகம் போலவே மூர்த்தி தியானம், மந்திர ஜபம், ஆகார நியமம் போன்ற அனைத்து சாதனைகளும் மனதை அடக்கும் பயிற்சி முறைகளே ஆகும். இந்த சாதனைகளை விட்டுவிட்டால் மனம் மீண்டும் அலைப்பாயும்.

இருப்பினும், விழிப்பு நிலையில் இருமைகளற்ற நிர்விகற்ப சமாதி நிலையில், மனம் ஆத்மாவில் அடங்கும் அனுபவமே ஆத்மானுபவம் ஆகும். இந்த நிலையில், மனம் ஆத்மாவை அறிந்து, அதற்குச் சமமான தகுதியை (சமம்+ஆதி = சமாதி) அடைந்து விட்டதால், அதன்பிறகு வெளிப்படும் அந்த மனதிற்கு சுயமான சங்கற்பங்கள் ஏதுமின்றி, ஈஸ்வர சங்கற்பத்தை மட்டுமே செயல்படுத்தும்.

அஷ்டாவக்கிரரே! தூக்கத்திற்கும், சமாதிக்குமுள்ள வித்தியாசம் என்னவென்பதை விளக்குகின்றேன் கவனமாகக் கேளுங்கள்!

மனம் என்பது ஜீவன் என்று அறிந்தோம். ஒவ்வொரு ஜீவனும், அதனதன் சம்ஸ்காரங்கள் என்ற வாசனைகளுக்கு ஏற்ப, அதற்கேற்ற உடலை எடுத்து வந்து, அதன் வாயிலாக தன் ஆசைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கின்றது.

இதில், நிறைவேறாத ஆசைகளின் அடர்த்தியின் காரணமாக, என்னதான் ஆன்மீக விசயங்களாக இருந்தாலும், யோகா, தியானம் செய்தாலும், ஆத்மஞான விசயங்களாக இருந்தாலும் அதன் புரிதல் இல்லாமல், அதன் வாயிலாக ஏதாவது தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியுமா? என பல வகைகளில் முயற்சித்து, இப்பிறவியில்சாத்தியம் ஆகாமல் போனவுடன், மீண்டும் அந்தசங்கல்பங்களைக் கொண்டு, அடுத்த பிறவி எடுப்பதற்கு மனம் (ஜீவன்) தயாராகி விடுகின்றது.

எதனால், இவ்வாறு மனம் அலைபாய்கின்றது என்று சற்று நிதானமாக சிந்தித்து பார்த்தோமானால், மனதினுடைய ஆசைகளின் மொத்த உருவமே இந்த ஸ்தூல உடல் என்பதினால், அவ்வாறு அதைச் செய்யத் தூண்டுகின்றது.

ஆசைப்படாத மனமே இல்லை. ஐந்தறிவு படைத்த மிருகங்கள் கூட ஆசைப்படுகின்றது. அவைகளுக்கு மனதைப் பற்றியெல்லாம் தெரியாது.அது ஆசைப்படுவதை சண்டை யிட்டாவது அடைய முயற்சிக்கும்.

ஆனால், மனிதனைப் பொருத்தவரை மிகச்சிறப்பான விசயமே இந்த ஆறாவது அறிவு. இந்த அறிவு அந்த ஆத்மாவின் வெளிப்பாடு. இது எல்லா ஜீவர்களிடத்தில் இருந்தாலும், ஆத்மாவின் அறிவு பிரதிபிம்பிக்கின்ற ஆற்றல், அந்தந்த உபாதியைப் பொருத்தே வெளிப்படும்.

அதனால்தான், ஓரறிவு ஜீவர்கள் முதல் ஆறறிவு மனிதன்வரை இந்த அறிவின் வெளிப்பாடு வித்தியாசப் படுகின்றது. இதில் ஆறறிவு படைத்த மனித உடல் கொண்ட உபாதி மட்டுமே மிக எளிதாக மனதினை விசாரிப்பதின் வாயிலாக ஆத்மாவை அறிய முடியும். மற்ற ஜீவர்களுக்கு இந்த வாய்ப்பு கிடையாது.

இருப்பினும், சில மனிதர்கள் மனித உடலில் இருந்தாலும், இந்த ஆறாவது அறிவு நிலைக்கு உயராமல், இன்னும் ஐந்தறிவு படைத்த மிருகம் போன்றே வாழ்கிறார்கள். இவர்களது மந்த அறிவினால், ஆசைகளை அடைய மிருகம் போன்றே சண்டையிட்டு சாதிக்கின்றனர்.

அதனால், இவர்கள் தங்களுடைய ஆசைகளைப் பற்றிய அறியாமையினால் தன் மனம் போன போக்கில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு, இந்த அகம்பாவம் இருக்கின்றவரை இன்பத்தை அடைய வேண்டும் என்ற இலட்சியம் மட்டுமே இருக்கும். ஆனால், இன்பம் எங்கிருந்து கிடைக்கின்றது? என்ற தெளிவு (அறிவு) மட்டும் இருக்காது.

அதுவே, மனதின் ஆசைகளையும், ஆசையின் பிறப்பிடமான மனதையும் அறிவினால் ஆராய்கின்றவர்கள் மட்டுமே, மனம் போன போக்கில் போகாமல், சற்று யோசித்து முடிவுகளை எடுக்கின்றார்கள். இவர்களே தன்னை அறியத் தகுதி உடையவர்களாக மாறுகின்றார்கள்.

இப்படிப்பட்டவர்களே, இந்த மனம் என்பது யாது? ஜீவன் என்பவன் யார்? நான் யார்? என்ற விசாரணைகளைத் தொடங்கி, தக்க குருமார்களை அணுகி, விசாரம் மேற் கொண்டு, அவர்கள் வாயிலாக சாத்திய சாதன ரூபமாக இருக்கின்ற இந்த பிரபஞ்சத்தில் முதலில் **"நான் யார்?"** என்று தன்னிடத்திலேயே விசாரணையை தொடங்கி, அதன் முடிவில் அழிவற்ற ஆத்மாவை அறிகின்றார்கள்.

நான் யார்? என்று தன்னுடைய மனதை ஆராயாமல், மற்ற எந்த சாதனைகளை செய்தாலும், இவர்களால் அந்த

சாதனைகளை சாத்தியமாக்கிக் கொள்ள முடிவதில்லை. அதனால்தான், அடுத்த சாதனையைத் தேடுகின்றார்கள்!

உதாரணமாக, ஒருவன் தினசரி பூஜையை சாதனமாக செய்கின்றான், பூஜையின் பலனாக அவன் விரும்புவது சாத்தியம் ஆகிவிட்டால், பிறகு ஏன்? அவன் கோவிலுக்குச் சென்று வழிபாடு என்ற அடுத்த சாதனையை தொடங்க வேண்டும்?

இதுப்போன்றே, பல சாதனைகளை செய்பவன், அவன் விரும்புகின்றது சாத்தியம் ஆகிவிட்டால், அடுத்து மற்றொரு சாதனையை அவன் நாடமாட்டான் இல்லையா? ஆனால், அனுபவத்தில் என்ன நடக்கின்றது? அவன் செய்கின்ற சாதனைகள் எதுவுமே, அவனுக்குத் தேவையான சாத்தியம் ஆகாத காரணத்தினால், மீண்டும், மீண்டும் முயற்சித்துக் கொண்டே இருக்கின்றான்.

இதனால், மனம் மேலும், மேலும் பல சம்ஸ்காரங்களை சேகரித்துக் கொண்டு, பல எண்ணங்களால் விசாலமான மனமாக மாறி, பல காரியங்களைச் செய்து, கர்மாக்களுக்கு காரணமாக அமைந்து விடுகின்றது.

அதுவே, "**நான் யார்?**" என்ற விசார மார்க்கத்தை சாதனையாக கொண்டு, தன்னை (மனதை) ஆராயும்போது, அந்த ஆராய்ச்சியின் முடிவில் கிடைத்த மிகப்பெரிய சாத்தியம் என்னவென்றால், ஜீவன் (மனம்) தன்னை யார்? என்று அறிந்து கொள்கின்றது.

**தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே.** (திருமந்திரம்)

இவ்வாறு தன்னை அறிந்த மனம் (ஜீவன்) அதன்பிறகு அறிந்து கொள்வதற்கோ, அடைவதற்கோ, என்ன இருக்க முடியும்? தன்னை தன்னிடத்திலேயே ஒப்படைத்து சரணடை வதைவிட, வேறு ஒருசாத்தியம் இருக்க முடியுமா?

இதைச் சாதித்தவன் வேறு சாதனைகளை நாடுவானா? எது எப்பொழுதும், எதையாவது அடைய வேண்டும், அறிய வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்ததோ? அதுவே தன்னை இழந்தபிறகு, அடைவதற்கு என்ன உள்ளது? அறிவதற்கு என்ன உள்ளது? ஆசைப்படுவதற்கு என்ன உள்ளது? இப்படிப்பட்ட மனம் தன்னை அறிகின்ற அதி அற்புதமான சமாதி நிலையை விளக்குகின்றேன் கேளுங்கள்!

மனதிற்கு "**பிரகாசகுணம்**" மற்றும் "**விசாரகுணம்**" என்ற இரண்டு குணங்கள் உண்டு. வெளி விசயங்கள் ஏதுமற்ற எண்ணங்கள் அற்ற நிலையில், மனமானது உள்முகமாக திரும்பி, அது காணுகின்ற காட்சிக்கு "**பிரகாசகுணம்**" என்று பெயர். மனமானது பல எண்ணங்களை தன்னிடத்தில் கொண்டு, அதன் தன்மை இப்படிப்பட்டது, என்பதை சப்த ரூபமாக அறிவதற்கு "**விசார குணம்**" என்று பெயர்.

மனமானது பிரகாசகுணத்தில், எண்ணங்கள் ஏதுமற்று, வெளி விசயங்களை ஆராய ஒன்றுமில்லாத, ஏகாந்த நிலையில், உள் விசயமான ஆத்மாவை மட்டும் பார்க்கின்றபோது, "**நிர்விகற்ப சமாதி**" உண்டாகின்றது.

விகற்பம் என்றால் வேற்றுமைகள் என்று பெயர். பல விதமான வேற்றுமைகளைக் கொண்ட எண்ணங்கள் அற்ற நிலை "**நிர் விகற்பம்**" எனப்படுகின்றது. அதாவது, கண்ணை திறந்துக் கொண்டு அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்றுக் கொண்டே, உள்ளார்ந்த ஆத்ம விழிப்புணர்வுடன் **"நான்", "எனது", "என்னுடையது"** என்ற அஹங்கார, மமகாரம் இல்லாமல், "**எல்லாம் அவன் செயலே**" என்ற சரணாகதி நிலையாக, இந்த "நிர்விகற்ப சமாதி" உள்ளது.

**எல்லாம் அறிந்து படித்தே இருந்தெமக்கு உள்ளபடி**
**வல்லான் அறிந்துளன் என்றுணராது மதிமயங்கிச்**
**சொல்லால் மலைந்துறு சூழ் விதியின்படி துக்கித்துப்பின்**
**எல்லாம் சிவன்செயலே என்பர் காண்கச்சி ஏகம்பனே.**

– பட்டினத்தார்.

எல்லாம் படித்து அறிந்த பண்டிதன் என்ற மமதையுடன், உள்ளே ஒரு வல்லவன் உள்ளான் என்பதை உணர புத்தியில்லாமல், மனம் மயங்கி, துன்பம் வரும் பொழுதும், என் விதிப்படி ஊழ்வினைப் பயனாக வருகின்றது என்பதையும் அறியாமல், பல சாதனைகளைச் செய்து சாதிக்க முடியாமல் போய் முடிவில் "**எல்லாம் சிவன் செயலே**" என்பவர்களைத்தான் காணுகின்றேன் கச்சி ஏகம்பனே என்று பட்டினத்தார் இவர்களைப் பார்த்துப் பரிதாபப்படுகின்றார்.

ஆகவே, பல சாதனைகளை செய்து சாத்தியம் ஆகாமல், இறுதியில் இந்த விசாரத்திற்கு வருவதற்குப் பதிலாக, இதை அறிந்துக் கொண்ட ஆரம்பத்திலேயே சித்த சுத்தி உண்டாக, உள்முக விசாரம் மேற்கொள்பவன், இந்த நிர்விகற்ப சமாதி நிலையே, ஆத்மாவின் ஆனந்த அனுபவத்தை அனுபவிக்கும், மனதின் அதி உன்னத நிலை என்பதை அறிந்துக் கொள்வான்.

அதே மனமானது விழிப்பு நிலையில், விசாரத்தை ஆராய்ந்தவாறு, பேதமைகளை அறியப்படுவதால் "**சவிகல்ப சமாதி**" உண்டாகின்றது.

இந்த இரண்டு விதமான சமாதிகளில் விசயங்கள் ஏதுமற்ற, ஆத்ம நிஷ்டையில் நிலைத்திருக்கும் நிலைக்கு, "**நிர்விகற்பம்**" என்றும், விசயங்களை மூலமாகக் கொண்டு, இது இப்படி, அது அப்படி என்று, விசார ரூபமாக பேதம் விளங்குவது "**சவிகற்பம்**" என்றும் அழைக்கப்படுகின்றது.

இப்படிப்பட்ட நிர்விகல்ப சமாதி உண்டாக வெளிப்புற எண்ணங்களை தவிர்த்து, உள் முகமாக மனதை திருப்பி, ஞானக்கண் கொண்டு பார்த்தால் மட்டுமே உள்ளே இருக்கும் வஸ்துவாக காண்பவன், காட்சியில் (காணப்படும் பொருளாக) தானே இருப்பதை தன்னால் அறிய முடியும்.

இது சாதாரண ஊனக்கண்களைக் கொண்டு, பார்த்து விசாரித்தல் போன்ற, நடை முறையாக இருந்தாலும், விசாரிப்பது எதை? அல்லது யாரை? என்ற அறிவு அவனிடத்தில் நிச்சயம் இருக்க வேண்டும். புறத்தே விசாரிப்பதினால் உண்டாகும் ஞானம் (அறிவு), அகத்தே விசாரிக்கும்பொழுது அனுபவமாகும். இந்த அறிவைத்தான் "**மூன்றாவது கண்**" எனப்படுகின்றது.

இந்த அகக் கண்ணைக் கொண்டு உள்ளே பார்த்து விசாரிப்பதை மட்டுமே, விசாரணை அல்லது விசாரம் என்று இங்கு கூறப்படுகின்றது. விசாரித்து அறியவேண்டிய விசயம், விசாரிக்கத் தொடங்கியவுடன் ஒவ்வொன்றாக இதுவல்ல!, இதுவல்ல! என்று தள்ளி, முடிவில் இதுதான் அது! என்ற ஒரு முடிவுக்கு வர முடியும்.

உதாரணமாக, ஒரு நண்பனின் வீட்டிற்குச் செல்ல முயற்சித்து, அதைப்பற்றிய அறிவு இன்றி, அவனிடம் உன்னுடைய வீட்டை எப்படி அறிவது? என்று கேட்டவுடன், அந்த நண்பன் பொதுவாக, பச்சை வர்ணம் அடித்த வீடு என்னுடையது என்று கூறினால், அந்த ஞானத்தினால் எப்படி புரிந்துக் கொள்ள முடியாதோ?, அதுப்போன்று, இதுதான் ஆத்மா என்ற ஞானத்தை வைத்துக்கொண்டு யாராலும் அதை அனுபவப்பட முடியாது.

எனவே, முதலில் இந்த பெயர் கொண்ட ஊரில், இந்த பெயரை உடைய பகுதியில், இந்த வீதியில், இந்த மரம் ஒன்று இருக்கும். அந்த மரத்திற்கு அருகே, ஒரு கோவில் இருக்கும், அந்த கோவிலுக்கு நேர் எதிர்வீடு என்னுடையது என்று இவ்வளவு விளக்கங்கள் விபரமாகக் கொடுத்தவுடன்தான், அறிய விரும்புபவனும், அதன் விசாரணையில் இறங்கி, நேரடியாக, அந்த ஊருக்குச்சென்று, அந்த பகுதிக்குச்சென்று, அந்தப்பகுதியில்

உள்ள வீதி, மரம், மற்றும் கோவில் என இவைகளைத் தன் புறக்கண்களால் கண்டு, இவைகள் அனைத்தையும் தள்ளி, முடிவாக அந்த நண்பனின் வீட்டை அறிந்தால் மட்டுமே, அது அவனது அனுபவமாக இருக்க முடியும்.

அதுப்போல, ஆத்மா என்பதை அனுபவமாக அறிய முயற்சிக்கும்போது, அதைச் சார்ந்த மற்ற விசயங்களையும் ஒவ்வொன்றாக அது, இந்த உடல் அல்ல, இந்த மனம் அல்ல, புத்தி அல்ல, பிராணன் அல்ல என்று ஒவ்வொன்றாக விசாரித்து, அவைகளைத் தள்ளினால் மட்டுமே, முடிவில் அந்த ஆத்மாவை அனுபவித்து அறிய முடியும். இதற்கு மிக, மிக முக்கியம் (உள்ளே பார்கின்ற) அறிவு! என்ற **ஞானக்கண்** ஆகும்.

இந்த சிறிய அறிவு (ஞானம்) கொண்டு, எப்படி அந்த பேரறிவை (சித்தை) அறிய முடியும் என்றால், ஒரு பெரிய தொகையை சம்பாதிக்க மூலதனமாக, ஒரு சிறிய தொகையை முதலீடு செய்வதுப் போலவும், ஒரு பெரிய மீனைப் பிடிக்க ஒரு சிறிய மீனைப் போடுவதும், ஒரு பெரிய கடன்காரனாக மாற, சிறிய கடனை வாங்குவதும் எப்படி நம் நடைமுறையில் உள்ளதோ? அதுப்போல, நம்மிடம் உள்ள இந்த சிற்றறிவைக் கொண்டு மட்டுமே, அந்த பேரறிவை (ஆத்மாவை) அறிய முடியும். அதுவும் ஆறறிவைக் கொண்ட மனிதன் மட்டுமே அறிய முடியும்.

இப்படிப்பட்ட அறிவினால் விசாரித்து அறிய விரும்புகின்ற விசார குணத்தை, இரண்டு விதமாக பிரித்து அறியலாம். அதில் ஒன்று **ஆந்தரமென்றும்**, மற்றொன்று **அபிநவமென்றும்** இரு வகைப்படும்.

இதில் அபிநவமென்பது அனுபவித்து அறிகின்ற அனுபவ சொரூபம். ஆந்தரமென்பது மற்றவர்களின் அனுபவத்தின் வாயிலாகவோ? அல்லது தான் இதற்குமுன்பு அனுபவித்த விசயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, அவைகள் வாசனைகளாக வெளிப்பட்டு, அதையே மனம் பற்றிக் கொண்டு, எப்பொழுதும், அதைப்பற்றியே சிந்தனை செய்துக்கொண்டு இருக்கின்ற நிலையாகும். இவ்வாறு விசார ரூபமான இந்த மனமானது, இத்தகைய இரண்டு சக்திகளுடன் செயல்பட்டுக் கொண்டுள்ளது.

இதில், நன்றாக உறங்கும் நிலையில் மனதின் பிரகாசகுணம் வெளிப்பட்டும், ஆத்மா நேரடியாக அனுபவப் படாததால், அதன் அறியாமை காரணமாக சித் அறியப் படுவதில்லை. அதுப்போன்றே, விழிப்பு நிலையில் மனதின் விசார குணம் வெளிப்பட்டும், ஆத்மா நேரடியாக அனுபவப் படாததால், இங்கும் அறியாமையின் காரணமாக சித் அறியப் படுவதில்லை.

இதனால்தான், எண்ணங்கள் ஒன்றுமில்லாத ஆழ்ந்த உறக்கத்தில் **சித்** விளங்குவதற்குப் பதிலாக, அங்கே ஒன்றுமில்லாத **மகா சூன்யம்** (வெறுமை) விளங்குகின்றது.

அதுப்போலவே, எண்ணங்கள் ஒன்றுமில்லாத விழிப்பு நிலையில், வெறுமையான மகா சூன்யம் விளங்குவதற்குப் பதிலாக **சித்** விளங்குகின்றது. இந்த இரு நிலைகளில் மனம் எதில் ஒடுங்கினாலும், அந்த நிலையை **"மனோலயம்"** என்று கருதலாம். அதாவது, மனம் எண்ணங்கள் ஏதுமின்றி தூக்கத்தில் சூன்யமாக இருந்தாலும், விழிப்பு நிலையில் சித்தை அறிந்து அதில் கரைந்தாலும், அதற்கு **"மனோலயம்"** என்று பெயர்.

சிலர், ஆழ்ந்த தூக்கத்தில் எண்ணங்கள் அற்ற நிலையில், மனம் ஒடுங்குவதை சித் அனுபவமாக தவறாகப் புரிந்து கொள்கின்றனர். இந்த நிலையில் மனம் சத்துவ குணத்திற்கு பதிலாக, தமோகுணத்தில் இருக்கும். அதனால்தான் தியானத்திற்குப் போகின்றவர்கள் பெரும்பாலும், தூங்கி விடுகின்றனர்.

பொதுவாக, எண்ணங்களுடன் கூடிய கனவு மற்றும் விழிப்பு நிலைகள், எண்ணங்கள் ஏதுமற்ற சூன்யமான உறக்க நிலை, என்ற இந்த மூன்று நிலைகளிலும் ஆத்மாவை ஒரு

பொழுதும் அனுபவமாக அறிய முடியாது. விசார ஞானத்துடன் (எண்ணங்களுடன்) கூடிய விழிப்பு நிலையில் ஆத்மாவைப் பற்றிய விசாரணை அறிவு மட்டுமே இருக்கும். ஆனால், அந்த சித் (அறிவு) அனுபவமாகாது.

அந்த ஆத்மா (சித்) அனுபவமாக வேண்டுமென்றால், எந்த விதமான வெளி எண்ணங்களும், மனதில் உண்டாகாமல் நிர்விகல்ப நிலையில் மட்டுமே, அது அனுபவமாக உணரப் படுகின்றது.

அஷ்டாவக்கிரரே! நான் என் சுய அனுபவத்தில் இருந்து எடுத்துச் சொல்லும், ரகசியத்தை இனிக் கேளும். இது தெரியாமல் உள்முக விசாரணையில் இருக்கின்றவர்களும் மோகத்தை அடைகின்றனர். நிர்விகற்ப சமாதியும், ஆழ்ந்த உறக்க நிலையும், விழிப்பு நிலையும் ஆகிய இந்த மூன்று நிலைகளில், நிர்விகற்ப சமாதியில் (சித்து) தனித்த அறிவாகவும், தூக்கத்தில் மனம் லயமாகி (வெளி) அறியாமையிலும், விழிப்பு நிலையில் (பேதம்) பிளவுபட்ட தோற்றங்களாகவும் அறியப்படுகின்றது.

இவ்வாறு அறியப்பட்ட விசயங்களில் அறிவதில் ஒன்றுக்கொன்று முரண்பாடு இருப்பினும், இம் மூன்றுக்கும் ஆதாரமாக சித் (அறிவு) மட்டுமே உள்ளது.

விழிப்பு நிலையில் எண்ணங்கள் ஏதுமற்று எதையாவது வெறித்து, வெற்றுப்பார்வை பார்க்கின்ற பொழுது, உண்டாகும் சமாதி அனுபவத்தை, இன்னதென்று அறிய முடியாததற்குக் காரணம், சமாதியில் முன் அனுபவம் இல்லாத காரணத்தால், அந்த சித் அனுபவத்தை உணர முடிவதில்லை. ஆனால், ஆழ்ந்த உறக்கத்தில் அறியாமை உள்ளதால் அங்கு சொரூபம் விளங்கு வதில்லை. அதுப்போலவே, விழிப்பு நிலையிலும் விசாரத்திற்கு முன்னும், பின்னும் எண்ணங்களால் பேதம் உண்டாவதால், அங்கும் சொரூபத்தின் அனுபவம் உண்டாவ தில்லை.

அதனால், இந்த மூன்றிலும் எண்ணங்கள் ஏதுமற்ற தனித்த விழிப்பு நிலை அனுபவமே, நிர்விகற்ப சமாதி நிலைக்கு உயர்த்துகின்றது. இந்த சமாதி அனுபவமே சித்தை அனுபவமாக உணருகின்ற ஆனந்த அனுபவம் ஆகும். இந்த நிற்விகற்பசமாதி நிலை பெரும்பாலானவர்களுக்கு உலகியல் விவகாரங்களில் இருந்துக் கொண்டிருக்கும் போதேகூட, சில விநாடிகள் உண்டாகின்றது.

ஆனால், அவர்களுக்கு அதைப்பற்றிய முன் அனுபவம் இல்லாததினால், அது சமாதி நிலை என்று அவர்களால் அறிய முடிவதில்லை. சமாதியும், உறக்கமும் ஒன்றுபோல காணப்பட்டாலும், உறக்கம் போன்ற மூடத்தன்மை இல்லாதது சமாதி நிலை.

இதில், உறக்கத்தை மூடத்தன்மை என்று கூறுவதற்குக் காரணம், தன் நிலை இன்னது என்று, அறிய முடியாத அறியாமையின் காரணமாக, "வெறுமை நிலை" மட்டுமே அந்த தூக்கத்தில் விளங்குகின்றது. இதை **"சூன்யம்"**, **"வெளி"**, **"சுழுத்தி"** என்று எந்த பெயர் வேண்டுமானாலும், வைத்துக் கொள்ளலாம். அதனால்தான், உறக்கத்தில் இருந்து விழித்து எழுந்தவன், என்னால் ஒன்றும் அறிய முடியவில்லை. ஆனால், ஆனந்தமாகத் தூங்கினேன் என்கின்றான். அதனால், இந்த அனுபவம் மூடத்தன்மை என்றே கருதப்படுகின்றது.

ஆனந்தம் எதிலிருந்து உண்டாகின்றது என்ற அனுபவத்தை அறியமுடியாத, அறியாமை சூழப்பட்ட ஜடத் தன்மை மட்டுமே, இங்கு இருப்பதினால் இந்நிலையை மூடத் தன்மை கொண்டது என கூறப்படுகின்றது. இங்கு அறிவானது செயல்படவில்லை. ஆனால், நிர்விகற்ப சமாதியில் மூடத்தன்மை சிறிதும் இல்லை. நிர்விகற்ப சமாதியில் விளங்குகின்ற அந்தச் சித்தானவள் அகண்டாகாரமான பிரம்ம ரூபிணியும், கால தேசங்களை கடந்த, தோற்றங்களை நாசம் செய்யக்கூடிய எங்கும், எதிலும், பரந்து, விரிந்து தன் சுயத்தில் இருப்பாக உள்ள அவள், உறக்கத்தில் உள்ள ஜட சக்தி போன்று மூடத்தன்மை இல்லாமல், இருளை விலக்கி பிரகாசிக்கின்ற **"அறிவு"** சொரூபமாக மட்டுமே இருக்கின்றாள்.

# அத்தியாயம் – 17

## கேள்வி ஞானமும், அனுபவ ஞானமும்!

ஹே ராஜனே! விழிப்பு நிலை சமாதியான இந்த நிர்விகற்ப சமாதி போன்று, வேறு ஏதாவது சமாதி நிலைகள் உள்ளனவா? அதையும் தாங்கள் மேலும் விளக்க வேண்டும் என்று அஷ்டாவக்கிரர் கேட்கின்றார்.

ஜனகராஜன் அஷ்டாவக்கிரரின் இந்த கேள்விக்கு பின்வருமாறு பதில் அளிக்கின்றார்.

"ஹே முனிபுத்திரா! இன்னும் கேளும். அன்புக்கு உரிய மனைவியை முதன்முறையாக கட்டி அணைக்கின்றபொழுது ஏற்படுகின்ற இன்பம் ஒரு நொடிப் பொழுதாவது வெளியேயும், உள்ளேயும் ஒன்றும் தோன்றாத ஒரு நிலையை உண்டாக்கி விடுகின்றது. இந்நிலையில் அவன் உறக்கம் கொள்ளவில்லை.

அவ்வாறு, எந்த ஒன்றும் தோன்றாத நிலையைத்தான் **சமாதி** என்று கூறப்படுகின்றது.

அடுத்து, பல நாட்களாக ஆசைப்பட்டு, கிடைக்காது என்ற தீர்மானத்துடன் இருக்கும்பொழுது, திடீரென்று அந்த ஆசைப்பட்டது கிடைத்துவிட்டால், ஒரு கணப்பொழுது உள்ளேயும், வெளியேயும் ஒன்றும் தோன்றாத நிலை உண்டாகின்றது. இப்பொழுதும் அவன் தூங்கவில்லை. விழிப்பு நிலையிலேயே எந்த எண்ணங்களும் இன்றி, இந்த தோன்றா நிலையை அனுபவித்தான். இதைத்தான் **சமாதி** என்று கூறப்படுகின்றது.

ஒருவன் சாதாரணமாக நடந்து கொண்டிருக்கும் பாதையில் திடீரென்று ஒரு புலியை கண்டவுடன் ஒரு வினாடி செயலற்று உள்ளும், புறமும் ஒன்றும் தோன்றாமல் அப்படியே ஸ்தம்பித்து நின்று விடுவதை, **சமாதி** என்று கூறப்படுகின்றது. இப்பொழுதும் அவன் தூங்காமல் விழிப்பு நிலையிலேயே இந்த அனுபவத்தை அடைந்தான். தன்னுடைய மகன் விபத்தில் இறந்து விட்டான் என்ற துக்கச் செய்தியை மற்றவர்கள் வந்து கூறக் கேட்டவன், ஒரு கணப்பொழுது அப்படியே அதிர்ச்சியில் ஒன்றும் தோன்றாத நிலையில், உறைந்து நிற்பதையும் சமாதி என்று அழைக்கலாம். இவனும் உறங்கவில்லை. விழிப்பு நிலையிலேயே இருந்தான்.

விழிப்பு நிலையில் உண்டாகின்ற மயக்கம், துக்கம், அதிசந்தோசம், ஆவேசம், பயம் போன்ற காரணங்களால், தூண்டப்பட்ட மனம் எண்ணங்களை விடுத்து, தன் மூலமான ஹிருதயத்திற்கு திரும்புகின்றது. இந்த நிலையில் உண்டாகும் சமாதி அனுபவமும், நிர்விகற்ப சமாதி நிலை அனுபவமும் இரண்டும் ஒன்றுதான். அழைக்கின்ற பெயர்களில் மட்டுமே வித்தியாசம் உள்ளது. இதுப்போன்றே, சில விநாடிகள் மட்டுமே உண்டாகின்ற சமாதிகள் இன்னும் பல உள்ளன.

விழிப்பு நிலையிலிருந்து, தூக்க நிலைக்கு செல்லும் போதும், தூக்கத்திலிருந்து விழிப்பு நிலைக்கு திரும்பும் போதும், ஏற்படுகின்ற இடைவெளியை மட்டும் கூர்ந்து கவனித்தால், சமாதியை உணரலாம். ஒருவன் மனதினை ஒரு நிலைப்படுத்தி வெகு தொலைவில் இருக்கின்ற ஒன்றைப் பார்க்கின்ற பொழுது, உண்டாகின்ற இடைவெளியை கூர்ந்து கவனித்தாலும் சமாதியை உணரலாம்.

ஒரு அட்டைப்பூச்சி ஒரு செடியிலிருந்து, மற்றொரு செடிக்கு தாவ முயற்சித்து, ஒரு நீண்ட இடைவெளியில் அந்த செடியை பற்றிக் கொண்டு, இந்த செடியை விட்டு விடுகின்றது. இதுப்போன்று, தூரத்தில் உள்ளதை பார்க்க முயற்சிக்கின்ற மனம், ஒரு நீண்ட இடை வெளியை எடுக்கின்ற ஒரு நொடிப் பொழுதையும் சமாதி நிலையாக உணரமுடியும்.

உடலிடம் மனம் உடல் வடிவாகவும், தூரத்தில் இருக்கும் பொருளினிடம் அதன் வடிவாகவும் தோன்ற, இந்த இரண்டு வடிவங்களை உண்டாக்குகின்ற, இடைவெளியின் உள்ளே சொரூபத்தில் நிற்கும் மனதை மட்டுமே, நுட்பமாக கவனித்தல் **சமாதி** எனப்படுகின்றது. இங்கு நுட்பமாக கவனித்தல் என்பது, விழிப்பு நிலையில் இருக்கின்ற ஞானம் (அறிவு) ஒரு பொருளை மட்டும் பற்றாமல், பல விசயங்களை பற்றுவதால், பலவாறாக துண்டிக்கப்பட்ட உருவங்களே உலகமாகத் தோன்றுகின்றது. ஒரே வடிவாக இருந்தால், உலக விவகாரங்கள் நடைபெற இயலாது.

பலவாறாகப் பிளவுபட்ட வடிவங்களில், மனம் ஊடுருவி அதுவாகி, அதை அறிகின்றது. அதனால்தான் விதவிதமான காட்சிகள் அமைகின்றன. இதில் வேறுபட்ட இரு வடிவங்களை அறியும் இடைவெளியில், அறிவு விளங்குகின்றது. அந்த இடைவெளியைக் கூர்ந்து கவனித்தால், எண்ணங்களற்ற நிலையை உணரலாம். எண்ணங்கள் அற்ற நிலையை உணர்வது **சமாதி**. எனவே, ஆத்மாவிற்கும், புத்திக்கும் கண நேர இடைவெளிதான் என்று ஞானவான்கள் கூறுகின்றனர். எனவே, சமாதியின் இயல்பை அறிந்தவர்கள் அதில் நிலைப்பெறு கின்றார்கள். அவர்களே பாக்கியவான்கள்.

மனம் எதைப் பற்றுகின்றதோ? அந்த வடிவத்தை எடுக்கின்றது.* உடலைப்பற்றி இருக்கும்பொழுது உடலாகவும், மற்ற பொருட்களைப் பற்றும்பொழுது, அந்த பொருட்களாகவும் வடிவம் எடுக்கின்றது. இதுப்போன்று, மனம் இந்த உடலை விட்டு வேறு ஒன்றைப்பற்றும் இடைவெளியை கூர்ந்து கவனித்தாலும், எண்ணமற்ற சமாதி நிலையை அறிய முடிகின்றது. மற்றவர்களுக்கு அது முயல்கொம்பு போன்று அறிய முடியாததாகவே இருக்கின்றது".

"ஹே ராஜனே! எல்லோருக்கும் விழிப்பு நிலையில் இவ்விதம் அஞ்ஞானத்தை வேருடன் நாசம் செய்யக்கூடிய நிர்விகற்ப சமாதிகள் கைகூடும்பொழுது, பற்றுதலும், துயரங்களும் கூடிய, சம்ஸார உலக பந்தமானது எப்படி உண்டாயிற்று?"

"ஹே முனிபுத்ரா! இந்த பரமமான இரகசியத்தை இதோ கூறுகின்றேன் கேளும். இந்தச் சம்சாரமானது அனாதி காலமாக அஞ்ஞானத்தினால் உண்டானது. இதில் சுக, துக்கங்கள் கனவு போன்று, வந்து போய்க் கொண்டிருப்பதை, எல்லோரும் அனுபவிக்கின்றார்கள். அவர்களால், இந்த அறியாமை யிலிருந்து விடுபட்டு வெளி வருவது என்பது, மிகுந்த சிரமாகவே உள்ளது. இதற்கு ஒரே தீர்வு, ஆத்ம ஞானத்தை அடைவது மட்டுமே ஆகும்.

அறியாமையை நாசம் செய்கின்ற, இப்படிப்பட்ட ஞானத்தை சவிகற்ப ஞானம் என்று அழைக்கப்படுகின்றது. இப்படி வெளிமுகமாக விசாரித்து அடைகின்ற சவிகற்ப சமாதியினால் புத்தியையும், மனதையும் இணைக்கின்ற விசாரம் உள்ளது. அறியாமை நீங்காமல், ஆத்ம ஞானம் சித்திக்காது. பூரண ஆத்ம ஞானம் இன்றி அஞ்ஞானம் அகன்றிடாது. இப்படிப்பட்ட பூரணமான ஆத்ம ஞானம் பரோக்ஷம் (கேள்வி ஞானம்) என்றும், ஆத்மாவின் நேரடி அனுபவம் அபரோக்ஷம் (அனுபவ ஞானம்) என்றும் இருவகைப்படும்.

இதில் பரோக்ஷமானது குருவினால் கூறப்பட்ட சாஸ்திர சிரவணம் செய்வதினால் உண்டாகும் ஞானம். இந்த ஞானத்தினால் சம்ஸார துக்க நிவர்த்தி உண்டாகாது. சாஸ்திரங்களை காதுகளில் கேட்பதினால், (சிரவணம் செய்வதினால்) உண்டாகின்ற ஞானத்தினால் சிரத்தை (நம்பிக்கை) மட்டுமே உண்டாகின்றது. ஆகவே, இந்த நம்பிக்கையினால் மட்டும், அறியாமையை முழுவதுமாக அகற்றிவிட முடியாது. மிகவும் பக்குவமான நிர்விகற்ப சமாதியில் உண்டாகும், அபரோக்ஷ ஞானத்தினால் மட்டுமே, அறியாமையை நாசம் செய்ய முடியும். அதேசமயம், பரோக்ஷ ஞானத்தின் வாயிலாக அறிந்துக்கொண்ட ஞானத்தினை வைத்தே, சமாதி கூடினால் தான் அபரோக்ஷ ஞானம் உண்டாகின்றது.

இதன் காரணமாகத்தான், அறியாமையில் உள்ளவர் களுக்கு, சிலவிநாடிகள் சமாதி கூடியிருந்தாலும், அவர்களுக்கு அது அனுபவம் ஆவதில்லை. ஆனால், சாஸ்திரம் கற்றறிந்த ஞானிகளுக்கு முன் அனுபவமாக சமாதி இல்லாத காரணத்தினால், அதை அவர்களால் உணர முடிவதில்லை.

மாணிக்கக்கல் பற்றிய பரோக்ஷ ஞானம் (கேள்வி ஞானம்) மட்டுமே இருந்தாலும், முன், பின் அதைப் பார்த்திருக்காதவன் அதுதான் மாணிக்கக்கல் என்று பார்த்தாலும், அறிந்து கொள்ள முடியாது. ஆனால், அதை முன்னதாகவே பார்த்து அனுபவப்பட்டவன் அதைப் பார்த்தவுடன், அது மாணிக்கக்கல் என்று அறிந்துக் கொள்வான்.

இதுப்போலத்தான், சமாதி அனுபவமே இல்லாதவர் களுக்கு, சமாதி கூடினாலும், அதை அவர்களால் அறிந்துக் கொள்ள முடிவதில்லை. இப்படிப்பட்டவர்கள் தம்மிடம் உள்ள புதையலைப் புறக்கணித்து விட்டு, பிச்சை எடுத்து உண்பது போன்றதாகும்.இவர்களுக்கு அவ்வப்பொழுது சமாதி நிலை உண்டாகியும், அறியாமை அகலாத காரணத்தால், எந்தப் பயனும் இல்லை. விசயங்களில் பிரதிபிம்பமற்ற சுத்த ஞானம்தான் நிர்விகற்ப ஞானமென்று கூறப்படுகின்றது. இதனிடத்தில் பலவாறான உருவங்களைப் பொருத்து வதால்தான், **சவிகற்ப ஞானம்** ஏற்படுகின்றது.

சவிகற்ப ஞானம் என்று கூறப்பட்ட ஞானமே அஞ்ஞானம். இந்த அஞ்ஞானம் (அறியாமை) காரண வடிவாகவும், காரிய வடிவாகவும் பலவிதமாக இருக்கின்றது. ஆத்மாவின் பூரண நிலை விளங்காமல் இருப்பதே, காரண அஞ்ஞானம் என்று கூறப்படுகின்றது. பிரிக்க முடியாத பூரணமே சிதாத்மா (ஜீவன்) ஆகும். ஏனெனில், பிரிக்க முடியாத காரணங்களான தேசகால உருவங்களுக்குச் சிதாத்மா சாதகராக இருக்கின்றார். இப்படிப்பட்ட சிதாத்மாவிற்குத்தான் இங்கு இப்படி, இவ்விதமாக இருக்கின்றேன் என்ற, அபூரணனாக இருப்பதாக உண்டாகின்ற எண்ணமே மூல அஞ்ஞானம் எனப்படும்.

இந்த மூல அஞ்ஞானத்தினால் காரிய வடிவான இந்த தேகத்தின் மீது, ஆத்ம புத்தி தோன்றுகின்றது. இப்படிப்பட்ட அறியாமை நிவர்த்தி ஆகாதவரை சம்சாரபந்தம் நிவர்த்தி ஆகாது. பூரண ஆத்ம ஞானம் இன்றி, சம்சாரம் அகன்றிடாது.

அனேக பிறவிகளில் செய்த புண்ணியங்களினால், ஆத்ம தேவதையானவள் எப்பொழுது திருப்தி அடைகின் றாளோ? அப்பொழுதே, ஒருவனுக்கு முமுக்ஷுத்வம் உண்டாகி, அவன் விடுதலை பெறுவதற்கான விவேகத்துடன் கூடிய சிந்தனையை வழங்குகின்றாள்.

அவள் அனுக்கிரஹம் இல்லாமல், பல கற்பகோடி (பலகோடி பிறவிகள்) காலங்கள் கழிந்தாலும், விடுதலைப் பெற வேண்டும் என்ற வேட்கை வருவதில்லை. பல பிறவிகள் எடுத்தாலும், அதில் உணர்வுடைய உயிரினங்களாக பிறப்பது மிகவும் அரிது. அதனினும் மானிடராகப் பிறப்பது மிக மிக அரிது. அப்படியே மனிதனாகப் பிறந்தாலும், நுட்பமான அறிவு உடையவராக இருப்பது அரிதிலும் அரிது!".

"ஹே முனிபுத்திரா! உலகப்படைப்புகள் அனைத்தையும் உற்றுக் கவனியுங்கள்! தாவரங்களின் பல கோடிக்கணக்கான எண்ணிக்கையில், நூறில் ஒரு பங்குக்கூட விலங்கினங்கள் இல்லை. அதுப்போல, விலங்கினங்களின் பல கோடிக் கணக்கான எண்ணிக்கையில், நூறில் ஒரு பங்கு கூட மனித இனம் இல்லை. தோன்றிய மனித இனங்களில் பல கோடி பேர்கள் விலங்குகளைப் போன்றே, ஐந்து அறிவுடன் அறியாமையில் இருக்கின்றார்கள். இவர்களைப் போன்றவர்கள் நல்லது, கெட்டதை அறியக்கூடிய ஆர்வம் அற்றவர்களாகவும், உயர்ந்த ஒழுக்க நெறிகளை அறிய விரும்பாதவர்களாகவும் உள்ளனர்.

அப்படியே ஒரு சிலர் இதுபோன்ற, உயர்ந்த ஒழுக்க நெறிகளை போதிக்கும் சாஸ்திரங்களை கற்று அறிவை வளர்த்துக் கொண்டாலும், பெற்ற அறிவினால் பெருங்கர்வம்

கொண்டு, ஆசை வயப்பட்டு உலக வாழ்வில் அதிக ஈடுபாடு கொண்டு, பிறவிச்சுழலில் சிக்கிகொண்டு, வெளிவர முடியாமல் இருக்கின்றார்கள். இவர்களில் சிலர் சிறந்த புத் மான்களாக இருந்தாலும், இவர்கள் செய்த பாவச் செயல்களால், அந்த வாசனைகள் சித்தத்தில் இருந்து, நீங்காத காரணத்தினால், இருமைகள் அற்ற ஒன்றேயான அத்வைத பதத்தை நிந்தனை செய்து, துவைத புத்தி உடையவர்களாகவே இருக்கின்றார்கள்.

இருமைகளற்ற ஏகனை அறிய முடியாமல் அவர்கள் செய்த பாவ கர்மாக்களின் அடர்த்தியின் காரணமாக மாயையினால் மறைக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட மாயையின் காரணமாக, இருளிலிருந்து பழகியவர்களுக்கு வெளிச்சத்திற்கு வர எப்படிப் பிடிக்கும்?

இன்னும் சிலருக்கு, இந்த சாஸ்திர விசயங்கள் அறிவில் ஏறினாலும், தவறான புரிதலினால், குதர்க்க வாதங்கள் செய்து, உண்மையை உணரும் பாக்கியம் இன்றி இருக்கின்றனர். ஆகவே, இந்த மாயாவின் விளையாட்டு என்ன ஆச்சரியம்! உண்டாக்குகின்றது கவனியுங்கள்! அதனால் தான், அத்வைத அறிவை அடைந்தாலும், கையில் கிடைத்த சிந்தாமணியைக் கண்ணாடிக்கல் என்று எறிந்து விடுவதுப் போன்று, அதன் மகத்துவம் அறியாமல் தள்ளி விடுகின்றனர்.

இதற்குக்காரணம், அவர்களுக்கு ஈஸ்வர அனுக்கிரஹம் இல்லாததே ஆகும். எத்தனைதான் பக்தி செய்தாலும், இவர்களது ஆசையின் காரணமாக மாயையால் மறைந்திருக்கும் ஈஸ்வரனை அறிய முடிவதில்லை. அனுபவத்துக்கு அறிய முடியாத தெய்வத்தை பலவேறு ஆலயங்களுக்குச் சென்று அதுவேண்டும், இது வேண்டும் என்று, ஒரு பெரிய பட்டியல் போட்டு, பலசரக்கு வாங்கும் மளிகைக் கடைக்கு ஒப்பாக, இறைவனை நடத்துகின்றார்கள். இவர்களைப் போன்றவர் களுக்கு எத்தனைப் பிறவிகள் எடுத்தாலும் விடுதலை, விமோசனம் கிடையவே கிடையாது.

எவன் ஒருவன் ஆத்ம தேவதையை அறிந்து, ஆராதனை செய்கின்றானோ? அவனே, அவளது கருணை யினால் மாயையிலிருந்து விடுபட்டு, உலக விவகாரங்களில் நாட்டம் குறைந்து, விவேகமும், வைராக்கியமும் உண்டாகி, சத்குருவை தேடி சரணாகதி அடைந்து, அத்வைத சித்தாந்தத்தை அறிகின்றான். இவ்வாறு அடைந்த கேள்வி ஞானத்தினைக் கொண்டு, சந்தேகங்களை நீக்கி, தன்னை அறியும் தத்துவ ஞானத்தை உள் விசாரம் செய்து, அனுபவம் ஆக்கிக்கொள்ளும் வரை, ஓயாமல் முயற்சிக்கின்றவனே, முடிவில் முக்தி அடைகின்றான்.

பொதுவாக, சமாதி என்றதும், இறந்த உடலை புதைத்துள்ள இடம் என்றே பெரும்பாலானவர்கள் நினைக்கின்றனர். இதில், இறந்தபின் ஜடமான உடலை புதைக்கின்ற சமாதி ஜட சமாதி என்றும், ஜடமான உடலில் சைதன்யத்தின் இருப்பு ஒளிர்ந்து கொண்டிருப்பதை அனுபவிக்கின்ற சமாதி, ஜீவ சமாதி என்றும் அழைக்கப்படுகின்றது. இதில் சித்தர்களின் சமாதி, ஜீவ சமாதி என்றும், அரசியல் தலைவர்களின் சமாதி, ஜட சமாதி என்றும் அழைக்கப்படும்.

சமாதி என்றால் **சமம்+ஆதி** = சமாதி.

அதாவது, ஆதியுடன் (ஆத்மாவுடன்) சமமாக இணைந்திருக்கின்ற நிலைக்கு மட்டுமே சமாதி என்று பெயர். உடலை விட்ட பிறகு, அந்த ஆதியுடன் சமமாக இணைவதை "**விதேக முக்தி**" என்று அழைக்கின்றோம். இது உடல் இருக்கின்ற பொழுதே எண்ணங்கள் அற்ற விழிப்பு நிலையில், சதா அந்த ஆத்மாவுடன் (அறிவுடன்) ஆனந்தமாக இணைந்து இருக்கின்ற, மனமற்ற ஜீவன் முக்தர்களுக்கு மட்டுமே கிடைக்கின்ற நிலை. இந்த விதேக முக்தி நிலையை உடல் இருக்கும் பொழுதே, உடலை மறந்து ஆத்மாவில் இணைந்து அனுபவித்து கொண்டிருக்கும், ஆனந்த நிலையை மட்டுமே **நிர்விகல்ப சமாதி** என்று கூறப்படுகின்றது.

இதில் நிர்விகல்பம் என்றால், விகல்பங்கள் (எண்ணங்கள்) இல்லாத நிலை என்று பொருள். இவ்வாறு, விகல்பங்கள் ஏதுமற்ற நிலையில் அந்த ஆதியுடன் ஆனந்தமாக இணைந்து இருப்பது சமாதி. உடல் இருக்கின்ற பொழுது, உலகியல் விசயங்களினால் அனுபவிக்கின்ற இன்பம், சிற்றின்பம் என்பதையும், உடல் இருக்கின்றபொழுதே, நிர்வில்கல்ப சமாதியில் அந்த ஆதியுடன் இணைந்திருப்பது, பேரின்பம் என்பதையும், எவன் ஒருவன் அறிகின்றானோ? அவன் அற்பமான சிற்றின்பத்தை நாடுவானா?

மேலும், அவன் அந்த ஆத்மாவின் பேரின்ப அனுபவத்தின் வாயிலாக, இந்த ஜட உடலை விட்ட பிறகும், அந்த ஆனந்த அனுபவ நிலையில் எங்கும், எப்பொழுதும் உடலற்ற நிலையில் ஆத்மாவாகவே இருப்பான். இந்தப் பிறவா நிலையைத்தான் சித்தர்களும், ஞானிகளும், மகான்களும், மகாத்மாக்களும் வாழும் பொழுதே அடைந்து, ஜீவன் முக்தர்களாக இருந்து, ஜீவ சமாதி அடைந்தனர். இந்த ஜீவ சமாதியில் மட்டுமே, ஆத்ம பிரகாசம் ஒளிரும். ஜட உடல் புதைக்கப்பட்ட சமாதி, ஜட சமாதி என்பதினால், அங்கே ஆத்ம பிரகாசம் ஒளிராது. அது கட்டையைப் போன்ற ஜடமாக இருப்பதினால், ஒளிரக்கூடிய தகுதியை, அந்த உபாதியாகிய உடல் இழந்திருக்கும். நாளடைவில், உடல் மண்ணோடு மண்ணாக மாறிவிடும்.

சூரியன் எல்லா இடங்களிலும் பிரகாசித்தாலும், பாதரசம் பூசப்பட்ட கண்ணாடியில் ஒளிர்வதைப்போன்று, சாதாரண கண்ணாடியில் ஒளிராது. அதுப்போல, ஆத்மா எல்லா இடங்களிலும் பிரகாசித்தாலும், நிர்விகல்ப சமாதியில் உள்ள உடலில் ஒளிர்வதைப் போன்று, சாதாரண ஜட உடலில் ஒளிராது. அதனால்தான், சித்தர்களின் ஜீவ உடல் புதைக்கப்பட்ட சமாதிக்குச் சென்றவுடன், அங்கே எண்ணங்களற்ற நிலைக்கு மனம் லயமாகி, அங்கு ஒரு ஆனந்தத்தை உணர முடிகின்றது.

அதுவே, சாதாரணமாக இறந்து போனவர்களின் சமாதிக்கு, அல்லது அரசியல் தலைவர்களின் சமாதிக்கு சென்றவுடன், அங்கே மனம் பல எண்ணங்களினால் தூண்டப்பட்டு, நம்முடைய இயல்பான ஆனந்தத்தை அனுபவிக்க முடிவதில்லை. எனவே, எங்கும், எப்பொழுதும், சதா அந்த சைதன்யம் இருந்தாலும், அதன் ஒளிரக்கூடிய தன்மை உபாதிகளின் (உடல்களின்) தகுதிக்கு ஏற்ப மாறுபடும்.

சாதாரண மரக்கட்டைப் போன்ற ஜட உடலை, அவர் என்று மரியாதையுடன் அழைக்கப்படுவதற்கு அந்த சைதன்யம் (ஆத்மா) இருக்கின்ற காரணத்தினால் மட்டுமே ஆகும். அதுவே, இறந்த உடலில் சைதன்யம் ஒளிராமல் விலகியவுடன் ஜடம் என்பதினால், அவர் என்ற மரியாதை நீங்கி, அது என்று ஆகின்றது.

அந்த சைதன்யம், ஆத்மாவாக ஒவ்வொரு உடலிலும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது என்பதினை அறிந்து, அந்த அழியாத ஆத்மாவை (அறிவை) தியானிப்பதையே "தியானம்" என்றும், அந்த ஆத்மாவில் இணைந்திருப்பதையே "சமாதி" என்றும் பதஞ்சலிமுனிவரின் அஷ்டாங்கயோகம் என்ற நூல் அழைக்கின்றது. இந்த உண்மை தெரியாமல், கண்களை மூடி அமர்ந்து கொண்டு, தியானம் செய்கின்றேன் என்று கூறுவதும், இறந்த உடலை புதைத்த இடத்தை சமாதி என்று அழைப்பதும், அறியாமை என்றே கூறவேண்டும். இதுப்போன்ற, அறியாமை நீங்குவதற்கு ஆத்ம ஞானம் அடைவது ஒன்றே வழி.

ஆத்ம ஞானம் என்பது, "**அதுவே நான்**" என்று தன் நிலையை மறவாது இருப்பதே ஆகும். இப்படிப்பட்ட "**நான்**" என்பதில் மட்டுமே, எப்பொழுதும் கவனம் வைத்து, மற்ற எண்ணங்களை தவிர்த்து மீண்டும், மீண்டும் தன் சுய சொரூபத்தில் இருக்க முயற்சி செய்பவனுக்கு நிர்விகல்ப சமாதி உண்டாகின்றது. எழுதப்பட்ட ஓவியத்தை துடைத்து விட்டால், அந்த சுவரானது சுத்தமாக இருப்பது போன்று, சமாதியில் பேதங்கள் அனைத்தும் அகன்று, எப்பொழுதும் உள்ள நிர்விகல்ப நிலையே மிஞ்சும்.

அதுவே தன் சுய சொரூபம்.

உலக விவகாரங்களில் ஈடுபட்டுக்கொண்டு, உள்ளவரை ஆத்மாவை அனுபவமாக அறிய முடியாது. ஆத்ம ஞானம் உண்டாகாதவரை, இந்த உலகம் உண்மையாகத் தோன்றும். பேதங்களை உண்டாக்குகின்ற எண்ணங்களை தடுத்து விட்டால், தானாக ஏகாந்த நிலை உண்டாகி விடும். ஏகாந்த நிலையில், எண்ணங்களுக்கு இடமில்லை. எண்ணங்கள் அற்ற நிலையே நிர்விகல்ப நிலை ஆகும். இதுவே, தன்னை அறிதல். இதற்கு மேல் அறியவோ, அடையவோ? ஒன்றும் இல்லை. எப்பொழுதும் உள்ள இந்த உண்மை நிலையை மாயையின் வலிமையினால், சாஸ்திரங்களை கற்றறிந்த பண்டிதர்களும் கூடப் புரிந்துக் கொள்வதில்லை.

எண்ணங்களின் ஒட்டுமொத்த தொகுப்பையே மனம் என்கின்றோம். இந்த மனம் ஸ்தூலமாக இருப்பதை (கண்ணிற்கு தெரிவதை) உடல் என்கின்றோம். இந்த உடல் என்னுடையது, அந்த உடல் அவனுடையது என்ற எண்ணங்கள் இருக்கின்றவரை, பேதங்கள் இருக்கும். பேதங்கள் உள்ளவரை, துவைதம் (இருமைகள்) இருக்கும். துவைதம் இருக்கின்ற வரை, ஆத்மாவை அறிய முடியாது. ஆகவே, இந்த உடல் வேறு, நான்வேறு, இறைவன் வேறு என்ற பேதமை புத்தி, ஒருவனுக்கு நீங்க வேண்டுமானால், அவன் சாஸ்திரங்கள் மூலமாகவும், தக்க சத்குருவின்

மூலமாகவும், அத்வைத ஞானத்திற்கு வரவேண்டும். இந்த ஞானத்தை வெளிமுகமாக விசாரித்து அறிவதை "சவிகல்ப சமாதி" என்றும், அறிந்த சாஸ்திர ஞானத்தைக் கொண்டு, சதா உள்முகமாக விசாரித்து அறிவதை "**நிர்விகல்ப சமாதி**" என்றும் அறியவும்.

நிர்விகல்ப சமாதியில், எண்ணங்களை சிந்திக்காதவன் "**சிவம்**" ஆகின்றான். சவிகல்ப சமாதியில் எண்ணங்களை சந்திக்கின்றவன் "**சவம்**" ஆகின்றான். இவ்வாறு ஆத்ம ஞானம் என்ற மோக்ஷத்தை அறிய விரும்பி சத்குருவை நாடி வருகின்ற, அதிகாரிகளில் (தகுதியுடையவர்களில்) அதிமந்தர், மந்தர், மத்திமர், உத்தமர், உத்தமோ உத்தமர் என ஐந்து வகைகளில் இருக்கின்றனர். இவர்களில், ஒருவரை ஒருவர் மோக்ஷம் அடைவதில் உள்ள ஆர்வத்தில் வேறுபட்டவர்கள். இவர்களில் அதிமந்தமான அதிகாரியாக இருப்பவர்கள் வருவது சும்மா இருந்தாலும் வரும், வராதது எந்த முயற்சி செய்தாலும் வராது என்ற மன நிலையில் இருப்பார்கள்.

ஒருவன் சாலையில் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது, எந்த முயற்சியும் செய்யாமல், கீழே மாணிக்ககல் கிடைத்து எடுத்ததுப்போன்று, தானாகவே நமக்கும் மோக்ஷ மானது கிடைத்தால் கிடைக்கட்டும், முயற்சி எதுவும் தேவையில்லை என்ற மூடபுத்தி கொண்டவனாக இருப்பான்.

இவன் பல யுகங்கள் ஜென்மங்கள் எடுத்தாலும், முக்தி அடையாதவனாக, பலவிதமான துக்கங்களை துக்கம் என்று அறியாமலேயே, அதை பல உடல்களில் (புழு, பூச்சி, மிருகம், பறவை, என) அனுபவித்து காலங்களை கழித்துக் கொண்டிருப்பான். இவன் மனிதப் பிறவியின் மகத்துவம் அறியாத மூடனாகவே இருப்பான். மந்த அதிகாரியாக இருப்பவர்கள் மோக்ஷம் அடைவதற்கு காலம் இன்னும் இருக்கின்றது.

இப்போது ஏன் அவசரப்பட வேண்டும்? அனுபவிக்க வேண்டியவைகளை நன்றாக அனுபவித்து, செய்ய வேண்டிய கடமைகளை செய்து விட்டு, அதற்குப்பிறகு, மோக்ஷம் அடைய முயற்சி மேற்கொள்ளலாம் என்று இருப்பவன். இவன் சில யுகங்களில், பல பிறவிகளில் வந்து, அதன்பிறகு, மனிதப் பிறவியின் மகத்துவம் அறிந்து, முக்தி அடைவான் என்று அறியவும்.

அடுத்து, மத்திம அதிகாரியாக இருப்பவன் ஆசைகளே துன்பத்திற்குக் காரணம், ஆத்ம ஞானமே மோக்ஷத்திற்கு முக்கியச் சாதனம் என்பதை சாஸ்திரங்களினாலும், சத்குரு உபதேசங்களினாலும், உண்டாகின்ற உபதேச எண்ணங் களினால் ஆன அறிவினாலும், நன்றாக அறிந்திருப்பார்கள். இருப்பினும், மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்,

சொத்து, சுகம் என பாசங்களுக்கும், பந்தங்களுக்கும் அடிமையானவர்களாக, அதிலிருந்து விடுபட முடியாதவர்களாக இருப்பார்கள். இவர்கள் மூன்று ஜென்மத்திற்குப் பிறகு ஜீவன் முக்தர்களாகும் தகுதியை அடைவார்கள்.

உத்தம அதிகாரிகள் மன சஞ்சலமின்றி, குரு முகமாக கேட்கப்பட்ட விசயங்களில் தெளிவும், சர்வ ஆதாரமாக சச்சிதாந்த பரிபூரண பரமாத்மாவே எங்கும், எதிலும் நிறைந்துள்ளது என்பதை, பரோக்ஷ ஞானமாக (கேள்விப்பட்ட ஞானமாக) அறிந்து, பின்னர் அதனை அபரோக்ஷ ஞானமாக (அனுபவ அறிவாக) அடையும் பொருட்டு, சித் சொரூபமான பரமாத்மா வையும், ஜட சொரூபமான அநாத்ம வஸ்துக்களையும் பிரித்துக் கொண்டு, **நித்ய அநித்ய வஸ்து விவேகம்** உடையவர்களாக எப்பொழுதும் ஆத்ம நிஷ்டையில் நிலைத்திருப்பார்கள்.

நிர்விகல்ப சமாதிக்கு முயற்சித்துக் கொண்டிருப்பார்கள். இவர்கள் திட வைராக்கியாக மாறியவுடன் சமாதி கைகூடும். நிர்விகல்ப சமாதியில் நின்று பழகி விட்டால், இந்தப் பிறவியிலேயே கூட மோக்ஷத்தை அடைந்து விடுவார்கள். அதாவது, ஜீவன் முக்தர்களாக மாறி விடுவார்கள்.

## குறிப்பு:–

(இது அவர்களது திட வைராக்கியத்தை சார்ந்தது. வைராக்கியம் வராமல், கேள்விப்பட்ட ஞானத்திலேயே ஆத்மாவை அறிந்திருந்தாலும், நிர்விகல்ப சமாதி கைகூடா விட்டால், ஒரு சில பிறவிகள் மீண்டும் உண்டாகிவிட சந்தர்பங்கள் உண்டு.)

உத்தமோ உத்தம அதிகாரியானவன், தலையில் நெருப்பு பிடித்துக் கொண்டவன், நல்ல நீர் நிலைகள் எங்கே உள்ளன என தேடி ஓடாமல், அருகே சாக்கடை நீர் நிறைந்த குட்டையாக இருந்தாலும், யோசிக்காமல், அதில் குதித்து தன் தலையில் பிடித்திருக்கும் நெருப்பை அணைப்பதை மட்டுமே நோக்கமாக கொண்டு இருப்பான்.

அப்படிப்பட்ட இவனைப்போன்று, ஆர்வத்துடன், அனைத்தையும் அறிந்த, தெளிந்த அறிவுடன், குரு உபதேச காலத்திலேயே, அனைத்தையும் விட்டு, விட்டு மோக்ஷத்தை மட்டுமே இலட்சியமாக்கிக் கொண்டு, எப்பொழுதும் ஆத்ம நிஷ்டை உடையவனாக, தான் அடைந்த ஆத்ம ஞானத்தை அனுபவமாக்கியவனாக, இருமைகளற்ற நிர்விகல்ப சமாதியில் நின்று, சாத்சாத் அந்த பரமாத்மாவே **"நான்"** என்ற திடமாக, நிச்சயித்த புத்தியுடன் இருப்பாம்.

இவன் அனைத்து கர்மங்களையும் விட்டு, விட்டு, நிர்விகல்ப நிஷ்டையில் நின்று, மனதை அந்த ஏக அறிவுடன் எளிதாக ஒப்படைத்து விட்டு, என் செயலாவது ஒன்றுமில்லை, எல்லாம் நின் செயலே என்றவாறு, ஒன்றுமறியாத நிலையில், சும்மா இரு!, சொல் அற! என்று சுகமாக அதனுடன் இரண்டறக் கலந்து விடுவான். இவன் யாருக்காகவும், எதற்காகவும் காத்திருக்க மாட்டான். இவனுக்கு இந்த நிலையை அடைய கஷ்டம் ஒன்றும் இல்லை. ஆனால், மற்றவர்களால் இவன் நிலையை அடைவதற்கு இன்னும் சில பிறவிகள் காத்திருக்க வேண்டும்.

ஒரு முறை நான் சித்தர் வாக்கை அசரீரியாக கேட்டேன். அது அத்வைத பரமாக இருந்தது. அப்பொழுது என்னால், அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், அதன்பிறகு, அவர் கூறியதை விசாரம் செய்து, அறியாமையை அகற்றி, எண்ணங்கள் அற்ற தியானமான நிர்விகல்ப நிலையில் அமர்ந்து, அதை அனுபவப்பூர்வமாக அரை முகூர்த்தத்தில் உணர்ந்தேன். ஒரு முகூர்த்த காலம் அந்நிலையில் சமாதியில் இருந்தேன் (ஒரு முகூர்த்த காலம் = 11/2 மணி நேரம்). பரிசுத்தமான அந்த பரமானந்த நிலையில் மூழ்கியிருந்தேன். இந்நிலையில், ஆனந்தம் பொங்கி வருகின்றது. இதற்கு முன்பு நான் இது போன்ற ஒரு நிலையை அனுபவித்தது இல்லை.

ஆதலால், பின்னும் அந்த நிலையிலேயே எப்பொழுதும் அமர்ந்திருக்கின்றேன். இந்தச் சமாதி சுகத்திற்கு இந்திரன் முதலான தேவர்களின் சுகங்கள்கூட ஈடாகாது. ஹிரண்ய கர்பணான நான்முக பிரம்மாவின் சுகம் முதற்கொண்டு இதற்கு நிகராகாது. இதை உணராது, இந்நாள் வரையில் என்னுடைய வாழ்க்கையை உலக விசயங்களில் ஈடுபடுத்தி, பிரயோஜனம் இன்றி, காலத்தைக் கழித்து விட்டேன். இது எவ்விதம் என்றால், என்னிடம் உள்ள விலை உயர்ந்த புதையலை அறியாமல், வெளியே பிச்சை எடுத்து கையேந்தி நின்றேன்.

ஐயோ! அநியாயமாக காலம் பல கடந்த போதும், போதும் இந்த இழிவான வாழ்க்கை! என்பதை அறியாமல், மூடத்தனமாக, அற்ப விசய, சுகங்களை உண்மை என்று நாடி நின்றேன். இதனால் அடைந்த பலன் என்ன? செக்குமாடு போன்று விசய, சுகத்திற்காக வீணாக உழைத்து வந்தது போதுமானது. இனி!, இருளற்ற வெளிச்சத்தில் ஏகாந்தமாக எப்பொழுதும் இருப்பதையே விரும்புகின்றேன்.

மற்றவர்களைக் கண்டாலும், அவர்களும் வெளிமுகப் பார்வையில் பலவிதமான காரியங்களில் ஈடுபட்டு பயனற்ற வாழ்க்கை வாழ்கின்றனர். மாலைகளும், மஞ்சங்களும், மாதர் போகங்களும், பண்டங்களும் என இவைகளை பல முறை அனுபவித்த பிறகும், விடாமல் பற்றிக் கொண்டுள்ளனரே.

மேலும், ஒருவன் செய்கின்றது போன்று மற்றவர்களும் செய்கின்ற உலக வழக்கங்களைக் கொண்டு, விசய போகங்களில் அருவருப்பு உண்டாகாமல் மீண்டும், மீண்டும் அதில் ஈடுபட்டு, அதையே வழக்கமாக்கிக் கொண்டு, அல்லல் படுகின்றார்களே என இவ்விதம் உள்ளூர என் சிந்தனை ஓடியது. சிறிது நேரத்திலேயே, ஐயகோ! ஆச்சரியம்! இவ்விதமான மூடத்தன்மை எவ்விதம் என் சித்தத்தில் உதய மாயிற்று, அவைகளை ஒடுக்கி, மீண்டும் ஆனந்தத்தில் நிலைப் பெற்றேன்.

எந்நேரமும் ஆனந்த பரிபூரணனாக நான் இருக்கும் பொழுது, செய்ய வேண்டியது எனக்கு என்ன இருக்கின்றது? நான் அடைய வேண்டியது வேறு ஏதேனும் உண்டோ? அவ்விதம் இருக்குமானால், எங்கே? எந்த வேளையில்?, எவ்விதம்?, எப்படி? அதை அடையப் போகின்றேன்? அடைய முடியாத ஒன்றை உண்மையில் எப்படி அடையப்பட்டதாகும்? எல்லாக் காலங்களிலும், எப்பொழுதும் அளவற்ற சிதானந்த ரூபியாகவே இருக்கின்ற எனக்கு அடைய என்ன இருக்கு?

எனக்கு கிரியைகள் ஏது? தேகம், இந்திரியங்கள், அந்தக்கரணங்கள் போன்றவைகள் கனவுக்கு நிகரானவை யாதலால், இவைகளின் வழியாகவும் எனக்கு கிரியைகள் கிடையாது.

எல்லா ஜீவர்களுடைய உடல்களும், இந்திரியங்களும், அந்தக்கரணங்களும் அகண்ட சச்சிதானந்த சிதாத்மாவான என்னுடையதாகவே இருக்கும்பொழுது, இந்த உடலில் இருக்கின்ற அந்தக்கரணங்களான மனம், புத்தி போன்ற வைகளை, விசயங்களிலிருந்து தடுத்து நிறுத்த முயற்சிப் பதினால் என்ன பிரயோஜனம்? தடுத்து நிறுத்த முயற்சிக்காத மற்றவர்களின் அந்தக்கரணங்களும் என்னுடையவை அல்லவா?

அப்படி இருக்கும் பொழுது, என்னுடைய ஒரு மனதை மட்டும் எண்ணங்கள் இன்,றி நிறுத்தி பழகுவதினால் எனக்கு என்ன பலன்? ஏற்கனவே இவ்வாறு மனதை நிறுத்திவிட்ட யோகிகளின் மனதுகளும், இதுவரை எண்ணங்களை நிறுத்த சிறிதும் முயற்சிக்காதவர்களின் மனதுகளும் என்னிடத்தில் அல்லவா இருக்கின்றது?!. ஆதலால், எல்லா மனதுமாக நானே இருப்பதால், எனக்கு எண்ணங்கள் இல்லாமல், நிறுத்துவதற்கு தனியாக ஒரு மனம் மட்டும் ஏது?! ர்ஏனென்றால், ஆகாயம் போன்று, பரந்து விரிந்து, விஸ்தாரமாக இருக்கின்ற எனக்கு ஒடுக்கம் என்பது எப்படி நிகழ முடியும்?

ஒடுக்கப்பட்ட மனம், ஒடுக்கப்படாத மனம் என எல்லாமே என்னிடமே உள்ளன. பூரணனான எனக்கு சமாதிதான் ஏது?

என்னுடைய மகத்துவத்தினால் அல்லவா, அனைத்து உடல்களிலும் செயல்கள் நடைபெறுகின்றன. அப்படிப்பட்ட செயல்களைச் செய்தாலும், செய்யாவிட்டாலும் எனக்கு ஒன்றும் ஆகவேண்டியது இல்லை.

வெளிமுகப் பாவனையில் இருப்பவனே மனதை ஒடுக்கி உள்முக பாவனைக்கு முயற்சிக் கின்றான். நானோ, இயல்பிலேயே ஏகன். இந்த உடல் எதற்காக வந்ததோ? அதற்கான செயல்களை அது செய்துவிட்டுப் போகட்டும். நானோ கறை படியாத, களங்கமற்ற, மறைவில்லாத ஒளிர்கின்ற ஒளியானவன். எப்பொழுதும் சிதானந்த நிலையில், தன் இருப்பில் ஆனந்தமாக தன் வீட்டிலேயே இருக்கின்றேன்.

நான் அஸ்தமனமில்லாத ரூபன், சம்பூர்ணன், பற்றற்றவன். இதுப்போன்ற என்னுடைய நிலையே உத்தமநிலை. இந்த நிலையை அறிந்தவர்களே, உத்தமோ உத்தம அதிகாரிகள்.

மற்ற மந்தர், மத்திமர், போன்ற அதிகாரிகள் படிப்படியாகச் சிரவணம், மனனம், நிதித்தியாசனம் (கேட்டல், தெளிதல், அதன்படி நிற்றல்) முதலியவற்றை முறையாகக் கடைப்பிடித்து, விவேக, வைராக்கியத்தினால் ஞானத்தை அடைகின்றனர்.

அதிமந்த அதிகாரிகள் பல ஜென்மங்களுக்குப் பிறகு ஞானம் பெற்று, அதன் பிறகு மோக்ஷம் என்ற பலனை அடைவார்கள்.

எனவே, அனுபவ ஞானத்தால் புரிதல் ஏற்பட்டு, (பிரத்திய பிஞ்ஞை) அதனால் வந்தமைகின்ற சமாதியே மேலானது. தோன்றி மறைகின்ற சில நொடிகள் சமாதியினாலும், ஆத்ம ஞானத்தைக் கேளிப்பட்ட அறிவாலும் எந்தப் பயனும் இல்லை. இது எப்படியென்றால், ஒருவன் சாலையில் செல்லும் பொழுது, இரு புறங்களிலும் தோன்றி மறைகின்ற மரம் செடிகளை கவனியாது, கவனம் முழுவதும் செல்லும் சாலையிலேயே இருப்பதைப்போன்று, கவனம் சிதறாமல் எப்பொழுதும் நிர்விகல்ப சமாதியில் நிலையாக இருப்பவனுக்கு இடையில் தோன்றி மறைகின்ற, சில நொடிகள் சமாதியினால் ஒரு பயனும் இல்லை.

எண்ணங்களை உருவாக்கும் கட்டமைப்பை அழிக்கும் பொழுதுதான் எண்ணங்கள் முற்றுமாக அழிந்து, மறைப்பு நீங்கி, எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற அறிவு விளங்கு கின்றது. எண்ணங்களுக்கு ஆதாரமாக இருப்பது விசயங்களே. விசய ஆகாரங்கள் இல்லாதபொழுது, எண்ணங்கள் அற்ற நிர்விகல்ப நிலை உருவாகின்றது. இந்த நிர்விகல்ப நிலை உருவாவதற்கு முன்பும், அறிவு விளங்கிக் கொண்டுதான் இருந்தது.

நிர்விகல்ப நிலையிலிருந்து வெளியே எண்ணங்களுக்குத் திரும்பினாலும், அந்த ஏக "**அறிவு**" எப்பொழுதும் விளங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. ஆகவே, நிர்விகல்ப நிலை இருந்தாலும், இல்லா விட்டாலும் "**அது**" எப்பொழுதும், என்றும் ஒளிர்ந்து கொண்டே இருக்கின்றது. எண்ணங்களால் சூழப்பட்ட நிலையில், அது அறியப்படாமல் இருந்தது. அறியப்படாமல் இருந்த காரணத்தினால், அதை அறியப்பட முடியாதது என்று கூறப்பட்டது.

எண்ணங்களான மறைப்பை நீக்கும் பொழுது, நிர்விகல்ப நிலையில் அது புதிதாக விளங்குவதுப்போல தோன்றுகின்றது. அதாவது, அது எப்பொழுதும், எங்கும் உள்ள பொருள் ஆதலால், அறிபவன் தன்னை அறியும் பொழுது, அறிபடு பொருளாக, அந்த "**அறிவு**" அவனுக்கு வேறாகத் தோன்றுகின்றது.

ஆனால், உண்மையில், தன்னை அறியும்பொழுது, தானே அறிபடு பொருளாகிய அறிவாக இருப்பதினால், தன்னைத் தவிர வேறு ஒன்று இல்லை, என்ற திட நிச்சயத்தால் பேதமைகள் (இருமைகள்) நீக்கப்பட்டு, துவைதம் ஒழிந்து, அத்வைதம் மலருகின்றது. இவ்வாறு, தன்னை அறிந்தவன் இனி பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை.

இதுவே, உத்தமமான ஆத்ம ஞானத்தை அடைய வேண்டிய கிரமம் (படி நிலைகள்) ஆகும்.

"ஹே அஷ்டாவக்கிரரே! நான் இதுவரை கூறியது அனைத்துமே, தாங்கள் என்னிடம் கேட்டுக்கொண்ட, சிரவணம் என்ற கேள்வி ஞானம் மட்டுமே.

வெளிமுகமாக இவைகளை கேட்ட பின்னும், மேலும் உள்முகமாக விசாரித்து, அனுபவ ஞானமாக மாறுவதற்கு முயற்சி செய்து முழுமை அடைவீராக!" என ஜனகராஜன் அஷ்டாவக்கிரரை ஆசி கூறி உபதேசத்தை முடித்தார்.

இவ்வாறு, மன்னனால் உபதேசிக்கப்பட்ட, ஆத்ம ஞான விசயங்களை கேட்டு தெளிவடைந்த, அஷ்டாவக்கிர முனி, அரசனால், பூஜிக்கப்பட்டு, அவரிடம் இருந்து விடைபெற்றுக் கொண்டு, தன் இருப்பிடத்திற்குச் சென்று, இதுநாள் வரை கேட்டதினால், அடைந்த தெளிவில், அனுபவத்திற்கான பயிற்சியாக, இருமைகளற்ற நிர்விகல்ப சமாதி மேற்கொண்டு, பரமபதத்தை உணர்ந்து, எல்லாச் சந்தேகங்களும் விலகி, தன் சுய சொரூபத்திலேயே (ஆத்மாவிலேயே) ஆனந்தமாக எப்பொழுதும் இருக்கின்ற, ஜீவன் முக்தராக விளங்கினார்.

# அத்தியாயம் – 18

## உள்ளது அது மட்டுமே

இதுவரை ஸ்ரீ தத்தாத்ரேய மகா குரு ஜனகர் மற்றும் அஷ்டாவக்கிரரின் விசாரத்தினை விளக்கமாக கூறி முடித்து, மீண்டும் பரசுராமனை நோக்கி பின்வருமாறு கூறத் தொடங்கினார்.

ஹே பரசுராமா! ஜனகர் கூறியபடி, அறிபவன் தன்னை அறியும்பொழுது, அறிபடு பொருளாக, அந்த **"அறிவு"** அவனுக்கு வேறாகத் தோன்றுவதற்குக்காரணம், அவனுக்கு அந்த அறிவின் ஆழத்தை அறிவதற்கான, கூர்மையான நுண்ணிய அறிவு குறைவாக இருப்பதே ஆகும்.

அதாவது, அந்த ஆத்ம ரூபிணியான (ஸம்வித்தி) சித்தானவள் அறிபடுபொருளாக தோன்றுவதற்கு காரணம், மாயையினால் மோகத்தை அடைந்திருக்கும் ஜெனங்கள்

தங்களுக்கு சுய (ஆத்ம) சொரூபமே அந்த அறிவுதான் என்பதை அறியாமல், அதன் அனுபவம் இல்லாமையால், அந்த சித் சொரூபத்தை தனக்கு வேறாக, காணும் காட்சியின் மூலம், அது கற்சிலைகளிலும், உலோக விக்ரங்களிலும் மட்டுமே இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் அந்த சித்தானது ஒவ்வொரு ஜீவர்களின் வாயிலாக புலன்களின் மூலம் ஒரு அறிவு தொடங்கி, ஆறு அறிவு வரை பிரகாசிப்பதை அறிய மறுக்கின்றனர். அறிபவனாகிய மனம், அறிபடு பொருளாகிய அந்த அறிவை (ஆத்மாவை) அறிவதற்கு, சாதரணப் புற அறிவில் புத்தகங்களைப் படித்துப் போன்று படித்து அறிய முடியாது.

அதை, மிக நுண்ணிய அறிவாகிய அக அறிவின் மூலம் கூர்ந்து, கவனித்து அறியப்படுகின்றது. மற்ற எந்த வழிகளிலும் இதை அறிய முடியாது. அதாவது, "**அவனறிவாலே, அவனை அறிவது**" மட்டுமே சாத்தியம் ஆகும். அறியாமையில் இருக்கும் மூடனுக்கு, விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால், இது சாத்தியமாவது இல்லை. மூடர்களும், மன நோயாளிகளும், ஆறு அறிவுக்கு கீழாக உள்ள ஜீவர்களும் விழிப்புணர்வு இன்றி, இதை அறிவது முடியாது.

பொதுவாக, அறிபடுபொருள்கள் யாவும், புலன்கள் மற்றும் மனதினாலேயே அறியப்படுகின்றன. மனதின் சொரூபத்தை அறிய மற்றொரு கரணம் (கருவி) இல்லாததால், மனதிற்கு அறிபடுபொருள் ஆகும் தன்மை இல்லை.

அதாவது, அறிபவனாக மட்டுமே உள்ளது. அறியப் படுகின்ற பொருளாக, அதை அறிவதற்கு மற்றொன்று இல்லை. ஆகையால், மனம் தான் அறிகின்ற அறியப்படுகின்ற பொருள்களுக்கு வேறாக இருந்துக் கொண்டு, 'நான் இருக்கிறேன்' என்று தீர்மானிக்கின்றது. இவ்வாறு அறியப் படுகின்ற பொருள்களுடன் கலக்காமல், அவைகளுக்கு வேறாக உள்ள மனதை **"வித்தி"** என்று கூறப்படும்.

பரசுராமா! இதை சற்று கூர்ந்து, கவனமாகக் கேள்! மேலோட்டமாக கேட்டாயானால், புரிந்துக் கொள்வது கடினம். அதாவது, ஒரு பொருளை நீ பார்க்கின்றாய். நீ இருப்பதி னாலேயே அதைப் பார்க்கின்றாய். நீ பார்த்த பொருளும் உன்னால் அறியப்பட்டு, நீ இருப்பதை உறுதி செய்கின்றது.

அதாவது, உன்னிடம் உண்டாகும் கேள்விகளும், சந்தேகங்களும் நீ இருப்பதையும் உறுதி செய்கின்றது. நீ இல்லையென்றால் கேள்விகளும், சந்தேகங்களும் இல்லை. காண்கின்ற காட்சிகளும் இல்லை.

அறியப்படும் பொருட்களும் இல்லை அல்லவா? அப்படியானால், அறியப்படும் பொருட்களை அறிபவன் நீ (மனம் அல்லது ஜீவன்) இருக்கின்றாய். நீ இல்லாமல் உனக்கு அறியவேண்டும் என்ற ஆசை உண்டாகாது. நீ இல்லையென்றால், என்னால் உன்னை உனக்கு எப்படி அறிய வைக்க முடியும்?

அதாவது, எந்த உருவமும் இல்லாத அறிவாகவே உள்ள உன்னை, சாதாரணமான உலகப்பொருட்களை அறிய வைப்பதுப் போன்று அறிய வைக்க முடியாது. "**பிறபொருளைக் காட்டுகின்ற சூரியனது ஒளியே தன்னையும் காட்டுவதாகும்**".. அதாவது, சூரியனை வேறு ஒரு ஒளி காட்டிக் கொடுக்காது.

ஆகையால், "சூரியனது ஒளியைக் கொண்டே சூரியனைக் காணுதல் போன்று, அறிவின் ஒளியால் எல்லாப் பொருள்களையும் அறிவதுடன், அறிவாகிய அதையும், அது கொடுத்த அறிவாலேதான் (புத்தியினால்) அறிதல் முடியும்".

அறிவானது, பல சொரூபமாக இருக்கின்ற படியால், எப்பொழுதும் அறியப்பட்டதாகவே இருக்கின்றது. தனக்கு அந்நியமாக இல்லாத ஒன்றின் அனுபவத்தை அறிய விரும்புவதாலேயே, உன்னால் ஒன்றும் உணர முடிவதில்லை.

"பரசுராமா! எந்த ஒரு விசயத்தைப் பார்க்கும்போதும், நீ விளங்காமல் இருக்கிறாயா? அவ்வாறு "நான்" விளங்கவில்லை என்று கூறுவதாக இருந்தால், நீ இல்லை! என்பதாகும். அப்படி இல்லாதவனிடமிருந் கேள்விகளும், சந்தேகங்களும் எவ்வாறு உண்டாகும்? தன்னை அறியாத நிலை என்பது, புத்தி இல்லாத சிறு கைக்குழந்தைகளுக்கும், புத்தி தடுமாறிய பைத்தியங்களுக்கும், புத்தி செயல் இழந்த கோமா நிலை நோயாளிகளுக்கும் மட்டுமே காணப்படும்.

ஆகவே, உருவமும், குணங்களும் அற்ற அறிவே உனது உண்மை நிலை. ஆகவே, அந்த '**அறிவாகவே நீ இருக்கின்றாய்**'. (தத் துவம் அஸி). அறியப்படுகின்ற பொருள்கள் என்று, உனக்கு வேறாகவும், தனியாகவும் எதுவுமே இல்லை. அவைகளும் உன் அறிவாலேயே இருப்பதாக அறியப் படுகின்றது. ஆகாயத்தில் உள்ள மேகம் போன்று, இருப்பில்லாத ஒன்றை இருப்பதாக நினைப்பது ஏன்? காட்சியால் அறியும் இந்த உடலையே "**நான்**" என்று கருதுகின்றாய்.

மனம் இந்த பௌதீக உடலைப் பற்றிக்கொண்டே, உலக விவகாரங்களில் ஈடுபடுவதால், இந்த 'உடலே நான்' என்ற எண்ணம் உனக்கு உருவாகின்றது. தொடர்ந்து உலக காரியங்களில் ஈடுபடும்போது, உடலே நான் என்ற எண்ணம், இன்னும் உறுதியாகி விடுகின்றது.

மனம் உடலிலிருந்து விடுபட்டு மற்றொன்றைப் பற்றிக் கொண்டு செயல்பட்டால், அதுவே உன் உடலாக நீ நினைத்துக் கொள்வாய். மனம் எதைப் பற்றுகின்றதோ? அதை நீ திடமாக கருதுவதால், அது உன் உடலாக தோன்றுகின்றது.

இதுப்போலவே, உன் சொரூபத்திற்கு வேறாக இருப்பதாக, நீ நினைப்பது அனைத்தும் உண்மையில்லை. உதாரணமாக, உப்பின் தன்மை உப்பு கரிப்பது. அது எதனுடன் கலந்தாலும், அது உப்பு கரிக்கும். ஆனால், உப்பை உப்பு கரிக்கச் செய்ய, மற்றொரு உப்பு தேவை இல்லை.

இதுப்போல, அறிவின் தன்மை அறியவைப்பது. அது எதனுடன் கலந்தாலும், அதை அறிய வைக்கும். ஆனால், அறிவை அறிய, மற்றொரு அறிவு தேவை இல்லை. இதிலிருந்து உனக்குப் புரியும் என்று அறிகிறேன்.

நீ அறிபடுபொருளாக எதையெல்லாம் அறிகிறாயோ? அது அத்தனையும் உன்னிடம் உள்ள அறிவின் வெளிப்பாடே. உண்மையில் அறிவுக்கு வேறாக அறிவதற்கு ஒன்றுமில்லை.

## குறிப்பு:–

(மனம் எதைப் பற்றுகின்றதோ? அதுவாகவே மாறுகின்றது. அது அறிவைப் (ஆத்மாவை) பற்றினால் அறிவாகவே (ஆத்மாவாகவே) ஆகிவிடும். அதற்குப்பிறகு, அங்கு அறிவதற்கு (ஆத்மாவை தவிர) ஒன்றுமில்லை.)

**"பிரம்மம் அறிவு சொரூபம். அதை அறியவோ, அறியப்படுத்தவோ? அதற்கு வேறாக வேறு எதுவும் கிடையாது."**

– பஞ்சதசி.

தேகம், தேசம், காலம் இவைகளில் பல பேதங்களை ஏற்படுத்தி, சுவரில் வரையப்பட்ட சித்திரம் போல, இவைகள் அனைத்தையும் தன்னுள்ளேயே விளங்கச் செய்கின்றது.

வரையப்பட்ட சித்திரம் சுவருக்கு அந்நியமாக வெளியில் இல்லை. அதுப்போல, அறியப்படுகின்ற பொருட்கள் அறிவுக்கு வேறாக வெளியில் இல்லை. அறிவை அறிவதே ஆனந்தம்! அந்த ஆனந்த நிலையே மோக்ஷம்! மோக்ஷம் என்பது, வானுலகத்திலோ, பாதாள உலகத்திலோ, அல்லது நீ வசிக்கும் இந்த உலகத்திலோ இல்லை. எண்ணங்கள் அற்ற சங்கல்பம் ஒழித்த சுத்த மனதின் சொரூபமே **"மோக்ஷம்"** ஆகும்.

அதை அடைய வேண்டியதில்லை. அதைப்பற்றி அறிந்துக் கொண்டாலே போதும். அதுவே உன் சுய சொரூபம். நீ அதுவாகவே இருக்கின்றாய்! ஆனால், அதை நீ அறிய மறுக்கின்றாய்!

இதை அறிந்துக் கொண்ட ஞானிகள் இந்த பூ உலகில் வாழும் பொழுதே, எந்த கவலைகளும் அற்று, ஆனந்தமாக மகிழ்ச்சியுடன் வாழ்கின்றார்கள். இவர்களே ஜீவன் முக்தர்கள். இவர்கள் வாழுகின்ற ஆனந்த வாழ்க்கையே **"மோக்ஷம்"** எனப்படுகின்றது.

"இராமா! உன்னுடைய சொரூபம் பூரணமானதால், அதற்கு அந்நியமான மோக்ஷம் எங்கு உண்டாகும்? இந்த உலகத்தைப்போன்று மோக்ஷமும் இருக்கின்றது என்ற மோகத்தை தவிர்ப்பதே மோக்ஷத்திற்கு வழி! நீயோ பூரணமானவன்! உனக்கு அந்நியமாக எதுவுமே இல்லை.

பிம்பங்கள் எப்படி கண்ணாடிக்கு அந்நியமல்லவோ? அதுப்போலத் தோற்றங்கள் அனைத்தும் ஆத்மாவிற்கு அந்நியமல்ல. அவைகள், ஆத்மாவின் **பிரதிபலிப்பே** என்ற ஞானம் அவசியம்.

**"உனக்கு வேறாக மோக்ஷம் ஒன்று உண்டு என்று எண்ணுவது, முயல் கொம்பை தேடுவது போன்றதாகும்".**

அதாவது, ஒரு கண்ணாடியானது பிம்பங்களை பிரதிபலிக்கின்றது. கண்ணாடியில் தெரிகின்ற பிரதி பிம்பங்கள் கண்ணாடி யிலேயே உள்ளது. அவைகள் கண்ணாடிக்கு வேறானதல்ல. கண்ணாடிக்கு வெளியே அவைகள் இல்லை. கண்ணாடிக்கு உள்ளேயே அவைகள் அடங்குகின்றன. கண்ணாடி இல்லை என்றால் பிம்பங்களே தெரியாது.

அதுப்போல, அறிவே அனைத்தையும் அறிகின்றது. அறிவினால் அறியப்படுகின்ற பொருட்களும், அறிவிலேயே உள்ளது. அவைகள் அறிவுக்கு வேறானதல்ல. அறிவுக்கு வெளியே அவைகள் இல்லை. அறிவுக்கு உள்ளேயே அவைகள் அடங்குகின்றன. அறிவு இல்லையென்றால், ஒன்றுமே தெரியாது. பிம்பங்கள் பிரகாசமாக பிரதிபிம்பிக்க, பாதரசம் தடவப்பட்ட கண்ணாடி மட்டுமே தேவை.

சாதாரண கண்ணாடிக்கு பிரதிபிம்பிக்கின்ற ஆற்றல் குறைவு என்பதினால், அதில் பிம்பம் தோன்றியும் பயன் இல்லை. அறிவு பிரகாசமாக அறிய, ஆறறிவு கொண்ட மனிதனே தேவை. சாதாரண ஜீவர்களுக்கு அறியக்கூடிய ஆற்றல் குறைவு என்பதினால், அவைகளுக்கு அறிவு இருந்தும் பயன் இல்லை.

எனவே, சித்தின் (அறிவின்) பிரதிபலிப்பே இந்த உலகம். கண்ணாடிக்கு உட்பட்டே (கண்ணாடி உள்ளேயே) பிம்பங்கள் தெரிவதுப்போன்று, அறிவுக்கு உட்பட்டே (அறிவின் உள்ளேயே) அனைத்தும் அறியப்படுகின்றன. ஆகவே, மோக்ஷம், முக்தி, பக்தி, வீடுபேறு போன்ற அனைத்தும் அறிவுக்கு உட்பட்டே அறியப்படுகின்றன. எனவே, விடுதலை என்பதும், வீடுபேறு என்பதும், மோக்ஷம் என்பதும் அறிபவனிடமே உள்ளது.

மோகத்தினால் அறியப்படுகின்ற பொருள்களை அறிவுக்கு வேறாக, அறிந்துக் கொள்வது அறியாமை ஆகும். இந்த அறியாமை அகன்று, அறிவு மலர்கின்ற பொழுது "**ஆத்மா**" பிரகாசிக்கும். அறியப்படுகின்ற பொருட்கள் என்பது காட்சியில் காணுகின்ற பொருட்கள் மட்டும் அல்ல. முன்னதாகவே, மனதின் பதித்து வைத்துக்கொண்டுள்ள தவறான மனப் பதிவுகளும் ஆகும். இந்த மனப்பதிவுகளும் அகல வேண்டும். அப்பொழுதுதான் அறிவு பிரகாசிக்கும்.

ஒரு பொருள் அழிந்து விடும்பொழுது, அது இல்லாமல் போய்விடுகின்றது. அதாவது, இருப்பு அற்றதாகின்றது. அதாவது, இல்லாத ஒன்றை அழிவுக்கு உட்படுத்த நினைப்பது இயலாத ஒன்று. உதாரணமாக, ஆகாயத்தில் மேகம் சூழ்கின்றது. சிறிது நேரத்தில் அது இல்லாமல் போகின்றது.

தோன்றி, மறையும் மேகத்தை அழிவுக்கு உட்படுத்த நினைப்பது அறியாமை அல்லவா? இதன் நுணுக்கம், புரிகின்றது அல்லவா?

அதாவது, இருப்பதுப் போலத் தோன்றி, இல்லாமல் போகின்ற ஒன்றுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்? எனவே, ஒரு பொருளே இருப்பு உடையதாகவும், இருப்பு அற்றதாகவும் இருக்க முடியாது. கனவில் காணும் பொருட்கள் கனவு உள்ளவரை உண்மையாகவும், கனவு கலைந்தவுடன் உண்மையற்றதாகவும் தோன்றுகின்றது.

அழியும் பொருளுக்கே, இந்த இருமை தன்மைகள் இருக்கின்றது. இவைகள் காலத்திற்கு உட்பட்டவைகள். இவ்வாறு, காலத்திற்கு கட்டுப்பட்ட ஒன்று எப்படி உனக்கு விடுதலையைக் (மோக்ஷத்தை) கொடுக்க முடியும்?".

## குறிப்பு:–

(இருப்பது போலத் தோன்றி, இல்லாமல் போகின்ற உடலுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?)

ஆக, மோக்ஷம் என்ற ஒன்றை இருப்பதுப்போல தோன்றி, இல்லாமல் போகின்ற உடலுக்கு கொடுக்கவும்

முடியாது. என்றும், எக்காலத்திலும் அழியாத ஆத்மாவுக்கு மோக்ஷம் தேவையும் இல்லை. ஆக மோக்ஷம் யாருக்கு? ஆத்மாவுடன் இணைந்த ஜீவனுக்கா? ஜீவனும், பிரம்மமும் ஒன்று என்று "**அறிவதே**" மோக்ஷம். அதாவது, மனமும், அறிவும் ஒன்றே ஆகும்.

அப்படியானால், அறிபவன் யார்?

[அறிபவனும், அறியப்படும் பொருளும் அறிவினால் ஒன்றாகிவிட்ட நிலையில், இருப்பதெல்லாம் இறைவ(நா)னே!] எனவே, மோக்ஷம் என்பது அடையப்படுவதல்ல! அறியப்படுவது! உண்மையில், மோக்ஷமும் இல்லை. பந்தமும் இல்லை. பற்றற்ற விடுதலையும் இல்லை. பற்றுகின்ற பந்தமும் இல்லை. சந்நியாசமும் இல்லை! சம்சாரமும் இல்லை!

"**பந்தத்தைப் பற்றிய அறியாமையால் உண்டாவது சம்சாரம். மோக்ஷத்தைப் பற்றிய அறியாமையினால் உண்டாவது சந்நியாசம்**".

தன்னை வெளிப்படுத்துவது சம்சார பந்தம். தன்னை இழப்பது சந்நியாச மோக்ஷம். தன்னை அறிவதே "**அறிவு**". அவ்வாறு, அறிந்தபின்... "**நான்**" சம்சாரி இல்லை! "**நான்**" சந்நியாசி இல்லை! "**நான்**" பரிபூரண "**ஆத்மா**".

"குருவே நீங்கள் கூறுவதுப்போன்று, அறிபவனும், அறியப்படும்பொருளும் ஒன்று என்பது எனக்கு ஏற்புடையதாக இல்லை" காண்பவனே எப்படி? காணப்படும் பொருட்களிலும் விளங்க முடியும்? பொதுவாக, உலகமானது இரண்டாக பகுக்கப் பட்டுள்ளது. ஒன்று நிலையானது (சித்து), மற்றொன்று நிலையற்றது (அசித்து – அழியும் பொருட்கள்). இவற்றில், அழியும் தன்மையுடைய அறியப்படும் பொருட்கள், அழியாத அறிவினாலேயே (சித்தாலேயே) விளக்கப்படுகின்றன.

இதில், சித்தோ சுய ஒளி உடையது. இந்த சித்தின் (அறிவின்) ஒளிப்பிரகாசத்தால் அறியப்பட்ட பொருட்கள் ஒளிக்கு வேறாக மட்டுமே இருக்க முடியுமே தவிர, அது எப்படி ஒன்றேயான அறிவே, எல்லாவற்றிலும் விளங்குகின்றது? இது, அனுபவத்திற்குப் பொருந்துவதாக இல்லையே!

சங்கல்பத்தினால் இந்த உலகம் உண்டாகியது என்றும், சங்கல்பத்தை அகற்றினால், மனது நிர்விகல்ப நிலையை (எண்ணங்கள் அற்ற நிலையை) அடைந்து, பந்தங்களில் இருந்து விடுபடுகின்றது என்றும், விடுபட்ட நிர்மலமான நிலையே ஆத்ம சொரூபம் என்றும் ஏற்கனவே விளக்கப்பட்டது. இதுவும் எனக்கு ஏற்புடையதாக இல்லை. ஏன் எனில், மனமே! ஆத்மாவை அறியும் ஓர் கரணம் (கருவி) என்று கூறினீர்கள்

(**அந்தக்கரணங்கள்:–** மனம், புத்தி, சித்தம், அகங்காரம்).

அப்படியானால், மனம் என்பது, உள் முகமாகத் திரும்பி, ஆத்மாவை அறியக்கூடிய தகுதி உடையதாக இருந்தால், அந்த மனம் ஆத்மாவை விட மேன்மை உடையதாக ஆகிவிடுமே? மனம் இல்லாவிடில், ஆத்மாவும் ஜடம் என்று ஆகிவிடுமே? இது எப்படி சாத்தியம்?

குருநாதா! ஆத்மாவானது பந்தம் அடைவதற்கும், மோக்ஷம் அடைவதற்கும் மனமே கருவியாக உள்ளது என்றும், எண்ணங்களை வெளிமுகமாக விசய சுகங்களில் திருப்பி அனுபவிக்கின்ற சவிகல்ப மனமே பந்தப்படுவதாகவும், அதே மனதை எண்ணங்கள் அற்ற நிலையில் உள்முகமாக திருப்பி அனுபவிக்கின்ற நிர்விகல்ப மனமே மோக்ஷம் அடைவதாகவும் கூறினீர்கள்?

இவ்வாறு கூறிவிட்டு, எண்ணங்கள் அற்ற நிர்விகல்ப நிலையில் உள்ள மனமே, ஆத்மாவை அறிகின்றது என்பது ஏற்புடையதாக இல்லை. மனதை ஆத்மாவை அறியும் கரணம் (கருவி) என்று கூறிவிட்டு, அது நிர்விகல்ப நிலையில் ஆத்மாவை அறியும் பொழுது, ஆத்மாவும், மனமும் வேறு, வேறாக இருந்து அறிவதால், அங்கே துவைதம் உண்டாகின்றதே? பயத்தால் கயிறு பாம்பாகத் தோன்றியது.

தோன்றிய பாம்பு வேண்டுமானால், பொய்யாக இருக்கலாம். ஆனால், பயம் இருந்தது என்பது உண்மையே. இதில் இருமைகள் உள்ளது. ஏக நிலையான அத்வைதம் இல்லை. துவைதம் இருக்கின்றது.

பயத்தில் தோன்றிய பாம்பிற்கு நிலைத்த தன்மையும், செயலும் அங்கு இல்லை. ஆனால், காட்சியில் காணப்படுகின்ற உலகத்தில் தோன்றுகின்ற பொருட்களுக்கு நிலைத்த தன்மையும், செயல்களும் இருக்கின்றதே? இது துவைதம் அல்லவா? இங்கு இருமைகள் காணப்படுகின்றனவே! காட்சியில் காணப்படும் பொருட்களை உண்மையற்றது என்று எவ்வாறு கூறுவது?

இவைகளையும் பயத்தில் தோன்றிய பாம்பு போன்று மனதின் மயக்கம் என்று கருதப்படுமானால், இதில் மன மயக்கத்துடன் கூடிய ஞானம் என்றும், மன மயக்கம் அற்ற ஞானம் என்றும் இருவகை ஞானம் எப்படி உண்டாக முடியும்? அப்படியே, இந்த மனமயக்கம் ஒருவருக்கு மட்டும் தோன்றினால், அவர் பயந்துள்ளார், அல்லது புத்தியில்லாமல் இருக்கின்றார் என்று கருதலாம். அனால், இது எல்லோருக்கும் தோன்றுகின்றதே! எல்லோருக்கும் ஒரே விதமான கற்பனை உருவங்கள் எப்படி உருவாக முடியும்?

"ஐயனே! சந்தேகங்கள் என்னை குழப்புகின்றன. தாங்கள் இதனை விளக்கமாக எனக்குக் கூறி அருள வேண்டும்". என்று பரசுராமன் பகவான் ஸ்ரீ தத்தாத்ரேயரிடம் வேண்டி நின்றான்.

பரசுராமனின் சந்தேகங்களை கேட்ட ஸ்ரீ தத்தாத்ரேய மகா குருவும், அவனை நோக்கி பின்வருமாறு கூறத் தொடங்கினார்.

"பார்க்கவா! உன்னுடைய கேள்விகள் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றன. சந்தேகத்தை கேட்பவனுக்கே, திடமான தெளிவு உண்டாகும். தெரிந்து கொண்டவன் போல இருப்பதைக் காட்டிலும், ஒன்றும் தெரியாதவன் எவ்வளவோ மேல். சந்தேகங்களை கேட்டு தெளிவு பெறுபவனே, அதில் இருந்து வெளிவரவும் முடியும்.

அத்துடன் கேள்விகளே சந்தேகங்களை தீர்க்கக்கூடிய விதையாக உள்ளது. இந்த விதையிலிருந்தே "**அறிவு**" என்ற விருட்சம் (மரம்) வளர முடியும். உன்னுடைய கேள்வி களுக்கெல்லாம் ஏற்கனவே விடைகள் கொடுக்கப்பட்டு விட்டது. இருப்பினும், உன்னுடைய சந்தேகங்கள் முழுமையாக தீர்ந்த பாடில்லை.

உன்னுடைய மனம் திடமாகும்வரை சந்தேகங்கள் இருக்கத்தான் செய்யும். மீண்டும், மீண்டும் விசாரித்து அறிதலின் வாயிலாக மட்டுமே சந்தேகங்கள் முழுவதுமாக அகற்ற முடியும்.

மேலும், மாணவன் தன் மனதில் எழும் சந்தேகங்களை குருவினிடத்தில் கேட்டால் மட்டுமே, குருவினாலும் அவனுக்கு தெளிவாக விளக்கி, அவனது அனைத்து சந்தேகங்களையும் போக்க முடியும். அதைவிடுத்து, இவனாக ஒரு தவறான முடிவுடன், அதை தவறாகவே அறிந்து கொள்வது, அவனது ஆத்ம முன்னேற்றத்திற்கு தடையாக அமையும். உன்னுடைய கேள்விகள் மகிழ்ச்சியையே தருகின்றன".

"இராமா! சித் (அறிவு) ஒன்றாக இருந்தும், பலவாக விளங்குகின்றது என்பதை எவ்வாறு அறியலாம் என்றால், கண்ணாடி ஒன்றுதான், ஆனால், அது பல பிம்பங்களை பிரதிபலிக்கின்றது.

அதுப்போன்றே, மனம் ஒன்றுதான். அதே மனம் கனவில் அறிபவன், அறியப்படும் பொருட்கள், அறிதல் என்று பலவாறாக தன்னைத் தானே மாற்றி வெளிப்படுத்திக் கொள்கின்றது. காணுகின்ற கனவும் மனதிற்கு அந்நியமானது அல்ல. கனவை மனமே உருவாக்கியது. உருவாக்கிய மனமே கனவையும் அறிந்தது. காணுகின்ற கனவும் மனதிலேயே அடங்கியது.

மனம் இல்லையேல், கனவுகளும் இல்லை. இவ்வாறே, சுத்த அறிவான சம்வித்தை ஒன்றாக இருந்தும், பலவாறாக தானே விளங்குகின்றாள். காண்பவன், காணப்படும் பொருட்கள் என்று கனவிலும் இருமைகள் உள்ளது.

ஒன்றேயான மனதின் விரிவே அந்த இருமை நிலைகளாகத் தெரிகின்றது. கனவிலும் சரி!, நினைவிலும் சரி! மனமே பொருட்களின் உருவத்தை எடுக்கின்றது. கனவில் தோன்றும் பொருட்களை நீ உண்மை இல்லை என்று ஏற்றுக் கொள்ளும்போது, நினைவில் தோன்றும் பொருட்களை மட்டும் உண்மை இல்லை என்று ஏன் ஏற்க மறுக்கின்றாய்?

குருடனுக்கு பார்வை இல்லாததால், பொருட்கள் காட்சி யாவதில்லை. மற்றவர்கள் காண்பதை தொடு உணர்ச்சியின் வாயிலாக அறிந்து, அந்த அனுபவத்தை மனதில் பதித்துக் கொண்டு, நினைவூட்டி அதை அறிந்து கொள்கின்றான்.

இதிலிருந்து, ஒளி இல்லாமலேயே அவனால் பொருட் களை அறிந்துக்கொள்ள முடியும் என்றால், அந்த பொருட் களுக்கு சுயமாக ஒளிரும் தன்மை அவசியம் இல்லை என்பது உறுதியாகின்றது. இது குருடனுக்கு சரியாக இருக்கும்.

ஆனால், கண்களால் காட்சிகளைக் காண்பவனுக்கு வெளிச்சம் தேவை. அந்த வெளிச்சம் சித்திடம் (அறிவிடம்) இருந்தே வெளிப்படுகின்றது. சித்து ஒளிரவில்லையென்றால், உலகில் எதுவும் தோன்றாது. கண்ணாடி இல்லாமல் பிம்பங்கள் பிரதிபலிக்கப் படுவதில்லை. அதே பிம்பங்கள் கண்ணாடிக்கு வேறாகவும் இல்லை. சித்துவைத்தவிர, சித்துவிற்கு வேறாக எதுவும் இல்லை. இது மனதிற்கும் பொருந்தும். மனமும், சித்திற்கு வேறாக வெளியில் இல்லை. எனவே, உலக காரியங்கள் நடைப்பெறுவதற்காக கற்பிக்கப்பட்ட மனம், எப்படி ஆத்மாவை விட மேன்மை உடையதாக இருக்க முடியும்?

மனம் என்பது, ஆத்ம சொரூபத்திலுள்ள ஓர் அதிசய சக்தி. அது சகல நினைவுகளையும் தோற்றுவிக்கிறது. நினைவுகளை எல்லாம் உள் முகமாக நீக்கிப் பார்க்கும்போது, தனியாக மனமென்று ஒரு பொருளில்லை. இருப்பது அறிவு மட்டுமே. ஆகையால் நினைவுகளே மனதின் சொரூபம்.

கனவில் வருகின்ற மரத்தை வெட்டுவதற்குக் கனவுக் கோடாரியே கருவியாக இருக்க முடியும். கனவில் உண்டான மரமும் உண்மை இல்லை. அந்த மரத்தை வெட்டிய கோடாரியும் உண்மை இல்லை. இதில் கனவை உருவாக்கிய மனம் மட்டும் எப்படி உண்மையாக இருக்க முடியும்? இல்லாத முயல் கொம்பால் பிளக்கப்பட்டவைகள் என்று எதுவும் இல்லை.

எப்படி, முயல் கொம்பும், அதனால் பிளக்கப்பட்ட வைகளும் உண்மை இல்லையோ? அதுப்போல, மனமும், அந்த மனதினால் கற்பிக்கப்பட்டவைகளும் உண்மை இல்லை.

சிதாத்மா (அறிவு) தன் முழு சுதந்திரத் தன்மையால் மனது போன்றவைகளைக் கற்பித்துக் கொண்டு, அறிபவன், அறியப்படுகின்ற பொருட்கள், அறிதல் எனப் பேதத்தை உருவகித்துக் கொண்டு, இந்த வெளி உலக விவகாரங்களை நடத்துகின்றது. வெளி விவகாரங்களில் ஈடுபடுகின்ற இதே மனம், உள் முகமாகத் திரும்பி, நிர்விகல்ப சமாதியில் உள்ளே சென்றவுடன் தனித்த ஆத்மாவுடன் தன் சொரூபத்தில் அடங்கி விடுகின்றது.

மனம் என்பது கற்பனையாக கற்பித்துக் கொண்ட பல எண்ணங்களின் தொகுப்பு மாத்திரமே. அந்த எண்ணங்கள் அழிக்கப்பட்டவுடன், மனம் தன் இருப்பை இழந்து, ஒன்றுமில்லாததாகி (நிர்விகல்பமாகி), தன் சுய சொரூபமான ஆத்மாவாகப் பிரகாசிக்கின்றது.

**"மனம் என்று நீ எதை நினைக்கின்றாயோ? அது மொத்த எண்ணப்பதிவுகளின் கூட்டம் மட்டுமே!"**

எண்ணங்கள் நீங்கிய நிர்விகல்ப சமாதியில், மனம் இல்லாத காரணத்தினால், ஆத்மா விளங்குகின்றது. உண்மையில் ஆத்மாவுக்கு வேறாக, மனம் மட்டும் அல்ல, மற்ற எதுவுமே இல்லை. அப்படியிருக்க, துவைதம் எவ்வாறு உண்டாக முடியும்?

பார்க்கவா! மேலும் கவனமாகக் கேள். ஆகாயமும், சித்து தத்துவம் போன்று முழுமையாக எங்கும் பரவி இருந்தாலும், சித்து போன்று சுயப்பிரகாசத் தன்மை ஆகாயத்திற்கு இல்லை. ஆகாயத்திற்கும், ஆத்மாவுக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. பூரணமாகவும், நிர்மலமாகவும், நுட்பமாகவும், தொடக்கமும், முடிவும் இல்லாததாகவும், உருவமற்றதாகவும், அனைத்திற்கும் ஆதாரமாகவும், பற்றற்றதாகவும் இரண்டுமே ஒன்றுபோல் உள்ளன.

அதனால்தான், பலரால் ஆகாயமே ஆத்மா என்றும், ஆத்மாவே ஆகாயம் என்றும் அழைக்கப்படுகின்றன. உன்னுடைய பிரதிபிம்பம் உன்னைப் போன்று இருக்கும் பொழுது, பரப்பிரம்மத்தின் பிரதிபிம்பமான மாயை பிரம்மத்தைப் போன்றே இருப்பதில் ஆச்சரியம் அடைய என்ன இருக்கின்றது.

ஆந்தைக்கு சூரிய வெளிச்சமும் இருட்டாகவே காண்பதுப்போன்று, அறியாமையில் உள்ளவர்கள் ஆகாயத்தை

வெறும் ஆகாயம் மாத்திரமாகவே காண்கின்றனர். உண்மை அறிந்தவர்கள் ஆகாயத்தைகூட ஆத்மாவாக காண்கின்றார்கள். ஆகாயமும், ஆத்மாவுக்கு வேறானதல்ல. மீண்டும் ஞாபகப் படுத்திக் கொள்! ஆத்மாவுக்கு வேறாக எதுவுமே இல்லை.

மனமானது கனவை உருவகித்துக் கொண்டு தன்னை பலவாறாகக் கற்பித்துக் கொள்வதைப் போன்று, பரசித்தான பரமேஸ்வரியும் தன்னுடைய சுதந்திரத் தன்மையால் தன்னைப் பலவாறாகக் காட்சிப் படுத்துகின்றாள். தனது மாயா சக்தியால், இவ்வாறு பலவாறாக தோன்றினாலும், தன்னுடைய சுயத் தன்மையில் எந்தப் பிளவும் இல்லை. அது, பல எண்ணங்களால் பிளவுபட்ட மனதின் காட்சியே.

இந்திரஜால வித்தைக்காரன் தனது திறமையால், தன்னையே பல்வேறு உருவங்களாக மாற்றி, பார்க்கின்ற மக்களுக்குக் காண்பிப்பதுப் போன்று, தன்னுடைய சுயத் தன்மையில் எந்த மாற்றமும் அடையாத, ஒரே ரூபமான சுத்த சித்து, தனது மாயா சக்தியால் தன்னை மறைத்துப் பலவாறாகத் தோன்றுகின்றாள்.

ஒன்றேயான சித்துவானவள் மாயையினால் பிளவுபட்டவர்களின் மனதில், பல பேதங்களை கற்பித்தவாறு காணப்படுகின்றாள்.

அவர்களது மனம் (தவறானப் பல பதிவுகளைக் கொண்ட) எண்ணங்கள் அற்று அடங்கும் போது, அவர்களது பேதமை மறையும். மாயை மனதை மயக்குகின்றது. வெளிமுகப்பார்வை இருக்கின்றவரை, ஏராளமான எண்ணங்கள் இருக்கும். எண்ணங்கள் உதிக்கின்றவரை, மனம் இருக்கும். மனம் இருக்கின்றவரை, மன மயக்கம் தெளியாது. மாயை ஆத்மாவை அறிய முடியாமல், மனதை மயக்குகின்றது. மாயையைக் கடந்து, மனம் உள்முகமாகத் திரும்பி விசாரத்தில் ஈடுபட்டால் மட்டுமே, மனம் தன்னை அறிந்து தன் சொரூபமாக ஆத்மாவை அறிய முடியும்.

இந்த ஆத்மாவை அறிகின்ற விசயத்தில் தர்க்க வாதிகளும், வேத, வேதாந்தம் படித்த பண்டிதர்களும்கூட, வெளிமுகப் பார்வையிலேயே கவனம் வைத்து, மோகத்தை அடைகின்றார்கள். குருவின் உபதேசத்தை உள்வாங்கி, உள் முகமாக கவனிக்காதவரை சிரவணமானது வெளி முகமாகவே இருப்பதால், அதனால் ஒரு பயனும் இல்லை".

"இராமா! நான் கூறுவதை நன்றாக உள்வாங்கி ஆத்மாவினிடத்திலேயே (தனக்குள்ளேயே) கவனம் வைத்து, நன்றாகப் பார்த்துக்கொள். ஈஸ்வரியும், சர்வ ரூபிணியுமான சித்து ஜடத்திலிருந்து வேறானவள். அவள் சுயப்பிரகாசம் உடையவள்.

அப்படிப்பட்ட சித்துவானவள் தன்னில் தானாக ஏகத்துவமாக விளங்குவதால், அவள் "நான்" என்ற பூரண அகந்தையாக விளங்குகின்றாள். ஜடப்பொருட்களுக்கு சுயப் பிரகாசம் இல்லாத காரணத்தினால், அவைகளுக்கு தன்னை அறியும் அறிவு இல்லை. அறிவுக்கு பேதமையுடன் தொடர்பு இல்லாததால், தனித்த, பூரணமாக விளங்குகின்றாள். இப்படிப்பட்ட பூரணாகந்தை உடையவளை மாயை என்று அழைக்கப்படுகின்றது. இவள் தனித்து இருந்தாலும், தனித்த ஒரு கண்ணாடி, அனேக ரூபங்களை விளக்குவது போன்று, இவளும் அனேக உருவங்களை விளக்குகின்றாள். அவ்வாறு விளக்கினாலும், தன் சுயத்தன்மையிலிருந்து நழுவாமல் இருக்கின்றாள்.

இப்படிப்பட்ட மாயையிடம் இருந்துதான் அனேக அனாத்மாக்கள் விளங்குகின்றன. இவளையே அவித்தை என்றும், ஜடசக்தி என்றும், சூனியம் என்றும், பிரகிருதி என்றும், ஆகாயம் என்றும், தமஸ் (இருள்) என்றும், ஆதி சிருஷ்டி என்றும் பலவாறாக அழைக்கப்படுகின்றாள். **"நான்"** என்ற தூய அறிவாகிய அந்த சித்தினை, தன்னுடைய அறிவாக நினைத்துக் கொண்டு, அஹங்காரத்தினால், ஆசையினால் உந்தப்பட்டு, பல இன்னல்களுக்கு ஆளாகி, அங்குமிங்கும் அலைக்கழிக்கப்பட்ட மனமானது **"நான்", "எனது"** என்ற தன்முனைப்பிலிருந்து விடுபட்டு, அதற்கு மூலமான ஏகத்தில் அடங்கும் பொழுது, அது

இளைப்பாறுவதற்காக உள்ள இடமே "**ஆகாயம்**" (வெட்டவெளி) எனப்படும். இதையே "**இதயவெளி**" என்று ஞான நூல்களில் கூறப்படுகின்றது. இதுவே உலகில் தோன்றியுள்ள எல்லா ஜீவர்களின் ஆத்மாவும் ஆகும்.

பரசுராமா! உன்னுடைய ஆகாயமாகவும், ஆத்மாகவும், எது உள்ளதோ? அதுவே, எல்லா ஜீவர்களின் ஆகாயமும், ஆத்மாவும் ஆகும்.

('இதயத்தின் உள்ளே "**வெளி**" ஒன்று உள்ளது. அதில் "**ஆன்மா**" விளங்குகின்றது. அது உணர்வு மயமானது, அழிவற்றது, ஒளிவீசுவது' என்று தைத்திரீய உபநிஷதம் அறிவிக்கின்றது.)

இது மனித உடலில் உள்ள பௌதீக இதயம் அல்ல. இதயவெளி என்பதும், இதயம் என்பதும் ஆகாயத்தைக் குறிப்பிடப்படுகின்றது. தன்னால் கற்பிக்கப்பட்ட ஆகாயத்தினால் கவரப்பட்ட எந்த ஒரு சித் வடிவம் உண்டோ? அதுவே "**மனம்**" என்று கூறப்படுகின்றது. ஆகையினால், ஆத்மாவே மனமாகும். ஆத்மாவிற்கு வேறானது அல்ல மனம்.

ஆகாயமே, பஞ்ச பூதங்களை தோற்றுவித்தது.
இந்த பஞ்ச பூதங்களே உடலை உருவாக்கின.

**"நிலம், காற்று, ஆகாயம், நீர், நெருப்பு ஆகிய ஐந்து அடிப்படை மூலகங்களாக இருப்பது அதுவே"** – ஐதரேய உபநிஷதம்.

ஓட்டை மண் குடத்தில் வைக்கப்பட்ட தீபம், அந்த துவாரங்களின் வழியாக பிரகாசிப்பதைப் போன்று, ஒன்பது ஓட்டைகள் உள்ள இந்த உடலில் அறிவு பிரகாசிக்கின்றது. பிரகாசத்தைக் கொடுக்கும் தீபம் ஒரு செயலும் செய்வதில்லை. அதுப்போல, அறிவு பிரகாசிக்க பூரணமான ஆத்மா செயலாற்ற வேண்டியதில்லை. செயலற்றதே ஆத்மா.

ஆத்மாவின் சுயப்பிரகாசமே அறிவு!

குடத்தில் வைக்கப்பட்ட தீபத்தின் சுயம்பிரகாசம், அந்த குடத்தில் போடப்பட்ட துவாரங்களின் மூலமாக வெளிப்பட்டு, பலவாறாகப்பிரிந்து, பிரகாசமான வெளிச்சத்தைக் கொடுத்து, இருளை அகற்றி, அங்குள்ளதைக் காட்சிப்படுத்துகின்றதோ? அதுப்போல, உடலின் உள்ளே ஒளிரும் அறிவின் (சித்) சுயம்பிரகாசம், அந்த உடலில் உள்ள துவாரங்களாகிய ஐம்புலன்களில் வெளிப்பட்டு, பலவாறாகப் பிரிந்து, மனதின் வாயிலாகப் பிரகாசித்து, புத்தியின் மூலமாக, அறியாமை இருளை அகற்றி, இந்த உலகத்தைக் காட்சிப்படுத்துகின்றது.

இது ஒளிப் பிரகாசத்தின் செயலே தவிர, தீபத்தின் செயல் அல்ல. அதுப்போல, அறிவு ஒளி பாயும் இடமெல்லாம் அறியப்படுகின்றது. ஆகவே, இது மனதின் செயல் போலத் தோன்றுகின்றது. இது தோற்றம் மட்டுமே! இந்த தோற்றத்தை உண்டாக்குவது மனம். இதுவே மனதின் விகல்பம் (செயல்). தன்னால் கற்பித்துக் கொள்ளப்பட்டவைகளில் கலந்து, எண்ணங்களை உருவாக்கித் தன்னைப் பேதப்படுத்திக் கொள்வதும் மனமே. இப்படிப்பட்ட விகல்பமான எண்ணங் களில் இருந்து விடுபட்டு, நிர்விகல்ப நிலைக்கு மனம் செல்லும் போது, அங்கு ஒன்றேயான அறிவு விளங்குகின்றது. இதுவே முக்தி அல்லது மோக்ஷம் ஆகும்.

"இராமா! இவ்வாறு எண்ணங்கள் நீங்கிய மனம் அறிவாக பிரகாசிக்கத் தொடங்கியவுடன், அங்கு அறியாமை இருக்காது. ஏனென்றால், இதுநாள் வரையிலும் கண்ட காட்சிகளை தன்னாலேயே கற்பித்துக் கொண்ட மனம், அந்த காட்சிகள் அனைத்தும் அந்த அறிவினால்தான் அறியப் படுகின்றது என்பதை அறிந்தவுடன், அந்த மனதின் அறியாமை நீங்கி விடும். மனக்கற்பனையால் தனக்கு விரோதியானவன் கட்டி வைத்திருப்பதுப் போலவும், அடிப்பதுப் போலவும், அடிமைப்படுத்தி வைத்திருப்பதுப் போலவும் கற்பித்துக் கொள்கின்றான்.

இது கற்பனை என்று மனம் அறிந்தவுடன், அடிபட்டதும், அடிமைப்படுத்தப்பட்டதும் இருக்குமா? அது உண்மையில்லை என்றவுடன் நீங்கிவிடும்".

"இராமா! நன்றாகச் சிந்தித்துப் பார்! ஆதிகாலம் முதற்கொண்டே பந்தம் என்பது யாருக்குமே இல்லை. இந்த பந்தம் யாருக்கு வந்தது? என்பதை விசாரி! பந்தம் உண்டு என்ற பயமே உண்மையில் பெரிய பந்தம். சிறுவன் பேய் இருப்பதாக எண்ணிப் பயப்படுகின்றான். அதுப்போலத்தான் பந்தம் பற்றிய பயமும் ஆகும். இல்லாத பேயை இருப்பதாக எண்ணியது பயமே. அதுப்போல, இல்லாத பந்தத்தை இருப்பதாக எண்ண வைப்பதும் பயமே. எவ்வளவு சிறந்த புத்தி உடையவனாக இருந்தாலும், இந்த பயம் உள்ளவரை, அவன் எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், இந்தப் பந்தத்திலிருந்து விடுபட முடியாது.

நிர்மலமான சிதாத்மாவிற்கு இந்த பந்தங்கள் இல்லை.

கண்ணாடியில் பிரதிபலிக்கின்ற தீபம் கண்ணாடியைச் சுடுவதில்லை. காரணம், பிம்பம் உண்மையில்லை. அது வெறும் காட்சி மாத்திரமே. அதுப்போல, ஆத்மாவில் பிரதி பலிக்கின்ற இந்த உலகம் ஆத்மாவை பாதிப்பதில்லை. காரணம், உலகம் உண்மையில்லை. அது வெறும் காட்சி மாத்திரமே.

பந்தம் உண்மையென்பது மனதின் பாவனையே. மனமும், பயமும் உள்ளவரை இந்த பந்தமும் இருக்கும். இப்படிப்பட்ட இந்த பயமும், பந்தமும் விலக வேண்டு மானால், உன் மனதை நீ விசாரித்து அறிவது ஒன்றே வழி. இந்த பந்தத்தையும் பயத்தையும் நானோ, நான்முக பிரம்மாவோ, விஷ்ணுவோ, ஏன் சங்கரனோ? யார் முயன்றாலும் இதை நீக்க முடியாது. ஆகையால், இதை உன்னால் மட்டுமே ஒழிக்க முடியும். எனவே, உன் மனதை விசாரித்து உண்மையை உணர்வாய். மனம் பேதங்களை விட்டு நிர்மலமாக இருக்கும் நிலையில், அங்கு துவைதம் இருப்பதில்லை. இது, அது என்பதெல்லாம் வெறும் தோற்றம் மட்டுமே. இவற்றை அகற்றி விட்டால், இருப்பது அறிவு (ஆத்மா) மட்டுமே.

**"இறைவனை (அறிவை) தனக்கு வேறாக எண்ணுபவன், அனைத்திலும் பேதமை கொண்ட துவைதியாக இருக்கின்றான். இறைவனைத் (அறிவை) தவிர ஒன்றுமில்லை என்று எண்ணுபவன் பேதமை நீங்கிய அத்வைதியாக இருக்கின்றான்".**

இந்த பேதமைகள் அனைத்தும் மனதின் பாவனைகளே!

**உண்மையில், மனம் என்பது, இல்லவே இல்லை.**

பயத்தில் இருளில் கயிறு பாம்பாகத் தோன்றுகின்றது. பயமே பாம்பின் உருவைக் கயிற்றில் திணிக்கின்றது. பாம்பின் தோற்றத்திற்கு ஆதாரமாக இருந்தது கயிறே! கயிறு இல்லையென்றால், பாம்பின் தோற்றம் தோன்றாது. ஒன்றின் இருப்பும், பயமுமே, இல்லாததை இருப்பது போன்று காட்டுகின்றது. பயம் அகன்றவுடன் கற்பனையாக கற்பித்துக் கொண்ட பாம்பு உருவமும் அகன்று விடுகின்றது. பாம்பாகத் தோன்றும்போதும், கயிறு மட்டுமே அங்கு இருந்தது. பாம்பு உருவம் அகன்ற போதும், கயிறு மட்டுமே அங்கு இருக்கின்றது. இந்த தோற்ற மாற்றத்திற்குக் காரணம் பயம் மட்டுமே.

பயம் என்ற உணர்வு ஒரு பொருளை அதன் இயல்பிலிருந்து வேறாக மாற்றி, இல்லாத ஒன்றை இருப்பது போன்று காட்டுவது மனதில் பாம்பை பற்றிய ஒரு அறிவு இருந்ததினால் ஆகும். அதுப்போல, விசாரித்து அறியும்போது அதன் உண்மைத் தன்மையான கயிறு என்பதை அறிவதும் அறிவு மட்டுமே ஆகும். ஆக, இந்த பாம்பு, கயிறு என்பதை அறிகின்ற அறிவு ஒன்று இருப்பதினால்தான் காட்சி உண்டாகின்றது. காணும் பொருள்களின் உண்மைத் தன்மையை உணரும் பொழுது, காட்சி மறைந்து காண்பவனை (அறிவை) அறிய முடிகின்றது. எனவே, இருப்பது அறிவு மட்டுமே. அதனால், துவைதம் எங்கும் இல்லை.

இருப்பது, இல்லாதது போன்று தோன்றுவது எல்லாம் தோற்ற மாயையே. தோற்றங்களைக் கடந்து, எது இருப்பாக உள்ளதோ? அதுவே அறிவு. – **ரிபு கீதை**

கனவில் கண்டவைகள் கனவு உள்ளவரை உண்மையாக இருந்தது. கனவில் நனவுலகம் இல்லை. நனவில் கனவுலகம் இல்லை. அதாவது, கனவு நனவில் பொய்! நனவு கனவில் பொய்! அதுப்போல, நனவு உலகில் கண்டவைகளும் உண்மை இல்லை என்ற தெளிவும், திடமான தீர்மானமும் உண்டாகி விட்டால், கனவைப் போன்றே, நனவையும் பொய் என்பதை ஏற்க முடியும்.

கனவை பொய் என்று ஏற்கின்ற மனது, நனவை பொய் என்று ஏற்க முடியாததற்குக் காரணம், கனவு ஒரு இரவில் கலைந்து விடுகின்றது. ஆனால் நினைவு சில வருடங்கள் ஓடுகின்றது. மேலும், அவரவர்களிடம் பல பிறவிகளாக தொடர்ந்து ஆழமாகப் பதிந்து இருக்கின்ற, ஒட்டு மொத்த சம்ஸ்காரங்களின் தொகுப்பை அனுபவிப்பதற்காக மனம் கண்ணிற்குத் தெரிகின்ற உருவமாக எடுத்து வைத்திருக்கும் இந்த உடலின் மீதுள்ள அதீத பற்றுதலே காரணம் ஆகும். இந்த பற்றையே **பந்தம்** எனப்படுகின்றது.

அந்த பந்தத்தின் காரணமாக, உள்ளே இருந்து வெளிப்படுகின்ற அஹங்கார "நான்" தன் போலி இருப்பை இழக்க மறுக்கின்றது. அது தன்னைப்பற்றி யாராவது, ஏதாவது திட்டி விட்டாலோ? அவமானப்படுத்தி விட்டாலோ? கோபத்தில் கொந்தளிப்பதும், அதுவே, அவர்கள் பாராட்டி விட்டாலோ? சந்தோசத்தில் நிலை கொள்ளாமலும் உள்ளே இருந்து புறப்பட்டு விடுகின்றது.

மேலும், தன்னிடம் உள்ள தவறான மனப்பதிவுகளை யாராவது சுட்டிக் காட்டினாலோ? மாற்ற முயற்சித்தாலோ? அவர்கள்மீது காழ்ப்புணர்ச்சியையும், வெறுப்பையும் மனம் உடனடியாக வெளிப்படுத்துகின்றது. அதாவது, தன் தவறை ஆதரிப்பவரை விரும்புகின்றது. தனக்கு அறிவுரை கூறுபவரை வெறுக்கின்றது.

இந்த விருப்பு, வெறுப்பு இருமைகளான பேதமைகளில் சிக்கிக்கொண்டிருக்கின்ற மனம், அந்த அளவிற்குத் தன்மீது தீர்க்கமாக "நான்" என்ற பிடிப்பும், தனக்கு வேறாக காணப்படும் பொருட்கள் மீதுள்ள நிலைத் தன்மையையும், பற்றிக் கொண்டு, பந்தப்பட்டு வெளிவர மறுக்கின்றது. இந்த தீர்க்கமான எண்ணமே, காணும் பொருட்கள் நிலையாகத் தோன்று வதற்குக் காரணமாக உள்ளது.

தன்னை உள்முகமாக விசாரித்து அறியும் மனம், நாளடைவில் தெளிவு பெற்று, இந்த நினைவு உலகமும் உண்மையில்லை என்ற தீர்க்கமான எண்ணம் வலுப்பெறும் போது, நிலையாகத் தெரிந்தவைகள் நிலையற்றதாகிவிடும். அதாவது, நினைவு உலகமும் பொய்யாகிவிடும்.

இந்த மாயத் தோற்றங்கள் மறையும்போது, இருக்கின்ற அறிவு தன் உண்மை சொரூபமான "நான்" என்ற பூரணாகந்தையாக வெளிப்படும். உண்மையாகவே, "**நான்**" என்ற வார்த்தைக்கு சொந்தம் கொண்டாடும் உரிமை அந்த பிரம்மத்திற்கு மட்டுமே உண்டு! அறியாமையினால், தன் உடலையும், மனதினையும் "**நான்**" என்று கருதிக்கொண்டு, எது உண்மை, எது பொய்? என்று பிரித்து அறிய முடியாத பகுத்தறிவற்ற பாமரர்களே, காண்பவைகளில் மயங்கி, உலகையும், உடலையும் உண்மை என்று உரிமை கொண்டாடுகின்றார்கள். இவர்களிடம், "**நித்திய, அநித்திய வஸ்து விவேகம்**" இல்லை.

"இராமா! அறிவின் (சித்தின்) அனுபவம் இல்லாததால், என்னால் அதை உணர முடியவில்லை என்று உன்னால் கூற முடியாது. காரணம், அறிவை அறிய முடியவில்லை என்பதைக்கூட அறிவே விளக்குகின்றது. அறிவின் அனுபவம் கிடைத்த பொழுதும், கிடைக்காத பொழுதும் **சித்** (அறிவு)

விளங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. நீ அனுபூதியை அடையாத காரணத்தினால் இல்லை என்று கூற முடியாது.

அது இல்லாத இடமோ? காலமோ? இல்லை. எப்பொழுதும், எங்கும், அது ஆகாயம் போன்று, விளங்கிக் கொண்டுதான் உள்ளது. உள்ளது அதுமட்டுமே! அதுவே **உண்மை**! அதுவே **சத்தியம்**.

இங்கு ஆகாயம் என்று கூறப்படுவது, கண்ணிற்குத் தெரியாத வெட்டவெளியை கூறப்படுகின்றது. இந்த ஆகாயத்தில்தான் மாயையான இந்த மொத்த பிரபஞ்சமே மிதந்து கொண்டிருக்கின்றது. ஆகாயம் வேறு, பிரபஞ்சம் வேறு. இந்த இரண்டையும் குழப்பிக்கொள்ளக் கூடாது. ஆகாயம் **ஆத்மா**! பிரபஞ்சம் **அநாத்மா**! இதையே, பிரம்மம் சத்தியம்! ஜகத் மித்யா! எனப்படுகின்றது. ஆகவே, தன்னை அறிதல் என்பதும் கூட உண்மையில் கிடையாது.

தன்னை அறிவதற்கு என்ன உள்ளது?

உள்ளது எப்பொழுதும் உள்ளது! எதுவும் படைக்கப் படுவதும் இல்லை, அழிக்கப்படுவதும் இல்லை. இந்த மாற்றங்கள் எல்லாம், மனம் கற்பித்துக்கொண்ட பாவனைகளே!

உதாரணமாக, நாம் ஒரு கிணறு தோண்டுகின்றோம், கிணறு நம்மால் தோண்டி, உருவாக்கப்பட்டதாக எண்ணு கின்றோம். கிணறு வந்தவுடன் அதில் ஆகாயம் (வெளி) நிரம்பியதாக எண்ணுகின்றோம். நீர் கொண்டு வந்ததாக எண்ணுகின்றோம். ஆனால், நாம் செய்தது எல்லாம் மண்ணை வெளியேற்றியது மட்டும்தான். அங்கே ஆகாயமும், நீரும், கிணறும் முன்னரே இருந்தது, இப்பொழுதும் இருக்கின்றது. அது உருவாக்கப்படவில்லை. மறைக்கப்பட்டு இருந்த மண் மட்டுமே அகற்றப்பட்டது.

அதுப்போல, காலம் காலமாக நம்மில் பதிந்துபோன பதிவுகளின் வாசனைகள் எப்பொழுதும் இருக்கின்ற அறிவை (ஆத்மாவை) மறைக்கின்றது. இதிலிருந்து, கிணற்று மண்ணை வெளியேற்றியதுப்போல, தவறான மனப் பதிவுகளை வெளியேற்றினால் போதும், என்றும் உள்ள பொருள் பிரகாசிக்கும். உள்ளது அது மட்டுமே!. சுயப்பிரகாசம் இல்லாத அனைத்தும் இருப்பற்றது. அதாவது, நித்தியமானது அல்ல. அழியக்கூடியது. அவ்வாறு இல்லையென்றால், கயிற்றில் தோன்றிய பாம்புகூட உண்மையாகிவிடும்.

இருப்பினும், மறுக்க முடியாத இருப்பு எது உள்ளதோ? அதுமட்டுமே உண்மை என்று கூறுவதும், மற்றவைகள் இல்லை என்று கூறுவதும், அனுபவத்திற்கு பொருந்தாது.

ஏனெனில், பார்வையில் படுகின்ற பொருட்கள் கவனம் இன்மையால் பார்க்க முடியாமல் போவதும் உண்டு. பார்க்காததைக் கொண்டு அது இல்லை என்று கூற முடியுமா? அதுப்போலவே, பார்க்காத பொருளை கற்பனையில் உள்ளதாகவும், பார்த்த பொருளை கவனியாமல் இல்லையென்றும் நினைத்துக் கொள்ளலாம்.

இதுப்போன்று அறிவை அறியாத காரணத்தினால், அது இல்லை என்று தீர்மானிக்க முடியாது. அது எப்பொழுதும், எல்லா அவஸ்தைகளிலும் (**விழிப்பு, கனவு, உறக்கம்**) இருக்கின்றது. அந்த அறிவு இல்லாது போனால், ஆழ்ந்த உறக்கத்திலும் நன்றாகத் தூங்கினேன் என்று, தூங்கி எழுந்தவன் விழிப்பு நிலையில் கூற முடிகின்றது அல்லவா? அதுப்போலவே, கண்ட கனவையும் விளக்க முடிகின்றது அல்லவா பார்வைக்கு விளங்காத ஒன்றை, இல்லை என்று வாதிடுகின்றவனையும், பார்த்த ஒன்றை தவறாகப் புரிந்துக் கொண்டு, உண்டு என்று வாதிடுகின்றவனையும் அறிவற்றவன் என்று கூற முடியாது. ஆனால், அவனது அறிவு தேவையற்ற மனப்பதிவுகளால் மறைக்கப்பட்டு, பிரகாசம் குறைவாக உள்ளது என்பதே ஆகும். அதாவது, அவனிடத்தில் விழிப்புணர்வு மட்டுமே இல்லை.

அதாவது, புகைப்படிந்த ஒரு கண்ணாடி காட்சியைத் தெளிவாக காட்டாத காரணத்தினால், அந்தக் கண்ணாடியை

இல்லை என்று கூறிவிட முடியுமா? கண்ணாடியில் படிந்துள்ள புகையை துடைத்து நீக்கி விட்டால், அதே கண்ணாடி தெளிவாகக் காட்சியைக் காட்டும் அல்லவா? அதுப்போல, தேவையற்ற மனப்பதிவுகளை நீக்கி, மனதை சுத்தம் செய்தால், அதே மனம் அறிவைத் தெளிவாகக் காட்டும். அதாவது, அறிவை வெளிப்படுத்தும்.

சிப்பி வெள்ளியாகத் தோன்றுவதும், நிறமற்ற ஆகாயம் நீல நிறமாகத் தோன்றுவதும், எப்படி உண்மை போன்றே இருக்கின்றதோ? அதுப்போலவே, இந்த உலகமும் உண்மைப் போல தோன்றுவது, எல்லாமே எந்த அளவிற்கு அறியாமையால் அறிவு மூடப்பட்டுள்ளதோ? அதைப் பொருத்தே அனைத்தும் விளங்கும். இதை விளங்கிக் கொள்கின்றவனின் அறிவின் மறைப்பை பொருத்தது. பிரகாசமான சூரியனை மேகம் மறைப்பதுப் போன்று, பிரகாசமான அறிவை, அறியாமை மறைக்கின்றது.

**"மேகம் நீங்கினால், சூரியன் பிரகாசிப்பது போன்றே, அறியாமை நீங்கினால், அறிவு பிரகாசிக்கும்".**

இராமா! உன்னுடைய கேள்விகள் அனைத்திற்கும் யுக்தி பூர்வமாக பதில் அளிக்கப்பட்டு விட்டது. ஆகவே, அனைத்து சந்தேகங்களில் இருந்து விடுபட்டு, இதுவரை கூறியவைகளை விசாரித்து தீர்க்கமான முடிவுக்கு வரவும்.

# அத்தியாயம் – 19

## வாசனைகள்

குருவே! உள்ளது ஒன்று மட்டும் என்று கூறும்பொழுது, அந்த அறிவு அனைவருக்கும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும். ஆனால், அதில் வேறுபட்ட நிலைகள் காணப் படுவதற்கு காரணம் யாது?

புத்தியின் பேதத்திற்கு ஏற்ப தன்னை உணர்வதில் முதிர்ச்சி பேதம் இருக்க முடியும் என்பதை, என்னால் ஏற்க முடியவில்லை. உள்ளது அது மட்டுமே என்கின்ற பொழுது, அந்த ஒன்றை அறிவதில் தராதரம் ஏன்? கருணைக் கூர்ந்து இதையும் விளக்க வேண்டும்.

"இராமா! கவனமாகக் கேள்! அறிவை அறிவதற்கு என்று விதவிதமான வழிமுறைகள் என்று எதுவும் இல்லை.

**("தன்னை அறிவதற்கோ? தானாக இருப்பதற்கோ? எந்தச் சாதனமும் இல்லை. செய்யும் முயற்சியெல்லாம் அறியாமை அகற்றுவதற்குத்தான், அறியாமை அகன்றால், அங்கு இருப்பது அறிவு மட்டுமே!")**

பலரும் பல விதமான வழிகளை பிடித்துக் கொண்டு, அதில் முயற்சிப்பது எல்லாமே அறியாமையை அகற்று வதற்காகத்தான். அறியாமை முழுவதுமாக அகன்றால், அறிவின் வெளிப்பாடும் முழுமையாக இருக்கும். அறியாமையை அகற்ற முயற்சிக்கும் வழி முறைகளின் ஏற்றத்தாழ்வுகளே, அறிவை அறிவதில் ஒருவருக்கு ஒருவர் வித்தியாசம் இருப்பது போன்று காட்டுகின்றது. உண்மையிலேயே வித்தியாசம் என்பது, அறியாமையை அகற்றுவதில்தான் உள்ளது.

அறிவு எப்பொழுதும் எல்லோரிடத்திலும் ஒரே மாதிரியாகவே பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது, அந்த அறிவில் எப்படி வேறுபாடுகள் இருக்க முடியும்?

பிளவுபடாத அறிவு பிளவு பட்டு இருப்பதுப்போன்று, காணப்படுவதற்குக் காரணம், அறியாமையை அகற்றும் முயற்சிக்கு முட்டுக்கட்டையே, அவன் அறிந்து வைத்துள்ள மூடத்தனமே ஆகும்.

உதாரணமாக, கோவிலில் மூலவரை திரையினால் மறைத்து, அலங்காரம் செய்து முடித் , தீபாராதனை நடைபெறும் சமயத்தில் திரை அகற்றப்படும். திரை அகன்றவுடன் மூலவர் காட்சியாகின்றார். அவரை தரிசிக்க எந்த முயற்சியும் தேவையில்லை. முயற்சியெல்லாம் மூடப்பட்ட திரையை அகற்றுவது மட்டுமே ஆகும். அதுப்போல, அறிவு என்பது, அறியாமை என்ற திரையால் மூடப்பட்டுள்ளது. அறியாமையை அகற்றினால், அறிவு காட்சியாகும்.

இந்த அறிவு பிரகாசத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பது போலக் காண்பதெல்லாம், எண்ணப் பதிவுகளாகிய மனதின் வாசனைகளின் அடர்த்தி, அதிகமாகவும், குறைவாகவும் இருப்பதைப் பொருத்தே, இந்த அறிவு பிரகாசிக்கும் தன்மை வேறுபடுகின்றது. ஆனால், இந்த அறிவில் எந்த வேறுபாடும் இல்லை.

"இராமா! வாசனைகள் பலவாறாக உள்ளது.

அவைகள், 1. **அபராதம்**, 2. **கர்மம்**, 3. **காமம்** என மூன்று மிக முக்கியமானவைகள்.

இதில் அபராதம் என்பது, சாஸ்திரங்களை தவறாக அறிந்துக்கொண்டு விவாதம் செய்வது. இவர்கள் சாஸ்திர

ஞானம் அடைந்தும், வாசனையின் அடர்த்தியினால் வெளிவர முடியாமல் சம்சாரத்திலேயே மூழ்கியிருப்பர். கர்மவாசனை என்பது, முற்பிறவியில் செய்த பாவச் செயல்களின் பதிவால் புத்தியில் அசுத்தம் நிறைந்து, குருமார்களின் உபதேசங்களை உதாசீனமாகக் கருதி, அறிய வேண்டிய உண்மையை அறிய மாட்டார்கள். இவர்கள் தாங்கள் அறிந்த விசயமே சரி! என்ற பிடிவாதத்தில், மனதைக் கட்டுக்குள் கொண்டு வந்தாலும், வாசனைகளிலிருந்து விடுபட முடியாது.

நிறைவேறாத ஆசைகளின் மொத்த வடிவமே காம வாசனை. இது அளவில்லாதது. கடல் அலைகளைக்கூட கணக்கிட்டு விடலாம். விண்ணில் மின்னும் விண்மீன்களைக் கூட எண்ணி விடலாம். மணல்துகள்களைக் கூட அளவிட்டு விடலாம். ஆனால், தனி மனிதனின் காம வாசனைகளை மட்டும் அளவிட முடியாது. இது பல கிளைகளை உடையது. ஒவ்வொன்றும் தனித்தனியாக விரிவடையும் தன்மை கொண்டது. முடிவு பெறாத ஆசைகளையே, காம வாசனை என்று இங்கு கூறப்படுகின்றது.

(காமம் என்றால், ஆசை என்றே பொருள்).

இப்படிப் பல ஆசைகளை மனதில் வளர்த்துக் கொண்டவர்கள் கள்ளுண்ட வண்டு போல, மன மயக்கத்தில்

மயங்கிக் கிடக்கின்றார்கள். இந்த ஆசைகளை விட முடியாதவன் காம வாசனைகளை மேலும், மேலும் விரிவு படுத்திக் கொண்டே செல்கின்றான். இவனுக்கு என்றுமே வாசனைகளிலிருந்து விடுபட முடியாது. வாசனைகள் நீங்காமல், அந்த ஏக அறிவை அறிந்து, விடுதலைப் பெற முடியாது. இந்த மூன்று வாசனைகளும் மனதை ஆக்ரமித்து உள்ளவரை ஆத்ம தத்துவம் என்றுமே விளங்காது. இதுப் போன்று, இன்னும் எத்தனை உபதேசங்களை எடுத்துக் கூறினாலும் இவர்களிடம் எடுபடாது.

உள்ள பொருளை உணர, அவர்களது வாசனைகள் அழிக்கப்பட வேண்டும். இவற்றை அழிக்கும் சாதனைகள் பலவாறு இருந்தாலும், சாதனைகளின் முடிவில் வாசனைகள் நாசம் அடைவதே உயர்ந்த சாதனை ஆகும். சரியான சாதனையை சாதனமாகக் கொண்டு சாதித்தவன் மிகுந்த பாக்கியசாலி ஆவான்.

ஏனெனில், பெரும்பாலானவர்களுக்கு சாதனையை அறிய வாசனைகள் விடவே விடாது. விபரீத சிந்தனையும், வீணான வாதமும் தவறானது என்ற புரிதலும் வரும்பொழுது, குரு உபதேசத்திலும், சாஸ்திர உண்மைகளிலும் நம்பிக்கை உண்டாகி, **அபராத வாசனை** அழிகின்றது.

எந்தப் பிறவியில் இது வேண்டும், அது வேண்டும் என்று, இறைவனை ஒரு மளிகைக் கடைக்காரன் போன்று நடத்தாத பராபக்தி உண்டாகின்றதோ? அந்தப் பிறவியிலேயே பூரணமான இறையருள் பெற்று கர்ம வாசனை அழிகின்றது. மனதை உலகப் பற்றுகளிலிருந்து விலக்கி, இருப்பதெல்லாம் இறைவனே! என்ற நற்சிந்தையுடன், நற்காரியங்களில் ஈடுபட்டு, அதன்வாயிலாக வைராக்கியம் வளர்ந்து, ஆத்ம ஞானத்தை அனுபவமாக்கும் பொழுது **காம வாசனை** அழிகின்றது".

"பார்க்கவா! இந்த வாசனை பதிவுகளின் அளவிற்குத் தகுந்தாற்போல, ஒருவனது உலகப் பற்றுகளும், விபரீத சிந்தனைகளும் இருக்கும். இந்த வாசனைகளில் இருந்து, விடுபட வேண்டும் என்ற தீவிரமான முயற்சியே, முதல் படியாகும். இதனால், தன்னை அறியும் ஆர்வமும், அடுத்த படியாக உண்டாகி விடுகின்றது. கேள்வி ஞானத்தால், ஆத்மாவை அறிந்துக் கொள்ளலாம்.

ஆனால், ஆத்ம அனுபூதியை அடைய முடியாது. ஆத்ம அனுபவம் உண்டாக வேண்டுமானால், மனதை உள்முகமாக விசாரித்து, ஆத்மாவை அனுபவப்படுவதே அனுபூதியாகும்.

உதாரணமாக, சர்க்கரை இனிக்கும் என்பது, கேள்வி ஞானம். ஆனால், அதன் இனிப்புச் சுவையை கேள்வி ஞானத்தால் அனுபவிக்க முடியாது. அதன் சுவையை அனுபவிக்க விரும்புகின்றவனே அந்த சர்க்கரையைச் சுவைத்துப் பார்ப்பான்.

அதுப்போல, ஆத்மா என்று அறிவது கேள்வி ஞானம். இதை வைத்துக் கொண்டு, ஆத்மாவை அனுபவிக்க முடியாது. ஆத்மாவை அனுபவப்படுவதற்கு எண்ணங்களை நிர்விகல் பமாக நீக்கப்பட வேண்டும்".

## குறிப்பு:–

(எண்ணங்களை நீக்குவது என்பது நினைவில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை நீக்குவது. மேலும், இறைவன் ஒருவனே என்ற அறிவில் இருமைகள் அற்று இருப்பது. மற்றபடி, அன்றாடத் தேவைகளைக்கூட அறிந்து கொள்ள முடியாத அல்ஜைமர் நோயாளியாக (Alzheimer's disease) மாறிவிடுவது என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. மனதில் தேவையற்ற குப்பைகள் நீக்கப்படும் பொழுது, அந்த உள்ளுணர்வு (உண்மையான அறிவு) பிரகாசிக்கத் தொடங்கும்.




இவ்வாறு ஞானிகளின் உள்ளுணர்வின் வெளிப்பட்ட ஞானப் பொக்கிஷங்களே திருமந்திரம், திருவாசகம், தேவாரம், திருக்குறள், திருப்புகழ், திருவருட்பா, பகவத்கீதை என எண்ணிக்கையில் அடங்காத அறிவு நூல்கள் அறிமுகமாயின.

இவர்களுக்குப்பிறகு, இதுபோன்ற அறிவுப்பெட்டகங்கள் திறக்கப்படாததற்குக் காரணம், குருகுலக்கல்வி முறை ஒழிக்கப் பட்டு, ஆங்கிலேயர்களின் இன்றைய நவீனக் கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களே ஆகும்.)

"பரசுராமா! யாருக்கு பிறவாமை என்ற பெரு நிலையை அடைய வேண்டும் என்ற ஆர்வமும், பிறப்பு, இறப்பு இவைகளிலிருந்து விடுதலைப் பெற வேண்டும் என்ற வைராக்கியமும் உள்ளதோ? அவனே ஆத்ம சாதனையை முழுமையான அக்கரையுடன் மேற்கொள்வான்.

ஒருவனுடைய உடல், வெப்பத்தால் தகிக்கும் பொழுது, அவன் குளிர்ச்சியைத் தவிர, வேறு எதையும் நாடமாட்டான். அதுப்போல, பிறப்பு, இறப்பிலிருந்து விடுதலைப் பெற வேண்டும் என்ற ஆர்வம் உடையவன் அதற்கான முயற்சியைத்தவிர, வேறு எதையும் விரும்பமாட்டான். இவனே முமுக்ஷு எனப்படுகின்றான்.

விடுதலை வேட்கை இல்லாதவன், இந்த ஆத்ம வித்யாவைக் கற்றும், கேட்டும் அறிந்தவற்றை விசாரம் செய்தும், எந்தப் பயனும் உண்டாகாது. அவை பிணத்தை அலங்கரிப்பதற்கு ஒப்பாகும். புருஷார்த்தங்களில் கூறப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில், வீடுபேறு அடைய வேண்டும் என்ற வேட்கையே விடுதலைக்கு விதையாகின்றது. இந்த விடுதலைக்கு காரணமான விதையே, முக்தி என்ற மரத்தை உண்டாக்குகின்றது. விடுதலையை விரும்பாத எந்த சாதனையும், **"விழலுக்கு இறைத்த நீர் போல"** வீணாகிவிடும்.

உண்மையை அறிந்துக் கொள்வதில், உள்ள குறைபாடே உலகப் பற்றுதலுக்கு காரணமாகின்றது. இந்த பற்றுதலே, உலக விவகாரங்களில் துயரத்தைக் கொடுத்து, அதிலிருந்து விடுபடுவதற்கான நாட்டத்தைக் கொடுக்கின்றது.

ஒருவனுக்கு விடுபட வேண்டும் என்ற நாட்டமே, முயற்சியைத் தீவிரமாக்கி, வழியையும் காட்டுகின்றது. அந்த வழியில் வைராக்கியத்துடன் நிலைபெறும்போது, புற நாட்டம் குறைந்து, அகநாட்டம் தூண்டப்படுகின்றது. இவைகள் அனைத்திற்கும் அடிப்படை **விடுதலை வேட்கையே** ஆகும்".

"குருவே! இறை அனுபவம் பெறுவதற்கு சாதுக்களிடமும், ஞானிகளிடமும் நட்பு கொள்ளுதல், அறியாமை அகலுதல், மற்றும் விடுதலை வேட்கை என இம்மூன்றுமே முக்கிய காரணம் என்று கூறினீர்கள். இவற்றில் முக்கியமான மூல காரணி எது? அந்நிலைக்கு காரணம் என்ன? காரண காரிய உலகில், காரணம் இல்லாமல் எந்த காரியமும் நடைபெறுவதில்லை. எனவே, இதற்கான காரணத்தை விளக்க வேண்டுகின்றேன்".

"பரசுராமா! ஆதியும், அந்தமும் இல்லா, முழுமையான அந்த மேலான தேவியின் மேன்மையை விளக்குகின்றேன். கவனமாகக் கேள். அவளுக்கு அந்நியமாக எதுவும் இல்லாததால், எதனுடைய உதவியும் இன்றி, முழுச்சுதந்திரம் உடையவளாக, கண்ணாடியில் பிம்பம்போன்று, தன்னையே இந்த உலகமாகக் காட்சிப்படுத்துகின்றாள்.

அவளே தன்னை ஹிரண்யகர்ப்பனாக (படைக்கும் கடவுள் – பிரம்மா) உருவகித்துக் கொண்டு அறியாமையால் சூழப்பட்ட ஜீவர்களின் மீதுள்ள அக்கரையினால், அவர்களது நலன்கருதி, அனைத்து ஆகமங்களையும் வெளிப்படுத்தினாள்.

பலவிதமான ஆசைகளுக்கு ஆட்பட்டு, பிறவிதோறும் சுமந்து வந்த, பல்வேறு மனப் பதிவுகளுக்கு ஏற்ப, ஜீவர்களின் இயல்பும், செயலும் எவ்வாறு இருக்கும் என்பதைக் கணித்து, அதற்கான பலன்களையும் கொடுக்கின்றாள்.

ஒருவன் அவனது மனப்பதிவுகளுக்கு ஏற்ப நன்மை, தீமைகளைச் செய்கின்றான். அவனது நிறைவேறாத எண்ணங்கள் ஆசைகளாக மனதில் தங்கி விடுகின்றது. அவனது செயல்கள் மனதில், மேலும் பல பதிவுகளை ஏற்படுத்துகின்றன. இந்தப் பதிவுகளே மீண்டும், மீண்டும் உடல் எடுத்து, பிறக்கவும், இறக்கவும் காரணமாக அமைகின்றது. சுழல் காற்றில் சிக்கிக்கொண்ட செத்தைப் போல, இங்கும், அங்கும் அலைக்கழிக்கப்பட்டு, பிறப்பு, இறப்பு சுழலிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கின்றான்.

இவ்வாறு, பல பிறவிகளில் பல உடல்களை எடுத்து, பல உயிரினங்களாக ஜீவன் (மனம்) வடிவெடுக்கின்றது. ஏதோ ஒரு பிறவியில் மனிதனாகப் பிறக்கின்றான்.

அந்த மனிதப் பிறவியில் நல்லோர் தொடர்பும், நற்காரியங்களும் அவனை இறைவனை தேடும் நாட்டத்தை ஏற்படுத்துகின்றது. இறைவனை அறியும் ஆர்வம் வரும்பொழுது, அவனுக்கு சாஸ்திரங்களை அறிந்துக் கொள்ளும் ஆர்வமும் உண்டாகின்றது. சாஸ்திரங்களை கற்றாலும் அவனது அறியாமை அகல வேண்டும் என்று, சத்குருவை தேடி அடைகின்றான். சத்குருவின் சந்நிதியில் சரணடைந்தவன் அந்த சர்வேஸ்வரனாக தன்னையே அறிகின்றான். தன்னை அறிந்தவனுக்கு, இனி அறிவதற்கு ஒன்றுமில்லை. ஆனந்தம் ஒன்றே அவன் நிலை".

"பரசுராமா! சத்தை அறிந்த சத்குருவின் சங்கமமே இந்த உயர்ந்த நிலைக்கு அவனை உயர்த்துகின்றது. இந்த உயர்ந்த நிலைக்கு அவன் வருவதற்கு, முற்பிறவிகளில் செய்த விடுதலை முயற்சிகளின் காரணமாக, குறைந்த வாசனை பதிவுகள் உள்ளவர்கள், சிறிய முயற்சியிலேயே இந்த நிலையை அடைந்து விடுகின்றார்கள்.

பிறவிதோறும், சேர்த்த வாசனைகளின் அடர்த்தி அதிகம் இருப்பவன், அறியாமையை எளிதில் அகற்ற முடியாமல், தன் மனம் போன போக்கில், பல காரியங்களைச் செய்துக் கொண்டும், பல கோவிகல்களுக்கு சென்றுக் கொண்டும், மனதினைக் கட்டுப்படுத்தும் பல மார்க்கங்களை பிடித்துக்

கொண்டும், மூச்சை முட்ட வைக்கும் மூச்சுப் பயிற்சிகளை முயன்றுக் கொண்டும், முடிவில் அந்த மூச்சை விட்டு விட்டு, இனி வரும் பிறவிகளில் இதன் பயனாக விரைவிலேயே விடுதலைக்கு வித்திடுகின்றான். அவரவர்களின் மனதின் சுத்தத்தைப் பொருத்தே, விதவிதமான சாதனைகள் அமைகின்றன. இவர்களது மனப் பதிவுகளின் அடர்த்தியைக் கொண்டே, அவர்களது அறியாமையை அளவிட முடியும்.

அறியாமை அகன்றிட, மனம் சுத்தமாக வேண்டும். மனம் சுத்தமாக, மனதை விசாரித்து அறிய வேண்டும். மனதை விசாரித்து அறிந்தவன் அஹங்காரத்தைவிட்டு, உள்ளே உறைகின்ற உத்தமனை (ஆத்மாவை) அறிகின்றான். மனம் என்ற பூட்டைத் திறக்க, புத்தி என்ற சாவியைக் கொண்டு திறந்து, சித்தம் என்ற கதவை நீக்கி, அஹங்காரத்தை வெளியே எடுக்கலாம். அந்தக்கரணங்களான **மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்** இவைகளை அறிந்தவனுக்கு, அறிவு பிரகாசிக்கும். அவனே **முமுக்ஷு**. அவனே முக்திக்கு முயற்சி செய்து, முடிவில் "**முக்தி**" (விடுதலையை) அடைகின்றான்".

"பார்க்கவா! ஞானிகளின் குணங்களிலும், செயல்களிலும் வித்தியாசம் உண்டு. ஞானிகள் எல்லோரும் ஒன்றுபோல இருக்க மாட்டார்கள். ஆனால், இவர்களிடம் ஞானத்தில் பேதம் இல்லை.

ஆனால், இவர்களின் செயல் முறைகளில் பேதம் இருக்கும். அதற்குக்காரணம், இவர்களிடம் பதிந்துள்ள மனப் பதிவுகளினால், அதாவது, சம்ஸ்காரங்களின் காரணமாக, இந்த பேதமைகளைக் காண முடிகின்றது. படைக்கும் கடவுளான பிரம்மா, காக்கும் கடவுளான விஷ்ணு, அழிக்கும் கடவுளான ருத்ரன் ஆகிய முவருமே அவரவர்களின் மனப்பதிவுகளுக்கு ஏற்றவாறு, அவர்களது செயலும் இருக்கின்றதைக் காண்கின்றோம்.

அவர்கள் மூவருமே ஞானிகள்தான். அவர்களது ஞானம் களங்கமில்லாத சுத்த ஞானம்தான். இவர்களது சம்ஸ்காரப் பதிவுகளிலிருந்து உண்டாகும் இவர்களது செயல்களுக்கு தக்கவாறு, இவர்களும் மாறுபட்டு காணப்படுகின்றார்கள். ஞானிகள் உடலால் கருப்போ, சிவப்போ, செயலால் சிறப்போ, தாழ்வோ, அதெல்லாம் அவரவர்கள் பதிவுகளின் வெளிப்பாடு. ஆனால், அவர்களது செயல்களில் பந்தமும் இல்லை, ஞானத்தில் பேதமும் இல்லை. அவர்கள் ஜீவன் முக்தர்கள்".

"இராமா! அத்திரியின் புதல்வர்களான (சிஷ்யர்களான) எங்களில், நான் வர்ணாசிரம தர்மங்களையும், அனைத்து சடங்கு சம்பிரதாயங்களை துறந்தவனாகவும், என்னுடன் உள்ள மற்ற ரிஷிகளான துர்வாசர் மிகுந்த கோபக்காரராகவும், சந்திரன் ஆசை உள்ளவராகவும், வசிஷ்டரோ மதச்சடங்குகளில்

மகத்தான திறமை வாய்ந்தவராகவும், சனகாதி முனிவர்களோ, முற்றும் துறந்த சந்நியாசிகளாகவும், நாரதர் எப்பொழுதும் பக்தியில் மூழ்கியவராகவும், சுக்கிராச்சாரியார் அசுரர்களுக்கு குருவாகவும், பிரகஸ்பதியோ தேவர்களுக்கு குருவாகவும், வியாஸர் வேதங்களை தொகுத்தவராகவும். ஜனகர் அரசராகவும், ஜடபரதர் தியாக சிந்தனை உடையவர் ஆகவும் இருப்பதைக் கவனித்துப் பார். இவர்கள் அனைவருமே ஞானிகள்தான். ஆனால், அவர்களிடம் காணப்படும் மாற்றங்கள் எல்லாம் அவர்களது வாசனைகள் ஆகும்.

அவர்கள், ஒருவரைப் போன்று, மற்றொருவர் இல்லை. அவர்களது சுபாவத்தால் மாறுபட்டு காணப் படுகின்றார்கள். ஆனால், இவர்கள் செய்யும் செயல்களில் பந்தம் அற்றவர்கள். இவர்களைப் பார்க்கின்றவர்களின் பார்வையில், அவர்களை நல்லவர்களாகவும், தீயவர்களாகவும் காட்டுவது என்பது, பார்ப்பவனின் மனதைப் பொருத்தது. அதாவது, சட்டியில் என்ன உள்ளதோ? அதுதான் அகப்பையில் வெளிவரும்".

"ஒரு கண்ணாடி முன்பு நின்று நீ முறைத்துப் பார்த்தால், அந்த கண்ணாடியில் தெரிகின்ற பிரதி பிம்பமும் உன்னைப் பார்த்து முறைக்கும். அதே கண்ணாடி முன்பு நின்று நீ சிரித்துப் பார்த்தால், அந்த கண்ணாடியின் பிரதி பிம்பமும் உன்னப் பார்த்து சிரிக்கும்.

அதுப்போல, உன் மனம் எப்படி இருக்கின்றதோ? அப்படியே உனக்கு இந்த உலகமும் பிரதி பிம்பிக்கும்".

பொதுவாக, ஞானிகள் தூயமனதைக் கொண்டவர் களாக இருப்பதினால், எப்பொழுதும் ஆத்மாவில் இலயமடைந்த இவர்களது மனதில், எந்தப் பதிவுகளும் ஒட்டாது. இவர்களது தற்போதைய மாறுபட்ட குணங்களுக்கு காரணம், இவர்களது முற்பிறவிப் பதிவுகளில் உண்டான சம்ஸ்காரங்களே ஆகும்.

இவர்களது மனப்பதிவுகளான அனேக நற்பதிவுகளின் தார தம்மியத்திற்கு ஏற்ப, இவர்களது தகுதி நிலை இவ்வாறு மாறுபட்டு காணப்படுகின்றது. அந்தக் காட்சியில் தோன்றும் நன்மை, தீமைகள் பார்ப்பவனின் பார்வையில் உள்ளதே தவிர, ஞானிகளின் செயல்களில் இல்லை. இப்படிப்பட்ட ஞானிகள் தாங்கள் எடுத்துள்ள மனிதப் பிறவியுடன், வந்த நோக்கத்தை முடித்துக் கொண்டு, இனி உடல் எடுக்க மாட்டார்கள். அனைத்து உயிர்களுக்கும் ஆதாரமாக உள்ள அந்தர்யாமியுடன் ஐக்கியமாகி விடுவார்கள். இவர்கள் பிறப்பு, இறப்பை வென்றவர்கள்.

ஞானிகளின் இத்தகைய வெவ்வேறான செயல்களைப் பார்க்கும் பொழுது, இதில் பொதிந்துள்ள இரகசியத்தையும் கூறுகின்றேன் கவனமாகக் கேள்.

மூன்று வாசனைகளான **அபராதம், கர்ம வாசனை** மற்றும் **காம வாசனை** என்று ஏற்கனவே கூறினேன் அல்லவா? இதில் இரண்டாவதான கர்ம வாசனை ஒருவனது அறியாமைக்கு காரணம் என்றும், எளிதில் அழியாத் தன்மைக் கொண்ட எல்லா வாசனைகளுக்கும் இதுவே வலுவானதும் ஆகும்.

இந்த கர்ம வாசனை யாருடைய சித்தத்தில் இல்லையோ? அவர்களே மேதாவிகள். அறிஞர்கள் ஆகின்றார்கள். அவர்களாலேயே பல அறிவுப் பெட்டகங்களை இந்த சமுதாயத்திற்கு கொடுக்க முடிகின்றது.

இவர்கள் மனதில் இருந்து உதிக்கின்ற எண்ணங்கள் அனைத்துமே, ஆத்மார்த்தமாக வெளிப்படும். அதனால்தான், அவர்கள் இந்த உலகிற்கு அளித்த உயர்வான ஆத்ம ஞான நூல்களைப் படிக்கும் பொழுது, அள்ள, அள்ளக் குறையாத ஆனந்தத்தை உண்டாக்குகின்றது.

அதுப்போலவே, இவர்களுக்கு கர்ம வாசனை இல்லாத காரணத்தினால், விபரீத சிந்தனையுடைய அபராத வாசனையும் இருக்காது. எனவே, ஞானத் தேடலில் இடையூறு உண்டாகாது.

இவர்கள் உலக வாழ்க்கையில் கலந்திருந்தாலும், ஒதுங்கியிருந்தாலும், வைராக்கியம், சிரவணம், மனனம் மற்றும் சமாதி போன்ற எதுவுமே இவர்களுக்கு உண்டாகாமலேயே ஆத்மாவைப் பற்றி ஒருமுறை கேட்டறிந்து, சற்றே தியானித்து இருந்தாலே, இவர்கள் எளிதில் விடுதலை அடைந்து விடுவார்கள்.

கர்மவாசனைகளை நீக்க விரும்பும் மற்றவர்கள் ஆன்மீக ஒழுக்க நெறிகளான சாதன சதுஷ்டய சம்பத்தி, **சிரவணம், மனனம், நிதித்யாசனம்** மற்றும் சத்தை அறிந்த சாதுக்களின் தொடர்புகள் போன்றவைகளை உண்டாக்கிக் கொண்டு, நடைமுறையில் கடைப்பிடித்தால், எளிதில் இவர்களும் அறிவை அடைந்து, எந்த இடையூறும் இன்றி கர்ம வாசனைகளை நீக்குவார்கள்.

இவர்கள் இப்பொழுதும் உலக விவகாரங்களில் முன்பு போலவே செயல்படுவார்கள், இவர்களது செயல்கள் இவர்களை எந்த விதத்திலும் பந்தப்படுத்தாது. காரணம் அறிவை அறிந்தவன் முக்தனாகின்றான்".

"இராமா! எவனுடைய மனதில் காம வாசனை அதிகமாக இருக்கின்றதோ? அவன் அதி மூடனாகவே இருப்பான். இறைவனே நேரில் வந்து உபதேசித்தாலும்,

அவனுக்கு ஒருபொழுதும் ஞானம் சித்திக்காது. இவனைப் போன்றே, திடமான அபராத வாசனை உடையவனும் அறியாமையிலேயே இருப்பான். இவனும் ஞானத்தை அடைய முடியாது".

"இராமா! யாருக்கு அபராத வாசனையும், கர்ம வாசனையும் குறைவாகவும், காம வாசனை மட்டும் அதிகமாகவும் இருக்கின்றதோ? அவர்கள் சிரவணத்தினாலும், கேட்ட சாஸ்திர விசயங்களை மனனத்தினாலும் விசாரித்து, எண்ணங்கள் அற்ற நிர்விகல்ப சமாதியில் நீண்ட நாட்கள் முயற்சி செய்வதினாலும், கடின உழைப்பாலும் ஞானத்தை அடைகின்றார்கள். ஞானத் தேடலில் அதிகக் கவனம் செலுத்துவதால், உலக விவகாரங்களில் ஆர்வம் குறைந்து உடலுக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்துக்கொள்வர்.

யோக நிஷ்டையில் ஆர்வம் கூடி, மும்மூரமாக அதிலேயே ஈடுபடுவர். இதனால் இவர்களது மனம் அடங்கியது போன்று இருக்கும். இருப்பினும் இவர்கள் மத்திம ஞானிகள் ஆவார்கள். மந்தர்கள் பயிற்சியும், முயற்சியும் அடிக்கடி குறைந்து, சிரவண, மனன, நிதித்யாசங்களை அடிக்கடி விட்டு விடுவார்கள். இவர்களின் மனதின் பதிவுகள் முழுவதுமாக அழிவதில்லை. இவர்களை மந்த ஞானிகள் என்றே கருதப்படும்.

உத்தம ஞானிகள் மனதை முழுவதுமாக அழித்தவர்கள். இவர்களுக்கு பிராரப்தம் செயல்படுவதில்லை.

பொதுவாக, மனம் என்ற நிலத்தில் விழுந்த பிராரப்த விதையினால் விளைச்சல் உண்டாகின்றது. அதுவே, மனம் அற்ற ஞானிகளுக்கு பிராரப்த விதை விழுந்திருந்தாலும், விளைச்சல் உண்டாக மனம் என்ற நிலம் இல்லாத நிலையில், குதிருக்குள் விழுந்த விதைப்போன்று நாளடைவில் முளைக்கும் சக்தியை இழந்து விடுகின்றது. இப்படிப்பட்ட உத்தம ஞானிகள் உலகத்தின் பார்வையில் உன்மத்தர்கள் (பைத்தியக்காரன் போல) போன்று தெரிவார்கள்.

சில மேதாவிகள் ஒரே நேரத்தில், பல காரியங்களை மிகச் சரியாகச் செய்து, சதாவதானிகளாகத் திகழ்கின்றார்கள். இவர்கள் ஒரே மனதினால் பல காரியங்களை ஒரே நேரத்தில் செய்கின்றனர்".

"இராமா! உன்னால் கொல்லப்பட்ட கார்த்த வீரியார்ஜூனனுடன் நீ போர் புரிந்த பொழுது, அதிமேதாவியான அவன் தன் ஆயிரம் கரங்களுடன் ஒரே நேரத்தில் குறி தவறாமல், பல ஆயுதங்களை பயன்படுத்தி உன்னிடம் போரிட்டான். அப்படிப்பட்ட மேதாவிகளின் மனமானது அந்தந்த காரியங்களை முன்னிட்டு, எல்லா விதமான காரியங்களிலும்,

ஒரே மனதே ஒரே நேரத்தில் விதவிதமாகச் செயல்பட வைக்க முடிகின்றது. அதுப்போன்று, தன்னை உணர்ந்த ஞானிகளும் உலகில் பல காரியங்களில் ஈடுபட்டாலும், தன் சுயத்தில் (ஆத்மாவில்) இருப்பதை, அவர்கள் எந்த நிலையிலும் இழப்பதில்லை. வாசனைப் பதிவுகள், மனம் என்ற நிலத்தில், பிராரப்த விதையாக விழுந்து, முளைவிடும் பொழுதுதான் சுகதுக்கங்கள் வருகின்றன. சுக, துக்கங்களின் அனுபவமே வாசனைகளாகப் பதிகின்றது.

இவ்வாறு, கிடைக்கின்ற சுகத்திலும், துக்கத்திலும் யார் யாருக்கெல்லாம் மனம் இன்பத்தையும், துன்பத்தையும் அடைந்து, அதனால் சிந்துகின்ற ஆனந்தக் கண்ணிரும், சோகக் கண்ணீரும், முளைவிடும் பிராரப்த விதைக்கு, மேலும் அமோக விளைச்சலுக்கான சக்தியை கொடுத்து விடுகின்றது.

இதுவே, உத்தம ஞானிகள் சுக, துக்கங்களால் பாதிப்பு அடைந்து கண்ணீர் சிந்துவதற்கு பதிலாக, ஞான அக்கினியினால் தங்களது பிராரப்த விதையை விளைய முடியாதவாறு முளையிலேயே எரித்து விடுகின்றார்கள். ஞானிகள் தங்கள் சுய விருப்பத்தின் காரணமாகவே அடங்கியிருந்த வாசனைகளைத் தூண்டி வெளியே அனுப்பி உலக விவகாரங்களில் ஈடுபடுகின்றனர்.

இது எப்படியெனில், குழந்தையுடன் விளையாடும் பெரியவர்கள், அந்த குழந்தையோடு விளையாடுவதில் சந்தோசம் அடையும்போது, இவர்களும் அந்தக் குழந்தையாக மாறி, அதனுடன் சேர்ந்துக்கொண்டு ஆடி, பாடி சந்தோசம் அடைவார்கள். அதுவே. அந்த குழந்தை விளையாடியதில், கீழே விழுந்து அடிபட்டு அழுதால், இவர்களும் அந்தக் குழந்தையுடன் சேர்ந்துக்கொண்டு சோகமாக அழுவது போன்றும், அந்த நிலத்தை அடிப்பது போன்றும் நடிப்பார்கள்.

இவ்வாறு உலக விவகாரங்களில் ஈடுபடும் ஞானிகள், இந்த பொய்யான உலகியல் செயல்பாடுகளில், தாங்களும் கலந்துக்கொண்டு, பொய்யான மகிழ்ச்சியையும், சோகத்தையும் வெளிப்படுத்துவார்கள். ஆனாலும், இவர்களுக்கு நன்றாகத் தெரியும், இவைகள் அனைத்திலும் பாதிக்கப்படாத, சுத்த சித்தே "**நான்**" என்பதை நன்கு அறிந்து வைத்திருப்பார்கள்.

இந்த ஞானிகளது முன்பதிவுகள் சஞ்சிதத்தில் அழிக்கப் படாமல், பிராரப்தக் கர்மாவாக வெளிப்பட்டதினால் கிடைத்த இவர்களது உடலைக் கொண்டு, பிராரப்தம் முடியும்வரை, இந்த சமுதாயத்திற்கு ஏதாவது நற்காரியங்களை நிஷ்காமிய கர்மாவாக செய்து வருவார்கள்.

இவர்களில் சிலர் மதச்சடங்குகளில் ஈடுபாடு உடையவர் களாகவும், சிலர் முன் கோபியாகவும், சிலர் எந்த சடங்கு களையும் விரும்பாதவர்களாகவும், சிலர் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற பொதுக் காரியங்களிலும் இருப்பார்கள். ஒரு சிலர் ஒன்றுமே செய்யாமல், உலக விவகாரங்களில் இருந்து ஒதுங்கியும் இருப்பார்கள். இவைகள் அனைத்துமே, அந்தந்த ஞானிகளின் மனப்பதிவுகளின் வெளிப்பாடே ஆகும்.

மத்திம ஞானிகள் அனைத்து சாஸ்திர ஞானங்களை கொண்டவர்களாக இருப்பார்கள். வேதாந்தம் கற்றவர்களாகவும், சிரவண, மனன, நிதித்யாஸனம் மூலமாக அடைந்த சாஸ்திர அறிவைக் கொண்டு, ஆத்மாவை அறிந்திருப்பார்கள். அறிந்த அறிவில் எப்பொழுதும் நிலைத்திருப்பார்கள். ஆத்மானுபவத்தை அவ்வப்பொழுது நிர்விகல்ப நிலையில் அடைவார்கள். பிரம்மம் மட்டுமே சத்தியம், உலகம் மித்யா என்பதில், இவர்கள் உறுதியாக இருப்பர்கள்.

உத்தம ஞானிகளும், மத்திம ஞானிகளும் ஜீவன் முக்தர்களாகவே இருப்பார்கள். இவர்களைப் போலவே, மந்த ஞானிகள் காட்சிப் பொருள்கள் எதுவும் உண்மையல்ல. அவைகள் அழியக் கூடியவையே என்ற தெளிவுடனேயே இருப்பார்கள். அதேசமயம், ஆத்மாவே அனைத்தும் என்ற கேள்வி ஞானம் மட்டுமே இவர்களிடம் இருக்கும்.

ஆனால், ஆத்ம அனுபவம் உண்டாகாத இவர்களுக்கு காட்சிகள் உண்மைப் போன்று இருந்துக் கொண்டே இருக்கும். இவர்கள் மனம் உள்முக விசாரத்திற்கு செல்வதற்கு தடையாக, தங்களை ஆத்மா என்று மனதளவில் நினைத்து திருப்தி அடைந்து விடுவார்கள்.

இதனால், இவர்கள் மனம், இவர்களை தான் ஆத்மா என்று நினைக்க வைத்தாலும், உலக விவகாரங்கள் இவர்களை பாதிக்கும்பொழுது, இவர்களது உண்மை சொருபமான ஆத்மா என்ற "**நான்**" மறைந்து, உடல், மனம் சார்ந்த அகங்கார "**நான்**" வெளிப்பட்டு மனதுடன் போராட ஆரம்பித்து விடும். இதற்குக்காரணம், இவர்களது மனம் முழுவதுமாக நாசமடையாமல், ஆத்மாவில் லயமாகாத தன்மையில் இவ்வாறு பாதிப்புக்குள்ளாகின்றது.

அதாவது, மனதை உள் நோக்கி விசாரித்து, எண்ணங்களை ஒவ்வொன்றாக கவனித்து, அவைகளை நீக்க நினைத்தாலும், இவர்களது வாசனைகள் மீண்டும், மீண்டும் இவர்களை தங்கள் அபராவித்யா திறமைகளை (எழுத்தாளன், ஓவியன், ஜோதிடன், கலைஞன், பொறியாளன் போன்ற பட்டறிவை) வெளிப்படுத்தத் தூண்டும்.

இவர்கள் மனம் முழுவதுமாக நாசமடையாதவரை, இவர்களது வாசனைகள் நீங்குவதில்லை. வாசனைகள் நீங்காதவரை இவர்களுக்கு முக்தியும் இல்லை".

"இராமா! இங்கு சற்று மனதினை உள்வாங்கி கவனித்து சமாதியின் தன்மைகளைக் கேள். சுயத்தை உணர்வதே சமாதி! சமாதியே நம் இயல்பு! சமாதி நிலை அடைந்து ஆத்ம அனுபவம் வரும் பொழுது உருவத்தோற்றங்கள் மறைந்து உள்ளது (சுயம்) மட்டுமே இருக்கும்.

**"சமாதி என்பது சுயத்தை அறிந்து, சுயத்தில் இருத்தல்"**

இந்த நிலையில் இருமைகளால் சூழ்ந்த எண்ண ஓட்டங்கள் எதுவும் இருக்காது".

"இராமா! கவனமாகக் கேள்! எண்ண ஓட்டங்கள் ஏதுமற்ற ஆழ்ந்த உறக்கம்கூட சமாதி நிலைதான், அதுப்போல, உணர்வோடு விழிப்பு நிலையில் எண்ணங்கள் இன்றி, மனம் ஆத்மாவில் அடங்குவதும் சமாதி நிலைதான், மனம் முழுவதுமாக நாசமடையாமல் ஆத்மாவில் லயமாகும் தனித்த நிர்விகல்ப நிலையும் சமாதிதான்.

ஆனால், இந்த மூன்று சமாதி நிலைகளிலும் எண்ணங்கள் அழிந்து, மனம் நாசத்தை அடையாதவரை ஆத்ம அனுபவம் தொடர் அனுபவமாகாது. இந்த சமாதிகள் ஆத்மாவை முழுவதுமாக அனுபவிக்க பயன்படாது. சிறிது நேரம், அந்த சமாதியில் இருக்கும் பொழுது மனம் அடங்கி, ஆத்மானுபவம் உண்டாகும்.

யோக மார்க்கத்தில் சமாதி என்பது, மனதின் லயத்தைக் குறிக்கும். இத்தகைய சமாதிகளால், நிலையான ஆத்ம நிஷ்டை உண்டாகாது. ஆத்ம நிஷ்டை உண்டாகாதவரை, வாசனைகள் நீங்காது. வாசனைகள் நீங்காதவரை முக்தியும் உண்டாகாது.

நிர்விகல்ப சொரூபமே, எல்லாவற்றிற்கும் ஆதாரமாகி, எல்லோரிடத்திலும் பிரகாசிக்கின்றது. எண்ணங்களற்ற தூய அறிவின் பிரகாசம் இல்லையென்றால், உலகில் எதுவும் செயல்படாது. பெரும்பாலும், ஒவ்வொருவரும் தங்களது தினசரி வாழ்க்கையில் அறிந்தோ, அறியாமலோ நிர்விகல்ப சமாதியை உணர்கின்றார்கள். அதனால் என்ன பயன்?

யோகிகளும் நிர்விகல்ப சமாதியை அடைகின்றார்கள். இவர்களது இந்த அனுபவம் மட்டும் நிரந்தர ஆத்மானுபவத்தை தருவதில்லை. இவர்கள் மீண்டும் வெளி உலக தொடர்புகளில் வரும்பொழுது மனதினால் மீண்டும் பாதிக்கப்படுகின்றார்கள்.

இவர்களது அறிவு அறியப்படுகின்ற பொருள்களின் வடிவம் எடுக்கும் பொழுது, காட்சி உண்டாகின்றது. இதனால், காட்சியிலுள்ள மனம் முரண்படுகின்றது. முரண்பட்ட மனமே அமைதியை இழந்து போராடுகின்றது. இவ்வாறு போராடும் மனமே காட்சியை **உண்மை** என்று நம்புகின்றது. அதனால், இவர்களுக்கு உலகப் பற்று உண்டாகின்றது". இவ்வாறு, ஸ்ரீ தத்தகுரு கூறி முடித்ததும், பரசுராமன் மீண்டும் பின்வருமாறு பேசத் தொடங்குகின்றான்.

"குருவே! இதுவரை தாங்கள் கூறிவந்ததில் பல சமாதி நிலைகளைப் பற்றிய ஒரு தெளிவை அடைந்தேன். இதில் எண்ணங்களை முழுமையாக நீக்குகின்ற நிர்விகல்ப சமாதியை உயர்ந்த சமாதி என்று நினைத்திருந்தேன். தற்பொழுது தாங்கள் கூறுவதை வைத்து பார்க்கும் பொழுது, இந்த நிர்விகல்ப சமாதியை மிஞ்சுகின்ற ஒரு சமாதி நிலை உள்ளது போன்று தோன்றுகின்றதே! அது என்ன? என்பதையும் தாங்கள் அடியேனுக்கு அருள்கூர்ந்து தெரிவிக்க வேண்டும்".

பரசுராமனின் ஆர்வத்தைக் கண்ட ஸ்ரீ தத்த குருவும் பின்வருமாறு அந்தசமாதியை விளக்குகின்றார்.

"இராமா! உன்னுடைய யூகம் சரியானதே! மிக உயர்ந்த சமாதி நிலை ஒன்று உண்டு.

அதனை சாதாரணமானவர்களால் அனுபவத்திற்கு கொண்டுவருவது கடினம். காரணம், அதைப்பற்றிய புரிதல், முதலில் அவர்களிடம் இருக்காது. மற்றும் அவர்களது மனம் மயங்கிய நிலையில் உள்ளதால், இந்த உலகக் காட்சிகள் அவர்களது மனதைக் களங்கப்படுத்தி வைத்திருக்கின்றது. எனவே, இவர்களது மனம் ஒன்றைப் பிடித்துக் கொண்டு, அதுதான் சரி! என்ற தீர்மானத்தில் வாதிட்டுக் கொண்டு இருக்கும். இது மனதின் இயல்பு. மனம் எதையாவாது தனக்கு பிடித்ததை பற்றிக் கொண்டு இருக்க வேண்டும். இது தெரியாத இவர்களும் மனதின் அந்த பற்றுதலில் அடிமையாகி, அவர்களது சாதனையே சரி! என்றும், மாற்று வழி முறைகளை யாராவது உபதேசித்தாலும், அதை அவர்கள் மனம் ஏற்பதில்லை. ஆனால், நான் கூறும் இந்த சமாதியில் மனம் பற்றற்று இருக்கும். அதற்குக் காரணம், சாதித்தவன் அறிந்துக்கொண்ட சரியான சாதனையே ஆகும்.

"**ஆயிரக்கணக்கான ஜெனங்கள் ஏதாவது ஒரு சாதனையை செய்துக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அவ்வாறு சாதனை செய்கின்ற ஆயிரக்கணக்கானவர்களில் யாரோ ஒருவன் மட்டும்தான் அவன் அடைந்த சாதனையில் சாதிக்கின்றான்**" – பகவத்கீதை.

சாதிக்காதவர்கள் சாதிக்க முடியாமல் போனதற்கு முக்கியக்காரணம் அவர்கள் சரியான சாதனையை அறிய வில்லை என்பதே ஆகும். ஒருவன் அவனது சாதனை முயற்சி பயனுடையதா? பயனற்றதா? என்ற அடிப்படை அறிவு கூட இல்லாமல், அந்த சாதனையை பிடித்துக் கொண்டு, சாதிக்க முயற்சிப்பது எப்படி இருக்கும் என்றால், தாகத்தால் நாக்கு வறண்டு நடக்கவே சக்தியற்ற ஒருவன், கானல் நீரை கண்டு உண்மையான நீர் என்று அதை அடைய அதிக தூரம் நடப்பது போன்றது. இதில் என்ன நடக்கும்? இறுதியில் அவன் மூர்ச்சையாகி கீழே விழுந்திருப்பான்".

"இராமா! எவன் ஒருவன் காண்பவனாகிய மனதை கொண்டு, காட்சியில் காணப்படும் பொருளுக்கு (சாதனையை) காரணமானவன் நானே என்று அறிகின்றானோ? அவனே மனிதப் பிறவியின் மகத்துவம் அறிந்த அதி புத்திசாலியாக இருக்கின்றான். அப்படிப்பட்டவனுக்கே, சாதனையை சரியாக தேர்ந்தடுக்கும் தகுதியும், அதை சாதிக்கும் ஆற்றலும் உண்டாகி விடுகின்றது.

"இராமா! இது அனைவருக்கும் சாத்தியமும் இல்லை. அறிவை அறிந்தவனுக்கு அசாத்தியமும் இல்லை!, இராமா! மீண்டும் நன்றாக ஞாபகப்படுத்திக் கொள்! "**சமாதி என்பது சுயத்தை அறிந்து, சுயத்தில் இருத்தல்**".

செயல்கள் எதுமற்ற நிலையில், ஓய்வாக உடலையும், எண்ண ஓட்டங்கள் அற்ற நிலையில், ஓய்வாக மனதையும் வைத்து இருப்பது "**நிர்விகல்ப சமாதி**" எனப்படும். உடலும், மனமும் ஓய்வில் இருக்கும் இதுவும், ஒரு உயர்ந்த சமாதி நிலையே ஆகும். ஆனால், இதில் ஆழ்ந்த உறக்கத்திலும், அதிர்ச்சி, பயம், சந்தோசம் போன்ற விழிப்பு நிலைகளிலும் கிடைக்கின்ற சிறிது நேர சமாதியில் பயன் இல்லை.

இதையே தொடர் அப்பியாசமாக தினசரி சில மணி நேரங்கள் அமைதியாக ஒரு இடத்தில் அமர்ந்து பழகி வந்து, எண்ணங்கள் உதிக்காமல் மனதை உள்முகமாக திரும்பச் செய்தவர்கள், நாளடைவில் நிர்விகல்ப சமாதி நிலை உண்டாகி, அறிவை அறிந்து, அதன் சுயத்தில் அதிக காலம் தினசரி இருப்பார்கள். இவர்களுக்கு எளிதில் சகஜ சமாதி உண்டாகி விடும். இதில் சகஜ சமாதி என்பது, செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உடலையும், எண்ண ஓட்டங்கள் நீங்கிய மனதையும் கொண்டு, தன் சுயத்தை அறிந்து, அந்த சுயத்தால் ஆட்கொள்ளப்படுதலே "**சகஜ சமாதி**" எனப்படும்.

இந்த சகஜ சமாதி நிலையில், அறிவை உணர்ந்து, அந்த அறிவாகவே தன்னைக் காணும் ஞானிக்கு, உடல் விழிப்பு நிலையில், புலன்கள் மற்றும் மனதின் வாயிலாக இந்த உலகக் காட்சிகளைக்கண்டு, அனுபவித்துக் கொண்டிருந்தாலும்,

அவைகள் அனைத்தையும் தன் அறிவுக்கு வேறாகப் பார்க்காமல், தான் இருப்பதினாலேயே தன்னால் அவைகள் வெளிப்பட்டு, இந்த புலன்கள் மட்டும் மனம் என்ற உபாதிகளின் மூலமாக பிரகாசிக்கின்றன என்பதை அறிவார்கள். மேலும், அவைகள் அனைத்தும் அறிவாகிய தன்மீது ஏற்றி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிந்து இருப்பதினால், இவர்களிடம் இருமைகள் என்றுமே இருக்காது. ஆதலால், அவைகளுக்குள்ளே தான் இருப்பதைப்போல, அவைகள் தன்னுள்ளே இருக்கின்றன என்பதில் தெளிவாக இருப்பார்கள். இவர்களே ஜீவன் முக்தர்கள்.

இதுவே, **சகஜ சமாதி** ஆகும்.

இந்த சமாதியில் மனம் விகல்பங்கள் ஏதுமின்றி, இருமைகளாம எண்ண ஓட்டங்கள் நின்று, நடப்பதை அனைத்தையும் சாட்சியாக இருந்து, வேடிக்கை மட்டுமே பார்க்கின்ற ஆத்மானுபவம் உண்டாகிவிடும். இந்த அனுபவம் தொடர்ந்து, எப்பொழுதும் இவர்களிடம் நீடித்துக் காணப்படும்.

இவர்களால் செய்யப்படுகின்ற செயல்களுக்குக் கூட இவர்கள் கர்த்தாவாக மாறாமல், செய்யும் செயலையும் காட்சியாக மட்டுமே காணுகின்ற, சாட்சியாக இருப்பதே இவர்களது உண்மையான சொரூப நிலையாக இருக்கும்.

## குறிப்பு:–

(இங்கே "**சாட்சி**" என்பவன் "**வேடிக்கைப் பார்ப்பவன்**" மட்டுமே, அந்த செயல்களுக்கும், இவனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.)

இவர்கள் கர்த்தாவும் அல்ல! போக்தாவும் அல்ல! அதாவது, செயல் செய்பவனும் அல்ல, செய்த செயலை அனுபவிப்பவனும் அல்ல. இந்த சகஜ சமாதி நிலையில், காண்பவனின் காட்சியில் காணப்படுகின்ற பொருள்களை மனம் பற்றாது. அதனால், காண்பான், காட்சி, காணப்படும் பொருள் மூன்றும் ஒன்றான நிலையில், இருப்பது "**அறிவு**" (ஆத்மா) ஒன்று மட்டுமே. அதுவே என் சொரூபம். அதுவே என் இயல்பு! என்று இருப்பார்கள். இதுவே "**சகஜ சமாதி**" நிலையில் இருக்கும் ஞானிகளின் உண்மை நிலை ஆகும். இந்த சகஜ சமாதி உண்டாகிவிட்டால், அவனே ஜீவன் முக்தன்.

இந்த சகஜ சமாதி நிலையை அடைந்தவர்களிடம், இருமைகளுடன் கூடிய மனம் இல்லாததால், உலக வாழ்க்கையில் எந்த பதட்டமும், பயமும் இன்றி, இதை செய்கின்றேன், அதை அனுபவிக்கின்றேன் என்ற அஹங்கார, மமகாரம் இன்றி, தங்கள் சுயத்திலேயே (அறிவில்) எப்போதும், நிலையாக நின்றுக் கொண்டிருப்பார்கள்.

புறக் காட்சிகளால், இவர்களது அறிவு (ஆத்மா) களங்கப்படுவதில்லை. மற்றவர்களுக்கு தன் நிலையைப்பற்றி, இவர்கள் வெளிப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை. சகஜமாக மற்றவர்களைப் போன்றே, ஒன்றுமறியாதவர்கள் போன்று, அவர்களுடன் அவர்களாக மாறி, அனைத்தையும் ஆனந்தமாகச் செய்வார்கள்.

வானத்தில் நீல நிறம் உண்மையில்லை. அது தோற்றம் மாத்திரமே. அவ்வாறு, அதைப் பார்க்கின்ற ஞானிகளுக்கும், மற்றவர்களுக்கும் நீல நிறமாகவே தோன்றும். இதில் ஞானி மட்டுமே, அதன் உண்மைத்தன்மையை அறிவான். மற்றவர்கள் தோற்றத்தை உண்மையாகக் கருதுவர். இவ்வித தோற்றப் பிழைகள், ஞானிகளை தவறாக வழி நடத்துவதில்லை. அவர்கள் தெளிந்த நிலையில் இருப்பதால், அது, தோற்றப்பிழை என்பதை நன்கு அறிந்துள்ளார்கள். இத்தகைய புறக்காட்சிகள் (இந்த உலகம்), அவர்களது ஞானத்தில் எந்த சலனத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால், மற்றவர்களின் முரண்பட்ட மனமோ? இந்த உலகத்தை உண்மை என நம்பி, அதனால், பாதிப்படைந்து, அமைதியை இழந்து போராடுகின்றது. காட்சியில் காணப்படும் பொருளுடன் காண்பானாகிய மனம் கலவாத நிலையே, சலனமற்ற மனநிலை. இந்த நிலையில், மனம் எதையும் ஆசைப்படாது.

இதுவே, அறிவு பிரகாசிக்கும் நிலை. ஆனால், காட்சியில் காணப்படும் பொருளுடன் காண்பானாகிய மனம் கலந்து விடுகின்ற நிலையே, சலனமுள்ள மனநிலை. இந்த நிலையில் மனம் ஆசைவயப்படும். இதுவே, அறிவு மங்கும் நிலை. இதில், ஞானிகளின் மனம் சலனமற்ற நிலையில், அசைவற்று ஆசைகள் இன்றி, அறிவுடன் நிலைப்பெற்று இருப்பதே "**மனமற்ற நிலை**" அல்லது "**சகஜ சமாதி**" எனப்படுகின்றது. இதைவிட உயர்ந்த சிறந்த சமாதி இல்லவே இல்லை.

## சகஜ சமாதி

சகஜசமாதி என்பது, நிசப்தமான, உயிரோட்டம் உள்ள விழிப்புணர்வு நிலை என்பதாகும். அதாவது விழிப்பும், உறக்கமும், கனவுமற்ற ஓர் உயரிய நிலை. இந்நிலையில், அளவற்ற ஆற்றல், அறிவுத் திறன், படைப்பாற்றல், மற்றும் எல்லையற்ற அமைதி கிடைக்கின்றன. தாயுமானவ சுவாமிகளும் இதனைப்பற்றி கூறுவது:–

**"சாசுவத முக்தி நிலை ஈதென்று உணர்த்தியே**
**சகச நிலை தந்து வேறொன்றும் எண்ணாமல்**
**உள்ளபடி சுகமாயிருக்கவே ஏழையேற் கருள்செய்"**

என்கின்றார். சகஜம் என்றால், இயல்பு நிலை. உள்ளது உள்ளபடி யதார்த்த இயல்போடு விளங்குவது சகஜம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரிடம் இதைப்பற்றி ஒரு அன்பர் கேட்ட பொழுது,

**"தண்ணீரிலிருந்து துள்ளி நிலத்தில் விழுந்து துடித்துக் கொண்டிருக்கும் மீனை எடுத்து மீண்டும் தண்ணீரில் விட்டு விடுவோமேயானால், அது அடையும் அந்த நிலை சகஜ நிலை"**

என்கின்றார்.

நீருக்குள் பிறந்து, நீரிலேயே வாழ்ந்து முடியக் கூடியது மீன். அதன் ஆனந்தம் நீருக்குள்தான் இருக்கிறது. நீருக்குள் இங்குமங்கும் நீந்தி விளையாடி, உணவைத்தேடி உண்டு, உயிர் வாழக் கூடியது மீன். மீனுக்கு நீர்தான் உலகம். நீரை விட்டு மீனைப் பிரிப்பது என்பது அதனை சாகடிப்பதாகும். அதைப்போலவே, நம் சொரூபம் உண்மையில் ஆத்ம சொரூபம். ஆத்ம சொரூபம்தான் "நான்" என்பதை சாதகன் ஒருவன், சரியாக உணர்ந்து கொள்வானேயானால், அதுவே அவனது சகஜ நிலையாகும். இதுவே அவனது இயல்பு. உலக விவகாரங்களில் ஈடுபட்டுக்கொண்டே, சகஜ சமாதி நிலையில் இருப்பவனுக்கும், உலக விவகாரங்களில் ஈடுபட்டுக்கொண்டே, பந்தப்பட்டு உழல்பவனுக்கும் இடையே வேற்றுமைகள் எதுவும், பார்ப்பவர்களின் கண்களுக்குப் புலப்படாது. அவன் செய்கின்ற அனைத்தையும் இவனும் செய்கின்றான். ஆனால், இந்த இருபிரிவினருக்கும் இடையே உள்ள மனப்பான்மையில் மாபெரும் வேறுபாடு உள்ளது.

உலக பந்தத்தில் உழல்பவன் ஓயாது எண்ணங்களில் ஓடிக் கொண்டேயிருக்கிறான். இந்த உலகத்தை உண்மை என்று நம்புகின்றான். இத்தகைய இருமைகளினால், ஒரு எண்ணத்திற்கும், மற்றொரு எண்ணத்திற்கும், தொடர்பற்ற நிலையில், சிதறிய மனதை உடையவனாகி விடுகின்றான். ஆனால், சகஜ நிலையில் உள்ளவனது எண்ணங்களோ? முற்றிலும் பரமா(ஆ)த்மாவோடு சம்பந்தப் பட்டவைகளாக இருக்கின்றன. காந்தம் பாய்கின்ற ஊசியானது, சதா சர்வ காலமும் வட திசையை நோக்கி இருப்பதுப்போல, அவன் எண்ணங்கள் யாவும் பரமா(ஆ)த்மவையே பற்றி நிற்கின்றன.

பரமா(ஆ)த்மாவோ பேரானந்த சொரூபம். அங்கு, துன்பம் என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. சூரியனிடத்தில் எப்படி இருள் இருப்பதில்லையோ? அதுப்போலப் பரமா(ஆ)த்மாவோடு இணைந்து இருக்கும்பொழுது, உலகக் காட்சியில், எல்லாம் இன்பமயமாக மாறி விடுகின்றன. இருப்பதெல்லாம் இறைவனாகத் தோன்றுகின்றன. இத்தகைய சகஜ சமாதி நிலையில் இருக்கின்றவர், சகஜமாகவே எல்லோரிடமும் பழகுவார், உண்பார், உறங்குவார், உரையாடுவார். ஆனால், தனக்கு வேறாக எதிலும் பந்தப்பட முடியாத நிலையில், ஏகனாக அவரே இருக்கின்றார். அவரே ஜீவன் முக்தர்! அவரே ஞானி! இதுவே சமாதியின் பூரண நிலை".

# அத்தியாயம் – 20

## வித்யா கீதை

பார்க்கவா! ஞானிகளின் நிலையை மேலும் தெளிவு படுத்த, சத்திய லோகத்தில் நடந்ததை உனக்கு கூறுகின்றேன். அதனையும் கவனமாகக் கேள். என்று ஸ்ரீ தத்த குரு பின்வருமாறு கூறத்தொடங்கினார்.

மிகப் பரிசுத்தமான சத்திய லோகத்தில் பிரம்மாவின் சபையிலே, அதி நுட்பங்களான விசாரணைகளை முன்னிட்டு, ஞானத்தைப் பற்றிய பிரசங்கம் உண்டானது. அந்த சபையிலே சனகாதி முனிவர்கள், வசிஷ்டர், அத்திரி, விசுவாமித்திரர், புலஸ்தியர், புலகர், பிருகு, ஆங்கிரீசர், பிரசேதர், நாரதர், சியவனர், வாமதேவர், கௌதமர், சுகர், பராசரர், கண்வர், காசிபர், தக்ஷர், சுமந்து, லிகிதர், மற்றும் தேவலர் போன்ற அனேக ரிஷிகளும், முதிர்ந்த இராஜ ரிஷிகளும் ஒன்று கூடி, எல்லோரும் மேன்மை பொருந்திய பிரம்ம சூத்திரத்தைப் பற்றி, நான்முக பிரம்மனிடம் விசாரணை மேற்கொண்டனர்.

"பிரபுவே! எங்களைப் போன்ற இந்த உலகத்தையும், உலகத்தைக் கடந்த நிலைகளை உணர்ந்தவர்களாக இந்த உலகத்தில் காணப்படுகின்ற அனேக ரிஷிகளும், செய்யும் செயல்களில், வேறுபாடுகள் எதனால் உண்டாகின்றது. சிலர் எப்பொழுதும் சமாதியில் உள்ளனர். சிலர் பக்தியில் பரவசம் அடைகின்றனர். சிலர் மற்ற சராசரி மனிதர்களைப் போன்று, உலக காரியங்களில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு, நாங்கள் ஒருவருக்கு ஒருவர், பலவிதமாக இருக்கின்றோம்.

இதில், நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது நிலையே சிறந்தது என்றும் கருதுகின்றோம். எங்களில், யார் சிறந்த நிலையில் இருக்கின்றோம்? என்பதை எங்களுக்கு, தாங்களே எடுத்துக்கூற வேண்டும். இதை, நாங்கள் அனைவருமே அறிந்துக் கொள்ள ஆர்வமாக இருக்கின்றோம். ஆகவே, எங்களில் யார் உத்தம ஞானி என்பதை, தாங்களே விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

இதைக்கேட்ட பிரம்ம தேவன், இவர்களுக்கு தன்னால் கூறப்படுகின்ற பதில் திருப்தியை உண்டாக்காது என்று தன்னுடைய ஞான திருஷ்டியால் அறிந்துக் கொண்டு, மகா தவ சீலர்களே! இவ் விசயத்தில் நானும், உங்களைப் போன்றே யோசிக்கிறேன்.

ஆகவே, இதற்கான சரியான பதிலை, சர்வஞ்ஞனான பரமேஸ்வரனே இதன் உண்மையை அறிந்தவராகையால், நாம் அனைவரும், அவரிடமே சென்று கேட்கலாம் என்று கூறினார்.

இவ்வாறு, அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, முடிவு செய்து, அனைவரும் தங்களுடன் விஷ்ணுவையும் அழைத்துக் கொண்டு, கைலாசத்தை அடைந்து மகாதேவனை நமஸ்கரித்து, இவர்களது சந்தேகத்தை பிரம்மா முன்னின்று கூற, மற்ற ரிஷிகளும் ஆம் ஐயனே! இதுவே எங்களது கோரிக்கை, இதற்கு தாங்கள் விளக்கமளிக்க வேண்டும் என்று வேண்டி நின்றனர். இந்த முனிவர்களின் மனோ ஓட்டத்தை அறிந்த பரமேஸ்வரனும், இவர்களுக்கு தான் கூறுவதைவிட லோக மாதா திரிபுரை கூறுவதே சரியாக இருக்கும் என்று தீர்மானித்து, அவர்களை நோக்கி, நானும் இது சம்பந்தமாக அறிந்தவன் இல்லை.

ஆகவே, நாம் அனைவரும் நம் அனைவருக்கும் வித்தையைக் கொடுத்த வித்யா தேவியான திரிபுரையை, தியானம் செய்வோம். அவளே இதற்கு சரியான விடையைக் கொடுக்கும் சக்தியுள்ளவள் என்று கூறி பரமேஸ்வரன் முதற்கொண்டு அனைவரும் திரிபுரையை தியானம் செய்து வழிபட்டனர்.

பக்தர்களின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட வித்யா தேவியான திரிபுரையும், அவர்களது சந்தேகங்களை தீர்க்கும் பொருட்டு, சிதாகாசமயியான அவள் பரவெளியில் இடி, ஓசை போன்ற சப்த வடிவினளாக, சரீரமற்ற அசரீரியாகத் தோன்றி, "தவயோகிகளே எதற்காக என்னை தியானித்து அழைத்தீர்கள்? அந்த கோரிக்கையை தாரளமாகக் கேளுங்கள். என் பக்தர்களின் கோரிக்கையை நிறை வேற்றுவது எனது கடமை என்று கூறினாள்".

பரையான பரமேஸ்வரியின் இந்த குரலைக் கேட்ட அனைவருமே பரவசம் அடைந்தனர். எங்கும், எதிலும் நிறைந்திருக்கின்ற அவளுக்கு திசைகளும், தேச காலங்களும் கிடையாது. எனவே, அந்த பராசக்தியை அனைவரும் கைக்கூப்பி தொழுதவாறு, அனைத்து திக்கிலும் சுற்றி சாஷ்டாங்கமாக விழுந்து, மேலும், கீழும் வணங்கிப் பலவாறாகப் போற்றினர்.

"தாயே உன்னுடைய பரவடிவத்தையும், உனது ஐஸ்வரியங்களையும், உன் ஞானத்தையும், அந்த ஞானத்தின் பலனையும், அதனை அடையும் சாதனையையும், அந்த சாதனையின் முக்கியத்துவத்தையும், அதனால் உண்டாகும் சித்தியையும், சித்தியின் முடிவான நிலையையும், சித்தர்களில் உத்தமர் இன்னார் என்பதையும், ஒவ்வொன்றாக வரிசைப்படி,

கிரமமாக தாங்களே எங்களுக்கு எடுத்துக்கூற வேண்டும் என, திரிபுரையை மேலும், கீழும், அனைத்து திசைகளிலும் விழுந்து வணங்கி தங்கள் கோரிக்கைகளை தெரிவித்தனர். இவ்விதம் கேட்ட ரிஷிகளின் மீது தயை உடையவளான பராவித்யாவிற்கு வித்தானவளான திரிபுரை அவர்களை நோக்கி, பின்வருமாறு கூறத்தொடங்கினாள்.

அனைத்து தவயோகிகளும் கவனமாகக் கேளுங்கள்! என்னால் கொடுக்கப்பட்ட ஆகமங்களை கடைந்து, அதிலிருந்து எடுத்த, அமிர்தத்தை உங்கள் அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கின்றேன். பருகிப் பரவெளியில் பரவசம் அடையுங்கள்! எதனிடமிருந்து, இந்த உலகம் தோன்றியதோ? அந்த ஆதாரப் பொருள் நானே!

அவைகள் யாவும், கண்ணாடியில் பிரதிபிம்பிக்கின்ற பிம்பம்போல, தோன்றி நிலைத்து, பிறகு மறைந்து விடுவது எல்லோருக்கும் எப்படி இயல்பாக காணப்படுகின்றதோ? அதுப்போன்று, என்னுடைய மாயா சக்தியை அறியாதவர் களுக்கும், இந்த உலகம் உண்மையாகவே தோன்றி, நிலைத்து, இறுதியில், அவர்கள் தேகத்தை விடும்பொழுது, இல்லாமல் போகின்றது.

இந்த இடைப்பட்ட வாழ்நாட்களில், இந்த ஜீவர்கள் இறுதிவரை, தங்களை அறிந்துக்கொள்ள ஆர்வம் அற்றவர் களாகவே இருக்கின்றார்கள். இதற்குக்காரணம், என்னால் உண்டாக்கப்பட்ட மாயா சக்தியில் மயங்கிய இவர்கள், மற்றவர்களால் ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான எண்ணங்களில் சிக்கிக் கொண்டு, மதி மயக்கத்தில் இருக்கின்றார்கள்.

இவர்களிடமிருந்து, அத்தகைய தவறான எண்ணங் களுடன் கூடிய, மதிமயக்கம் மாற வேண்டுமென்றால், என்னால் கொடுக்கப்பட்ட சாஸ்திரங்களை கற்று, மதி மயக்கம் தீர்ந்து, மாயையாகிய என்னுடைய மகாசக்தியினால், மனதின் அறியாமை மயக்கம் அகன்று, சதா அந்த தூய அறிவில், அதாவது, ஆத்ம நிஷ்டையில், நிலைத்து இருக்கின்ற தவயோகிகள் தங்கள் சுயம்பிரகாசத்தில் திளைக்கின்றனர்.

அவர்கள், தங்களது விகல்பமற்ற மனதில் இருமைகளால் சூழப்பட்ட அலைகள் ஏதுமற்ற, கம்பீரமாக காணப்படும் ஆழ்கடல் அமைதி போன்று, தனித்த ஆத்மாவாக இருக்கின்ற ஒன்றேயான என்னை, இரண்டற்ற சுயமே நான் என்பதை அறிந்து, என்னில் ஒன்றாகக் கலந்து சுய சொரூபத்தில் பிரகாசிக்கின்றனர்.

பக்தர்கள் இருமைகளினால் சூழப்பட்ட பக்தியினால், என்னை ஆழமாக ஊடுருவி, என்னை அவர்களிடமிருந்து வேறாகப் பாவித்து, அவர்கள் வேறு, நான் வேறு என்று பக்தி செலுத்தி வழிபடுவதின் வாயிலாக, அவர்களுக்கு உடல் தொடர்பை உண்டாக்கிக் கொண்டு இருக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் இவர்களது உடலின் மீது எப்படி அலாதி பிரியம் வைத்திருக்கின்றார்களோ? அதுப்போல, உடலற்ற என்னையும், இவர்கள் உடலைப் போன்றே பல உருவங்களில் வடித்து, பிரியத்துடன் வழிபடுகின்றார்கள்.

அந்தக்கரணங்களையும், புறப்புலன்களையும், புற உறுப்புகளையும் செயல்படுத்துகின்ற, பிராணன் உடலில் உள்ளும், புறமும் சென்று வருவதற்கு, எது ஆதாரமாக இருந்து கொண்டிருக்கின்றதோ? எது இல்லாவிடில் எந்த இயக்கமும் உண்டாகாதோ? எதை சாஸ்திரங்கள் சுயம் பிரகாசி என்று கூறுகின்றதோ? அதுவே நான். அதுவே, என்னுடைய உருவமற்ற உண்மையான சொரூபம்.

இதுவே என் **"பரவடிவ நிலை"** ஆகும்.

ஓ தேவ சிரேஷ்டர்களே! அனேக பிரமாண்டங்களுக்கு வெளியேயும், உள்ளேயும் நானே இருக்கின்றேன்.

நித்யமும் நானே! அநித்யமும் நானே! ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற பஞ்சப் பிரம்மமும் நானே.

அனேக பிரம்மாண்டங்களுக்கு வெளியே சுதா சமுத்திரத்தில், மணித்துவீபத்தில் இருக்கும், கடம்ப வனத்திலே, சிந்தாமணி என்ற மாளிகையின் உள்ளே சதாசிவனை என்னுடைய அமரும் ஆசனமாகவும், பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈஸ்வரன் ஆகிய நால்வரையும், எனது அமரும் ஆசனத்தின் நான்கு கால்களாகவும், கொண்ட பஞ்ச பிரம்மம் என்ற ஆசனத்தில் அமர்ந்து, இராஜ்ஜிய பரிபாலனம் செய்கின்ற என்னுடைய இந்த வடிவமே "**அபர வடிவம்**" என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அனைத்து திசைகளும் நானே! மேலே, கீழே, மற்றும் இடையில் உள்ள திசைகளும் நானே! சாவித்ரி, காயத்ரி, பெண், ஆண், அலி, ஆகியவைகளும், சந்தஸ் தேவதைகளும் நானே! சத்தியன், சாந்தன், மூன்று அக்கினிகள், உபத்தியார், வாக்கு, இருதய குகை, ஆகாயம் மற்றும் ஜகத்திற்கு எல்லாம் நாயகி நானே! பஞ்ச பூதங்களும், இருளும், ஒளியும் நானே! நான்கு வேதங்களும் நானே! உபநிஷத் கர்த்தாக்களான அதர்வ, ஆங்கிரஸ் நானே! யாவற்றையும் அறிபவளும் நானே!

சுலோகங்களும், சூத்திரங்களும், அனுவாகங்களும், வியாக்கியானங்களும், பரா வித்யாவும் நானே! எல்லா வேதங்களிலும் மறைபொருள் நானே! மும்மூர்த்திகளும் நானே! படைத்தல், காத்தல் மற்றும் அழித்தல் அனைத்தும் நானே! புத்தியாகிய அறிவும் நானே! பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், கணேசன், ஸ்கந்தன், அஷ்டதிக் பாலகர்கள், உமா, இலக்ஷ்மி, சரஸ்வதி, ஆகிய அனைத்தும் நானே!

இவைகள் அனைத்தும் என்னுடைய அபர வடிவங்கள் ஆகும். வசுக்கள், அசுரர்கள், கிம்பரர்கள் போன்ற கீழ் நிலையிலுள்ள அனைத்தும் எனது அம்சமே!

இவ்வாறு, எல்லா வடிவங்களிலும் இருக்கும், என்னை மாயையில் மயங்கிக் கிடப்பவர்கள் அறிய முடியாது. என்னை எப்படி வழிபடுகின்றார்களோ? அதற்கேற்ற பலனைக் கொடுப்பவளும் நானே! எந்தத் தெய்வத்தின் உருவத்தை விரும்பி வழிபடுகின்றார்களோ? அந்தத் தெய்வத்தின் பலனைக் கொடுப்பவளும் நானே! எங்கும், எதிலும் நானே! இத்தகைய, அனைத்து "**ஐஸ்வர்யங்களும்**" நானே!

இருமையற்ற முழுமையான **அறிவே நான்.**

உலகில் கண்ணிற்குத் தெரியாத, சிறிய உருவம் முதல் பிரமாண்டமான பிரபஞ்சம் வரை, அனைத்தும் என்னாலேயே இயங்குகின்றன. விதவிதமாக அனைத்தும் என்னிடமிருந்தே தோன்றினாலும், நான் பிளவுபடாத, ஒன்றாகவே, முழுமையாக இருக்கின்றேன். என்னை அனைவராலும் புரிந்து கொள்ள முடியாது.

தவயோகிகளே! மிகுந்த புத்தி கூர்மையுடையவர்களே கவனியுங்கள்! அனைத்து செயல்களும் என்னால் நடந்தாலும், நான் எதிலும் என்னை ஈடுபடுத்திக் கொள்வதில்லை.

என்னுடைய மாயா சக்தியால், என்னை அறியாத ஜீவர்கள் இந்த உலகத்தை உண்மை என்று நினைத்து, ஆசைகளில் மயங்கி, அறியாமை இருளில் மூழ்கி, மன மயக்கத்திலேயே மீண்டும், மீண்டும் பிறந்து, இறந்து பிறவிச் சுழற்சியில் சிக்கி இருக்கின்றார்கள்.

எவன் ஒருவனுக்கு விடுதலைப் பெறவேண்டும் என்ற எண்ணம் உண்டாகின்றதோ? அவனே சத்திய சாதுக்களையும், சாஸ்திரம் கற்ற சத்குருக்களையும் கண்டறிந்து, அவர்களிடமிருந்து உண்மையைக் கேட்டறிந்து, அதை அப்பியாசம் செய்து, அறியாமை இருளிலிருந்து விடுபட்டு அறிவு வெளிச்சத்திற்கு வருகின்றான்.

இந்த அனைத்து காரியங்களும் என்னாலேயே நடை பெறுகின்றது. இவைகள் அனைத்தும் என் முழுமையான அறிவில், எந்தக் களங்கத்தையும் உண்டு பண்ணாமல், இது நடைபெறுகின்றது.

அறியாமையில் மூழ்குவதும், அதிலிருந்து விடுபடுவதும் என எல்லாச் செயல்பாடுகளும், எதனுடைய உதவியும் இல்லாமல் என்னிலேயே உருவாகின்றது. என்னுடைய சக்தி விவரிக்க முடியாத அளவிற்கு பெரிதானது.

இந்த உலகத்தை, எந்த ஒரு உபாதான காரணமும் இன்றி, சிருஷ்டிக்கின்றேன். என்னுடைய சிறப்பை, ஆயிரம் நா கொண்ட ஆதிஷேசனாலும் கூட விவரிக்க முடியாது.

என்னுடைய ஞானம் அத்வைதம், துவைதம் என்று பற்பல பேதங்களால் உயர்ந்தது, தாழ்ந்தது என்று பலவாறாக விளங்குகின்றது. இவைகளின் பலன்களும் அவ்வாறே உயர்வு, தாழ்வுடன் விளங்குகின்றது.

காலைக் கதிரவன் மூடியிருந்த காரிருளை தன் பிரகாசத்தால் விலக்குவதுப் போன்று, அறியாமையால் மூடியிருந்த இருளை, அறிவு என்ற என் சுயப்பிரகாசத்தால் மட்டுமே நீக்க முடியும்.

**காண்பான், காட்சி, காணப்படும் பொருள்** என்னும் பேதம் இருக்கின்றவரை, இருமைகள், காட்சிகள் என எல்லாமே இருந்துக் கொண்டுதான் இருக்கும். இந்த இருமைகள் விலகாதவரை, உண்மை நிலையை உணர முடியாது. இவர்களே என்னை வேறாகவும், எனக்கு வேறாக இவர்கள் இருப்பதாகவும் நினைக்கின்ற, துவைதிகளாக இருக்கின்றனர்.

**காண்பான், காட்சி, காணப்படும்பொருள்** மூன்றும் ஒன்றாகி, உள்ளபொருள் ஒன்று மட்டுமே என்று உணரும் போது, இந்த இருமைகள் மறைந்து, ஒன்றேயான சத்சிதானந்தமாக நான் மட்டுமே இருக்கின்றேன் என அறிய முடியும். இதையறிந்து, என்னை வழிபடுபவர்கள் அத்வைதிகளாக இருக்கின்றனர்.

துவைதம், அத்வைதம் ஒன்றுமறியாத பாமர மக்களோ? பல உருவங்களில் என்னை உண்டாக்கிக்கொண்டு, பல்வேறு வழிபாட்டு முறைகளை இவர்களாகவே கற்பித்துக்கொண்டு, களங்கிய மனதுடன், உலக விவகாரங்களில், மலைபோன்று நிலைத்து நின்று, இவர்களுக்கு பயத்தை உண்டாக்கும். பிறப்பு, இறப்பும் எனும் முடிவில்லாத சம்சார சக்கரத்தின் சுழற்சியில் இருந்து விடுபட முடியாதவர்களகவே இருப்பார்கள். மேலும், மந்த மதி உடையவர்கள் என்னுடைய மாயா சக்தியில் இருந்து வெளிவர முடியாது.

இவர்கள் சாஸ்திரங்களை அறிந்துக் கொள்ளும் சக்தியற்றவர்களாக இருந்தாலும், என்னைப் பூரண சரணாகதி செய்தார்களானால், நானே அவர்களை என்னுடைய மாயா சக்தியிலிருந்து விடுவித்து, அவர்களது மன மயக்கங்களை தெளிவித்து, மங்களங்களை நல்குகின்றேன். மதி மயக்கம் நீங்கி, மகா மோக்ஷத்தினை அடைய வேண்டும் என்ற **"ஊக்கமே"** இவர்களுக்கு சாதனையாகும்.

ஊக்கம் பூரணமாக இருந்து விட்டால், இவர்களுக்கு வேறு சாதனங்கள் தேவையில்லை. ஆக, ஊக்கம் என்ற ஒன்று மட்டுமே, மோக்ஷத்திற்கு சாதனம் ஆகின்றது. **"எவ்வாறேனும் சாதித்துக் காட்டுவேன்"** என்பதே ஊக்கத்தின் சொரூபம். ஊக்கம் உடையவன் எவ்வாறேனும் மோக்ஷத்தை அறிந்துக் கொண்ட முக்தன் ஆகிவிடுவான். அதாவது, சில தினங்களிலோ, சில மாதங்களிலோ, சில வருடங்களிலோ, அல்லது ஒரு சில ஜென்மங்களிலோ அவனவனது வைராக்கியத்தினைப் பொருத்து நிச்சயம் முக்தன் ஆகின்றான்.

புருஷார்த்தங்களான அறம், பொருள், இன்பம் வீடுபேறு என்பதை நன்கு புரிந்துகொண்டு, அதன் வழி கொண்டு செல்ல விடாமல், நாசம் செய்கின்ற அனேக தோஷங்கள் புத்தியினிடம் இருக்கின்றன.

இதனால், ஜீவர்கள் அனேகர் சம்சாரத்தில் வெந்துக் கொண்டிருக்கின்றார்கள். இவற்றில், முதலாவது நம்பிக்கை யின்மை, இரண்டாவது காம வாசனை, மூன்றாவது மந்த மதி என்று தோசங்கள் மூன்று வகைகளில் உள்ளன.

1. <u>நம்பிக்கை இன்மை</u>

குரு உபதேசத்திலும், சாஸ்திரத்திலும் அவநம்பிக்கைக் கொள்வது.

இது, **சந்தேகம், விபரீதம்** என இருவகைப்படும்.

முக்தியின் உண்மைத் தன்மையை கேள்விக்கு உட்படுத்துவது சந்தேகம் எனப்படும். முக்தி என்பது இல்லவே இல்லை என வாதிடுவது விபரீத புத்தி ஆகும். இவைகள், விடுதலைப் பெறவேண்டும் என்ற முயற்சிக்கு இடையூறாக இருக்கின்றன. இவற்றிலிருந்து விடுபட அவநம்பிக்கையை போக்கி, நம்பிக்கையை விதைக்க வேண்டும். மேலும் குரு உபதேசத்திலும், சாஸ்திரத்திலும் நம்பிக்கைக் கொண்டு, சத்தான வாதங்களில் ஈடுபடவேண்டும்.

அவநம்பிக்கைக்கு மாற்றாக நம்பிக்கை வேரூன்றும் பொழுது, விபரீத புத்தியும் விலகும்.

## 2. காம வாசனை

ஆசைகளும், விருப்பு வெறுப்புகளும் மனதில் பதிவுகளாகத் தங்கி விடுகின்றன. இவைகள், பிறவிதோறும் தொடர்ந்து வருகின்றன. இந்தப் பதிவுகள் உள்ளவரை, உலக வாழ்க்கையிலேயே நாட்டம் அதிகம் இருக்கும்.

குரு உபதேசத்திற்கோ, சாஸ்திர அறிவை வளர்த்துக் கொள்வதற்கோ ஆர்வம் உண்டாவதில்லை.

**"புற நாட்டம் அக நாட்டத்திற்கு இடையூறாகவே இருக்கும்".**

இத்தகைய மனப்பதிவுகள் ஆசைகளை அடிப்படையாக கொண்டுள்ளதால், காம வாசனை என்றழைக்கப்படுகின்றது. இது வேண்டும், அது வேண்டும் என்பதே ஆசையின் ஆணிவேராகவும் உள்ளது. இந்த ஆணிவேரை அகற்றினால் ஆசை என்ற மரம் கருகி சாய்ந்துவிடும். இதிலிருந்து விடுபட **வைராக்கியம்** மட்டுமே மருந்து.

உலக வாழ்க்கையிலுள்ள துன்பங்களை மீண்டும், மீண்டும் நினைவிற்கு கொண்டுவந்து, மனதை அதிலிருந்து வலுக்கட்டாயமாகப் பிரித்து எடுக்க வேண்டும். புறப்பற்று படிப்படியாகக் குறையும்பொழுது, அக நாட்டம் வளரும். வைராக்கியமும், அக நாட்டமுமே இத்தகைய மனப்பதிவுகளை அழிக்கவல்லன.

### 3. <u>மந்த புத்தி</u>

முற்பிறவியில் செய்த பல தீய செயல்களே புத்தியில் மந்தத்தன்மை உருவாவதற்குக் காரணம். இதுவே எல்லாப் பதிவுகளையும் விட வலுவானது. மோசமானதும்கூட. புத்தியின் மந்தத் தன்மையால் மன ஒருமைப்பாடு வருவதில்லை. மந்த புத்தி நல்ல விசயங்களை அவ்வளவு எளிதாக ஏற்பதில்லை. ஆத்ம ஞான விசயங்களை மனதில், ஒரு நிலைப் பாட்டுடன் உள்வாங்கிக் கொள்வதில்லை. அவ்வாறு, மனம் ஒன்றாத நிலையில், உண்மையையும் உணர முடிவதில்லை.

மற்ற எந்த முயற்சிகளாலும் இதைப் போக்க முடியாது.

பராபக்தியின் மூலமே, இதைப் போக்க முடியும்.

தவயோகிகளே! இத்தகைய மந்த மதி உடையவர்கள் என்னிடம் பராபக்தி கொண்டு என்னை வழிபாடு செய்தால், அவர்களது மந்தத் தன்மையை விலக்குகின்றேன்.

அவனுடைய மந்தத் தன்மையைப் பொருத்தும், பக்தி செய்யும் ஆழத்தைப் பொருத்தும், இப்பிறவியிலோ? அல்லது வரும் பிறவியிலோ? அவன் அதற்கான பலனை அடைகிறான்.

வேறு சாதனைகளைச் செய்கின்றவர்களும், சித்த சுத்தி (மனத்தூய்மை) கொண்டு, என்னை வழிபாடு செய்தால், அவர்கள் செய்கின்ற சாதனைகளின் இடையூறுகளை நீக்கி, விரைவில் அதற்கான பலன் கிடைக்கச் செய்வேன்.

தவயோகிகளே! பராபக்தியுடன் கூடிய ஊக்கமுடை யவனே சிறந்த சாதகன். அவனே விடுதலையை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு, முழு முயற்சியில் ஈடுபடுகின்றான். அவன் எல்லோராலும் பூஜிக்கத் தகுந்தவன் ஆகின்றான். சுயம் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், உடலே நான் என்ற அறியாமையே, அதை அறிய விடாமல் தடுக்கின்றது.

ஆகவே, இந்த உடலே நான் என்ற அறியாமை எண்ணத்திலிருந்து விடுபடும்பொழுது, சுத்த இருப்பான **"நான்"**

பிரகாசிக்கின்றது. இதுவே எல்லா சந்தேகங்களையும் போக்க வல்லது. இதை விட அடையத்தக்க உயர்ந்த நிலை எதுவும் இல்லை. இதைவிடுத்து, அஷ்டாவதானச் சித்துக்களோ? தூரப்பார்வையோ? வான்வழிப் பயணங்களோ? மற்ற எந்த சித்துக்களும், இந்த ஆத்மா நிஷ்டைக்கு ஈடாக மாட்டா.

சித்துக்கள் அனைத்தும் கால, தேசங்களுக்கு உட்பட்ட, உடல் சார்ந்த பிளவுபட்ட சக்தியே எனலாம். ஆனால், ஆத்ம நிலை ஒன்றே பிளவுபடாத "**முழுமை**" எனப்படுகின்றது.

இந்தச் சித்து விளையாட்டுக்கள் எல்லாம், ஆத்மாவை அறிவதில் இடையூறே! வழிதவறிய வழிப்போக்கன் போல, இறுதிவரை இவர்களால் இலக்கை அடைய முடிவதில்லை. இவர்கள், காலத்தை விரையம் செய்யும் காரியவாதிகளே ஆவர். ஆனால், தன்னை அறிந்து தன்மயமானவர்கள் எல்லா வற்றிலிருந்தும் விடுதலை பெற்று, விடுபட்டவர்கள். அப்படிப்பட்ட அவர்களுக்கு, இந்தச் சித்து விளையாடல் சக்திகளால் என்ன பயன்?

சந்தேகம், பயம், துயரம், பிறவிச்சுழல் என எல்லாவற்றிலிருந்தும் விடுவித்து, நித்ய ஆனந்தத்தில் வைக்கும் ஆத்ம ஞானமே, சுய அறிவே, உயர்ந்த நிலை. இதைவிட அடையத் தக்க உயர்ந்த நிலை எதுவும் இல்லை.

ஞான சித்தியானது மூன்று வகைப்படும்.

அவர்களின் பயிற்சியின் தரத்திற்கு ஏற்பவும், புத்தியின் நிர்மலத்தன்மைக்கு ஏற்பவும், அடையும் பலன்களில் வேறுபாடுகள் உள்ளன.

அவைகள் முறையே, **முதல் நிலை** (உத்தமன்), **நடு நிலை** (மத்திமன்) **கடை நிலை** (அதமன்) என்று மூவகைப்படும்.

வேதம் எல்லோருக்கும் பொதுவானதுதான். ஆனாலும், பயிற்சியின் காரணமாக, அதை முறையாகப் பயிற்சி செய்து நல்ல பாண்டித்யம் பெற்ற பண்டிதன், எத்தனை பணிகளை செய்து கொண்டிருந்தாலும், அவன் உள்ளம் வரிபிசகாமல், ஸ்வரங்களில் மாறுபாடு இல்லாமல் வேதத்தை இசைத்துக் கொண்டிருக்கும் இவன் உத்தமன். பணிக்காலத்தில் பணியில் கருத்தாகவும், பணி முடிந்தபின்பு வரி பிசகாமல், ஸ்வரபேத மில்லாமல் வேதத்தை இசைப்பவனாகிய இவன் மத்திமன். எப்பொழுதும் வேதத்தை இசைத்துக் கொண்டிருந்தாலும், அவனது கவனம் தவறும் பொழுது இசைப்பதிலும் தவறு நிகழும். கவனம் இருந்தால் மட்டுமே இவர்களால் தவறில்லாமல் இசைக்க முடியும். இவர்களைப் போன்றவன் அதமன்.

அதுப்போல, சித்து (அறிவு) நிலையிலும், இந்த வேறுபாடுகள் உள்ளது. எத்தனை பணிகள் செய்தாலும் சுயத்திலிருந்து நழுவாமல் இருப்பவர்கள் **உத்தம ஞானிகள்.** வேறு சிலர் வேலை செய்து கொண்டிருக்கும் நிலையில் வேலையிலும், வேலை முடிந்த பின்பு சுயத்திற்கும் திரும்புவர். இவர்கள் **மத்திம ஞானிகள்.**

வேறு சிலர் எப்பொழுதும் பயிற்சியில் இருந்தால் மட்டுமே சுயத்தில் இருக்க முடியும். பயிற்சியை விட்டவுடன் உலகை கவனிக்க ஆரம்பித்து விடுவார்கள். இவர்கள கடை நிலை ஞானிகள். அதாவது, இவர்களை **"அதம ஞானிகள்"** எனப்படும்.

உத்தம ஞானிகள் எப்போதும் விழிப்பு நிலையிலேயே இருப்பார்கள். இவர்கள் மக்களிடம் செயல்படுவதற்கு வேண்டியே, தங்களுடைய சம்ஸ்காரங்களின் முன்பதிவுகளை வெளிக் கொண்டு வருவார்கள். இவர்களுக்கு மட்டுமே தெரியும்! இது என்னுடைய விருப்பத்திற்காக, தான் நடத்துகின்ற நாடகம் என்பது. முன்பதிவுகளின் தன்மைக்கு ஏற்ப, இவர்களின் செயல்பாடுகள் எப்போதும் இருக்கும்.

இந்த உத்தம ஞானிகள் நனவு, கனவு, தூக்கம் என மூன்று நிலைகளையும் கடந்து, எப்பொழுதும் விழிப்பு நிலையிலேயே இருப்பார்கள்.

விழிப்புற்று இருக்கின்ற இவர்கள், "**நான் – நான்**" என்று பிரகாசித்துக் கொண்டிருக் கின்ற சுயத்தை எப்பொழுதும் உணர்கிறார்கள். எந்தப் பணியில் ஈடுபட்டிருந்தாலும், எங்கும், எதிலும் தன்னையே காண்பர். தனக்கு வேறாக எதையும் இவர்கள் காண்பதில்லை. காண்பான், காட்சி, காணப்படும் பொருள் இந்த மூன்றிலும் இவர்களே இருப்பார்கள்.

இவர்கள், எப்பொழுதும் தன்னிருப்பை இழக்காமல், செயல்பட்டாலும், செயல்படாமல் இருந்தாலும், ஆத்ம நிஷ்டை விலகாமல் இருப்பார்கள். இவர்களே உத்தம ஞானிகளாக மதிக்கத் தக்கவர்கள். தன்னுடைய அனுபவத்தால் மற்ற ஞானிகளின் உயர்ந்த நிலைகளை அறிந்து, அவர்களின் ஆத்ம இருப்பிடமும் தன் ஆத்மாவே என எவன் உணர்கின்றானோ? அவனே உத்தம ஞானி.

சுக துக்கங்கள், உலக விவகாரங்கள் என அனைத்தின் இருப்பிடமும், ஆத்மாவே என்று எவன் உணர்கின்றானோ? அவனே உத்தம ஞானி.

அனைத்து ஜீவர்களிலும், முக்தர்களிலும் தன் ஆத்மாவே என்று எவன் உணர்கின்றானோ? அவனே உத்தம ஞானி.

தவசீலர்களே! அப்படிப்பட்ட உத்தம ஞானியும், நானும் வேறு, வேறு அல்ல. நானே அவன். அவனே நான்.

எங்களுக்குள் எந்த வேறுபாடும் கிடையாது.

உங்கள் சந்தேகங்கள் அனைத்தையும் கலைந்து, தெளிவு பெற்று "**ஆசைகளிலிருந்து விடுபடுங்கள்**" என திரிபுரை தேவி கூறிவிட்டு, ஆகாயத்தில் ஒலித்த அசரீரியிலிருந்து மறைந்தாள்.

இராமா! வித்யா தேவியே (திரிபுரை) இதனை உபதேசித்ததால், இது "**வித்யா கீதை**" என்று அழைக்கப் படுகின்றது.

இந்த வித்யா கீதையின் உண்மைத் தன்மையை உணர்ந்து, அதை பாராயணம் செய்து வருபவர்களுக்கு, பாவங்கள் அனைத்தும் நாசமாகும். உள்ளார்ந்த ஈடுபாட்டுடன், இதை தினமும் வாசித்து வருபவர்களுக்கு வித்யா தேவி இருமைகளை அழித்து, ஞானத்தை வழங்குகின்றாள். சம்சாரக் கடலில் இருந்து கரையேற இதுவே சிறந்த தோணி.

# அத்தியாயம் – 21

## ராக்ஷஸோ பாக்கியானம்

ஸ்ரீ தத்தகுருவின் அமுத மொழிகளாக திரிபுரையின் ஐஸ்வர்யங்களையும், அவளே அனைத்து ஜீவர்களின் அந்தர் யாமியாக (ஆத்மாவாக) இருக்கின்றதை, அறிகின்ற உணர்வு பூர்வமான உபதேசங்களைக் கேட்ட பரசுராமன், அகமகிழ்ந்து மீண்டும் ஸ்ரீ தத்தகுருவின் பாதார விந்தங்களைப் பணிந்து, பகவானே! வித்யா கீதையின் வாயிலாக, வித்யா தேவியின் பெருமைகளையும், ஞானிகளின் உயரிய தன்மைகளையும், அனைத்திற்கும் அவளேதான் காரணம் என்பதையும், மிகவும் விளக்கமாக எடுத்துக் கூறினீர்கள்.

ஐயனே! எளிதில் பலன் தரக்கூடிய சுலபமான சாதனை எது? அந்த சரியான சாதனையையும், ஞானிகளை நான் எளிதில் அறிந்துக்கொள்ளுமாறு, அவர்களின் உண்மை இலக்ஷணங்களையும், எனக்கு தாங்கள் அருள் கூர்ந்து விரிவாக எடுத்துக் கூற வேண்டும்.

ஞானிகளின் குணபாவங்கள் எவை?

ஞானிகள் உடலோடு கலந்து இருக்கும் பொழுதும், உடலில் இருந்து விடுபட்டு இருக்கும் பொழுதும் அவர்கள் செயல் எப்படி இருக்கும்? பற்றுதல் இல்லாமல் உலக விவகாரங்களில் எவ்வாறு அவர்களால் ஈடுபட முடிகின்றது?

இவைகள் அனைத்தையும் பற்றி, தாங்கள் எனக்கு விரிவாக உபதேசித்து அருள வேண்டும் என்று, பரசுராமன் ஸ்ரீ தத்தகுருவை பணிவுடன் வேண்டி நின்றான்.

"இராமா! இரகசியமான ஞான சாதனை ஒன்றைக் கூறுகின்றேன் கவனமாகக் கேள்!"

இந்த ஞானத்திற்கு முக்கியமான சாதனம் திரிபுரையான பரமேஸ்வரியின் பரமமான அவளது "**அனுக்கிரஹம்**" மட்டுமே.

எவனொருவன், அந்த ஆத்ம தேவியை (அறிவை) சரணடைந்து, அவளது கருணையை வேண்டி எப்பொழுதும், தன் சுய சொரூபமான, அறிவில் (ஆத்மாவில்) இருந்து நழுவாமல் இருக்கின்றானோ? அது ஒன்றே மிகச் சிறந்த "**சாதனை**" எனப்படும்.

ஆத்ம தேவதையின் மீது, வைக்கின்ற தேவதாபக்தியே ஞானத்திற்கு மிக உயர்ந்தபக்தி சாதனையாக சாஸ்திரங்களின் வாயிலாக அவளே அறிவிக்கின்றாள். மற்ற தேவதைகளின் அபர உருவங்களை ஆலயங்களுக்குச் சென்று பணிகின்ற அனன்ய பக்தியினால் மட்டுமே, அந்த பரமேஸ்வரியை அறிய வேண்டும் என்ற ஆர்வத்தை அவர்களுக்கு உண்டாக்குகின்றது. இந்த ஆர்வம் (ஊக்கம்) அனைவருக்கும் எளிதில் வந்துவிடாது.

இகபர சுகங்களை விரும்பி, மேலான இறைவனிடம் இது வேண்டும், அது வேண்டும் எனக் கேட்பவர்களுக்கு அவைகளையும் கொடுப்பாள், ஆனால், ஞானத்தைக் கொடுக்க மாட்டாள். அழியாத பொருளான அவளை (அந்தர்யாமியை) அடைவதற்கு ஆசைப்படாமல், அற்பமாக அழியக்கூடிய பொருளுக்கு ஆசைப்பட்டு, அலைப்பாயும் மனதுடன், அனேக ஜெனங்கள் ஞானம் உண்டாகாமல், மூட மதியுடனேயே, மாயையால் மூடப்பட்ட நிலையில், சம்சார சாகரத்தில் மூழ்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் இறைவனை அறிய முடியாமல் அறியாமையிலேயே இருப்பார்கள்.

சுத்த அறிவால் பிரதிபிம்பிக்கப்பட்ட இந்த உலகம் அறியாமைத் திரையால் மூடப்பட்டுள்ளது. இந்த அறியாமைத் திரை அகலவேண்டுமானால், மனம் முதலில் ஆசையிலிருந்து விடுபட வேண்டும்.

சிலர், ஒரு பக்கம் உலகப் பொருளையும், மறுபக்கம் இறை அருளையும் பெற்றுக் கொள்ளலாம் என்றும், இரண்டும் இரண்டு பக்கங்கள் என்றும், ஒன்றில் இருந்துக் கொண்டே மற்றொரு பரிமாணத்தை உணர்வதே ஞானம் என்று அறியாமையினால் பிதற்றிக் கொண்டு, பிளவு படாத பரிபூரணத்தை, பிளவு பட்ட மனதினால் அறிய முடியாமல் அல்லல் படுகின்றார்கள்.

ஆனால், உண்மையில், ஆத்மாவை அறிய விரும்பு பவனது செயல்கள், அவனது குறிக்கோளான ஆத்ம ஞானத்திற்காக மட்டுமே உண்மையில் நடந்திருந்தால், அந்த செயல்களினால் அவனது அஹங்காரம், உடற்பற்று மற்றும் உலகப்பற்று நீங்குமே ஒழிய, உலகியல் ஆசை ஒருபொழுதும் உண்டாகாது. ஆத்மாவுடன் லயமடைந்தவனுக்கு, அவனுக்கு என்று சொந்தமாக தேவைகள் ஒன்றுமே இருக்காது.

தன்னில் தானாய், தன் சுய சொரூபத்தில் எப்பொழுதும் கரைந்திருக்கின்ற உத்தம ஞானி ஒருவனுக்கு, அவன் கேட்பதையெல்லாம் கொடுக்கின்ற கற்பக விருட்சம் எனும் அறிவு அவனிடம் உள்ளபோது, அறியாமையில் அது வேண்டும், இது வேண்டும் என்று, அலைப்பாயும் மனம் மட்டும் அவனிடம் இருக்காது. இதுவே, அந்த அறிவை அறிந்த ஞானிகளின் உண்மை நிலை.

ஆனால், ஆத்ம ஞானத்தை அறியாத பாமர மக்கள் பராபக்தியைக் கொண்டு, அந்த பரம்பொருளை எந்த உருவத்தில் வழிபட்டாலும், அவர்களது பக்திக்குப் பலனாக, அவளே அவர்களை சம்சார சாகரத்திலிருந்து கரை சேர்க்கின்றாள்.

ஆனால், இந்த பாமர மக்களோ? அந்த இறை உருவங்களை பராபக்தி செய்யாமல், அபராபக்தி கொண்டு சுய நலத்துடன், இவர்களது கஷ்ட, நஷ்டங்களை தீர்த்துக் கொடுக்கக்கூடிய கற்கடவுளாக மட்டுமே காணுகின்றார்களே தவிர, எங்கும், எதிலும் வியாபித்து பரவியுள்ள அறிவு வியாபக ஆகாயத்தைப் போன்ற, அவளது காருண்யத்தை காணும் ஒவ்வொன்றிலும் அறியாமல், அவைகளுக்கு வேறாக எங்கேயோ தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதாவது, கற் சிலைகளிலே கடவுளைக் காணுகின்ற இவர்கள், கண்ணிற்கு எதிரே இருக்கின்ற காணப்படுகின்ற எல்லா ஜீவர்களில் உடலுக்குள்ளே ஒரு அறிவு தாவரத்தில் தொடங்கி, ஆறு அறிவு படைத்த மனிதன் வரை, அந்த ஒரே அறிவு உயிராகவும் உணர்வாகவும் வியாபித்து இருப்பதைக் காண மறுக்கின்றார்கள். இதுவே, இவர்களது மடமை.

இந்த அறியாமை நீங்கி, இவர்கள் சாதுக்களையும், சத்தியசீலர்களையும், முற்றும் துறந்த முனிவர்களையும், சந்நியாசிகளையும், என்று கடவுளாகக் காண்கின்றார்களோ? அப்பொழுதே, இவர்களுக்கு ஞான வாசல், அவளது கிருபை எனும் கருணையினால் திறக்கப்படுகின்றது. இவ்வாறு, திறக்கப்பட்ட ஞான வாசலின் வழியாக அவர்களும் முக்தியை எளிதாக அடைகின்றார்கள்.

எங்கும், எதிலும் நிறைந்துள்ள ஒரே சித்தை எல்லாவற்றிலும் இருப்புக்கொண்டுள்ள சத் என்பதை அறியாத அறியாமை ஜெனங்கள் ஆசைகள், கோபங்கள், கருமித்தனம் போன்றவைகளினால், அரிதான மனிதப்பிறவியின் மகத்துவம் புரியாமல், தங்களுக்குத் தாங்களே நரகத்திற்கு பாதைப் போட்டுக் கொள்கிறார்கள். அதனால், இவர்களால் ஆத்மாவை அறிய முடிவதில்லை.

வெளிமுகப் பார்வையில் உள்ளவர்கள் பெரும்பாலும், இருமைகளுடன் கூடிய வேற்றுமைகளால் (பேதத்தால்) சூழப்பட்டிருப்பதால், ஒன்றேயான அந்த ஏக அறிவை (ஆத்மாவை) அவர்களால் அறிந்துக் கொள்ள முடிவதில்லை. எவன் ஒருவன் வெளியே பார்ப்பதை குறைத்துக் கொண்டு, தன்னுள்ளே அகத்தில் மனதை விசாரித்து, ஏற்றி வைத்துக் கொண்ட ஏராளமான அறியாமைகளை எல்லாம் உதறி

விடுகின்றானோ? அவனே ஆத்மதேவியை மிக எளிதாக அறிந்துக் கொள்ள முடியும். புறப்பார்வை இருக்கின்றவரை, அகப்பார்வை உண்டாகாது. அகப்பார்வை உண்டாகாமல், ஆத்மாவை அறிய முடியாது.

சிலர் பக்தியினால், இறைவனை அடைய விரும்பி உலக வாழ்க்கையைத் துறந்து ஒதுங்கி இருத்தல், தியானம் செய்தல் என வேறு பல சாதனைகளை சரியாகச் செய்துக் கொண்டிருந்தாலும்கூட, ஆத்ம தத்துவத்தை புத்தி பூர்வமாக உணர்ந்தவர்கள் கூறக்கேட்டு, அதையும் உள்வாங்கிக் கொண்டு, மனதினால், விசாரணை செய்து, அத்துடன் இவர்கள் மேற்கொள்ளும் பக்தியினாலோ? தியானத்தினாலோ? விடைக் காண முயன்றால், இவர்களது மனமும் அறியமையை விடுத்து, அந்த அறிவில், ஆத்மாவில் நின்று, அவர்களது திடமான பாவனையில் அவ்வடிவமாகவே ஆகின்றது.

அதன்பிறகு, இவர்களும் எங்கும், எதிலும் அந்த அறிவை அறிந்து, அதை அனைத்திலும் தியானிக்கின்ற பொழுது, இவர்களது சித்தமும் நாளடைவில் சுத்த சிதாத்ம வடிவமாகி, காணும் அனைத்து காட்சியிலும், அந்த சித்தையே (ஆத்மாவையே) காண்கின்றார்கள்.

இந்த ஒன்றேயான பூரண சித்தை அறிந்த சாட்சி பாவனையானது, இவர்களையும் சுக, துக்கங்களில் இருந்து விடுவித்து, மிகச் சிறந்த ஜீவன் முக்த ஞானியர்களாக மலர வைக்கின்றது.

ஆதலால், பராபக்தியின் வாயிலாக, உண்டான உன்னத வழி மூலம், உயரிய ஆத்ம விசார உபதேசங்களை சரியான சத்குருவின் மூலம் காதுகளால் கேட்டு, அதைப்பற்றி மனதினால் சிந்தித்து, புத்தியினால் விசாரித்து, விவேகத்தினால் விழித்துக் கொண்டு, சித்தத்தினால், சதா அந்த அறிவை தியானிக் கின்றவர்கள் இறுதியில், அந்த அறிவிலேயே ஒன்றாக நிலைப்பெற்று விடுகின்றார்கள். இதுவே, **சிரவணம், மனனம்** மற்றும் **நிதித்யாஸனம்** ஆகும்.

ஆகையால், உயரிய பக்தியாகிய அனன்ய பக்தியை செலுத்தி, புறத்தில் நாட்டம் கொண்ட மனதை அகத்தில் திருப்பி, பராபக்தியின் மூலம், ஆத்ம தத்துவத்தை சிரவண, மனன, நிதித்யாஸனம் மூலமாக சதா சிந்தித்து வருவதும் மிகச் சிறந்த சாதனமாகும். அவ்வாறு, புறத்தில் ஆத்ம விசாரம் செய்து, நாளடைவில் வெளி விவகாரங்களுக்குச் செல்கின்ற மனதை உள்ளே திரும்ப வைத்து, உள்விசாரம் செய்து, ஆத்ம அனுபூதியை இவர்களாலும் அனுபவிக்கவும் முடியும்.

இதைத்தவிர ஆத்மாவை அறிந்து, ஆத்ம ஞானத்தில் நிலைக் கொள்வதற்கு வேறு வழியே கிடையாது. பிற சாதனங்கள் அனைத்துமே சித்த சுத்திக்கும், உடல் வலிமைக்கும் மட்டுமே பயன்படுகின்றது. இதனால் இவர்கள் ஆத்மாவை அறிய முடியாது".

"இராமா! ஞானிகளது இலக்ஷணத்தை அறிவது மிகவும் கடினம். ஏனெனில் அவர்கள் வெளித் தோற்றத்தை வைத்து, அவர்களது நிலையை நிர்ணயம் செய்ய முடியாது. மேலும், அவர்களைப் பார்த்தோ, பேசியோ கூட அவர்களைப் புரிந்துக் கொள்ள முடியாது. மனோ, வாக்குக்கு எட்டாத நிலையில் அவர்கள் இருப்பதால், அவர்கள் நிலையை வார்த்தைகளினால் விவரிக்க முடியாது.

இனிப்பின் சுவையை சுவைத்தவன் மட்டுமே, அந்த இனிப்பு எப்படிப்பட்டது? என்பதை அறிவான். அதுப்போல, அவர்கள் இருக்கின்ற உண்மை நிலையை அவர்கள் மட்டுமே அறிவார்கள்.

மற்றவர்களால், அறிய முடியாத ஞானிகளின் நிலையை எறும்பின் பாதையை மற்றொரு எறும்பு அறிந்து கொண்டு, அந்த பாதையில் செல்வதுப்போன்று, மற்றொரு ஞானியினால் மட்டுமே, எளிதாக அவர்களை அறிந்துக் கொள்ள முடியும்.

சிலர் மன அழுக்குகள் அகலாமல், ஞானிகள் போன்று புறத்தில் வேடமிட்டாலும், அவர்கள் அகத்தில் அஞ்ஞானிகளே. அவர்களிடம் ஆத்ம சொரூபம் வெளிப்படாது.

மான – அவமானம், இலாபம் – நஷ்டம், வெற்றி – தோல்வி போன்ற எந்த இருமைகளிலும் பாதிக்கப் படாதவர்களே உத்தம ஞானிகள் ஆவார்கள்.

இவர்கள் மறைபொருளை மறைக்காமல் மற்றவர்களுக்கு உரைப்பதிலும், உற்சாகத்துடன் சத்சங்கங்களில் ஈடுபடுவதும் இவர்களது இயல்பாக இருக்கும். இவர்கள் எத்தகைய ஆபத்தான, சிக்கலான சூழ்நிலையிலும் தங்கள் அமைதியை இழக்கவே மாட்டார்கள். இவர்கள் எப்பொழுதும் ஆனந்தமாக தன் சொரூபத்தில் நிலைத்து இருப்பார்கள். இவ்வாறு, உத்தம ஞானிகள் போன்று, ஒவ்வொரு சாதகனும் தன்னிடத்திலேயே இந்த தகுதியைத்தேட வேண்டும்.

இதில், எந்த தகுதி குறைவாக இருக்கின்றதோ? அதை அனுபவத்தில் அறிந்து, அதனை நிறைவு செய்ய தீவிரமாக முயற்சிக்க வேண்டும். உத்தம ஞானியைப் போன்று உயர, ஒவ்வொரு ஆத்ம சாதகர்களும் அதீத ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் முயற்சிக்க வேண்டும்.

இதைவிடுத்து, அவர் உண்மை ஞானியா? அல்லது போலியா? என்று பரிசோதித்து, அவர்களின் உண்மைத் தன்மையை அறிவதினால், இவர்களுக்கு எந்தப் பயனும் உண்டாகப்போவது கிடையாது. தன்னிடமே தன்னை சுயமாக விசாரித்து, தன்னுள்ளே தன்னைப் பரிசோதித்து, தன் உண்மை நிலையை உணர்ந்து கொண்டவர்களே, மற்றவர்களின் உண்மை நிலையை அறியக் கூடிய தகுதி உடையவர்களாக ஆகின்றார்கள்.

மீண்டும், மீண்டும் தன்னை சுயப் பரிசோதனைக்கு உட்படுத்தும்போது மட்டுமே, இவர்கள் தன்னை உண்மையில் அறிகின்றனர். இத்தகைய, இந்த சுயப் பரிசோதனையில், தன் உண்மை சொரூபத்தையும் தரிசிக்கின்றனர். இதுவே, ஒவ்வொருவரும் தங்களை, ஞானிகளாக தங்களை உயர்த்திக் கொள்ளக்கூடிய வழி முறையாகும். ஞானத்தில் கடை நிலையில் இருப்பவர்கள் அதாவது, (அதம ஞானிகள்), அஞ்ஞானிகளைப் போன்றே, உடலைப் பேணுவதில், அதிக அக்கறைக் காட்டுவர்.

இவர்கள், உள் விசாரணை செய்யும் வரை அமைதியில் இருப்பர். விசாரம் முடிந்து வெளி உலகத் தொடர்புக்கு வந்தவுடன், உடல் உணர்வு வந்து, மற்றவர்களைப் போன்றே ஆசைவயப்படுகின்றனர்.

அவைகளினால், சுக, துக்கங்களை அனுபவிக்கின்றனர். இவர்கள் நிர்விகல்ப சமாதியில் முழுமையான தேர்ச்சி பெறாததும், சகஜ சமாதிக்கு வராமல் இருப்பதுவும், மிக முக்கியக் காரணமாகும். சமாதியில் தேர்ச்சி பெற்றவர்கள் வெளி தொடர்புகளில் ஈடுபட்டுக்கொண்டே இருந்தாலும், தன் இருப்பை எப்போதும் உணர்ந்துக் கொண்டே இருப்பதினால், இவர்களது மனதில் இவ்வாறு இடைவெளியில் ஏற்படுகின்ற சலனங்க ளினாலும், செயல்பாடுகளினாலும் பந்தப்படுத்து வதில்லை.

அது எப்படியெனில், எரிந்து சாம்பலான கயிறு, பார்ப்பதற்கு கயிற்றின் தோற்றத்தில் இருந்தாலும், அது கட்டுவதற்கு இனி பயன்படாததுப் போல, ஞானிகளிடமும் செயலின் தோற்றம் இருந்தாலும், சித் அனுபத்தில் இருக்கின்ற இவர்களது செயல்கள் (எரிந்த கயிறு போல) இவர்களை பந்தப்படுத்துவதில்லை. மத்திம ஞானிகள் உடலுடன் தங்களைச் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை. உடலே நான் எனத் தன்னைத் தவறாக, அடையாளப் படுத்திக்கொள்வதே அஞ்ஞானம்.

உயர் நிலை ஞானிகள் தங்களை உடலில் இருந்து விடுவித்துக் கொண்டவர்கள். நீண்ட பயிற்சியில் அவர்கள் தங்கள் மனதை அழித்து, எப்பொழுதும் தன் சுயத்தில் இருப்பதால், செயலில் செயலற்றவர்கள் ஆவர்.

உத்தம ஞானிகளுக்கு உடல் உணர்வு இருப்பதில்லை. உடலைக் கடந்த ஆத்ம நிஷ்டையில் எப்பொழுதும் சகஜமாக இருப்பதால், இவர்களுக்கு உடல் இருப்பதே தெரிவதில்லை. இவர்கள் தன்னில் ஆழ்ந்து சகஜ சமாதியில் இருக்கின்ற காரணத்தினால், அமைதியும், ஆர்ப்பாட்டமும் நிறைந்துள்ள உலக விவகாரங்களை, இருமைகளற்ற ஒன்று போலவே கருதுவார்கள்.

**"விறகில் நெருப்பு இருக்கும், ஆனால், நெருப்பில் விறகு இருக்காது. அதுப்போல, கருமத்தில் ஞானிகள் இருப்பர். ஆனால், ஞானிகளிடத்தில் கருமம் இருப்பதில்லை".**

"இராமா! இரண்டு ஞானிகளுக்கு இடையே நடந்த சுவாரஸ்யமான உரையாடல்களை உனக்கு விளக்கு கின்றேன். கேட்பாயாக.

முன்னொரு காலத்தில் விபாசை நதி தீரத்தில் அமிருதபுரி என்ற நகரத்தை இரத்னாங்கதன் என்ற பெயருடைய ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு உருக்மாங்கதன், ஹேமாங்கதன் என்ற இரண்டு புத்திரர்கள் இருந்தனர்.

இவர்களில் உருக்மாங்கதன் சாஸ்திரங்களில் மிகத் தேர்ச்சியுடையவனாகவும், ஹேமாங்கதன் அனுபவ ஞானத்தில் உயர்ந்தவனாக, ஞானிகளில் உத்தமனாகவும் இருந்தான்.

ஒரு வசந்த காலத்தில், இவ்விருவரும் வேட்டையாடும் பொருட்டு எல்லாச் சேனைகளுடனும், ஒரு பெரிய வனத்திற்கு வேட்டையாடச் சென்றனர். அங்கு வெகுதூரம் இவர்கள் சென்றுவிட்டதால் களைப்படைந்து, தன்னுடைய தாகம் தீர்க்க உருக்மாங்கதன் என்பவன், நீர் அருந்த அருகில் உள்ள ஒரு ஏரிக் கரைக்குச் சென்றான்.

அங்கு எல்லா சாஸ்திரங்களின் சாரத்தையும் கிரகித்துக் கொண்டவனான ஒரு பிரம்மராக்ஷதன், அந்த ஏரிக்கரையின் பக்கத்தில் இருந்த, ஒரு ஆலமரத்தில் அமர்ந்துக் கொண்டு, அந்த பகுதிகளுக்கு வருகின்ற வித்வான்களுடன் வாதம் புரிந்து, தோல்வி அடைபவர்களை தன் பசிக்கு இரையாக்கிக் கொண்டு வந்தான்.

அன்றும், அதுப்போல, அந்த ஏரிக்கரைக்கு நீர் அருந்த சென்ற உருக்மாங்கதனை, அங்கு இருந்த பிரம்மராக்ஷதன் தடுத்து பண்டிதனே நில்! என்னுடைய கேள்விகளுக்கு பதில் கூறிவிட்டு, தாங்கள் தாரளமாக இந்த ஏரியில் நீர் அருந்தலாம் என்றான்.

தாங்கள் என்னுடைய கேள்விகளுக்கு சரியாக பதில்களைக்கூறி, வெற்றிபெற்றால், நான் தங்களை நீர் அருந்த அனுமதிப்பேன். பதில்களைக்கூறாமல் தோல்வியுற்றால், நான் உங்களை உணவாக உட்கொள்வேன் சம்மதமா? என்று உருக்மாங்கதனை நோக்கித் தடுத்தான்.

சாஸ்திரத்தில் பண்டிதனான இந்த உருக்மாங்கதனும், அந்த பிரம்மராக்ஷதனை அற்பமாக நினைத்து, உன் கேள்விகளைக் கேள்! என்று ஆணவத்துடன் கூற, பிரம்மராக்ஷதனும் கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தான்.

அவனது ஆத்ம அனுபவத்தினால் உண்டான உள்ளார்ந்த ஆழமான கேள்விகளுக்கு இவனால், பதில் கூற முடியாமல், தன் தோல்வியை அந்த பிரம்ம ராக்ஷதனிடம் ஒப்புக் கொண்டான்.

அந்த நிலையில், நீர் அருந்தச் சென்ற உருக்மாங்கதனை வெகு நேரமாகக் காணவில்லையே என்று தேடிக்கொண்டு வந்த, ஹேமாங்கதன் அந்த ஏரிக்கரையில் ஒரு பிரம்மராக்ஷதன் தன் சகோதரனைப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். உடனே, ஹேமாங்கதன் அந்த பிரம்மராக்ஷதன் அருகில் சென்று, தன் சகோதரனை விடுவிக்கும்படி வேண்டினான்.

அதற்கு பிரம்மராக்ஷதன் "இராஜகுமாரா! உன் சகோதரன் என்னிடம் வாதிட்டு தோற்றுப் போனான். எங்கள் இருவரின் ஒப்பந்தப்படி, நான் தோற்றால் அவனை நீர் அருந்த அனுமதிப்பதாகவும், அவன் தோற்றால் எனக்கு உணவாக வேண்டும் என்பதும் நிபந்தனை. அவன் தோற்றதால் அவனை விட முடியாது". என்று கூறினான்.



ஏ ராக்சதனே! அவனுக்கு பதிலாக வேறு பொருட்களைத் தருகின்றேன். அவனை விட்டு விடு! என்று ஹேமாங்கதன் வேண்டினான்.

"இராஜகுமாரா நான் பசியாக இருக்கின்றேன். உணவைத் தவிர, அதற்கு ஈடான வேறு எந்தப் பொருளை நீ கொடுத்தாலும், அதனால் எனக்குப் பசி தீராது. இருப்பினும், நீ! இவ்வளவுதூரம் வேண்டிக் கேட்பதினால், உனக்கு ஒரு சந்தர்பம் தருகின்றேன்.

நான் கேட்கும் கேள்விகளுக்கு, நீயாவது சரியாகப் பதில்கலைக் கூறிவிட்டால், உங்கள் இருவரையுமே விட்டு விடுகின்றேன். நீயும் பதில் கூறத்தவறினால், நீங்கள் இருவருமே எனக்கு உணவாக வேண்டியது வரும். சம்மதமா? என்று ஹேமாங்கதனை நோக்கி அந்த பிரம்மராக்ஷதன் கேட்டான்.

பிரம்மராக்ஷதா! உன் நிபந்தனையை நான் ஏற்கின்றேன். கேள்விகளுக்கு விடையளிக்கத் தயாராக உள்ளேன். கேள்விகளைக் கேள்! என்று ஹேமாங்கதன் பதில் கூறத் தயாரானான்.

## இரண்டு ஞானிகளின் கேள்வி – பதில்கள்.

=========================================

**பிரம்மராக்ஷதன்:–** ஆகாயத்தை விட விரிந்து, பரந்தது எது? பரமாணுவிலும், நுட்பமானது எது?

**ஹேமாங்கதன்:–** சித்து (அறிவு) ஒன்றே ஆகாயத்தை விட, பரந்து, விரிந்து உள்ளது. அதே சித்து அணுவுக்குள் அணுவாக, மிக நுட்பமாகவும் அடங்கியுள்ளது.

**பிரம்மராக்ஷதன்:–** ஒன்றே அண்டசராசங்களில் பரந்து விரிந்ததாகவும், மிக நுட்பமாகவும் எவ்வாறு இருக்க முடியும்?

**ஹேமாங்கதன்:–** அனைத்திற்கு அந்த ஒன்றே காரணமாக இருப்பதால், காரியம் கருதி விரிவடைகின்றது. புரிந்துக் கொள்ள முடியாதவர்களுக்கு மிகவும் நுட்பமாக இருக்கின்றது.

**பிரம்மராக்ஷதன்:–** அப்படியானால் அதன் வடிவம் யாது?

**ஹேமாங்கதன்:–** தன்னில் தானாக ஸ்புரிக்கின்ற ஆத்ம சொரூபமே அதன் வடிவம்.

**பிரம்மராக்ஷதன்:–** ஸ்புரிக்கின்றது என்றால் என்ன?

**ஹேமாங்கதன்:–** "நான் – நான்" என்று, சதா தன்னை உணர்ந்து கொண்டிருப்பதையே ஸ்புரிக்கின்றது எனப்படும்.

**பிரம்மராக்ஷதன்:–** ஆத்மா எது?

**ஹேமாங்கதன்:–** சுயமே ஆத்மா.

**பிரம்மராக்ஷதன்:–** அப்படியானால், சித்தினை எப்படி அனுபவிப்பது? அந்த அனுபவத்தால் கிடைக்கும் பலன் என்ன?

**ஹேமாங்கதன்:–** புத்தியே சித்து அனுபவமாகும் இடம்.

இந்த புத்தியைக் கொண்டு புறக்காட்சிகளை விட்டு, தன் சுயத்தில் அடங்குவதே அனுபவம் ஆகும். இந்த அனுபவத்தினால் ஏகாக்கிரகம் (அனைத்தும் ஒன்றே) உண்டாகின்றது. இதனால், பிறவி அறுபடுவதே பலன் ஆகும்.

**பிரம்மராக்ஷதன்:–** உன்னால் கூறப்பட்ட புத்தி என்பது என்ன? எகாக்கிரகம் எவ்விதம் இருக்கும்? பிறப்பு என்றால் என்ன?

**ஹேமாங்கதன்:–** அறியாமையால் சூழப்பட்டு வெளிப்படாமல் இருக்கின்ற அறிவே, **புத்தி** எனப்படும்.

தன்னில் தானாய் அனைத்தையும் காண்பதே எகாக்கிரகம்.

உடலின் மீது உண்டாகின்ற பற்றினால் **"நான்"** என்ற அஹங்காரமே பிறப்புக்கு காரணமாகின்றது.

**பிரம்மராக்ஷதன்:–** எதனால் எல்லோராலும் சித்து அனுபவிக்கப்படவில்லை? எவ்விதம் அதனை அடையலாம்? பிறப்பு எவ்வாறு உண்டாயிற்று?

**ஹேமாங்கதன்:–** அறியாமை இருக்கின்றவரை, சித்து (அறிவு) அனுபவமாகாது. சுயமே சுயத்தை அறிகின்றது. அதனை அறிவது மட்டுமே சாத்தியம்.

தன்னிடம் இல்லாத ஒன்றை மட்டுமே தேடி அடைய வேண்டும். இது தன்னுடைய சுய சொரூபம். எனவே, அறிந்து கொண்டால் போதும். அடைய வேண்டியதில்லை.

நான் செய்கின்றேன் என்ற எண்ணமே பிறப்பை உண்டாக்குகின்றது.

**பிரம்மராக்ஷதன்:–** அறியாமை என்றால் என்ன?

**ஹேமாங்கதன்:–** ஒன்றை மற்றொன்றாக கருதுவது அறியாமை.

**பிரம்மராக்ஷதன்:–** சுயம் என்றால் என்ன?

ஹேமாங்கதன்:– தன்னைத் தன்னால் மட்டுமே அறிவது சுயம்.

**பிரம்மராக்ஷதன்:–** நான் செய்கின்றேன் என்ற எண்ணம் எதனால் வருகின்றது?

**ஹேமாங்கதன்:–** முன்வினை என்ற வாசனைப் பதிவுகளே "நான் செய்கின்றேன்" என்ற அபிமானத்தை உண்டாக்குகின்றது.

**பிரம்மராக்ஷதன்:–** அறியாமை எவ்வாறு அகலும்? அதற்கு எது சாதனம்? இந்த அறியாமைக்கு என்ன காரணம்?

**ஹேமாங்கதன்:–** விசாரம் மட்டுமே அறியாமையை வேறோடு அகற்றும். வைராக்கியமே சாதனம். தவறான பார்வையே (தோஷ திருஷ்டி) அறியாமைக்கு காரணம்.

**பிரம்மராக்ஷதன்:–** விசாரம் என்றால் என்ன? வைராக்கியம் என்று கூறப்படுவது யாது? தோஷ திருஷ்டி என்று எதைக் கூறுவது?

**ஹேமாங்கதன்:–** காண்பான், காட்சி, காணப்படும் பொருள். இதன் உண்மைத் தன்மையை அறிய முயற்சிப்பதே விசாரம். காட்சிப் பொருட்களில் இருந்து ஒதுங்குவதே வைராக்கியம்.

மனப்பதிவுகளான சம்ஸ்காரங்கள் காண்கின்ற காட்சிகளின் உண்மைத் தன்மையை அறிய விடாமல் மறைக்கின்றது. அதாவது, உலகத்தை உண்மை என்று நம்புகின்றது. அதனால், மனம் துக்கம் அடைகின்றது. இதுவே தோஷ திருஷ்டி.

**பிரம்மராக்ஷதன்:–** விசாரம், வைராக்கியம் இவைகளை எப்படி அடைவது? தோஷ திருஷ்டி நீங்க என்ன செய்ய வேண்டும்?

**ஹேமாங்கதன்:–** தேவியின் அனுக்கிரகத்தால் மட்டுமே விசாரமும், வைராக்கியமும் உண்டாக முடியும். அதற்கு அவள் மீது பராபக்தி உண்டாக வேண்டும்.

இந்த பராபக்தியை அறிந்து கொள்ள, சாது சங்கமம் உண்டாக வேண்டும். சத்தை அறிந்த சாதுக்களினால் மட்டுமே தோஷ திருஷ்டியை நீக்க முடியும்.

**பிரம்மராக்ஷதன்:–** தேவி என்பவள் யார்? பராபக்தி என்றால் என்ன? சத்துக்கள் எவ்விதம் இருப்பார்கள்?

**ஹேமாங்கதன்:–** இந்த ஜகத்காரணியே தேவி.

பரத்தை அறிந்து அன்பு செய்வதே பராபக்தி.

(ஆத்மாவை அறிந்து அதை அன்புசெய்வதே பக்தி).

சாந்தம், அன்பு, கருணை, அருள் கொண்டவர்களே சத்தை அறிந்த சாதுக்கள்.

**பிரம்மராக்ஷதன்:–** உலகத்தில் எந்த நேரமும் பயப்படுகின்றவன் யார்? எந்நேரமும் துக்கப்படுகின்றவன் யார்? எப்பொழுதும் ஏழ்மையிலேயே இருப்பவன் யார்?

**ஹேமாங்கதன்:–** பணக்காரன் எப்பொழுதும் பயத்திலேயே இருக்கின்றான்.

பெரிய குடும்பத்தை உண்டாக்கிக் கொண்டவன் துக்கத்திலேயே இருக்கின்றான். அதிக ஆசை உடையவன் எப்பொழுதும் ஏழையாகவே இருக்கின்றான்.

**பிரம்மராக்ஷதன்:–** உலகத்தில் பயம் இல்லாதவன் யார்? துக்கமில்லாதவன் எவன்? ஏழ்மை இல்லாதவன் யார்?

**ஹேமாங்கதன்:–** பற்றில்லாதவனே பயம் இல்லாதவன்.

மனதை ஜெயித்தவனே துக்கமில்லாதவன்.

தன்னை அறிந்து ஆனந்தத்தில் இருப்பவனே ஏழ்மை இல்லாதவன்.

**பிரம்மராக்ஷதன்:–** உலகில் யாரை அறிவது கடினம்? யார் உடல் இல்லாதவனாக இருக்கின்றான்? செயலற்ற செயல் எது?

**ஹேமாங்கதன்:–** ஜீவன் முக்தன் மட்டுமே.

விடுதலை அடைந்தவனை அறிவது கடினம். இவர்கள் உத்தம ஞானிகளாக இருப்பதினால், உடலில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டவர்கள்.

இவர்களது உலக விவகாரங்கள் அனைத்தும் அவர்களிடம் பதிவாக மனம் இல்லாத காரணத்தினால் பந்தம் உண்டாவதில்லை. ஆதலால், இவர்களது காரியங்கள் அனைத்துமே செயலற்ற செயல் ஆகும்.

**பிரம்மராக்ஷதன்:–** உலகத்தில் உள்ளது எது? இல்லாதது எது? எது மிகவும் கூடாதது?

**ஹேமாங்கதன்:–** இருப்பு மட்டுமே உள்ளது.

காட்சியில் காண்பது எதுவுமே இல்லை.

உலக விவகாரங்கள் கூடாதது. இல்லாத உலகத்தில் விவகாரம் செய்வது கூடாது.

**(பிரம்மம் சத்தியம்! ஜகத் மித்யா!)***

**பிரம்மராக்ஷதன்:–** இராஜகுமாரா! இந்த பிரம்மராக்ஷத உருவம் எனக்கு ஒரு சாபத்தால் வந்தது. அனைத்து சாஸ்திரங்களிலும் தேர்ச்சி பெற்ற பண்டிதனே நான்.

அஹங்காரத்தினால், அனேக பண்டிதர்களை வாதிட்டு வென்று வந்ததில், ஒரு நாள் நான் அஸ்டக முனிவரிடம் குதர்க்க

வாதம் செய்து, அவரை அவமதித்தேன். அதைக்கண்டு கோபம் கொண்ட அவரது சீடன் "**நீ பிரம்மராக்ஷதன் ஆகக்கடவாய்**" என்று சாபம் இட்டு விட்டான்.

அதன்பிறகு, நான் அஸ்டக முனியைப் பணிந்து அவரிடம் மன்னிப்பு கேட்டு மன்றாடினேன். அவரும் என்னை விரோதியாக பாராமல், என்னை மன்னித்து, நீ என்னிடம் வாதிட்ட கேள்விகளுக்கு, எவன் ஒருவன் சரியான பதில்களைக் கூறுகின்றானோ? அப்பொழுதே, உன் சாபம் விமோசனம் ஆகும் என்று கூறி, ஆசி வழங்கி விட்டு சென்று விட்டார்.

ஆதலால், நான் அன்று முதல் இன்று வரை இந்த ஏரிக்கரையில் வருவோர், போவோரிடம் எல்லாம் இது போன்று கேள்விகளைக் கேட்டு வாதம் புரிந்து, சாப விமோசனத்திற்காக இவ்வாறு செய்து வருகின்றேன். இதுவரை வந்தவர்கள் அனைவருமே ஆத்மாவை சாஸ்திரங்களின் வாயிலாக அறிந்து வைத்திருந்தனரே தவிர, ஒருவர்கூட உங்களைப் போன்ற ஆத்ம அனுபவத்தை அடைந்தவர்கள் இல்லை.

இன்று தாங்கள் மட்டுமே என்னுடைய அனைத்து கேள்விகளுக்கும், அனுபவத்தில் அறிந்த சரியான

விடைகளைக் கூறியதினால், என்னுடை சாபம் நீங்கி பழைய மனித உடல் இப்பொழுது மீண்டும் எனக்கு கிடைத்து விட்டது.

உத்தம ஞானியான உங்களை வணங்குகின்றேன்.

உங்கள் சகோதரரை தாராளமாக அழைத்துச் செல்லுங்கள். இளவரசே! எனக்கு மனித உடல் கிடைக்கச் செய்தமைக்கு என்றும் நன்றியுள்ளவனாக இருப்பேன். எனக்கு மேலும் சில சந்தேகங்கள் இருக்கின்றன. அவைகளையும் தங்கள் வாயிலாகவே நான் தீர்த்துக் கொள்ள விரும்புகின்றேன்.

இளவரசர்களே! நீங்கள் இருவரும் முதலில் அந்த ஏரியில் நீரை அருந்தி, தாகம் தீர்த்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு, நான் என்னுடைய சந்தேகங்களை கேட்கின்றேன்.

# அத்தியாயம் – 22

## ஞானமே எல்லை

"இளவரசே! அஸ்டக முனிவரிடம் இருந்து, பரமாத்ம தத்துவத்தை முதலில் அறிந்து கொண்டேன். தற்பொழுது, தங்கள் விளக்கத்தின் மூலம், மேலும் தெளிவு பெற்றேன். ஆனாலும், இன்னும் சில சந்தேகங்கள் உள்ளன.

இவ்வளவு ஞானத் தெளிவுடன் உத்தம ஞானியாக இருக்கின்ற தாங்கள், எப்படி உலக விவகாரங்களில் ஈடுபட முடிகின்றது?

இளவரசனாகவும் இருக்கின்றீர், வேட்டையாடவும் வருகின்றீர். உத்தம ஞானியாகவும் இருக்கின்றீர். எவ்வாறு இருளும், ஒளியும் ஒரே இடத்தில் ஒன்றாய் இருக்க முடியும்? தயவு செய்து விளக்க வேண்டும்".

"பண்டிதரே!, உமது மன மயக்கம் இன்னும் உங்களை விட்டு முழுமையாக நீங்கவில்லை. உலக விவகாரங்களில் ஈடுபடுவதால், ஆத்ம ஞானம் பாதிக்கப்படுமானால், அது கனவில் தோன்றி மறைவது போன்றல்லவா ஆகிவிடும்? அவ்வாறு ஆகிவிட்டால், புருஷார்த்தம் (அறம், பொருள், இன்பம், வீடு) என்ற சாஸ்திரத்தின் முக்கிய அம்சமே பாதிக்கப்பட்டு விடுமல்லவா? கனவு போன்று, இதுவும் பொய் ஆகிவிடுமே?

உலக விவகாரங்கள் அனைத்தும் ஞான விழிப்பை அடிப்படையாகக் கொண்டே நடை பெறுகின்றது. எதனிடம் இருந்து இந்த உலகம் தோன்றியதோ? அதுவே, "ஞானம்" (அறிவு) எனப்படும்.

மனதின் சங்கற்பங்களினாலேயே, உலக விவகாரங்கள் நடைபெறுகின்றது. ஞானத்தினால் யாவும் விளங்குகின்றன. இந்த சங்கற்பங்களை ஒழித்துச் சொரூபத்தை புத்தியினால் அறிந்தவன் பந்தத்திலிருந்து விடுபட்டு முக்தன் ஆகின்றான்".

இதை இன்னும் சற்று புரியும்படி கூறுகின்றேன். கவனமாகக் கேளுங்கள்.

நீங்கள் ஒரு கண்ணாடியில் உங்கள் உருவத்தைப் பார்க்கின்றீர்கள். அந்தக் கண்ணாடியிலேயே உங்கள் உருவம் அடங்கியுள்ளதை உங்களால் அறிய முடிகின்றது அல்லவா?

அதுப்போல, அறிவின் வாயிலாக இந்த உலகத்தைப் பார்க்கின்றீகள். அதே அறிவினால் இந்த உலகம் அடங்கியுள்ளது. இதை அறிந்து கொள்வதே ஞானம். மனதில் பதிந்துள்ள சங்கற்பத்தினாலேயே, உலக விவகாரங்கள் நடைபெறுகின்றன. எண்ணத்தை முற்றிலும் அழித்தவனிடம் சங்கற்பங்கள் இருப்பதில்லை. அவனே உள்ளதை உள்ளவாறு அறிகின்றான்.

இவனுக்கு மட்டுமே கண்ணாடியும் உண்மையில்லை. அந்த பிம்பமும் உண்மையில்லை. இருப்பது இவன் மட்டுமே உண்மை என்பது தெரியும். உள்ளதை உள்ளவாறு உணர்ந்தவன் இருமைகளில் இருந்து விடுபடுகின்றான். இருமைகளிடம் இருந்து விடுபட்டவன் அனைத்தையும் ஒன்றாகவே காண்பான்.

அப்படிப்பட்டவனுக்கு தனித் தனியாக இருளும், ஒளியும் எங்கே உண்டாகும்? தனித் தனியாக இருந்தால்தானே, இரண்டையும் சேர்க்க வேண்டும். இருப்பது ஒன்றே! அதில் இருந்து எதையும் பிரிக்கவோ, சேர்க்கவோ முடியாது.

அவ்வாறு பிரித்தாலோ, சேர்த்தாலோ அது ஒன்று என்று அழைக்கின்ற தகுதியை இழந்து விடும். இவ்வாறு சேர்ந்தது, பிரிந்தது என்று கூறினாலே அங்கு முழுமை இல்லை எனப்படும். இருமைகளிடம் இருந்து விடுபட்டவனுக்கு பற்றுதல் இருப்பதில்லை. பற்றுதலே பந்தத்தை ஏற்படுத்தி இது என்னுடையது என்ற எண்ணத்தைக் கொடுக்கின்றது.

பற்றுதல் அற்றவன் செய்கின்ற செயல்கள் அவனது அந்தக்கரணங்களில் எந்த பதிவையும் உண்டாக்குவதில்லை. அதனால், அவன் எதனிடத்திலும் பந்தம் கொள்வதில்லை. அவ்வாறு, பந்தம் இல்லாதவன் பாமரனாகவும் இருக்கலாம், பண்டிதனாகவும் இருக்கலாம். அவனுக்கு எல்லாம் ஒன்றே.

இவ்வாறு தன்னை உணந்தவன் தன்னில் தானாய், சுயமாக தன் சொரூபத்தில், ஏகத்தில் ஏகாந்தமாக இருக்கிறான். இவன் புறத்தே இருக்கின்ற தன் தகுதியைப் பார்ப்பதில்லை. அகத்தே இருக்கின்ற அந்தர்யாமியைப் பார்க்கின்றான்.

அப்படிப்பட்டவனுக்கு, இந்த உலகம் காட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், இவனுக்குத் தெரியும், இருப்பது இவன் மட்டுமே. ஆகவே, உங்களைப் பொருத்தவரை நான் இளவரசனாகத் தெரிகின்றேன். என்னைப் பொருத்தவரை எல்லாம் ஒன்றே!

"இளவரசே! எண்ணமற்ற (நிர்விகல்ப சாமாதி நிலை) "நிர்மலமான அறிவே" சுயம் என்பதை, நானும் அறிவேன். ஆனால், மனதின் சங்கல்பம் வெளிப்படும் பொழுது (சவிகல்ப சமாதி நிலை) உலகியல் அறிவு வெளிப்படுகின்றது. இது கயிற்றை பாம்பாகப் பார்ப்பது போன்று, ஒரு குழப்பத்தை ஏற்படுத்தாதா?"

"பண்டிதனே! இன்னும் உம்மால் தெளிவையும், குழப்பத்தையும் பிரித்து அறிய முடியவில்லை.

நிறமற்ற ஆகாயம் நீல நிறமாகவே எல்லோருக்கும் தோன்றுகின்றது. அதுப்போலவே, கயிற்றில் பாம்பைப் பார்ப்பவன் பயந்து ஓடுவான். இது ஒன்றை மற்றொன்றாக பாவிப்பதினால், உண்டான அறியாமை நிலை ஆகும்.

அதுவே, தன்னை அறிந்த தத்துவ ஞானிகளுக்கு, விசாரித்து அதன் உண்மைத் தன்மையை அறிந்துக் கொண்டதால், அவர்கள் இதை தோற்றப்பிழை என்று தெளிவாகத் தெரிந்திருப்பதால், குழப்பம் அடைவது இல்லை.

இதுவே, அறியாமையில் உள்ளவனுக்கும், அறிந்தவனுக்கும் உள்ள வேறுபாடு.

ஞானி தன் சுயத்தில் தெளிவாக இருப்பதால், இந்த உலகத்தை கண்ணாடியில் பிரதிபிம்பிக்கின்ற பிம்பம் போல கருதுவார். அதனால், அவரது எந்தச் செயலும் அவரது சமநிலையைப் பாதிப்பதில்லை. அறியாமைகள் அனைத்துமே அறிவு வெளிப்பட்டவுடன் மறைந்துவிடும்.

அதேசமயம், ஞானம் வருவதற்கு முன்பு, கடந்தகாலத் தவறுகளினால் வந்த பதிவுகள் அழிவதில்லை. கண்ணில் புரை விழுந்தவனுக்கு எழுத்துக்கள் அனைத்தும் ஒன்றாக இருந்தாலும், இவனுக்கு மட்டும் எல்லாம் இரண்டு இரண்டாக தெரிவதுப் போன்று, ஞானி எல்லாம் ஒன்று என்று அறிந்து இருந்தாலும், பழைய கர்மப் பதிவுகளினால் உள்ள இருமைகளில் இவரும் விவகாரம் செய்து வருவார்.

அது அவரது பிராரப்த கர்மம் இருக்கின்றவரை ஞானிக்கும் உலகம் இருக்கும். ஆனால், அவர்களைப் பொருத்தவரை இந்த உலகம் உண்மையில்லை".

"இளவரசே! ஞானிகளிடம் கர்மப் பதிவுகள் இருக்க முடியுமா? அக்கினியில் பஞ்சு எரிவதைப் போன்று, அவரது ஞானாக்னியில் கர்மப் பதிவுகள் எரிந்து போகாதா?"

"பண்டிதனே! கருமப் பதிவுகள் மூன்று வகைகளில் உள்ளன. எல்லா ஞானிகளிடமும் இவைகள் ஒரே விதமாக இருக்கும்.

அவைகள் முறையே,

1. **முதிர்ந்தது,**
2. **முதிராதது,**
3. **பிறக்கும்பொழுதே அழியக்கூடியது.**

(சாஸ்திரத்தில் இவைகள் முறையே, 1. பிராரப்தம், 2. சஞ்சிதம், 3. ஆகாமியம் என அழைக்கப்படுகின்றன.)

1. **பிராரப்தம்** (முதிர்ந்தது)

இந்த கர்மம் வில்லிடமிருந்து விடுபட்ட அம்பு போன்று, வேகம் உள்ளவரை சென்றுக் கொண்டே பலனைக் கொடுக்கும். அதுவரை ஞானிகளும் தங்கள் கர்மபலனை அனுபவிப்பார்கள். அம்பு தன் இலக்கை அடையும்வரை ஓயாது. அதுப்போல, பிராரப்த கர்மத்தின் முடிவு என்பது உடலை விடுவது வரை ஓயாது.

2. **சஞ்சிதம்** (முதிராதது)

இந்த கர்மம் பலனைக் கொடுக்கும் அளவிற்கு பக்குவம் அடையாதது. இதுவே அபக்குவ கர்மா என்றும் அழைக்கப்படுகின்றது. பலனைக் கொடுப்பதற்காக காத்திருப்பது எனலாம்.

3. **ஆகாமியம்** (பிறக்கும் பொழுதே அழியக்கூடியது)

இந்த கர்மம் அஞ்ஞானிகளுக்கு செயல்களுக்கு ஏற்றவாறு பலனை அப்பொழுதே கொடுக்காமல் சஞ்சிதத்தில் சேர்ந்துவிடும். ஞானிகளுக்கு ஞானம் பெற்றபின்பு ஆகாமியம் செயற்படாது. அவர்களது செயல்களினால் உண்டாகும் கர்மபலன்கள் அவர்களது ஞானாக்கினியால் அவ்வப்பொழுதே எரிக்கப்படும்.

அஞ்ஞானிகள் உலகத்தை உண்மையெனக் கருதி, தங்களை சூழ்நிலைகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கின்றார்கள். சுகத்தை மகிழ்ச்சியாகவும், துக்கத்தை வருத்தமாகவும் அனுபவிப்பதால், இது அவர்களிடம் நிரந்தரப் பதிவுகளை ஏற்படுத்தி பலனைக் கொடுக்கின்றது.

அஞ்ஞானிகளைப் போன்றே கடை நிலை ஞானிகளும், சுக, துக்கங்களை அனுபவிப்பார்கள். ஆனால், இவர்களாக சுக, துக்கங்களைத் தேடிப் போகாமல், வருவதை ஏற்று அனுபவிப்பார்கள். மத்திம ஞானிகள் ஆத்மானுபவத்தை உணர்ந்தவர்கள். இவர்களும் உலக சுக, துக்கங்களை காண்பர். ஆனால், இவர்களது கட்டுப்பாடான மனம் சுக, துக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. தூக்கத்தில் எறும்பு கடித்தால் என்ன எதிர்விளைவு இருக்குமோ? அதுப்போன்று, துக்கங்களையும், சுகத்தையும் பெரிதாக கண்டு கொள்ள மாட்டார்கள்.

அதனால், இவர்கள் எந்த விதமான பாதிப்புகளுக்கும் ஆளாவதில்லை. பிராரப்தக் கர்மாவின்படி, வருவதை ஏற்றுக் கொண்டு, விருப்பமுடன் செயல்படுவர். உத்தம ஞானிகள் எப்பொழுதும் தன் சுயத்திலேயே இருப்பதால், மற்றவர்கள் பார்வைக்கு அவர்கள் உலக விவகாரங்களில் ஈடுபடுவது போன்று தோன்றினாலும், அவர்களைப் பொருத்தவரை, அவற்றை முயல் கொம்பு போன்று உண்மையற்றது என்று ஒதுக்கி விடுவார்கள்.

ஒரு நாடக மேடையில் நடிக்கும் நடிகன் பல கதாபாத்திரங்களில், நடிப்பவர்களின் மத்தியில் தனக்கு கொடுக்கப்பட்ட கதாபாத்திரத்தை ஏற்று, அந்தப் பாத்திரமாகவே

தன்னை மாற்றிக்கொண்டு நடிப்பார். அது மேடையோடு முடிந்துவிடும். அனால், அவரது உண்மை நிலை அவருக்கு நன்றாகத் தெரியும்.

அதுப்போல, ஆத்மானுபவத்தில் எப்பொழுதும் நிலைத்துள்ள உத்தம ஞானிகள் செயலும், நடிகர்கள் போன்றதே, அவரும் உலக விவகாரங்களில் நடிக்க வந்தாலும், அதை உண்மையென்று ஏற்றுக் கொள்ளாமல், நாம் நடிக்கவே வந்துள்ளோம் என தெரிந்துக்கொண்டு, அத்தகைய செயல்களைப் புரிவதால், அதில் பந்தப்பட மாட்டார். தன் உண்மை சொரூபத்தில் எப்பொழுதும் இருப்பார். உலக விவகாரங்கள் அவர்களை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை.

இந்த உண்மையை உணர்ந்த இவர்களது பிராரப்தம் இவர்களது ஞானாக்கினியால் எரிந்த துணியின் சாம்பல் போன்று ஆகிவிடுவதால், பார்ப்பதற்கு காட்சியில் துணி இருந்தாலும், அது பயனற்றது போன்று, இவர்கள் பிராரப்தமும் பலனைக் கொடுப்பதில்லை. பலன் இல்லாத எந்த கர்மப் பதிவும் இவர்களுக்கு சேராது.

(மூன்று மனைவிகளுடன் வாழ்ந்த ஒருவன் அடைந்த மரணத்தினால், அந்த மூன்று மனைவிகளும் விதவைகள் ஆகிவிடுவது போன்று, உத்தம ஞானி ஒருவன் அடைந்த

ஞானத்தினால் மூன்று கர்மாக்களும் விட்டுப்போகின்றன. – பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி)

ஹேமாங்கதனின் விளக்கத்தால் தெளிவு பெற்ற பண்டிதனைப் போன்று, பரசுராமனும் தெளிவு பெற்றான். பிறகு அவன் தத்த குருவை வணங்கி, பகவானே! தங்களது உபதேசத்தால், எங்கும் நிறைந்துள்ள சித்தே என்னிலும் ஆத்மாவாக நிறைந்துள்ளது என்பதை அறிந்துக் கொண்டேன்.

உலகில் எவையெல்லாம் பிரகாசிகின்றதோ? அவற்றில் எல்லாம் சித்து (அறிவு) நிறைந்துள்ளதை அறிகின்றேன்.

நூல் நெசவு செய்யும் பொழுது நூல்கள் குறுக்கும், நெடுக்கும் சென்று ஏகமாகப் பரவி, ஒன்றேயான ஆடையை உண்டாக்குவது போன்று, ஒன்றேயான சித்து ஏகமாக எங்கும் பரவியுள்ளது என்பதையும், இருமைகள் அனைத்தும் ஏகத்திலே ஒடுங்குகின்றது என்பதையும் தெளிவாகப் புரிந்துக் கொண்டேன். என்னுடைய பலகோடிப் பிறவிகளில் செய்த புண்ணியத்தால், தங்கள் வாயிலாக இந்த ஞானம் எனக்கு கிடைக்கப் பெற்றேன். உம்முடைய கிருபையாலே நான் தன்யனானேன்.

**"ஓம் குரு தத்த நமோ நம:"**

"பார்க்கவ! இருமைகளாகிய, உள்ளது – இல்லை, சேர்ந்தது – பிரிந்தது என்பதெல்லாம் ஆரம்ப கால சாதகர்களிடம் மட்டுமே இருக்கும். உள்ள பொருள் ஒன்று என்று உணர்ந்த பின்பு, அங்கே இருமைகள் இருக்காது.

எல்லாம், அதுதான் என்கின்றபோது, பந்தமும் இல்லை, தேடலும் இல்லை, விடுதலையும் இல்லை, அடைதலும் இல்லை.

இருப்பது ஏக அறிவாக அந்த திரிபுரையே.

அவளின்றி எதுவும் இல்லை.

பார்க்கவா! இதுவரை நான் கூறிய இந்த உபதேசங்களை ஸ்ரீ திரிபுர ரகசியம் என்ற என்னால் கொடுக்கப்பட்ட இந்த நூலைப் படித்த பின்பும், ஒருவனுக்கு மன அமைதியாகிய சாந்தி வரவில்லை என்றால், அவன் கற்சிலைக்கு ஒப்பானவன். கர்மத்திற்கு ஆட்பட்டவன். அவன் தன் வாழ்நாளில் ஒரு நாளும் ஞானத்தை அறிய மாட்டான்.

அதற்குக்காரணம், குற்றம் அவனிடத்தில் இல்லை. பலப்பிறவிகளில் சேர்த்து வைத்துள்ள அவனது மனப் பதிவுகளின் சம்ஸ்காரங்கள், அவனது பக்திக்கும், ஞானத்திற்கு தடைகள் என்பதை அறிய வேண்டும்.

தடைகள் நீங்கி உண்மையை அறிய வேண்டுமானால், எல்லாம் வல்ல அந்த திரிபுரையை பராபக்தி செய்தாவது, அவளது கிருபையால் மேன்மை அடையட்டும். அவளது அனுக்கிரஹம் கிடைத்து விட்டால் போதும், அவன் ஆத்ம விசாரத்திற்கும், வைராக்கியத்திற்கு எளிதில் வர முடியும். அவ்வாறு, வந்தவன் ஞானத்தை எளிதில் அடைந்திட முடியும். அடைந்தவன் இனி அடைவதற்கு ஒன்றுமில்லை என்ற நிலை உருவாகும். இதுவே, ஜீவன் முக்தி.

சாஸ்திரங்களை அறிந்து கொள்ளவும், தன் மனதை விசாரம் செய்யவும் விருப்பமில்லாதவர்கள், முடிந்தால் கீழே கொடுக்கப்பட்ட மந்திரத்தை உச்சரித்தாவது, எல்லாம் வல்ல அந்த திரிபுரையை பராபக்தி செய்து, அவளது அருளைப் பெற்று மேன்மை அடைய முயற்சியுங்கள்.

**"ஓம் ஹ்ரீம் நம:"**

யாதேவீ ஸர்வபூதேஷு ஸ்ரத்தாரூபேண ஸம்ஸ்திதா நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

**ஓம் தத் சத்!**

ஹரி ஓம்!

உள்ளத்தால் உயர்வு பெற்ற உத்தம ஆன்ம சாதகர்கள் அனைவரும், இதுப்போன்ற இன்னும் சில அரிய ஆன்ம ஞான நூல்களின் விளக்க உரைகளை எளிய தமிழில் படித்து பயனடையும் வகையில், திரு. ப்ரக்ஞன் அவர்களின் புத்தகங்களையும், ஒலிப்பேழைகளையும் இலவசமாகப் பெற வேண்டுமானால், கீழே ⬇ கொடுக்கப்பட்டுள்ள இணைய தளத்தில் சென்று PDF & MP3 வகையில் பதிவிறக்கம் செய்துக் கொள்ளலாம்.

இணையதளம் :– https://paraparam.in/

தொடர்புக்கு :– prajnan@paraparam.in

# ஸ்ரீ திரிபுர ரகசியம்

"கண்ணாடியில் தன் முகத்தை காணும் ஒருவன் அவனது பிரதிபிம்பத்தை மட்டும் கவனித்துக் கொண்டு, கண்ணாடியை கவனிக்காமல் தவற விடுகின்றானோ? அதுப்போல, மூடர்கள் இந்த உலகத்தை மட்டும் கவனித்துக் கொண்டு, கடவுளை அறியாமல் தவற விடுகின்றார்கள்".




ப்ரக்ஞுன்